MADRAS GOVERNMENT ORIENTAL SERIES

No. CLXV

# கப்பற் கோவை

# KAPPAR-KŌVAI

நூல்நிலைய வெளியீடு : 17

# KAPPAR-KŌVAI

# கப்பற் கோவை

இதுவரையில் வெளிவராத இந்நூல்

மூல ஏடுகளை ஆராய்ந்து அமைத்த மூல பாடத்துடன்

நூதனமாக எழுதப்பெற்ற குறிப்புரை முதலியனவும் சேர்த்து

பதிப்பிக்கப் பெற்றது.

Edited and Published by:

Mahāmahōpādhyāya Doctor V. Swaminathaiyar Library,

Adyar, Madras-20.

1958

Price Rs. 3-0-0

Rathnam Press (Branch),
65, Tiruppalli Street,
Madras-1.

# INTRODUCTION

The Government of Madras took up for consideration the question of publication of the various manuscripts in different languages on subjects like Philosophy, Medicine, Science, etc., early in May 1948. Important Manuscripts' Libraries in the Madras Presidency were requested to send a list of unpublished manuscripts with them for favour of beiug considered by the Government for publication. The Honorary Secretary of the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore, alone complied with this request. This list as well as a similar list of unpublished manuscripts in the Government Oriental Manuscripts' Library, Madras, were carefully examined and a tentaive selection of manuscripts suitable for publication was made. The Government in their Memorandum No. 34913/48-10, Education, dated 4th April 1949, constituted an Expert Committee with the Curator of the Government Oriental Manuscripts' Library, Madras, as the Secretary, for the final selection of manuscripts suitable for printing and for estimating the cost of publication.

The following were the members of the Committee :—

1. Sri T. M. Narayanaswami Pillai, M.A., B.L.
2. ,, R. P. Sethu Pillai, B.A., B.L.
3. ,, C. M. Ramachandran Chettiar, B.A., B.L.
4. ,, R. Krishnamoorthy (Kalki).
5. Dr. N. Venkataramanayya, M.A., PH. D.
6. Sri M. Ramanuja Rao Naidu, M.A.
7. ,, V. Prabhakara Sastri.
8. ,, N. Venkata Rao, M.A.
9. ,, H. Sesha Ayyangar.
10. ,, Masti Venkatesa Ayyangar.

11. ,, M. Mariappa Bhat, M.A.,L.T.
12. Dr. C. Achyuta Menon, B.A., Ph.D.
13. ,, C. Kunhan Raja, M.A., D. Phil.
14. ,, A. Sankaran, M.A., Ph.D.,L.T.
15. Sri Polakam Rama Sastri.
16. ,, S. K. Ramanatha Sastri.
17. Dr. M. Abdul Huq. M.A., D. Phil. (Oxon.)
18. Sri Afzul-ul-Ulama Hakim Khader Ahamed.
19. ,, P. D. Joshi
20. ,, S. Gopalan, B.A., B.L.
21. ,, T. Chandrasekharan, M.A.L.T., Curator.

With the exception of Sri Masti Venkatesa Ayyangar, and Dr. C. Kuhan Rajah, the above members continued to be members of the Expert Committee for 1950-51 also to which the following gentlemen were added in Government Memos. No. 7297 E/50-3. Education dated 19th May 1950, and 15875-E/50-4. Education, dated 7th September 1950 :—

1. Dr. A. Chidambaranatha Chettiar, M.A. Ph.D.
2. Sri S. Govindarajulu, B.A.,B.L., LL B., Bar-at-Law.
3. Capt. G. Srinivasamoorthy, B.A.,B.L., M.B, & C.M.
4. Dr. Muhammad Hussain Nainar, M.A., Ph. D.
5. Sri T. V. Subba Rao, B.A. B.L.,
6. Principal, College of Indigenous Medicine, Madras.

In Government Memorandum No. 18947-E/52-2. Education, dated 7th August 1952, a few changes were made in the personne of the Expert Committee.

The names of the following members were deleted :—

1. Sri V. Prabhakara Sastri.
2. ,, C. Achyuta Menon.
3. ,, M. Abdul Huq.

The following gentlemen were included as members of the Expert Committee :—

1. Sri M. Somasekhara Sarma
2. Dr. V. Raghavan, M.A., Ph.D.
3. „ R. Nagaraja Sarma, M.A., Ph.D.
4. „ S. Krishnan Nayar, M.A., Ph.D.
5. Prof. S. A. Bukhari, M.A.,

In G. O. Ms. No. 1819 Edn., dated 8-11-1955, the Government reconstituted the Expert Committee with the following members :—

## SANSKRIT

1. Dr. A. Sankaran, M.A., Ph.D., L.T.
2. Sri P. S. Rama Sastri.
3. Dr. V. Raghavan, M.A., Ph. D.
4. „ R. Nagaraja Sarma, M.A., Ph. D., L.T.
5. Sri K. Balasubramania Iyer, B.A., B.L., M.L.C.

## TAMIL

6. Sri T. M. Narayanaswami Pillai, M.A., B.L. M.L.C.
7. „ R. P. Sethu Pillai, B.A., B.L.
8. „ C. M. Ramachandran Chettiar, B.A., B.L.
9. „ T. P. Meenakshi Sundaram Pillai, M.A., M.O.L.
10. Dr. A. Chidambaranatha Chettiar, M.A., Ph.D.
11. Sri N. T. Viswanathan, B.A., B.L.

## KANNADA

12. Captain G. Srinivasamurthi, B.A., B.L., M.B. & C.M.
13. Sri M. Mariappa Bhatt, M.A., L.T.
14. „ H. Sesha Iyengar.

## MALAYALAM

15. Dr. S. Krishnan Nayar, M A., Ph.D.

## MARATHI

16. Sri P. D. Joshi.

## ISLAMIC LANGUAGES

17. Professor S. A. W. Bukhari Sahib, M A., L.T.
18. Dr. Mohammed Abdul Huq. M.A., D. Phil. (Oxon).
19. Sri S. M. Fazlullah, M.A.. L.T.

## OTHERS

20. Sri. S. K. Ramanatha Sastri, Sanskrit & Malayalam.
21. „ T. V. Subba Rao, B.A., B.L., Music in all languages.
22. The Principal College of Indigenous Medicine, Madras-10. Medicine in all languages.
23. Sri S. Gopalan, B.A., B.L., Sanskrit, Tamil and Telugu.
24. „ T. Chandrasekharan, M.A.,L.T., In all languages (Secretary of all the Committees).

The members of the Committee met at Madras and at Tanjore to examine the mrnnscripts and make a selection. The recommendations of the Committee were accepted by the Government and they decided to call these publications as the "MADRAS GOVERNMENT ORIENTAL SERIES" and appointed the Curator, Government Oriental Manuscripts Library Madras, as tha General Editor of the publications under this series.

The following manuscripts were taken up for publication till now :—

## "A" FROM THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

### TAMIL

1. Kappal Sāttiram.
2. Anubhava Vaiddiya Muṟai. Vols. I and II.
3. Āttānakōlāhalam.
4. Upadēśa Kāṇḍam
5. Cōlan Pūrva Paṭṭayam.
6. Sivajñāna Dīpam.
7. Daṭcanāyānār Vaiddiya Aṭṭavaṇai.
8. Vaiddiya-k-Kaḷañciyam.
9. Anubhava Vaiddiya Muṟai, Vol. III.
10. Saptariṣinādi, Vol. I, Mēṣa Lagna.
11. Karnāṭakarajākkaḷ Savistāra Carittiram.
12. Bharata Siddāntam.
13. Piḷḷai-p-piṇivākaṭam Vol. 1.
14. Anubhava Vaiddiyamuṟai Vol. IV.
15. Māṭṭuvākaṭam.
16. Saptariṣināḍi, Vol. II—Viruṣabha Lagna.
17. Temple Inscaiptions of South India, Vol. I.
18. Saptariṣināḍi, Vol. III, Mithuna Lagna.
19. Temple Inscriptions of South India, Vol. II.
20. Piḷḷai-p-piṇi vākaṭam (on infantile disease) Vol. II.
21. Saptariṣināḍi, Vol. IV, Kaṭaka Lagna.
22. Pērūr-k-Kōvai.
23. Siddhāntaviḷakkam.
24. Sāmudrikālakṣaṇam.
25. Ānandaranga-k-Kōvai.
26. South Indian Temple Inscriptions, Vol. III, Part I.
27. Saptariṣināḍi, Vol. V (Simha Lagna).

28. Māghasnānapurāṇa Ammānāi.
29. Kōlācala Stala Purāṇam.
30. Dina Kavitai.
31. South Indian Temple Inscriptions Vol. III, Part II.

## SANSKRIT

1. Viṣanārāyaṇīyam (Tantrasārasaṅgraha).
2. Bhārgava Nāḍikā.
3. Harihara caturaṅgam.
4. Brahmasūtravṛtti—Mitākṣara.
5. Nyāyasiddhānta Tattvāmṛtam.
6. Ārogyacintāmaṇi.
7. Tattvasāra with Ratnaśariṇī.
8. Sūtrārthāmṛta Laharī.
9. (a) Ratnadīpikā.
   (b) Ratnaśāstra.
10. Devakeraḷam-Candrakalā Nāḍi, Vol. I,
11. Pātanjala Yogasūtra Bhāṣya Vivaraṇa by Sri Sankarācārya.
12. Nyāyaratnam with the commentary Dyutimālikā.
13. Cikitsātilakam.
14. Nṛttaratnāvali.
15. Daivajnābharaṇa.
16. Abhoga—Kalpataru-Vyākhyā.
17. Aumāpatam.
18. Mahābhāskarīyam.
19. Devakeraḷam—Chandrakalā Nāḍi, Vol. II.
20. Nayadyumaṇi.
21. Bhāvabodha—Tattvaprakāśikā-Vyākhyā.

## TELUGU

1. Auṣadhayogamulu.
2. Vaidyanighaṇṭuvu.
3. Ḍhanurvidyāvilāsamu.

4. Yogadarśanaviṣayamu.
5. Khaḍgalakṣaṇaśirōmaṇi.
6. Śaivācārasangrahamu.
7. Anubhavavaidyamu.
8. Abhinayadarpaṇamu.
9. Brahmavidyāsudhārṇavamu.
10. Rāgatāḷacintāmaṇi.
11. Vaidyacintāmaṇi.
12. Kumārarāmunikathā.
13. Kāṭamarājukathā.
14. Sārīramu.
15. Bharatasārasangraha.
16. Bobbiliyuddhakathā
17. Haidarcaritramu.
18. Āryabhaṭīya Siddhāntam.

## MALAYĀLAM

1. Garbha Ciktisa.
2. (a) Vāstulakṣaṇam.
   (b) Śilpaviṣayam.
3. Mahāsāram.
4. Kaṇakkusāram.
5. Kriyākramam.
6. Kaṇakkusāram (Bālaprobōdham).
7. Aśvacikitsā.
8. Phalasarasamuccaya.
9. Kiḷivaṇḍusamvādam.
10. Advaita Vēdāntam.
11. Bārhaspatyasūtra with Malayāḷam commentary.
12. Karaṇapaddhati.
13. Vidyāmādhavīyam.
14. Sarvasādhārana Cikitsā.
15. Viṣacikitsa and Viṣappaṭṭusāram.
16. Jñānapīyūṣam.

17. Vetāḷapañcaviṃśati.
18. Yudhiṣṭhiravijayam.
19. Kathakaḷimañjarī.
20. Vaidyagrantham.

## KANNADA

1. Lōkōpakāram.
2. Raṭṭamatam.
3. Aśvaśāstram.
4. Vividhavaidyaviṣayagalu.
5. Sangītaratnākara.
6. Sūpaśastra.
7. Vaidyasārasangraham, Vol. I.
8. Sadgururahasyam.
9. Vaidyasārasangraham, Vol. II.
10. Manmathavijayam.
11. Abhidhānaratnamālā.
12. Vyavahāragaṇitam.
13. Jīvasambōdane.
14. Kāmandakanītisāra,

## ISLAMIC LANGUAGES

## PERSIAN

1. Jami-Al-Āshya
2. Tibb-E. Faridi.
3. Tahqiq-Al-Buhran.
4. Safinat-Al-Najat.
5. Baharistan-i-Sukhan.
6. Nuskha-E-Shajahani
7. Tufa-E. Khani.
8. Ruqa'at-e-Walajahi.

## ARABIC

1. Shawakil-Ul-Hur.

## "B" FROM THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY, TANJORE.

### TAMIL

1. Sarabhēndra Vaiddiya Murai (Diabetes).
2. do. (Eyes).
3. do. (Anaemia).
4. do. (Śvāsākāsam)
5. Agastiyar 2000.
6. Konkaṇarśarakku Vaippu.
7. Tiruccirṟambalakkōvaiyar with Padavurai.
8. Taḷasamudram.
9. Bharatanāṭyam.
10. (a) Pāṇḍikēḷi Vilāsa Nāṭakam.
    (b) Purūrava Cakravarti Nāṭakam.
    (c) Madana Sundara Vilasa Nāṭakam.
11. Percy Macqueen's Collection of Folklore in the Madras University Library.
12. Ramaiyan Ammānāi.

### TELUGU

1. Kāmandakanītisāramu.
2. Tāladaśāprāṇapradīpika.
3. Raghunātha Nayakābhyudayamu.
4. Rājagōpāla Vilāsamu.
5. Rāmāyaṇamu by Kaṭṭa Varadaraju.

### MAHRATHI

1. Nātyaśāstra Sangraha.
2. (a) Book of Knowledge.
   (b) Folk Sōngs.
   (c) Dora Dārun Vēṇi Paddhati.
   (d) Aśvāsa Caṭula Dumaṇi.

3. (a) Pratāpasimhendra Vijaya Prabandha.
   (b) Sarabhendra Tīrthāvali.
   (c) Lāvaṇi.
4. Devendra Kuravanji.
5. Bhakta Vilāsa.
6. Sloka Baddha Rāmāyaṇa.

## SANSKRIT

1. Aśvaśāstra with Tricolour Illustrations.
2. Rājamṛgānka.
3. Ānandakandam,
4. Āyurvedamohodadhi.
6. Gita Govinda Abhinaya.
6. (a) Colacampū.
   (b) Sahendra Vilāsa.
7. Dharmākūtam Sundra Kāṇḍa.
8. Jātakasāra.
9. Viṣṇutattvanirṇaya Vyākhyā.
10. Sangīta Darpaṇa.

The Government in their G.O. Ms. No. 1820. Education, dated 4th August 1952. sanctioned a grant of Rs. 9,000 to the Dr. V. Swaminatha Aiyar's Tamil Library. Adyar, towards the publication of the following manuscripts as part of the "Madras Government Oriental Series":—

1. Tiruvācāka Vyākhyānam.
2. Mahābhārata Cūḍāmaṇi.

The Government of Madras in their order No. 909, Education, dated 23rd May 1957, have again sanctioned a grant of Rs. 2500 to the Dr. V. Swaminatha Iyer library, Adyar, Madras, towards the publication of the Manuscript Kappalkovai as No. 165 of the Madras Government Oriental Series. It has been ably edited by the staff of that library.

It is hoped that the publication of most of the important manuscripts will be completed within the next few years.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the library and consequently the mistakes that are found in them could not be corrected by comparing them with other copies. The editors have, however, tried their best to suggest correct readings. The wrong readings are given in round brackets. When different readings are found, they have been given in the foot-notes except in the case of a few books in which the correct readings have been given in the foot-note or incorporated in the text itself.

The Government of Madras have to be thanked for financing the entire scheme of publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee who spared no pains in selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for readily consenting to edit the manuscripts and see them through the Press. The various Presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

Government
Oriental Manuscripts
Library, Madras-5.
10—2—1958

T. CHANDRASEKHARAN,
General Editor,
Madras Govt. Oriental Series.

# நன்றிகூறல்

கப்பல் கோவை, காலத்தால் பழைமையது; நாட்டு வரலாற்றுப் பொருள் அமைந்தது; அழகும், ஆழமும் செறிவும் கொண்ட இலக்கியமாவது; மிகச் சிறந்த ஒரு புலவரால் பாடப்பெற்றது. இதன் மூலச் சுவடிகள் மிகவும் அருகியே உள்ளன. இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்நூல் அரிய பாடத்திருத்தங்களுடனும், குறிப்புரைகளுடனும் இன்று வெளிவருவதற்கு உதவிய இறைவன் திருவருளை வணங்குகின்றோம்.

பண்டைத் தமிழ் நூல்களை வெளியிட உதவும் மிகச் சிறந்த நோக்கங்கொண்டுள்ள நம்மாகாண அரசியலார், தம் (ஜி. ஓ. எம். எஸ். எண். 909, எடுகேஷன், தேதி 23—5—57) உள்ள, உத்தரவால் இந்நூலின் பிரசுரத்திற்கு அநுமதி அளித்து, அதற்கு வேண்டிய பொருளையும் உதவியருளினார்கள்.

நீண்டகாலப் பதிப்புப் பயிற்சியில் பண்பட்டவரும், சிறந்த இலக்கிய ஆராய்ச்சியுடையவரும், உரைகாண்பதில் நெடுநாள் பழக்கம் பெற்றவருமான நண்பர் ஸ்ரீமான். பண்டிதர். எல். ஸ்ரீநிவாஸ ஐயரவர்கள் இந்நூலின் ஆராய்ச்சியை அன்புடன் ஏற்றுக் கொண்டார்கள். பல இடங்களில் விடுபட்ட சீர்களையும் அடிகளையும் கொண்டனவும், மிகச் சிதிலமானவுமான பாடங்களைக் கொண்டு, மூல பாடங்களை உள்ளபடியே உருவாக்குதல் என்பது அத்துறையில் பயின்றவர்க்கே புரிவதொன்று. இம்முயற்சியில் அவர்க்குப் பெருந்துணை புரிந்தவை ஸ்ரீ ஐயரவர்களின் பல குறிப்புக்களாகும். கடவுளறிவு, ஞானம் முதிர முதிரவே புலப்படுவதுபோல, ஸ்ரீ ஐயரவர்களின் பெருமை அவர்கள் கையாண்ட நூல்களை ஆராய ஆராயவே புலனாகின்றது. இந்நூற் பதிப்பாசிரியர்க்குத் தொடக்கத்தில் ஏடுகளைப் பிரதிசெய்து கொடுத்தும், உடனிருந்து பாடங்களை ஆராய்ந்து திட்டப்படுத்தி உருவாக்க உதவியும் அருந்தொண்டு புரிந்தவர் ஸ்ரீமான் வியாகரண சிரோமணி ஸ்ரீ டி. இராமாநுஜ ஐயங்கார் அவர்களாவர். நூல் அச்சாகும்போது புரூப் முதலியவற்றைப் பார்ப்பதற்கு உதவியவர் நண்பர் சிர. மு. வரதன். இம்மூவர்களோடு நூல் நிலைய அலுவலகத்தார் யாவருக்கும் இப்பதிப்பில் ஏற்றபெற்றி ஈடுபாடு நிரம்ப இருந்தது என்பதுங் குறிப்பிடத்தக்கது.

வழக்கம்போல் இரத்தினம் பிரான்சு அச்சகத்தார், மிகச் சிறந்த அழகிய முறையில் இந்நூலையும் அச்சிட்டுக் கொடுத்தனர்.

இவற்றோடு, பண்டைப் பாண்டி நாட்டுப் பெருவள்ளலும், வீரனும், அறிஞனுமான கருமாணிக்க மன்னன் என்னும் பெருந்தகை மீது பாடப்பெற்ற இக்கோவை நூலை இன்று, பாண்டி நாட்டுப் பெருமகனும், சிறந்த நாட்டுத்தொண்டரும், தமிழறிஞருமான ஸ்ரீ. சா. கணேசன் அவர்கள் அறிமுகப்படுத்த, அந்நாட்டுப் பெரு வள்ளலும், பேரறிஞரும் பெரும் வணிக மன்னருமான ஸ்ரீமான் கருமுத்து தியாகராஜ செட்டியார் அவர்கள் வெளியிடுவது இந் நிலையத்தின் தனிப் பெரும் பேறும் சிறப்புமாகும்.

இவ்வளவுக்கும் காரணம் ஸ்ரீ ஐயரவர்களின் ஆழ்ந்தகன்ற ஆத்ம சக்தியும், அவர்களின் மூலபண்டாரத்தைப் போஷித்து வரும் அத்யக்ஷர் ஸ்ரீமதி ருக்மிணி தேவியாரின் பேரன்புமாகும்.

இவர்கள் யாவர்க்கும் இந்நூல் நிலையம் தன் மனமார்ந்த நன்றியை மிகுந்த வணக்கத்துடனும் கடப்பாடுடனும் தெரிவிக்கின்றது.

அடையாறு.
9-3-58

# முன்னுரை

கோவை என்பது வரிசையாகக் கோத்தது என்னும் பொருளது. இப்பெயர் முதலில் மணிகள் முதலியவற்றால் மாலை போன்று கோக்கப்பெற்று அமைந்த அணிகலன்களுக்காகிப் பின், அவை போன்று அழகும் சிறப்பும் தொடர்புங் கொண்ட செய்யுள்களாலான ஒருவகை நூலுக்கும் பெயராக வந்தது எனக் கொள்ளலாம். இஃது ஆசாரக்கோவை, மும்மணிக்கோவை என்னும் பண்டை நூற் பெயர்களால் விளக்கமாகும். இவ்வாறே, தொல்காப்பியம் முதலிய பண்டை இலக்கண நூல்கள் வகுத்துக் காட்டிய அகப்பொருள் துறைகளை, முறைப்படக் கொண்டு அமைத்த ஒருவகைச் செய்யுள்களால் ஆன கோவை என்னும் இவ்வகைப் பிரபந்தத்திற்கும் பெயர் வரலாயிற்று எனக்கொள்வது இதன் வரலாற்று முறை என்னலாம்.

சங்க நூல்களில் நற்றிணை முதலிய நூல்கள் எல்லாம் பல்வேறு காலங்களில், பலரால் பலவிடத்து, பல பாட்டுடைத் தலைவர்கள் மீது தொடர்பு அற்ற பல அகப்பொருள் துறைகளால் இயற்றப் பெற்ற பாடல்களைத் திரட்டி வைக்கப்பெற்ற தொகை நூல்களே ஆதலின், அவை அகப்பொருள் துறைகளைத் தொடர்பாகக் கூறுவன அல்ல. அச்சங்க நூல்களுக்குப் பின்னெழுந்த சிலப்பதிகாரம், சிந்தாமணி போன்ற காப்பியங்களும், தேவாரம், நாலாயிர திவ்யப் பிரபந்தம், முத்தொள்ளாயிரம், கல்லாடம், முதலிய நூல்களும், அந்தாதி, கலம்பகம் முதலிய பிரபந்தங்களும், அகப்பொருட் செய்யுட்களையும் பாசுரங்கள் பலவற்றையும் கொண்டுள்ளனவேனும் அவ்வகப் பொருள் துறைகள் அந்நூல்களில் இடையிடையே ஆங்காங்கு விரவி யுள்ளனவே யன்றி அவையும் அவற்றை ஒரு தொடர்பாகக் கூறுவன அல்ல.

ஆதலின், பிற்காலத்துப் புலமைசான்ற பெரியோர்கள், உலக இயல்பின் நெறிக்கேற்ப அவ்வகத்திணைப் பொருள்களை ஒருவாறு வரையறை செய்து, அவற்றை வரிசைப்பட நம்மனோர் படித் துணர்ந்து பயன் எய்துமாறு, அழகிய செய்யுள்களால் இக்கோவை என்னும் பிரபந்தத்தை அமைப்பாராயினர் எனக்கொள்ளற்பாலதாம்.

இத்தகைய கோவையென்னும் நூல்கள் நம் தமிழ் மொழியில் நூற்றுக் கணக்காக உள்ளனவெனினும், அவை யாவற்றினும் பழமையும் சிறப்பும் எய்தி விளங்குவது, வாதவூரடிகள் என்னும் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருச்சிற்றம்பலக்கோவை

என்னும் நூலேயாகும். கால ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டு வருபவரில் ஒரு சாரார் இக்கொள்கையில் வேறுபடுவாரும் உளர். அத்திருச்சிற்றம்பலக் கோவை, திருக்கோவையார் என்ற ஒரு தனிச் சிறப்புப் பெயரால் அழைக்கப் பெறுவதே மேற்கூறிய அதன் பெருமைக்கும், தூய்மைக்கும் ஏற்ற சான்று எனலாம். மேலும், அவ்வாதவூரடிகள், அகப்பொருள் துறைகளில் சிற்றின்பநெறியை மட்டும் அமைத்துக் காட்டாமல், அச்சிற்றின்பமே பேரின்ப வீடு பேற்றுக்கு ஏற்ற வழியாகவும், 'அறம், பொருள், இன்பம், வீடடைதல் நூற்பயனே' என்ற நூல் இலக்கணச் சிறப்புக்கும் ஏற்ற ஒரு கட்டளையாகத் திருச்சிற்றம்பலப் பெருமானை பரம் பொருளையே பாட்டுடைத் தலைவனாகவும், பக்குவம் அமைந்த ஜீவான்மாவாகிய ஓர் ஆடவனைக் கிளவித் தலைவனாகவும் கொண்டு இம்மை மறுமைப் பேறுகளையெய்தி உய்யும் தெய்வ வழிபாட்டு முறைக்கு ஓர் ஒப்பற்ற கட்டளையாக அந்நூலை அமைத்தருளிய ஒரு மகோபகாரி ஆவர். ஆதலின், பின்வந்த கோவை நூல்களுக்கெல்லாம், அதுவே ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்கின்றது எனலாம்.

அத்திருக்கோவையாரைப் பின்பற்றிப் பல தலசம்பந்தமான கடவுள்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு, தமிழ்க்கல்வித் துறையின் வழிபோகிய புலவர் பெருமக்கள் மற்றும் பல கோவை நூல்கள் இயற்றியுள்ளார்கள். பின், காலப் போக்கில், கவிஞர்களால், தம்மை ஆதரித்த அரசர்கள், வள்ளல்கள் முதலானோரைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு ஆக்கப்பெற்ற பல கோவை நூல்களும் வெளிவரலாயின. இவ்வாறு ஆடவரிற் சிறந்தானொருவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டமைந்த கோவை நூல்கள் பல உள்ளனவேனும், அவற்றுள் பாண்டிக் கோவை என்பதே சரித்திர சம்பந்தமும் பழமையும் வாய்ந்தது எனலாம்.

கோவை நூல் நானூறு கட்டளைக் கலித்துறைப்பாக்களால் அமைய வேண்டுமென்பது,

ஆய்ந்த கலித்துறைதான் நானூ றகப்பொருண்மேல்
வாய்ந்தநற் கோவை மற்றுரைப்பின் - ஏய்ந்த
ஒருதலைக் காம முரைப்பவை யைந்தாய்
வருவிருத்தங் கைக்கிளையா மன்.

என்று வச்சணந்தி மாலையும்; "கோவையென்பது கூறுங்காலை, மேவிய கற்பு களவெனுங் கிளவி, ஐந்திணை திரிய அகப்பொருள் தழீஇ, முந்திய கலித்துறை நானூ றென்ப." என்று பன்னிருபாட்டி

யலும், மற்றும் சில இலக்கண நூல்களும் வரையறை செய்துள்ளன. கட்டளைக் கலித்துறையிலே கோவை அமையவேண்டுமென்பது எல்லாக் கோவையாசிரியர்களாலும் இலக்கண ஆசிரியர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டதே. ஆனால், நானூறு துறைகளைக் கொண்டே கோவை நூல்கள் பாடப்பெறவேண்டும் என்ற நியதியைப் பிற்காலக் கோவையாசிரியர்களிற் பலர் கொள்ளவில்லை. அதனால், பல கோவை நூல்கள் அவ்வளவில் விரிந்தும், சுருங்கியும், நூதனத்துறைகளைப் புகுத்தியும், ஓர் அகப்பொருட்டுறையையே கொண்டு பலவிதமான வருணனைகளால் விளக்கியும், இன்னோரன்ன பலதிறத்தனவாய்ப் பெருகித் தமிழ்மொழியை மேலும் வளப்படுத்துவன ஆயின. இவ்வகைகளைத் தனித்தனியே விரிக்கிற் பெருகும்.

இவ்விதம் தோன்றிய கோவை நூல்கள் பலவற்றுள், தொன்மையும் சிறப்பும் அமைந்தனவாகக் கொள்ளப்படுபவனவற்றுள், இக் கப்பற்கோவை என்னும் நூலும் ஒன்றாகும். இற்றைக்கு ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்னர், திருவாரூர் ஸ்ரீ வைத்தியநாத தேசிகர் என்பவரால் உரையுடன் இயற்றப் பெற்றதும், குட்டித் தொல்காப்பியம் என்னும் சிறப்புப் பெயர் வாய்ந்ததுமான இலக்கண விளக்கம் என்னும் நூலில், அகத்திணையியலில், இக்கோவையிலிருந்து இப்பதிப்பில் 91, 106, 131, 134, 137, 142, 146, 172 என்னும் எண்களைக்கொண்ட எட்டுப் பாடல்கள் மேற்கோளாக எடுத்தாளப் பெற்றிருப்பதும், கோவைக்கொத்து என்னும் பழைய தொகை நூல், இக்கோவைப் பாடல்களிற் பலவற்றைக் கொண்டுள்ளமையும் மேற்கூறியவாறு இதன் பழமையையும் சிறப்பையும் புலப்படுத்துகின்றது என்னலாம். ஆராய்ச்சித் துறையில் வல்ல ஸ்ரீ. மு. இராகவ ஐயங்காரவர்கள் முன் மதுரைத் தமிழ்ச் சங்கத்து வெளியீடான, செந்தமிழ்த் தொகுதி, 6 பகுதி 8ல், இக் கப்பற்கோவையைப்பற்றிய வரலாறு முதலியவற்றை நன்கு ஆராய்ந்து வெளியிட்டிருப்பதோடு, பின் அவர்கள் பிரசுரித்துள்ள சாஸனக் கவி சரிதம் என்னும் நூலிலும் சில குறிப்புகளை அறிவித்துள்ளமை காணலாம்.

அவர்களது ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கொண்ட ஒரு வெளியீட்டிலும் அச்செய்திகள் தொகுத்துக் கூறப் பெற்றிருக்கின்றன. அத்தொகுதியிற் காணும் குறிப்பொன்றில் இக்கப்பற்கோவைப் பிரதி ஒன்று ஆழ்வார் திருநகரி ஸ்ரீ. தேவர்பிரான் கவிராயர் என்பவரால் முன் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குக் கிடைத்ததாகவும், அஃது

அச்சங்க வெளியீடாக் வெளிவர இருந்தது என்பதும் அருண்ம் யாய்க் கிடைத்த அப்பிரதி அச்சங்க நிலையத்து நேர்ந்த அக்கி விபத்தினுட்பட்டு எரிந்து அழிந்துபோன பல அரிய சுவடிகளுள் ஒன்ருக மறைந்தது என்ற செய்தியும் வருத்தத்துடன் அறிவிக்கப் பெற்றுள்ளமை காணலாம்.

மகாமகோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, டாக்டர் ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்கள் அரிய உழைப்பின் மேல் பல ஆண்டுகள் தமிழக முழுவதும் சலிப்பின்றி அலைந்து தேடிக்கொணர்ந்தும், அயல் நாடுகளிலிருந்து நண்பர்கள் மூலம் வருவித்தும் சேமித்துத் தொகுத்து வைத்திருந்த அரிய தமிழ்நூற் சுவடிகள் பல என்பதும், ஐயரவர்கள் காலத்திற்குப்பின், அவ்வேட்டுப் பிரதிகள் அனைத்தும் இங்குக் கொணரப்பெற்று அவர்கள் பெயரால் ஒரு நூல் நிலையமாக நிறுவப் பெற்றுள்ளது என்பதும், இந் நிலையம் டாக்டர் ஐயர் அவர்கள் கொண்ட முறையைப் பின்பற்றித் தமிழ் நூற்பதிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றது என்பதும் யாவரும் அறிந்தனவே. இந்நூல் நிலையத்தில் இக்கப்பற் கோவைச் சுவடிகள் இரண்டும், பல இடங்களில் ஸ்ரீ ஐயரவர்களின் திருத்தங்களுடன் பழைய காகிதப் பிரதியொன்றும் இருப்பன கண்டோம். அஃது அநுமன் மூலம் திருவாழி பெற்ற காலை, பிராட்டியெய்திய பெரு மகிழ்ச்சியைக் கல்வியிற் பெரியாரும் கவிச்சக்ரவர்த்தியுமான ஆழ்வார் ஸ்ரீ கம்பநாடர் விளக்கியருளியதான, ' இழந்த மணி புற்றர வெதிர்ந்த தெனலானுள் ' என்ற தொடக்கத்துப் பாசுரத்தை நினைப்பூட்டி, ஒரு பெரும் இறும்பூது எய்துவித்தது. ஆனல், அப்பிரதிகளை யெடுத்து ஆராயுங்கால், அவ்விரு ஏடுகளும் காகிதப்பிரதியும் பெரிதுஞ் சிதிலமாய் ஆங்காங்குத் தொடர்பற்றும். அடி, சீர், தளை முதலியன விளங்காமல் அழிந்தும் முரண்படத் திருத்தப்பெற்றும் இருந்தன. அவற்றை ஸ்ரீமத் ஐயரவர்களே. ஆராய்ந்து தொடர் பருமல், பெரும்பாலும் திருத்திவைத்திருந்தது தமிழ்மக்கள் செய்த தவப் பேறே என்னலாம். அத்திருத்தங்களையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு, இந்நூல் நிலையத்தில் உள்ள கோவைக்கொத்து என்னும் வெவ்வேருன நூற்ருெகுதிகள் இரண்டையும் துணை கொண்டு ஒப்பிட்டுப் பார்த்ததில் சில பாடங்களுக்குப் பின்னும் திருத்தங்களும், பொருள் விளக்கங்களும் ஏற்படலாயின. இவ்வாறு திருத்திய இந்நூலைப் பிரதிசெய்து இந்நூல் நிலையப் பதிப்பு முறைப்படி, கோவைத் துறைகளை ஆங்காங்கு விளக்கியும், செய்யுள்களுக்கு மேற்கோள் ஒப்பு முதலியன ஒருவாறு காட்டி, ஒரு குறிப்

புரையும், நூல் வரலாறு, பாட்டுடைத் தலைவன் வரலாறு முதலியன கொண்ட ஒரு முன்னுரையும், செய்யுள் முதற்குறிப்பகராதி, அரும் பதம் முதலியவற்றின் அகராதியும் கொண்ட ஒரு பிற்சேர்வும் இணைத்து இப்பதிப்பை வெளியிட்டுள்ளோம். துறைகளின் விளக் கங்கள் பெரும்பாலும் ஸ்ரீ ஐயரவர்களின் பதிப்பான கோடீச்சுவரக் கோவையைப் பின்பற்றி அமைந்துள்ளன.

பெரும்பாலும் கோவை நூல்களில் இருக்கற்பாலனவான 400 செய்யுள்களுக்கு இரண்டு குறைவாக 399 செய்யுட்களே பிரதிகளில் உள்ளன. இதனால் இந்நூலாசிரியர் பாடினவையே இந்த 398 செய்யுள்தாமோ என்றும், அல்லது இடையே இரு செய்யுள்கள் இருந்து அவை மறைந்தனவோ என்றும் உறுதி கொள்ளமுடிய வில்லை. இவற்றுள் இங்குள்ளதும், முன் குறிப்பிட்டதுமான ஒரு கோவைக்கொத்துச் சுவடிகளில் இதில் 7-வது செய்யுளாக உள்ள, 'அடியே தொடங்கி' என்று தொடங்கும் செய்யுளே மீண்டும் 32வது செய்யுளுக்குப் பின் எழுதப் பெற்றிருந்ததை ஆராயாமல் அம் மூன்று பிரதிகளிலும் காணப்பெறாத செய்யுள்களுள் இஃது ஒன்று என்று கருதி அதனையும் சேர்த்துத் தொடர்ச்சி எண்கொடுத்துப் பதிப்பிக்கப் பெற்றுவிட்டது. இப்பிழைக்கு மிகவும் வருந்து கின்றோம். இப்பதிப்பில் காணப்பெறும் இக்கோவைக்குரிய செய் யுட்கள் உண்மையில் முந்நூற்றுத் தொண்ணூற்றெட்டே.

இந்நூலின் பாட்டுடைத் தலைவனான கருமாணிக்கன் என்பவன் பாண்டிமண்டலத்தின் ஒரு பகுதியாய் இருந்ததும், இப்பொழுது புதுக்கோட்டைச் சீமையில் உள்ளதுமான கப்பலூர், துவரங்குறிச்சி என்னும் ஊர்களைத் தன்னிடங் கொண்டதுமான ஒரு பெரு நிலப் பகுதிக்குத் தலைவனாய் அதனை ஆண்டு வந்த, ஒரு குறுநில மன்ன னெனத் தெரிகிறது. இவன், பாண்டிய மன்னனின் படைத்தலை வனாகவும் அமைச்சனாகவும் இருந்து பலபெரும்போர்களில் வேணாடு, கன்னட நாடு, காடவர் நாடு, கலிங்க நாடு, கங்கை நதிபாயும் வடநாடு முதலியவற்றை வென்று அந்நாட்டரசர்களின் வலியை ஒடுக்கிப் பெரும்பொருள் ஈட்டினவன் என்பதும், 'பாண்டி நாடு புரந்தவன், பாண்டிய குலத்துக்கு உறுவலி' என்பன போன்று இந்நூலில் அவன் பேசப்படுவதால், இவன் பாண்டிய நாட்டில் ஏற்றுவந்த பெரிய நிலை காணப்படுகிறது. இக்குரிசில் கல்வியாலும் செல்வத் தாலும் சிறந்து, கற்ற தமிழ் மொழி வாணர்களை ஆதரித்து, அவர் களோடு அளவளாவி மகிழ்ந்து வந்த ஓர் அருங்கலைவினோதன் என் பதும், வரையாது கொடுக்கும் வள்ளல் என்பதும் விளங்குவதோடு,

இவன் யாதவர் என்னும் ஒரு மரபின் உதித்தவன், திருமாலை வழி படும் வைணவ சமயத்தவன், துளவம், முல்லை, குவளை, என்பன வற்றைத் தன் குலமாலையாகவும் போர் மாலையாகவும் கொண்டவன், சுறவக் கொடியுடையவன், இன்னோரன்ன இவனது மற்றும் பல வரலாறுகளும், அருஞ் சிறப்புக்களும் இந்நூலால் அறியப் பெறு கின்றன. திருமாலின் அவதாரங்களில் நிகழ்ந்தனவாக உள்ள அருஞ் செயல்கள் பலவற்றையும் இவனது செயல்களாக ஏற்றிக் கூறப் பெறுவதை இந்நூலிற் பரக்கக் காணலாம். இவ்வாறு கூறுவது கவிமரபாம். மேலும் இக்குரிசில், பல்லவன், தொண்டைமான் என்னும் பெயர்களால் அழைக்கப் பெறுவதால், இவனோ, இவனது குலத்து முன்னோர்களோ பல்லவர் ஆட்சியில் அவ்வேந்தர்க்குப் படைத் தலைவராகவோ அமைச்சர் அல்லது அரசாங்கத்துப் பெருந் தனத்து அதிகாரிகளாகவோ இருந்து சிறப் பெய்தினவர் என்பதும், பல்லவர் வீட்சிக்குப் பின் பாண்டிய மன்னர்க் கீழ், சிற்றரசனாகவும் படைத் தலைவனாகவும் அமைச்சனாகவும் இவன் அமைந்து பாண்டிய நாட்டின் சிறப்புக்குக் காரணமாய் இருந்தான் என்பதும் கருத இட மாகும். இவ்வாறே கலிங்கம் எறிந்த கருணாகரன் என்பவனும், தொண்டையர்கோன், தொண்டைமான் என்ற சிறப்புப் பெயர் களுடன், சோழ மன்னர்களான முதற்குலோத்துங்கன், விக்கிரம சோழன் ஆட்சிக் காலங்களில் அச்சோழ நாட்டிற் சிறந்து விளங் கினமை அறியப்பாலது.

மாணிக்க வகைகளுள், ஸௌகந்தி என்பது ஒன்று என்பதும், அது நீல நிறங்கலந்த ஒளிவீசும் இயல்பினது ஆதலின், நீலகந்தி என்றும் பெயர் பெறும் என்பதும் சிலப்பதிகாரம், ஊர்காண் காதையில் அதன் உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் விளக்கி யுள்ளமையால், அந்நீலகந்தி என்னும் அரதனமே கருமாணிக்கம் எனத் தமிழில் வழங்குவதாகும் எனக்கொள்ளலாம். ஆழ்வார் ஸ்ரீ சடகோபர் தாம் அருளிய திருவாய்மொழி என்னும் பிரபந்தத்தில் பல இடங்களில் திருமாலைக் கருமாணிக்கமே என்று அழைத்துள்ள மையால், இப்பாட்டுடைத் தலைவனுக்கும் அம்மரபு பற்றியே கரு மாணிக்கன் என்ற பெயர் இடப்பட்டது என்னலாம். பாண்டியன் தமிழ்ச் சாஸனம் ஒன்றும் இவனை முத்தூர்க் கூற்றத்துக் கப்பலூ ரான உலகளந்த சோழ நல்லூர்க் கருமாணிக்காழ்வான் எனத் தென் னிந்திய சாஸனம் வால்யூம் 4. 112 அறிவிப்பதும், இவன் கோவல் என்னும் திருக்கோவலூரில் இருந்த ஒரு வைஷ்ணவ மடாதி பதியைத் தன் கப்பலூரில் அழைத்துவந்து இருக்கச் செய்து

ஆதரித்துவந்தவன் என்று இக்கோவை, 391வது பாடல் குறிப்பதும், இவன் யாதவ மரபினன் என்பதும் இவனது வைணவ சமயச் சார்பையும், அதில் இவன் கொண்ட பற்றையும் நன்கு புலப் படுத்துகின்றன என்னலாம்.

இப்பாட்டுடைத் தலைவன் 13ம் நூற்றாண்டினிடையே, பாண்டி நாட்டை ஆண்டுவந்த, ஜடாவர்ம சுந்தர பாண்டியன், ஜடாவர்ம வீரபாண்டியன், மாறவர்மன் குலசேகரன் என்னும் பாண்டிய மன்னர் மூவர் ஆட்சிக் காலங்களில் வாழ்ந்து வந்தவன் என்பது, சாஸனப் பாடல்களாலும், பிறவற்றாலும் ஸ்ரீ எம். இராகவ ஐயங்கார் அவர்கள் ஆராய்ந்து வெளியிட்டுள்ளவற்றால் விளங்குவதால், பாட்டுடைத் தலைவனை இப்பெருந் தகையின் காலம் இற்றைக்கு ஏறக்குறைய 700 ஆண்டுகளுக்கு முன்னர் ஆகும் என்பதும் அக் காலத்திலேயே இந்நூலாசிரியராகிய புலவர் பெருமானும் வாழ்ந் திருந்தார் எனவுங் கொள்ளவேண்டும்.

இந்நூலாசிரியரது பெயர் முதலியவரலாறுகள் ஒன்றும் அறிய இடமில்லாதது மிகவும் வருந்தத் தக்கதே. 'உமையோர் வாழ்த்து' என்னும் துறையில், செய்யுள் தலைவி தலைவன் இருவரையும், 'பூந் திருவுமெமை யாளுமாயனும் போலிருப்பீர்' என வாழ்த்தியுள்ளமையும், அதில், 'எமையாளும்' என்ற குறிப்பை நோக்குமிடத்து, இந்நூலாசிரியரும், பாட்டுடைத் தலைவனே போல வைணவ சமயப் பற்று மிக்கவர் எனக்கொள்ள இடந்தருகின்றது. ஸ்ரீ கம்பநாடர் திருமாலை 'என்னையாளுடைய வையன்' எனச் சிறப்பித்துள்ளமையும் இங்கு நோக்கத் தக்கதாம். இந்நூல், சொற்சுவை, பொருட் சுவைகளிற் சிறந்து படிப்போர் மனத்தைக் கனிவிக்கும் முறையில் அமைந்து மிளிர்கின்றது என்பது இதனில் ஊடுருவிச் செல்வோர் உணரலாவதாம்.

இவ்வாசிரியர் பண்டைத் தமிழ் நூற்கல்வியிற் படிந்து தெளிந் தறிய மிகத் தேர்ந்த ஒரு பெரியோர் என்பதும், அகப்பொருட் டுறைகளை இனிது புலப்படுத்தும் ஆற்றலும், அவைகளைபடிப்போர் மனத்தைப் பிணிக்கும் வண்ணம் உணர்த்தும் மாண்பும், பொருளாழமும் கம்பீரமும் நிறைந்த நடையமைக்கும் திறனும் ஒருங்கே பெற்றவர் என்பதும் இந்நூலால் விளங்குவன காணலாம். சொற் களையும், நிகழ்ச்சிகளையும் மிகச் சிக்கனமாகவும், ஆனால் மிகுந்த தெளிவோடும் அமைப்பது இவரது தனிச்சிறப்பு. இந்நூலின் முறையும், இதனில் வழங்கும் சொற் பிரயோகங்களும், துறைகளின்

அமைப்பும் அம்பிகாபதிக் கோவையில் சிறப்பாகவும், பிற்காலக் கோவைகளின் பொதுவாகவும் காணப்பெறுகின்றன. ஆதலின், கோவையுலகில் இந்நூலாசிரியர் எய்திய உயர் நிலை ஒருவாறு விளங்குவதாகும். இந்நூலில் மற்றும் பல அரிய செய்திகளும் கருத்துக்களும் அமைந்துள்ளனவெனினும் அவை விரிவஞ்சி இங்கு விளக்கப் பெறவில்லை.

தஞ்சைவாணன் கோவை, அம்பிகாபதிக் கோவை முதலியன களவியல், வரைவியல், கற்பியல் என மூன்று பாகுபாடுகளைக் கொண்டு பதிப்பிக்கப் பெற்றுள்ளன. இந்நூற் பிரதிகளில் அத்தகைய பாகுபாடுகள் காணப்பெறாமையால் இந்நூல் திருச்சிற்றம்பலக் கோவை கொண்ட நெறியே இயங்குகின்றது எனக் கொள்ளற் பாலதாம். இதனாலும் இந்நூலின் பழமையும் சிறப்பும் விளங்குகின்றன என்னலாம்.

இந்நூலை, டாக்டர் ஸ்ரீ ஐயரவர்களே வெளியிட்டிருந்தால் அது மேலும் திருத்தமாகவும் சிறப்பாகவும் அமைந்திருக்கும், வேறு திருத்தமான பிரதிகள் கிடைக்காமையாலும், இங்குள்ள பிரதிகளும் சிதிலமாய் உள்ளனவாலும், இவையும் பின் அழிந்துவிடுமே என்ற அச்சமேற்கொண்டும், பின் வேறு நல்லபிரதி கிடைத்தால் திருத்திக் கொள்ளலாம் என்ற துணிபாலும் எங்கள் சிற்றறிவுக்கேற்ப ஒருவாறு ஆராய்ந்து இந்நிலையில் இப்பதிப்பை வெளியிடலானோம். இவ்வரிய நூலை இந் நிலையிலேனும் வெளியிட எங்களுக்கு ஒரு வாய்ப்பை அருளிய தமிழ் அன்னையின் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றோம்.

இந்நூலைப்பற்றி, ஸ்ரீ. மு. இராகவ ஐயங்கார் அவர்கள் ஆராய்ந்து, முன் செந்தமிழ்ப் பத்திரிகையிலும், சாஸனத் தமிழ்க் கவி சரிதத்தும் வெளியிட்டுள்ள செய்திகள் இப்பதிப்புக்குப் பெரிதும் உதவியளித்தன. அவர்களுக்கு யாங்கள் நன்றியறிதலை உள்ளன்புடன் செலுத்துங் கடப்பாடுடையோம்.

ஏடுகளில் இருந்த குறைபாடுகளாலும், எங்கள் அறியாமையினாலும், இதில் சில குறைபாடுகள் இருக்கலாம். அவற்றை அறிந்து அறிவிக்கும் அன்புடையோர்க்கு எங்கள்மனமார்ந்த நன்றியைச் செலுத்துவதோடு மறுபதிப்பில் ஏற்றபெற்றி அத்திருத்தங்களைக் கொண்டு வெளியிடவும் இடமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

L. ஸ்ரீநிவாஸன்.

## இப்பதிப்பில் எடுத்தாண்டுள்ள நூல்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி

1. அகநானூறு
2. அம்பிகாபதிக்கோவை
3. ஆராய்ச்சித்தொகுதி (M. இராகவ ஐயங்கார்)
4. ஆனந்தரங்கன் கோவை
5. இராமாயணம் உத்தர காண்டம்
6. இலக்கண விளக்கம்
7. ஐங்குறுநூறு
8. கம்பராமாயணம்
9. கலித்தொகை
10. குறுந்தொகை
11. கோடீச்சுரக்கோவை
12. கோவைக்கொத்து
13. சாஸனத் தமிழ்க்கவி சரிதம் (M. இராகவ ஐயங்கார்)
14. சிலப்பதிகாரம்
15. தஞ்சைவாணன் கோவை
16. தனிப்பாடற்றிரட்டு
17. தாயுமானவர்பாடல்
18. திருக்குறள்
19. திருக்கோவையார்
20. திருநெடுந்தாண்டகம் (திருமங்கையாழ்வார்)
21. திருவரங்கக்கலம்பகம்
22. திருவாரூர்க்கோவை
23. திருவாலவாயுடையார் திருவிளையாடல்
24. திருவாவடுதுறைக் கோவை
25. திருவிருத்தம் (நம்மாழ்வார்)
26. தென்னிந்திய சிலாசாஸனங்கள் தொகுதி 2
27. தேவாரம்
28. தொல்காப்பியம்
29. நம்பியகப்பொருள்
30. நளவெண்பா
31. நன்னூல் மயிலைநாதருரை
32. நாச்சியார்திருமொழி
33. நாமதீப நிகண்டு
34. நாலடியார்
35. நீதிநெறிவிளக்கம்
36. பதிற்றுப்பத்து
37. பரிமேலழகர் உரை (திருக்குறள்)
38. பழமொழிநானூறு
39. பன்னிருபாட்டியல்
40. பிங்கலநிகண்டு
41. புறநானூறு
42. பெரியதிருமொழி
43. பெரியாழ்வார் திருமொழி
44. பெரும்பாணாற்றுப்படை
45, பெருமாள்திருமொழி
46. பேரூர்க்கோவை
47. மணிமேகலை
48. மலைபடுகடாம்
49. முத்தொள்ளாயிரம்
50. வச்சணந்திமாலை
51. வில்லிபுத்தூராழ்வார் பாரதம்

# பொருளடக்கம்


| வ. எண். | | பக்கம் |
|---|---|---|
| 1. | கைக்கிளை | 1 |
| 2. | இயற்கைப் புணர்ச்சி | 3 |
| 3. | இடந்தலைப்பாடு | 9 |
| 4. | பாங்கற் கூட்டம் | 16 |
| 5. | பாங்கிமதியுடன்பாடு | 23 |
| 6. | பாங்கியிற்கூட்டம் | 31 |
| 7. | ஒருசார் பகற்குறி | 58 |
| 8. | பகற்குறி இடையீடு | 64 |
| 9. | இரவுக்குறி | 68 |
| 10. | இரவுக்குறி இடையீடு | 78 |
| 11. | வரைதல் வேட்கை | 85 |
| 12. | வரைவுகடாதல் | 93 |
| 13. | ஒருவழித்தணத்தல் | 103 |
| 14. | வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல் | 112 |
| 15. | வரைவு மலிவு | 125 |
| 16. | அறத்தொடுநிற்றல் | 129 |
| 17. | உடன்போக்கு | 138 |
| 18. | கற்பொடுபுணர்ந்த கவ்வை | 147 |
| 19. | மீட்சி | 158 |
| 20. | தன்மனைவரைதல் | 160 |
| 21. | உடன்போக்கு இடையீடு | 161 |
| 22. | வரைதல் | 164 |
| 23. | இல்வாழ்க்கை | 165 |
| 24. | பரத்தையிற்பிரிவு | 169 |
| 25. | ஓதற்பிரிவு | 191 |
| 26. | காவற்பிரிவு | 193 |
| 27. | பகைதணி வினைப்பிரிவு | 194 |
| 28. | உற்றுழிப்பிரிவு | 195 |
| 29. | பொருள்வயிற்பிரிவு | 198 |
| 30. | துறவறம் | 202 |

# கப்பற்கோவை

## 1. கைக்கிளை

[கைக்கிளை-ஒருதலைக் காமம். இஃது ஆண்பால் கைக்கிளை]

### காட்சி.

[தலைவன் தலைவியைக் காண்டல்]

சீர்தங்கு பங்கயங் கொண்டல்பொற் கோங்கலர் செங்குமுதம்
கூர்தங்கு முல்லை குமிழ்நெய்தல் பூத்தொரு கொம்புசெம்பொன்
கார்தங்கு செங்கரத் தான்கரு மாணிக்கன் கப்பலென்னும்
ஊர்தங்கு சோலையின் கண்ணொரு காலத் தொளிர்கின்றதே.

ஒரு கொம்பு, பங்கயம், கொண்டல், பொற்கோங்கலர், முல்லை, குமிழ், நெய்தல், பூத்துச் சோலையின்கண் ஒளிர்கின்றது என இயைக்க. பங்கயம் - முகம்; கொண்டல் - கூந்தல்; பொன் கோங்கு அலர் - கொங்கைகள்; செங்குமுதம் - வாய்; முல்லை - பற்கள்; குமிழ் - மூக்கு; நெய்தல் - கண்; கார் தங்கு செங்கரம்; கார் - மேகம்; கரத்துக்கு உவமை, கொடையின் சிறப்பால்; கரு மாணிக்கன் - பாட்டுடைத்தலைவன்.

(பி - ம்.) 1. தேங்குமுதம். (1)

### ஐயம்

[இம்மாது யாரோவென்று தலைவன் ஐயுற்றுக் கூறுதல்]

பொருப்போ கருங்கட லோபொழி லோவுயர் பொன்னுலகோ
விருப்பொடு பன்னக மேவுல கோவிரை நாண்மலரோ
சுருப்பொடு மேவுதண் டார்த்தொண்டை மான்கப்பல் சூழ்சிலம்
மருப்போ வெனுந்தன வல்லியன் னுருக்கு வாழ்பதியே. [பின்

பொழில் - பூமி; வனமும் ஆம். மருப்போ எனும் தன வல்லி அன்னார் - தலைவி; தனத்திற்கு, யானை மருப்பு; 'மதமா, மருப் பேந்திய முலையாள்;' (கம்ப - அயோத் : கங்கைப் : 3.). தலைவியைத் தற்செயலாய்க் கண்ட தலைவன், இவள் மலைவாழும் கந்தருவர் அல்லது வித்தியாதரர் மடந்தையோ, நீரரமகளோ, மண் மடந் தையோ, தேவ மகளோ, நாக கன்னியோ, திருமகளோ என ஐயுற்றான் என்க. சுருப்பு - சுரும்பு என்பதன் வலித்தல் விகாரம். (2)

### துணிவு

[தலைவன், இவள் மானிட மகளே என்று துணிதல்]

இழைக்குங் கலனும் புனையலங் காரமு மின்னிழலும்
குழைக்கும் புறஞ்செல் குவளையும் வல்லியுங் கூற்றமன்ன
கழைக்கு நிமிர்களிற் றுன்கரு மாணிக்கன் கப்பல்வந்த
மழைக்குந் தளமயி லேயென்னு மாலென் மடநெஞ்சமே.

இழைக்கும் கலன் - இழைத்த மணிகளாலாகிய அணிகள். புனை - அலங்காரம்; சாந்து முதலிய மெய்ப்பூச்சுக்கள். இன் நிழல் - இனிய மேனியின் ஒளி. குழைக்கும் புறம் செல் குவளை - குழை என்னும் காதணிகளுக்கும் அப்பாற் சென்று நீண்ட குவளை மலர் போன்ற கண்கள். வல்லி - கொடி; இஃது இடையைக் குறிப்பது. கழைக்கு நிமிர் கூற்றம் அன்ன களிற்றுன் என இயைக்க; கழை - கரும்பு. மழை குந்தள மயில் என்றது, தலைவியை; மேகம் போன்ற கூந்தலும், மயில் போன்ற சாயலும் உடையவள் என்பதாம். குந்தளம் - கூந்தல்; (பிங்.)

(பி - ம்.) 3. மழைக்கொந்தள மயிலே; மானம்மட நெஞ்சமே. (3)

### குறிப்பறிதல்

[தலைவிக்குத் தன்பால் வேட்கை யுள்ளதை அவளுடைய குறிப்புக்களால் தலைவன் அறிந்து கொள்வல்]

நிமலனை யண்டரை யெண்டிசை சூழ்புவி நீலகண்டன்
அமர ரெனும்பெயர் மாற்றிய தாலருள் போற்றியசெங்
கமல மெனுங்கொடை யான்கரு மாணிக்கன் கப்பல்சுற்றும்
தமர நெடுங்கட லார்மட வார்மைத் தடங்கண்களே.

நிமலனை - மலம் அற்ற பிரமனை. அண்டரை - தேவர்களை. அமரர் - (மரணமில்லாதவர்); தேவர். செங்கமலம் எனும் கொடையான் - பதுமம் என்னும் நிதிபோல் கொடையுடையவன். தமர நெடும் கடல் - ஒலியோடு கூடிய பெருங்கடல். நீலகண்டன் விடம் உண்டு, தேவர்களை அமராராக்கியது போலத் தலைவியின் விடம் கொண்டதுபோன்ற மைக்கருங் கண்கள் என் துயரம் போக்கி என்னை ஆண்டு கொண்டது என்று தலைவன் தலைவியைப் பாராட்டினான். நிமலன் விடம் உண்டு, அமுதத்தை அளித்தது போன்ற கண்கள் எனினும் அமையும். ஒப்பு :—குறள், 1091; திருவாவடுதுறைக் கோவை, 4.

(பி - ம்.) 2. 'அமரரென் னும்பெயர்'. 3. 'மாற்றிய வாலருள்'. (4)

## 2. இயற்கைப் புணர்ச்சி

[ஊழ்வினை கூட்டுவிக்கக் கூடும் புணர்ச்சி. இது தெய்வப் புணர்ச்சி யெனவும் படும்]

### கலந்துழி மகிழ்தல்

[தலைவன் தலைவியோடு சேர்ந்த நிலையில் மகிழ்ச்சி யடைதல்]

ஊருங் குலனு நலனுஞ் சிறந்தொரு வர்க்கொருவர்
சேரு மிடமறச் சிந்தையொன் ருயுற்ற செவ்வியின்பம்
யாரிங் கொருவர்பெ றுரென்னை யேயன்றி யிவ்வுலகில்
காருங் கமலமும் பேற்கரு மாணிக்கன் கப்பலிலே.

செவ்வி இன்பம் - புதிய மெய்யுறு புணர்ச்சி இன்பம் ; செவ்வி - சிறப்பும் ஆம். காரும் கமலமும் போல் கையான் - மேகமும், பதும நிதியும் போல் கொடைச் சிறப்புடைய கையான்.

(பி - ம்.) 2. 'தை யொன்ருவுற்ற'; 'செல்வியின்பம்'. (5)

### பெருநயப் புரைத்தல்

[தனது காதன் மியைத் தலைவன் புகழ்ச்சி வகையால் கூறுதல்]

விரும்புந் திருவனையார்குழை தோய்விழி வண்டும்வெள்ளம்
சுரும்பும் பிணங்கிதார்த்தொண்டை வேந்தன் றுவரைவெற்
கரும்பு மமுதும் தெிந்துவெய் யோனெழுங் காலையினும் [பில்
அரும்புங் குமுதமு டோவண்டு காணும் மகன்றடத்தே.

விரும்பும் திருவனையார் - யான் விரும்பும் திருப்போன்ற இத் தலைவி. குழை தோய் விழி வண்டு - காதளவு ஓடும் விழிகளாகிய வண்டுகள். விழி வண்டு, உருவாலும், நிறத்தாலும் எண்க வெள்ளம் - ஒரு எண் ; இங்கு மிகுதியைக் குறித்தது. இது நாணத்தால் கண் முகிழ்த்திருந்த தலைவியைத் தேற்றுமாறு தலைவன் கூறியது.

(பி - ம்.) 3. 'தம்பு மமிர்தம்'. (6)

### ஏற்புறவணிதல்

[நிலை குலைந்த அணிகலன்களைத் தலைவன் தலைவிக்கு முன்போல அணிவித்தல்]

அடியே தொடங்கி முடியள வாய்முன் னணியணிந்த
படியேயி தென்னும் படியணிந் தேன்படி யேழையும்பொற்
றொடியேய் வரைபொரு தோளில்வைத் தோன்றொண்டை
[மான்றுவரைக்
கொடியே புதியகொம் பேகுன்ற வாணர் குலதெய்வமே.

படி ஏழு - ஏழுலகம்; ஏழுலகம், பூமியின் ஏழு பெரும் பகுதிகளான கண்டங்கள் எனலும் ஒன்றும். கொடியே, கொம்பே, குன்றவாணர் குலதெய்வமே என்றவை, தலைவியை நோக்கித் தலைவன் கூறிய விளிகள். (7)

### தெய்வத் திறம்பேசல்.

[தங்களைக் கூட்டிவைத்த ஊழின் தன்மையைத் தலைவன் பாராட்டுதல்]

எக்கால முஞ்செல்வ மேத்தத் தருஞ்செவ்வி யிங்ஙனென்னத்
தக்கார் பிறருந் தலத்திலுண் டோதனி யானையெட்டுத்
திக்கா னையினுங் குலகிரி யேழினுந் தீட்டியசெங்
கைக்காள மேகமன் னுன்கரு மாணிக்கன் கப்பலிலே.

செவ்வி - அழகு. தலத்திலுண்டோ, என்றமையால் இவை தெய்வத்திறத்தால் அமைந்தன என்பது குறிப்பு. ஆணை - செங்கோலாணை. எட்டு திக்கு ஆனை - எட்டுத் திக்குக்களில் நின்று உலகைத் தாங்கும் யானைகள். குலகிரி - உயரிய மலைகள். அவை ஏழு ; கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்பன ; பிங்கலம். செங்கைக்குக் காளமேகம் - கொடைச் சிறப்பால். காளமேகம் - நீருண்ட கருமேகம் ; கையோடு கூடிய காளமேக மென, அவனது நிறம்பற்றி இல்பொரு ளுவமையாகவும் கொள்ளலாம். (8)

### பிரியேனென்றல்

[தலைவன் தலைவியைப் பிரியேன் என்று உறுதி கூறுதல்]

ஆங்கே யனைய வழகுக்கு மாண்மைக்கும் வில்லவனும்
காங்கே யனும்புக ழுங்கரு மாணிக்கன் கப்பல்வெற்பின்
நீங்கேன் மறந்துங் கனவிலு நானுனை நீங்கினுயிர்
தாங்கேன் மலரணங் கேயணங் கேயுன்னைத் தந்ததுவே.

அழகுக்கு வில்லவனும், ஆண்மைக்குக் காங்கேயனும் ; வில்லவன்-அருச்சுனன் ; காங்கேயன் - கங்காபுத்திரனான வீடுமன் ;

இது நிரனிறையணி. இனி, அழகுக்கும் ஆண்மைக்கும் என்பதை, வில்லவனை அருச்சுனனையும், காங்கேயனை முருகனையுங் குறிப்பிட்ட படியும் ஆம்; முருகன் கங்கையின் புதல்வனாதலின், காங்கேயன் எனப்படுவன். இவ்விருவரும் அழகிலும் ஆண்மையிலும் சிறந்தவர்கள். அணங்கே, மலரணங்கே யுன்னை எனக்குத் தந்தது; மலரணங்கு - திருமகள்.

(பி - ம்.) 2. கனவிலும் யானுனை. (9)

## பிரிந்து வருகென்றல்

[போய் வருவேன் என்று தலைவன் தலைவிக்குக் கூறுதல்]

சதுமறைத் தந்தையை யுந்தியந் தாமரை தந்தகொண்டல்
கதிர்மறைக் குந்திகி ரிக்கரு மாணிக்கன் கப்பலன்னீர்
முதுமலைச் சாரல் கடந்திங்ங னேயுங்கண் முத்தவண்டல்
மதுமலர்ச் சோலை நொதுமலர் போல வருகுவனே.

சதுமறைத் தந்தை - பிரமதேவன். கொண்டல் - மேகநிறத் திருமால். கதிர் மறைக்கும் திகிரி கருமாணிக்கன்: இது, சூரியனைப் பாரதப்போரில் சயத்திரதன் பொருட்டுப் பகற்போதிலேயே மறைத்த கண்ணன் செயலைக் கருமாணிக்கன்மேல் ஏற்றிக் கூறியது. 'முத்துக்களைக் கொண்டு வண்டல் விளையாட்டயரும் கடற்கரையிடத்து, அதனையடுத்த மதுமலர்ச் சோலையிலிருந்து மலர்கள் இடம் விட்டுப் பேர, நான் உன்னருகு சேர்வேன்' என்று தலைவன் தலைவிக்கு உறுதி கூறியது; இனி, 'பிறர் இன்னாரென்று தெரிந்துகொள்ளாதபடி, நொதுமலர் போல் நீங்கள் முத்த வண்டல் அயருமிடம் வருகுவேன்' என்று கூறினன் எனலும் ஆம். நொதுமலர் -முன்பின் அறியாத அயலார்.

(பி - ம்.) 4. நொதுமலர்போக. (10)

## இடமணித்தென்றல்

[நம்முடைய ஊர்கள் ஒன்றுக்கொன்று அருகே யுள்ளன என்று தலைவன் தலைவிக்குக் கூறுதல்]

சேயோ வெனுந்திற லான்றிரு மேனி வலம்புரிபோல்
தூயோன் வழிவந்த தொண்டையர் கோன்கப்பற் றேகையன்ன
மாயோய் வருந்தலை நும்புனங் காக்கு மகளிர்கிள்ளை
ஆயோ வெனத்தரி யாதெங்கள் வாவியி லன்னங்களே.

சேய் - முருகன். திருமேனி வம்புரி போல் தூயன் - திருமேனி வலம் புரிச்சங்கம் போன்ற தூய்மையுடைய பலதேவன் ; அவன் வெண்ணிறத்தன் ஆதலின், சங்க வண்ணன் எனப்படுவதும் காண்க. தோகை அன்ன மாயோய் - மயில் போன்ற பெண்ணே ! மாயோள் - பெண் ; பெயர். 'எங்கள் வாவியின் அன்னங்கள், நும் புனம் காக்கும் மகளிர் கிள்ளைகளை ஆயோ எனக் கூவி ஓட்டும் ஒலி கேட்டு அஞ்சித் தரியாது அகலும்' என்றமையால், 'எம் இருப்பிடம் நும் புனத்திற்குக் கூப்பிடு தூர அளவிலே உள்ளது ; ஆதலின் நான் நின்னை அடிக்கடி வந்து காண்பேன்' என்று கூறித் தலைவியைத் தலைவன் ஆற்றுவித்தான் என்க.

(பி - ம்.) 4. வாவியி னன்னங்களே. (11)

## பிரிவுழி மகிழ்ச்சி

[தலைவி பிரிந்து ஆயத்திடைச் செல்லுங்கால் அவள் தோற்றத்தைக் கண்டு தலைவன் மகிழ்ந்து கூறுதல்]

தோளுந் தொயிலு நெகிழக் கலையுந் துடியுமலர்த்
தாளும் பரிபுர முந்தடு மாறத் தமிழ்க்கவிக்குக்
காளங் கவிகை தருங்கரு மாணிக்கன் கப்பல்வெற்பின்
நாளும் புதிய நலங்கொண் டென்னுவி நடக்கின்றதே.

தொயில் - தொய்யில் என்னும் வரிக்கோலம் ; தொயில் - இடைக்குறை. துடி - தாளச்சதி வரிசை ; அடையும் ஆம் ; துடி - உடுக்கை போன்ற இடை ; ஆகுபெயர். தாள் - பாதம். பரிபுரம் - சதங்கை. காளம் - எக்காளம் என்னும் ஊதுகருவி. கவிகை - குடை. என் ஆவி, என்றது தலைவியை.

(பி - ம்.) 1. துடி சிறந்த. (12)

## எய்தற்கருமை யுரைத்தல்

[ஆயவெள்ளத்திடைக் கண்ட தலைமகளைத் தான் இனியடைதற்கு அருமையெனத் தலைவன் கூறுதல்]

நாளார் மலர்க்கழு நீர்த்தண் டுழாய்மண நாறுசெம்பொற்
றோளா னனுபமன் றெண்டையர் வேந்தன் றுவரையன்னார்
கேளாம் வளைக்கைக் கிளைக்கட னீந்தியிக் கிள்ளையின்பம்
வாளா தரவந்த தோமன மேயிது வார்த்தையன்றே.

நாள் ஆர் மலர் கழுநீர் - அன்று மலர்ந்து விளங்கும் மலராகிய கழுநீர். அநுபமன் - உவமையற்றோன். கிளைக்கடல் -

சுற்றமாகிய மகளிர் கூட்டம்; கடல் என்றது மிகுதிபற்றி. வளைக்கைக் கடல் என்றமை, தலைவியைச் சூழ்ந்த மகளிர் ஆயத்தைக் குறிப்பதாகும். கடல் என்பதற்கு ஏற்ப, நீந்தி என்ற நயம் நோக்குக. கிள்ளை - தலைவி; கிள்ளையின்பம் - கிளி போன்ற சொல் இன்பமும் ஆம். வராசு தர வந்ததோ - எதிர்பாராது தன் முயற்சியின்றித் தானே எளிதில் சம்பவித்ததோ; அதாவது, இது அரிய நிகழ்ச்சியே யாம் என்பது.

(பி - ம்.) 2. வழக்கை. 4. மனமேயிவர். (13)

## காதற் பாங்கியை அறிதல்

[ஆய வெள்ளத்தில் தலைவியின் காதற் பாங்கியைத் தலைவன் அறிதல்]

பார்க்கினு மொன்று பகரினு மெய்ப்பணைத் தோளிணையில்
சேர்க்கினும் யாவையி னுஞ்சிந்தி யாள்சிறந் தாளிவள்கொல்
கார்க்குல மன்னகை யான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
ஆர்க்கு மிருஞ்சிலம் பாரடித் தாமரை யாரணங்கே.

பணை தோள் இணையில் சேர்க்கினும் - பருத்த இரு தோள்களிலும் சேர்த்து அணைத்தாலும், யாவையினும் சிந்தியாள் சிறந்தாள் - வேறு ஒன்றையும் சிந்திக்காது சிறந்து விளங்கினள். இச் செயல்கள் பாங்கியைத் தலைவற்குக் காட்டின. கார்க்குலம் - மேகக் கூட்டம். ஆர்க்கும் - ஒலிக்கும். இரும் - பெரும். சிலம்பு ஆர் அடித்தாமரை ஆரணங்கு பார்க்கினும், என்று இணைக்க. ஆரணங்கு என்றது தலைவியை.

(பி - ம்.) 1. பகரினு மேபணைத். (14)

## பண்பு பாராட்டல்

[தலைவியின் அழகு முதலிய மேம்பாடுகளைத் தலைவன் பாராட்டிக் கூறுதல்]

தொலையாத வண்புகழ்த் தொண்டையர் கோன்கப்பற் [றேருகை யன்னாள்
சிலையார் நுதலு முகமுங்கண் டேவிம்முந் தேயுமொன்றில்
நிலையாக நிற்கப் பெருததுவே யன்றி நெஞ்சிலுண்டோ
கலையார் மதிக்குக் களங்கமுண் டாதற்குக் காரணமே.

சிலை ஆர் நுதல் - வில்லைப்போல் விளங்கும் நெற்றி. கலை ஆர் மதிக்கு - பல கலைகளோடு கூடிய சந்திரனுக்கு. தலைவியின்

சிலை போன்ற நுதலையும் முகத்தையும் தான் தின் இளம்பிறைப் பருவத்தும் நிறைமதிப் பருவத்தும் அடையாமை கருதி, மதி விம்மியும் தேய்வுற்றும் வளர்ந்தும் குறைந்தும் ஓரிடத்து இன்றிச் சலனமுற்று அலைந்தும் திரிகின்றது என்று கொள்க. இவ்வாறு தலைவன் தலைவியைப் பாராட்டு முகத்தால் மதியை இழித்துக் கூறினன் என்க. முகம் கண்டு விம்முதலும், நுதல் கண்டு தேய்த லும் என எதிர் நிரனிறையாக்குக.

(பி - ம்.) 1. ரேகை யன்னார். 2. பொருதது. (15)

## பயந்தோர்ப் பழிச்சல்

[தலைவியைப்பெற்ற தாய் தந்தையரைத் தலைவன் வாழ்த்துதல்]

கந்தார் கடகளிற் றான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
வந்தாவி பெற்று மகிழுநெஞ் சேவள மாயுனக்குச்
சிந்தா மணியைத் தெவிட்டா வமுதைத் திருவையிங்ஙன்
தந்தா ரிருக்கவென் னோசல ராசி தவம்பெற்றதே.

கந்து - கட்டுத்தறி. கடம் - மதம். சலராசி - கடல்; இங்குப் பாற் கடலைக் குறித்தது. சிந்தாமணி, தெவிட்டா அமுது என்றது தலைவியை. சிந்தாமணி, மனத்தில் நினைத்ததைத் தர வல்ல ஒரு தெய்வமணி. 'சிந்தாமணி போன்றவளும் தெவிட்டா அமுது போன்றவளுமான தலைவியை அவள் பெற்றோர் தனக்கு எளிதில் தந்திருக்க, பாற்கடல் அவற்றை அடைய வீணே தவஞ் செய்ததே' என்று பாற்கடலை இகழ்வது போலத் தலைவியைத் தலைவன் பாராட்டினன் என்க.

(பி - ம்.) 2. வறிதே யெனக்குச். (16)

## கண்படை பெறாது கங்குனோதல்

[தலைவியைப் பிரிந்த தலைமகன் இரவில் துயில் பெறாது வருந்திக் கூறுதல்]

ஏற்றோ ரிரக்கு மிரவொழித் தோன்வைய மேற்றவன்வெம்
காற்றோ டிகல்பரித் தேர்க்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
கூற்றோ டிகலிக் கொலைகற்ற காவிக் கொழுங்கடைக்குத்
தோற்றோ கருங்கட லுந்துயி லாது துளங்குவதே.

ஏற்றோர் - இரவலர். இரவு - இரத்தல். வையம் ஏற்றவன் - உலகைத் தாங்கி ஆள்பவன்; மாவலியால் மண் இரந்த திரு

மால் போன்றவன் என்னலும் ஆம். காற்றோடு இகல் பரி தேர் - காற்றினும் வேகமாய்ச் செல்லும் பரி பூட்டிய தேர்; ஓடு வேற்றுமை மயக்கம். தலைவியின் காவி மலர் போன்ற கடைக்கண்களுக்குத் தோற்ற காரணத்தால் போலும், கடல் துயிலாது துளங்குகின்றது என்றான் தலைவன். துளங்குதல் - நடுங்குதல். மகளிர் கண்ணுக்கு கூற்றம், கடல் உவமைப் பொருள்கள். ஒப்பு. திருவரங்கக்கலம்பகம் *21*. *(17)*

## 3. இடந்தலைப்பாடு

[இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த இடத்தைத் தலைவன் மீண்டும் அடைதல்]

### தந்த தெய்வந் தருமெனச் சேறல்

[முன் தலைவியைக் கூட்டிவைத்த தெய்வம் இப்பொழுதும் கூட்டி வைக்குமென்று தலைவன் நினைந்து அவ்விடத்திற்கு ஏகல்]

கானே கமழ்தெரி யற்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
தேனேய் மொழிவஞ்சி செவ்வித் திருநலந் திண்சிலம்பில்
யானேகு முன்னம் வருந்தியன் றேதந்த தெய்வமின்னம்
தானே தருநெஞ்ச மேபோது நாங்கண்ட தண்டலைக்கே.

கான் - மணம். தேன் ஏய் மொழி வஞ்சி - தேன் போன்ற இனிய சொற்களையுடைய தலைவி. செவ்வித் திரு நலம் - மெய்யுறு புணர்ச்சியின்பம்; நாளும் புதுமையாய்த் தோன்றும் நலம். தண்டலை - சோலை. நாம் கண்ட தண்டலைக்கே போதும் என இயைக்க.

(பி - ம்.) 2. செல்வி. *(18)*

### இடங்கண்டு வியத்தல்

[தலைவன் முன் தலைவியைக் கண்ட பொழிலைக்கண்டு வியந்து கூறுதல்]

கிளியும் பிணையுங் கிளையுமென் காந்தளுங் கேகயமும்
அளியுங் கனியு மரம்பையுங் கோங்கு மவிர்நவிரும்
களியுங் கலந்த புனங்கரு மாணிக்கன் கப்பலென்னத்
தெளியும் பிறைநுத லாரென்னு மாறு சிறக்கின்றதே.

பிணை - பெண் மான். கிளை - பண்வகை. கேகயம் - மயில். அளி - வண்டு. அரம்பை - வாழை. நவிர் - செம்முருக்க மலர்; வாளும் ஆம். களி - கள்; தேன். கிளி, பிணை, கிளை, காந்தள், கேகயம், அளி, கனி, அரம்பை, கோங்கு, நவிர், களி, இவற்றைப்

புனம் உடைமையால், இடம் தன் பிறை நுதலாரான தலைவிபோன்று சிறப்புடையதாய் விளங்குகின்றது' என்றான் தலைவன். கிளியும் பிணையும், தலைவியின் உருவத்திற்கு; கிள்ளை, சொல்லுக்கு; காந்தள், கைக்கு; கேகயம், சாயலுக்கு; அளி, கண்ணுக்கு; கனி, சொற் சுவைக்கு; அரம்பை, தொடைகளுக்கு; கோங்கு, தனங்களுக்கு; நவிர், செவ்வாய்க்கு; களி, இதழமுதுக்கு; என இயைக்க. (19)

## தலைவன் தலைவியைக் காண்டல்

[தலைவன் தலைவியை அப்பொழிலிடத்து வரக்கண்டது]

பருங்குன் றனைய பணைமுலை யாயம் படரவிட்டெம்
மருங்குங் குழைபொரு வாட்கண் பரப்பி வயங்குமின்போல்
சுருங்குங் கொடியிடை யார்தொண்டை மான்கப்பல் சூழ்சுரும்பு
நெருங்குஞ் சிலம்பினின் றாரென்செய் வேனிந் நிலைதனக்கே.

ஆயம் - தலைவியின் தோழியர் கூட்டம். படர விடுதல் - நாற்புறமும் சூழ்ந்திருக்க இருத்தல். வாட்கண் பரப்புதல் - கண்களாகிய வாள்களை வீசி நிற்றல். இது, தலைவன், தான் தலைவியைக் கண்ட நிலையை வியந்து வருந்தியது. (20)

## மருங்கணைதல்

[தலைவன் வண்டோச்சித் தலைவியின் அருகே அடைதல்]

நடைபெற்ற செந்தமிழ் நன்னு வலவர் நவிலுமின்சொல்
தொடைபெற்ற தொண்டையர் கோன்கப்பல் சூழ்வரைத் [தோகையன்னார்
புடைபெற்ற கொங்கை பொருதிறற் போது பொறுக்கமற்றோர்
இடைபெற்ற பேறதல்ல வோவண்டு காள்வந் திறுப்பதுவே.

நடைபெற்ற - உலகில் வழங்குதலைப் பெற்ற. தொடை - செய்யுள். புடைபெற்ற - புடைத்து விளங்குதலையுடைய; அதாவது, பக்க இடங்களை வியாபித்துப் பருத்து விளங்குகின்ற. பொறுது - தாங்கமாட்டாது. இறுப்பது - ஒடிப்பது; தங்கியிருத்தலுமாம். இவ்விடை அவள் கொங்கைகளைத் தாங்காது; ஆதலால், வண்டுகளே! மற்றோர் இடையை அவள் துணையாகப் பெற்றால் அன்றி, நீங்கள் அவளிடம் வருவதைத் தவிருங்கள்' என்று கூறி, அவற்றைத் தலைவன் ஓட்டினான் என்க. இது, வண்டோச்சி மருங்கணைதல் என்னும் துறை.

(பி - ம்.) 1. செந்தமிழா னுவலவர். (21)

## மெய்தொட்டுப் பயிறல்

[தலைவன் தலைவியின் மெய்யைத் தழுவி மகிழ்தல்]

கூந்தன் மழைதழு வுங்கொங்கை யாமிக் குவடிரண்டும்
ஏந்து மருங்குல்கெட் டேனுது வேயிவை யேயிகலிக்
காந்தும் சினக்களிற் ருன்கரு மாணிக்கன் கப்பற்செஞ்சொல்
ஆய்ந்த மலைத்தலை வந்தெனை யாளு மரவிந்தமே.

*கூந்தன் மழை - கூந்தலாகிய மேகம். குவடு இரண்டு - இரு குன்றுகள் போன்ற தனங்கள். காந்தும் - வெப்பங் கொள்ளும். இவையே நுதுவே - இவையே பகை ; நுதுத்தல் - பகைத்தல். கெட்டேன் - இரக்கத்தை யுணர்த்தும் சொல். செஞ்சொல் ஆய்ந்த மலை - பொதியமலை ; முன்பு அங்குத் தமிழ்ச் சங்கம் இருந்ததாதலின். அரவிந்தம் - தாமரை போன்ற தலைவி.* (22)

## பொய் பாராட்டல்

[தலைவன், தலைவியின் சிறப்புக்களைப் பெரிதும் புகழ்ந்து பேசுதல்]

கருங்கழல் வெண்குடை யான்கரு மாணிக்கன் கப்பலன்னூர்
மருங்குலும் வார்குழ லுங்கண்டு நாணியவ் வானடைந்த
அருங்கொடி மின்னு மருவரை யேறிய வம்புயலும்
இரங்கலு மேனி நடுங்கலுந் தீர்ந்தில வின்னமுமே.

*கரும் கழல் - பெரிய வீரக்கழல். மருங்குலுக்கு, மின் ; குழலுக்குப் புயல். தலைவியின் இடைக்கும் குழலுக்கும் நாணி, கொடிமின் வானடைந்தது ; புயல் மலை யேறியது. மின் நடுங்கலும், புயல் இரங்கலும் என மாற்றி எதிர் நிரனிறையாகக் கொள்க.*

(பி - ம்.) 2. காடியவ்வா. (23)

## இடம்பெற்றுத் தழாஅல்

[உரிய இடம் அடைந்து, தலைவன் தலைவியைத் தழுவ விரும்பிக் கூறுதல்]

கார்க்குன்ற மேந்துசெங் கைக்கரு மாணிக்கன் கப்பலன்னூர்
வார்க்குன்ற மெய்தும் வரையிது போலு மருங்கிரண்டும்
பார்க்கின்ற நீலம் பவழந் துடிக்கும் பனிமதியம்
வேர்க்குந் திலக மழியுங் கலாபமும் வீழ்கின்றதே.

*இது, தலைவி வந்து விளையாட்டயரும் வரைபோலும் என்று தலைவன் கருதியது. தலைவியிடம் உள்ளவை இவ்வரையில் இருப்ப*

தாகக் கண்டமை காண்க. தலைவிக்குச் சொல்லும்போது, வார்க் குன்றம் - கச்சணிந்த தனங்கள்; நீலம் - விழி; பவழம் - வாய்; மதியம் - பிறைநுதல், அல்லது முகம்; திலகம் - நெற்றிப் பொட்டு; கலாபம் - கூந்தல். மலைக்குச் சொல்லும்போது, குன்றுகள், நீல மலர்கள், பவழம், மதி விளங்குதல்; திலகம் - மஞ்சாடி மரம், கலாபம் - மயில் தோகை. இச்செய்யுள் சிலேடையணி. கண்ணபிரான் கோவர்த்தனக் குன்றேந்திய செயலைப் பாட்டுடைத் தலைவன்மேல் ஏற்றிக் கூறியுள்ளது. (24)

## கொடியிடம் புகுதல்

[தலைவி நாணத்தினால் தலைவன் செய்யும் வழிபாடுகளை மறுத்து, ஒரு கொடியைச் சார்ந்து மறைதல்]

தழையுங் செவிக்கடத் தாரைவண் டார்ப்பத் தறிபிடுங்கிக்
கழையுஞ் சுளிகளிற் றுன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பின்
மழையொன்று நீள்பணை வேரலஞ் சாரலின் மாதவிநின்
உழையன்றி வேறிலை நானடுங் காம லொடுங்குதற்கே.

தழையும் - மடங்கித் தொங்கும். கடம் - மதம். தாரை - ஒழுக்கு. தறி - கம்பம்; அல்லது தூண். கழை - மூங்கில். சுளித்தல் - சினந்து ஒடித்தல். மழை - மேகம். பணை - பருத்த. வேரல் - மூங்கில். மாதவி - குருக்கத்திக் கொடி.

(பி - ம்.) 1. செவிமதத்தாரை. (25)

## கண்புதை

[கொடியிடம் புகுந்த தலைவி நாணத்தினால் தன் கண்களை மூடிக்கொள்ளத் தலைவன் அதுகண்டு வருந்துதல்]

அறையார் கழல்மன்ன ராகங் குளித்தவ ராவியுண்ட
கறையா ரிலங்கிலை வேற்கரு மாணிக்கன் கப்பலன்னீர் [போல்
நறையார் மலர்ப்பொழில் நண்ணுங் குறிப்புங்க ணன்னெஞ்சு
மறையா தவரை மறைக்கத் தகாது மறந்துமின்றே.

அறை ஆர் கழல் மன்னர்-ஒலித்தலையுடைய வீரக்கழல் அணிந்த பகை மன்னர். கறை - இரத்தக்கறை. நெஞ்சு மறைக்கப் படாதது போல, கண்ணும் மறைக்கத் தகாதது என்றது. அவரை என்றது, நெஞ்சிலுள்ளவரை என்றும் பொருள்கொள்ளலாம். இது தலைவன் கூற்று. இத்துறை, இடையூறு கிளத்தல், நாணிக் கண்புதைத்தல் என்ற பெயர்களாலும் வழங்கும்.

## நீடுநினைந்திரங்கல்

[தலைவியின் செயலால் காலம் நீட்டித்தலை நினைந்து தலைவன் வருந்துதல்]

தூணம் பொருமணித் தோளா னனுபமன் றெண்டையர்கோன்
காணுந் தருவன்ன கப்பற் பிரானைக் கருதலர்போல்
ஊணுந் துயிலுமில் லேனுய்யு மாறில்லை யொண்டொடியை
நாணும் விடாது நலனும் விடாதென்னை நன்னெஞ்சமே.

தூணம் - தூண்; அம், சாரியை. காணும் தரு - தேவருலகில் நாம் காணமுடியாது இருக்கும் தெய்வத் தருப்போலன்றி, நாம் காண்டற் கெளியனாய் இருந்து விரும்பியதை அளிக்கும் தருப்போன்ற கப்பற்பிரான் என்க. கருதலர் - பகைவர். கப்பற்பிரானின் பகைவர் ஊணும் துயிலும் இன்றி வருந்துவர்; அதுபோல், தலைவியை நினைந்து தலைவனும் வருந்துகின்றான். 'ஒண்டொடியை நாணும் விடவில்லை; அவள் அழகும் நீங்காது விளங்குகின்றது. ஆதலின், யான் அவளை அடைய முடியாமலும், துறந்து அகல முடியாமலும் வருந்துகின்றேன்' என்று தலைவன் இரங்குகின்றான். நலன் - கூடிமகிழும் நலன். (27)

## நனிநாண் விடுத்தல்

[தலைவி தன் நாணத்தை விடுத்தது]

பாராற் றியதிண் பணைப்புயத் தான்பரு வங்குறியாக்
காராற் றியகொடை யான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
ஓராற் றியங்கிய நட்புப் பெருக்கி லின்றெருபுனல்
பேராற் றிடைநின்ற தாலென்ன நாணம் பெயர்கின்றதே.

ஆற்றிய - காப்பாற்றிய அல்லது ஒருவழிப் புரந்த. கார் பருவக் காலத்தேதான் பொழியும்; அவ்வாறின்றி வந்தோர்க்கு வந்தபோதெல்லாம் உதவியதால், பருவங் குறியாக் கார் ஆற்றிய கொடையான் எனப்பட்டது. ஓர் ஆற்று இயங்கிய நட்பு - ஒரு படித்தாய் எப்போதும் மாறாது இயங்கும் நட்பு. புனல் பேராற்றிடை நில்லாதது போல, நட்புப் பெருக்கில் நாணம் நிலை அழிந்தது என்க. புனல் ஆற்றிடை நின்றது, என்றது அது நில்லாமையைக் குறித்தது. இது தலைவி உட்கோள். (28)

### வறிதுநகை தோற்றல்

[தலைவி சிறிதே புன்னகை செய்தல்]

கப்பார் முடிகடிந் தோன்கரு மாணிக்கன் கப்பனகர்
ஒப்பா ரிதயத் துதையமென் ஞேவள்ள லுள்ளங்கொள்ளச்
செப்பார் சிலவெனி னுஞ்செக்கர் வானில வன்னசெவ்வித்
துப்பார் நகைசிறி தேவறி தேவந்து தோன்றியதே.

கப்பார் - பகைவர்; கப்பு - பிரிவு. துப்பு ஆர் நகை - பவழம் போன்ற வாயின் முறுவல். வறிதே - சிறிதே. செவ்வி - அழகு. தலைவி தன் விருப்பைத் தன் குறு நகையால் அறிவித்தது.

(பி - ம்.) 3. வானிலவின் செவ்வித். (29)

### முறுவற் குறிப்புணர்தல்

[தலைவியின் புன்னகையால் அவள் உடன்பாட்டுக் குறிப்பினைத் தலைவன் உணர்தல்]

தகைக்கே தகைதழு வுங்கப்பற் காவலன் றண்டமிழ்ச்சொல்
தொகைக்கே நிலைபெற்ற தொண்டையர் வேந்தன் றுவரை [வெற்பின்
வகைக்கே மலர்தங்கும் வார்குழ லார்தம் மழலைச்செவ்வாய்
நகைக்கே சிறிதுண்டு நாமுய்யு மாரொரு நல்லுறவே.

தகைக்கே தகை தழுவும் - தடைக்குத் தடையாக மேற்கொள்ளும். தலைவி சிறு நகை செய்தாளாக, அந்நகையே தான் உய்யும் வழியாகித் தனக்கு அவளிடம் நல்லுறவு உண்டாக்கும் வழியும் ஆகும் என்று தலைவன் குறிப்பால் உணர்ந்தான். (30)

### முயங்குத லுறுத்தல்

[சேர்தல்]

கனியார் பொழிற்கப்ப லான்கரு மாணிக்கன் காசினிமான்
துனியாற வந்தரு ளுந்தொண்டை மான்றுங்க மால்வரையில்
தனியான வெல்லையுஞ் சற்றே முறுவலுஞ் சிற்றிடையார்
முனியா முகமும் பெற்றோ மினியாக முயங்குதுமே.

காசினி மான் துனி ஆற-பூமியாகிய மடந்தை துன்பம் தவிர்ந்து வாழ. துங்க மால் வரை - உயர்ந்த பெரு மலை. தனியான எல்லை - தனித்த இடம். ஆகம் முயங்குதும்; முயங்குதல் - தழுவுதல். (31)

### புணர்ச்சியின் மகிழ்தல்

உறுகட் புலனிடத் தேகண்டு கேட்டுண் டுயிர்த்துற்றின்பம்
பெறுகைக் கருமருந் தொன்றுபெற் றேந்துள்ளும் பேரருவித்
துறுகற் பொதியில்வெற் போன்றொண்டை மான்கப்பல் சூழு
[முந்நீர்
மறுகக் கடைந்தனர் மாலும்விண் ணோரும் வருந்தியுமே.

*துறுகல் - சிறு குன்று போன்ற பாறங்கல். பொதியில் வெற்போன் - பொதிய மலையையுடையவன். மறுக - குழம்பி வருந்த. 'மருந்து பெற மாலும் விண்ணோரும் முந்நீர் மறுக வருந்திக் கடைந்தனர், யான் தலைவியாகிய பெறுதற்கு அரிய மருந்தை எளிதிற் பெற்றேன்' என்று தலைவன் தற்புகழ்ச்சியாகக் கூறியது என்க. கண்டு கேட்டுண்டுயிர்த்தல்; குறள். 1101. துள்ளும் பேரருவி — துள்ளியெழுந்து ஓடும் பெரிய மலையருவி. முந்நீர் - கடல்; இங்குப் பாற்கடலைக் குறித்து நின்றது.*

(பி - ம்.) 3. *முன்னீர்.* (32)

### அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல்

*[தன் அணிகலன்கள் கலைந்தமை, வேறுபாட்டைப் புலப்படுத்துமென்று தலைவி நாணியதை யறிந்த தலைவன், முன்போலவே அணிந்தேனென்று அவளைத் தெளிவித்தது]*

அடியே தொடங்கி முடியள வாயணி முன்னணிந்த
படியேயி தென்னும் படியணிந் தேன்படி யேழையும்பொற்
றொடியே வரைபொரு தோளில்வைத் தோன்றொண்டை
[மான்றுவரைக்
கொடியே புதியகொம் பேகுன்ற வாணர் குலதெய்வமே.

*இது - யான் அணிந்த இது. முன் — முயங்குதற்குமுன். படி ஏழையும் - பூமியின் ஏழு கண்டங்களையும். பொற்றொடியே, கொடியே, கொம்பே, குன்றவாணர் குல தெய்வமே என்பன தலைவியைக் குறிப்பன. படியேழையும் வரைபொரு தோளில் வைத்தோன் தொண்டைமான் என இயைக்க.* (33)

*குறிப்பு : இச் செய்யுள், இந்நூல் நிலையத்தில் உள்ள கப்பற் கோவை நூல் ஏடுகளில் இல்லாது, கோவைக்கொத்து என்னும் சுவடியில் கப்பற்கோவைப் பகுதியில் கிடைக்கப்பெற்று இங்குச் சேர்த்துக் கொள்ளப்பெற்றது.*

### ஆயத்துய்த்தல்

[தலைவன் தலைவியை அயள் ஆயத்தை யடையுமாறு செய்தல்]

கனிநீர்மை கொண்டசெவ் வாய்க்கன்னி யாகங் கடந்தகல்லின்
துனிநீ வியகழற் றெண்டையர் கோன்கப்பல் சூழ்சிலம்பில்
பனிநீர் மலர்க்குழற் பாவையன் னீரென் பகர்வதுநான்
இனிநீ ரெழுந்தரு ளும்வண்ட லாய மெதிர்கொளவே.

*கனி - கொவ்வைக்கனி. நீர்மை - தன்மை. கன்னி - அகலிகை. ஆகம் கடந்த - உடல் மாறிக் கடந்த. கல்லின் துனி நீவிய - கல்லினது வடிவாகிய துன்பம் துடைத்த. இதில் இராமபிரான் கல்லாய்க் கிடந்த அகலிகை சாபந் தீர்த்து அவள் பண்டையுரு அடையச் செய்த அருஞ் செயலைப் பாட்டுடைத் தலைவன் மேலேற்றிக் கூறியது. வண்டல் - மகளிர் விளையாட்டு.* (34)

---

## 4. பாங்கற் கூட்டம்

### பாங்கனை நினைத்தல்

[தலைவன் தன் துணைவனை நினைத்தல்]

தூவிக் களிமயில் வேலொண்டை வேந்தன் றுவரைநன்னீர்
வாவிப் பெடையன்ன மென்னடை யார்மக ரக்குழைதோய்
காவிப் பனிமலர்க் கண்வலைப் பட்டுக் கலங்கியநம்
ஆவிக்கு மாவியுண் டேமன மேயென் னழுங்குவதே.

*தூவி களி மயில் வேள் - தோகையுடைய மதர்த்த மயிலின் மீது விளங்கும் குமார வேள் போன்ற கருமாணிக்கன். ஆவிக்கும் ஆவி - உயிருக்கு வலிமை; ஆவி - வலிமை; ஆவிக்கு ஆவி - உயிர்க்கு உயிர் என்னலும் ஆம். அழுங்குவது - வருந்துவது. தலைவன் பாங்கனைத் தன் உயிருக்கு வலிமைதரும் நண்பனைக் கருதியது.* (35)

### பாங்கன் வினுதல்

[தலைவனது மெலிவைப் பாங்கன் வினுதல்]

கண்ணன் கமலக்கண் ணன்கரு மாணிக்கன் காமர்சங்க
வண்ணன் றுவரை வரோதயன் காக்கு மகிதலத்தில்
எண்ணெண் கலையினு நீபயி லாதன வில்லையென்றே
தண்ணந் தடந்துறை வாதிரு மேனி தளர்கின்றதே.

இதில் பாட்டுடைத் தலைவனைக் கண்ணபிரானாகவும், சங்க வண்ணனை பல தேவனாகவும் கூறியது. வரோதயன் - தெய்வ வரத்தாற் றோன்றினவன். எண் எண் கலை - அறுபத்து நான்கு கலைகள்.

(பி - ம்.) சங்குவண்ணன். (36)

தலைவன் உற்றதுரைத்தல்

சீற்றஞ் சிறந்த களிற்றடை யாருடற் செங்குருதி
காற்றுங் கதிர்வடி வேற்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
கூற்றங் கரந்தொரு பெண்ணுரு வாய்விழி கொண்டுரைத்த
மாற்றங்கு வாலன்ப னேசொல்ல நாவில் வருவதன்றே.

அடையார் - பகைவர். காற்றும் - வெளிப்படுத்தும். விழி கொண்டுரைத்தல் - கண்ணோக்கால் குறிப்பாய் உரைத்தல்; 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கில் வாய்ச்சொற்க, ளென்ன பயனு மில' (குறள். 1100). கூற்றமே பெண்ணுருக் கொண்டது; (குறள் : 1083.) மாற்றம் - வார்த்தை. குவால் - மிகுதி. (37)

பாங்கன் கழறல்

[பாங்கன் இடித்துக்கூறல்]

மலைக்குங் களிற்று மருவார் வளனும் வலியுமெல்லாம்
தொலைக்குஞ் சுடர்வடி வேற்றொண்டை மான்கப்பல் சூழ்சிலம்
நிலைக்குந் தகைமைக்கு நீர்மைக்கு மாண்மைக்கு நீதெரிந்த [பின்
கலைக்குந் தகுவதன் றேமன்ன நீசொன்ன கட்டுரையே.

மலைதல் - போரிடுதல். மருவார் - பகைவர். நீர்மை - தன்மை. கட்டுரை - உறுதிச் சொல்; புனைந்துரையும் ஆம். மன்ன என்றது தலைவனை நோக்கிக் கூறிய விளி.

(பி - ம்.) 1. மருவார் வளன்மலி விசையுமெல்லாம். (38)

தலைவன் கழற்றெதிர் மறுத்தல்

[பாங்கன் இடித்துக்கூறியதைத் தலைவன் மறுத்துச் சொல்லுதல்]

காலோங்கு திண்களிற் றான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பின்
நூலோங்கு மார்பநின் னூல்கடந் தோவைய நோக்குசெங்கண்
மாலோன் றுளவணி மார்பஞ் சிவந்தது மற்றொருவான்
மேலோன் பசந்ததும் வேதா வதரம் வெளுத்ததுமே.

கால் ஓங்கு - கால்கள் உயர்ந்து விளங்கும். நூல் ஓங்கு மார்ப என்றது - பாங்கனை ; பாங்கன், அந்தணன் என்பது மரபு ஆதலின் ; நூல், முன்னது பூணூல் ; பின்னது நூலறிவு. ஐய நோக்கு - நுட்பமான பார்வை ; சிறு பார்வையுமாம். மாயோன் துளவு அணி மார்பம் சிவந்தமை, செய்ய திருமகள் தங்கியிருப்பதால், அவள் சேவடிபட்டு. ஆன் மேலோன் - இடபத்தின் மேலுள்ள சிவபிரான். அவன் பசந்தது, அவன் ஆகத்தொருபுறம் பசிய நிறமுடைய உமாதேவி இருந்தமையால். வேதா அதரம் வெளுத்தது, வெண்ணிறக் கலைமகள் பிரமதேவன் நாவில் அமர்ந்ததால். வேதா - பிரமன். அதரம் - உதடு ; கீழுதடும் ஆம். இச்செய்யுள் தலைவன் கூற்று.

(பி - ம்.) 3. மற்றொருபான். (39)

## கிழவோன் வேட்கை தாங்கற் கருமைகூறல்

[வேட்கை-தலைவியின்பாலுள்ள விருப்பம்]

கடம்புற்ற தார்முரு கன்கரு மாணிக்கன் கப்பலன்னூர்
அடம்புற்ற கண்டலந் தண்டுறை வாய்வண்ட லாடியநாள்
விடம்புற் றரவந் தரவந்த தாலன்ன வேட்கைகொண்டிவ்
உடம்புற்ற நோயிங் குயிரறி யாததென் னூழ்வினையே.

கடம்பு - முருகன் மணமாலை ; கடம்பு - ஓர்மரம். அடம்பு - ஒருகொடி. கண்டல் - தாழை. புற்றரவு விடம்தர வந்ததாலன்ன, என மாற்றுக. நோய் - காமநோய் ; உடம்பு என்றது தலைவனை ; உயிர் என்றது தலைவியை. ஊழ்வினை - விதிப் பயன். பாட்டுடைத் தலைவனை இங்கு முருகனைக் கூறியது , முருகன் வடிவழகிற் சிறந்தோனாதலின். (40)

## எவ்விடத் தெவ்வியற்றென்றல்

[நீ கண்ட உருவம் எவ்விடத்தில் உள்ளது ? எவ்விலக்கணத்தை யுடையது ? என்று பாங்கன் தலைவனைக் கேட்டல்]

கனைகழல் வாளபி மன்கரு மாணிக்கன் காமருபூம்
சுனையலர் காவியந் தார்த்தொண்டை வேந்தன் றுவரையெங்
புனையரு வித்தண் பொதியில்வெற் பாநின் புலன்மயங்க [கோன்
எனையது நீகண்ட மெய்யும்மெய் வாழ்கின்ற வெல்லையுமே.

வாள் அபிமன் - வாட்போரிற் சிறந்த அபிமன்யு போன்ற கருமாணிக்கன். சுனை அலர் காவி அம் தார் - மலைச்சுனையிடத்து

மலர்ந்த குவளைப் பூமாலை. அருவி புனை தண் பொதியில் என இயைக்க. மெய் - உருவம் ; வடிவமும் ஆம். எனையது - எவ்விடத் தது? எவ்விலக்கணத்தது?

(பி - ம்.) 3. பொதிய வெற்பா. (41)

## இடமும் வடிவு முரைத்தல்

வங்கருங் கொங்கரும் வந்துநின் றேத்த வடவரசர் [வெற்பில்
கங்கைகொண் டான்றெண்டை மான்கரு மாணிக்கன் கப்பல்
கொங்கையொண் கோங்கமென் கொவ்வைச்செவ் வாய்மைக் [குவளைவிழி
அங்கைசெங் காந்த ளலர்ந்தசெந் தாமரை யானனமே.

வங்கர் - வங்க நாட்டவர். கொங்கர் - கொங்கு நாட்டவர். கருமாணிக்கன் வங்கம், கொங்கு நாடு, வட அரசர்க்குரிய கங்கை இவற்றை வென்றவனாகக் கருதப்படுவன். மை குவளை - கருங் குவளை. ஆனனம் - முகம். தலைவியின் கொங்கைக்குக் கோங்கு, செவ்வாய்க்குக் கொவ்வைக்கனி, விழிக்குக் கருங்குவளை, அங் கைக்குச் செங்காந்தள், முகத்துக்குத் தாமரை. இது தலைவியின் வடிவின் திறங் கூறியது. கருமாணிக்கன் வெற்பென்றது, இடங் கூறியதும் ஆம்.

(பி - ம்.) 1. கப்பலன்னார். (42)

## தேற்றல்

[பாங்கன் தலைவனைத் தேற்றியது]

அருந்துணை வாநின் னறிவுகொண் டோரை யறிந்துவல்லே
வருந்துணை யுஞ்சிந்தை வாட்டந் தவிர்மணி வண்டுளவக்
கருந்துணர் மாலைவேள் வேற்கரு மாணிக்கன் காலிங்கர்கோன்
இருந்துணை வன்றெண்டை மான்கப்பல் சூழு மியல்வெற்பனே.

வல்லே - விரைவில். கருந்துளவத் துணர்மாலை என மாற்றுக. காலிங்கர்கோன் என்றது கருமாணிக்கன் கலிங்கம் வென்று கொண் டமையால். இனி, இருந்துணைவன் என்றமையால் அவன் கலிங்க மன்னனது பெருந் துணைவனெனப் பொருள் கோடலும் அமையும். துணர் - பூங்கொத்து. (43)

## தலைவனை வியத்தல்

[தலைவனைப் பாங்கன் பாராட்டுதல்]

போற்றும் புலவர் கவிமாலை கொண்டு புவிமுழுதும்
தோற்றும் புகழ்புனை தொண்டையர் கோன்கப்பற் றொண்ட
[ருயிர்க்
கேற்றஞ் செயுந்தம் பிரானெழிந் தாலென் பிரானெழியக்
கூற்றங் கடக்கவல் லாரில்லை யேயிக் குவலயத்தே.

புலவர் புகழும் கவிமாலை பெற்று அதனால் உலகில் தன் புகழ் பரவப் பெற்றவன்; புலவர் புகழ்ந்த கவிமாலை யுடைய வனும், உலகில் தன் புகழ் பரவப் பெற்றவனும் ஆன கருமாணிக்கன் எனலும் ஆம். தொண்டர் உயிர்க்கு ஏற்றம் செயும் தம்பிரான்— சிவபிரான். எம்பிரான்—தலைவன். கூற்றம் என்றது இயமன், தலைவி மலைநாட்டுப் பகுதி எனும் பொருள்களில் வந்தது; 37; 45.

குறிப்பு:—இச்செய்யுளும், இந்நூல் நிலையத்திலுள்ள கப்பற் கோவை ஏடுகளில் இல்லாது, கோவைக்கொத்து என்னும் சுவடியில் கப்பற்கோவைப் பகுதியிற் கிடைக்கப்பெற்று, இங்குச் சேர்த்துக் கொள்ளப்பெற்றது. (44)

## பாங்கன், இடங்கண்டு துணிதல்

வென்றே வரவிட்ட கஞ்சன்றன் வஞ்ச விளவையிளங்
கன்றே பொரவெறிந் தோன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பின்
நின்றே யறியுந்தன் னீர்மையு மாண்மையு நீத்தநெடுங்
குன்றே யிதுவிது வேயவன் றன்சொன்ன கூற்றமுமே.

விளவை கன்றே பொர எறிந்தோன் - கண்ணன்; அவன் செயலைக் கருமாணிக்கன் மீது ஏற்றியது. நீர்மையும் ஆண்மை யும் நீத்த - இயல்புகளையும் மன வலிமையையும் போக்கிய. கூற்றம்; 37, 44. (45)

## இகழ்ந்ததற் கிரங்கல்

நல்லான் றமிழுக்கு நல்லார் புலக்கினு நாவிரண்டு
சொல்லான் றெடுகழற் றொண்டையர் வேந்தன் றுவரைவெற்
அல்லார் குழலிவ் வணங்கைவிட் டிங்குநின் றங்குவந்த [பின்
தெல்லாங் கிடக்க விகழ்ந்ததென் பாவ மிறைவனையே.

தமிழுக்கு நல்லான் என்று மாற்றுக. நல்லார் புலக்கினும் - தனக்கு உரிய மகளிர் தன்பால் மாறுபட்டுப் புலவி மேற்கொண்டாலும்; அவர்கள் திறத்துத் தன் நாவுமாறிச் சொல்லமாட்டாதவன். ஒப்பு :—'தெம்மு னையினுஞ் செவ்விமென் போகமா மகளிர், தம்மு னையினும் நாத்தல ருவட்டல் வீமன்.' (வி. பா. புட்பயாத் : 26.) அல் ஆர் குழல் - இருள்போல் செறிந்த குழல். தொடு கழல் - அணியப் பெற்ற வீரக்கழல். தலைவன் தலைவியை இங்கு விட்டு அங்கு நம்மிடம் வந்த திறமை பாராட்டாது, தான் அவனை இகழ்ந்தது பாவம் என்று பாங்கன் வருந்திக் கூறியது.

(பி - ம்.) 2. தொழுகழல். (46)

பாங்கன், தலைவன்றனக்குத் தலைவி நிலை கூறல்

கான்போற் குழலியர் வேள்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
யான்போ யெனதுயிர் கொண்டுவந் தேனெதி ரேறுகெண்டை
மீன்போல் விழிசொரி வெள்ளத்து மேவுங் கலைபிரிந்த
மான்போல நின்று வருந்தநின் போலில்லை வன்னெஞ்சரே.

கான்போற் குழல்; குழலுக்குக் காடு, அதன் செறிவாலும் கருநிறத்தாலும். உயிர் கொண்டு வந்தது, அங்குள்ள மலைவாணர் எதிர்ப்படாது பாங்கன் உயிர் தப்பி வந்தது; அன்றேல், தான் போய்த் திரும்பியதால், தலைவனாகிய தன் உயிரையும் நிலைநிறுத்தியவனானேன் என்று கூறியதும் ஆம். கலைபிரிந்த மான் - ஆண் மானைப் பிரிந்து வருந்தும் பெண்மான். கலை, தலைவனையும், மான் தலைவியையும் குறித்தன. விழிசொரி வெள்ளத்து மேவும், என்றதனால், தலைவியின் பிரிவுத்துயர் நிலையையும் கூறியவாறு. தலைவி வருந்த, அவளை விட்டு நீங்கி வந்தானாதலின், தலைவனை வன்னெஞ்சன் என்றான் பாங்கன். (47)

தலைவன் தலைவியைக் காண்டல்

கலையோர் நிலையறி யுங்கரு மாணிக்கன் கப்பல்மன்னன்
சிலையோ நுதன்மொழி தெள்ளமு தோதிரு வானகொங்கை
மலையோ வினியிவை கொண்டென்னை வாழ்விக்க வந்துநின்ற
நிலையோ விதுவிவர்க் கோதிரு மாதை நிகரென்பதே.

கலையோர் நிலை - கலைவல்லோர் திறம். தலைவிக்குத் திருமாது நிகர் ஆகாள் என்பது தலைவன் துணிவு. 'நுதலுக்குச் சிலை;

மொழிக்குத் தெள்ளமுது ; கொங்கைக்கு மலை. கொங்கையே திரு ஆதலின், தலைவி திருவினும் சிறந்தவளானாள். (48)

### புணர்ச்சியின் மகிழ்தல்

வள்ளத் தமுதமன் னீர்மதி யாவட மன்னருடல்
துள்ளப் படைதொட்ட தொண்டையர் கோன்கப்பற் சோலை
உள்ளத் துணர்வு முயிருமொன் றுயுல வாதவின்ப [யினம்
வெள்ளத்து நீந்தி வெளிநின்றவா முன்செய் மெய்த்தவமே.

வள்ளம் - கிண்ணம். அமுதமன்னீர் என்றது, தலைவியை. நம், என்றது தலைவன் தலைவியாகி இருவரையும். உலவாத - கெடாத. வெளி நின்றவா - வெளிநின்ற தன்மை. இது, தலைவன் கூற்று. (49)

### ஆயத்துய்த்தல்

[தலைவன் தலைவியை அவள் பாங்கியருடன் சேர்த்தல்]

அன்றோர் சிறுகுழ லுங்கையு மாய்முல்லை யாயரிளங்
கன்றோ டுழலுங் கழற்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
குன்றோ டிகலிரு கொங்கையு நீயுமிக் கோலமுங்கொண்
டென்றோ வினிவரு வீரிரு வீருமிங் கென்பொருட்டே.

முல்லை ஆயர் - முல்லை நிலத்து ஆயர் குலமக்கள். இளம் கன்றோடு உழலும் - இளங் கன்றுகளோடு அலைந்து திரிந்த. குன்றோடு இகல் இரு கொங்கை - மலைகளோடு பகை செய்கின்றன போல எழுந்து விளங்கும் இருகொங்கை ; கொங்கை : சினையாகு பெயராய்த் தலைவியைக் குறித்தது. நீயும் என்றது தலைவியை. இருவீரும் - தலைவி பாங்கியாகிய இருவீரும். இது, தலைவன் தலைவியை ஆயத்துய்த்துழிக் கூறியது.

(பி - ம்.) 3. நீருமிக்கோலம். 4. தனிவருவீர். (50)

### பாங்கனை மகிழ்தல்

[தலைவன் பாங்கனைக் கண்டு அவனைப் பாராட்டியது]

ஏயுங் கடுஞ்சுரம் போய்விரும் பாரிலை யுங்கிழங்கும்
காயுங் கவரவைத் தோன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
போயென்ற னாவி புரந்ததற் கன்பு புகல்வதுண்டோ
நீயிங் கெழுபிறப் புந்துணை யாகவென் னெஞ்சினுக்கே

விரும்பார் - பகைவர். எழு பிறப்புந் துணை - எழுமையும் தொடர்ந்து பயிலும் நட்பு. ஒப்பு. குறுந். 2. ஆவிபுரந்தது - தலைவியைக் கண்டுவந்து அவள்நிலை கூறித் தன் உயிர் அளித்தமையால்.

---

## 5. பாங்கி மதியுடன்பாடு

[தலைவன் தலைவிகளுக்குள்ள நட்பை அறிந்து பாங்கி அதற்கு உடன்படுதல்]

### முன்னுற வுணர்தல்

[தோழி, தலைவிக்கு முன்னுற்ற களவுநிலையை உணர்தல்]

பாட்டும் பனுவலும் பன்னிய மானதன் பண்டையுகம்
காட்டுங் கொடைத்தடக் கைக்கரு மாணிக்கன் கப்பலன்னார்
கோட்டுஞ் சிலைநுதல் வேர்க்குங் குழலில்வண் டார்க்குங் [கொம்மை
நாட்டஞ் சிவந்து பசக்குமென் னேயிந்த நல்வினையே.

பனுவல் - செய்யுள். பன்னிய - புகழ்ந்த. மானதன் - மனிதரிற் சிறந்தோன்; அரசன். கோட்டுதல் - குனித்தல். கொம்மை - பருமை. நாட்டம் - கண். பசத்தல் - மகளிர் காமவுணர்ச்சியால் உண்டாகும் நிற வேறுபாடு. நுதல் வேர்த்தல் முதலியன தலைவியின் காமவுணர்ச்சியைப் புலப்படுத்தும் மெய்ப்பாடுகள். இது, பாங்கியின் ஆராய்ச்சித் திறன் கூறியது.

(பி - ம்.) 1. பண்ணிய மானதன். (52)

### தகையணங்குறுத்தல்

[தலைவியின் வேறுபாட்டைக் கண்ட பாங்கி அவளைத் தெய்வப் பெண்ணைப் பாவித்துக் கூறுதல்]

அருவிக் கிரியணங் கேதிரு மேனியெம் மாவியன்னார்
உருவுக்கு ளோமுற்று மொக்குமொவ் வாதன வொண்புருவக்
கருவிற் புடைபெய ருங்கரு மாணிக்கன் கப்பலின்கண்
வெருவிச் சிவந்து பசந்ததுங் கோபம் வெளுத்ததுமே.

அருவி கிரி அணங்கு - அருவிகள் சூழ்ந்த மலைநாடன் மகள். கிரி அணங்கு என்றமையால், மலைத் தெய்வமே என்றபடியும் ஆம். புருவ வில் புடை பெயர்தல், துடித்தலால்; கண் சிவந்து பசந்தது - புணர்ச்சியிற் றிளைத்திருந்ததால். வெருவுதல் - அஞ்சுதல். கோபம் - இந்திர கோபம் போன்ற அதரம்; கோபம், முதற்குறை. இது, புணர்ச்சியின் குறிகளைக் கண்டு மயங்கிப் பாங்கி கூறியது.

(பி - ம்.) 4. விளர்த்ததுமே. (53)

## சுனைவியந்துரைத்தல்

[தலைவியின் வேறுபாடுகளைக் கண்ட தோழி, இவ்வேறுபாட்டிற்குக் காரணம் யாதென்று கேட்டவிடத்து, அவள் ஒரு சுனையாடி வந்தேனென்று கூற அவள், 'சுனை இங்ஙனம் செய்ததோ?' என்று அச்சுனையை வியந்து கூறுதல்]

கனையாழி மண்ணளந் தோன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
புனையார மென்முலை யுஞ்சரி கூந்தலும் பூந்துகிலும்
நனையாம னெஞ்சமு நாவும் புலர நுதல்வெயர்ப்பச்
சுனையாடும் வல்லபங் கற்றதெங் கேசொல்லு தூநகையே.

கனை ஆழி மண் - ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த புவி. மண்ணளந்தது, மாவலிபால் வாமனனாய் மூவடி மண் வேண்டித் திரிவிக்கிரமனாய் எழுந்து மண், விண் அளந்தது. புனை - அணிந்த. ஆரம் - முத்துமாலை. சரி - தொங்குகிற. புலர - காய. வல்லபம் - திறமை. தூநகை : தலைவி. 'முலையும் கூந்தலும் துகிலும் நனையாமல் நெஞ்சும் நாவும் புலர, நுதல் வியர்ப்பச் சுனையாடுதலான திறமை எங்குக் கற்றாய்?' என்று பாங்கி, தான் சுனையாடி வந்ததாகக் கூறிய தலைவியை நோக்கிக் கூறியது.

(பி - ம்.) 3. நாவு முலர்ந்து. 4. சொல்லுந் தூய்நகையே. (54)

## பிறைதொழுகென்றல்

[பிறையைக் கைகூப்பி வணங்குக' என்று பாங்கி தலைவிக்குக் கூறுதல்]

வையந் தொழநின்ற வானோர் வணங்கு மணிமலர்த்தாள்
ஐயன் திருமுடி தாழ்த்த தன்றோவது வன்றியுநின்
கையும் புயமல்ல வோகரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
கொய்யுங் குவளையம் பூங்குழ லாயென் குறிக்கின்றதே.

ஐயன் - சிவபெருமான். ஐயன் திருமுடி தாழ்ந்தது, பிறை. தாழ்ந்தது - தங்கியிருந்தது. 'கை அம்புயமாதலின் பிறை கண்ட கை தானே கூம்பும் அன்றோ? நீ குறிக்கின்றது என்னே' என்று பிறை தொழாது நின்ற தலைவியை நோக்கிப் பாங்கி கூறி ஆராய்ந்தது. (55)

## நடுங்க நாட்டம்

[தான் கூறிய மொழியால் தலைவி நடுங்காநிற்ப, அதனைப் பாங்கி காடுதல்]

கருங்குன்ற மொன்றிரு செம்பிறை யேந்திநங் கார்வரையில்
மருங்கொன்று சாரல் வழங்கக்கண் டேன்வல்லி போலவொல்கிச்
சுருங்குங் கொடியிடை யாய்தொண்டை மான்கப்பற் [றுன்னலர்தம்
இருங்குன்ற மார்பி னுருத்தசெங் கோட்டிப மென்னவந்தே.

கருங்குன்றம் - கரிய குன்று போன்ற யானை. இரு செம் பிறை ஏந்தி - இரண்டு சிவந்த பிறைகளைத் தாங்கி. பிறை : கொம்பு. செம்பிறை என்றது - உதிரம் படிந்து செந்நிறங் கொண்டிருந்ததால். வழங்குதல் - திரிதல். ஒல்கி – நுடங்கித் தளர்தல். துன்னலர் - பகைவர். இரும் குன்ற மார்பின் - பெரிய குன்றம் போன்ற மார் போடு. உருத்த - சினந்து தாக்கிய. செம் கோட்டு இபம் - சிவந்த கொம்புகளையுடைய யானை. இபம் என்ன கருங்குன்றமொன்று வந்தே வழங்கக் கண்டேன் என்றியைக்க. இது, பாங்கி, யானை ஒன்று இங்குத் திரிகின்றதென்று கூறி, அதனால் தலைவிக்குத் தலைவன் திறத்து அச்சமுண்டாக்கி, அவள் நிலை அறிந்தது. (56)

## பாங்கியை யிரவு வலியுறுத்தல்

[தலைவன், பாங்கியை இரத்தற்குத் துணிதல்]

கடியா வருங்கலி யுள்ளத் துணர்வுங் கரையழிந்து
வடியாத காதல் மறிகட லீந்துவ மாமலராள்
தொடியார் புயந்தழு வுந்தொண்டை வேந்தன் றுவரை [வெற்பின்
கொடியார் கருங்குவ ளைக்கொழுந் தேறிய கொம்புகொண்டே.

கடியாவரும் - கடிந்து வரும். கரை அழிந்து வடியாத – கரையழிந்து வடிந்து போகாமல் நிறைந்திருக்கும். காதல் மறிகடல் - காதலாகிய மறிந்து கொந்தளிக்கும் கடல். மாமலராள் - இலக்குமி.

தொடி - வளை. கரும் குவளைக்கொழுந்து ஏறிய கொம்பு-பாங்கி. குவளைக் கொழுந்து - கட்கடை நோக்கம். கொம்பு கொண்டு மறிகடல் நீந்துவம் என்று இயைக்க. கொம்பு - பாங்கி. தலைவியின் கட்கடை, பாங்கியைக் காட்டியது. அப்பாங்கியைக் கொம்பாகக் கொண்டு, காதன் மறிகடல் நீந்தலாம் என்று தலைவன் பாங்கியை இரக்கத் துணிந்தது. (57)

## முகம்புகுகிளவி

[தலைவன் பாங்கியை எதிர்பார்த்து நின்று பேசுதல். முகம் புகுதல்-நோக்கிற்கு எதிர்சென்று புகுதல் : நாலடி : 303.]

நறுமுத் தணிபுன்னை நன்னீர்த் துவரைமன் ஞடொறுநாள்
தொறுமுத் தமிழ்தெரி தொண்டையர் கோன்கப்பல் சூழ்புன
உறுமுத் தரிசி யறையுரற் றந்த வுலக்கைகொண்டு [வேய்
குறுமுத்த மென்னகை யீர்கொள்ளி லோசெங்கை கொப்புளமே.

நறு முத்து அணி புன்னை - மணமிக்க முத்துக்களைக்கொண்டு அணிந்தன போலவிளங்கும் புன்னை மரங்கள் சூழ்ந்த. நல் நீர் துவரை மன் - நல்ல கடல் சூழ்ந்த நெய்தனில முடைய துவராபுரி மன்னன். நாடொறும் நாடொறும் - எல்லா நாட்களிலும். முத்தமிழ் - இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று தமிழ். தெரி - ஆராயும். புன வேய் உறு முத்து அரிசி - காட்டு மூங்கிலின் உண்டாகும் முத்துக்களாகிய அரிசியை. தந்த உலக்கை - யானைத் தந்தமாகிய உலக்கை. அறை - தீட்டும். குறு முத்த மென் நகையீர் - சிறு முத்துக்கள் போன்ற மென்மை வாய்ந்த பற்களையுடைய மகளிர்களே! கொள்ளில் ஓ - குற்றுதலை மேற்கொள்வீரெனில். செங்கை கொப்புளமே - உங்கள் சிவந்த கைகள் கொப்புளங் கொள்வது திண்ணம். இவ்வாறு தலைவன் கூறியது, அவர்களோடு பேச வகைசெய்தது என்க. (58)

## குறைநயப் புரைத்தல்

[தலைவன் தான் குறை நயந்ததைக் கூறியது]

கன்னெஞ்ச முங்குழை யக்குழ லூதுங் கழற்றொண்டைமான்
அன்னஞ் செறிவயற் கப்பலங் காவி லடுஞ்சிறுசோ
றென்னெஞ்சி னும்பெரு கக்குழை யாம லிறக்குமுங்கள்
வுன்னெஞ்ச மல்ல வரிமணற் காணு மடந்தையரே.

காவில் - சோலையில். அடும் சிறு சோறு - நீங்கள் சமைக்கும் சிறு சோறு. என் நெஞ்சினும் - என் மனத்தைவிட. பெருக - அதிகமாக. குழையாமல் - குழைந்து போகாமல். இறக்கும் - நீவிர் சோற்றை அடுப்பினின்று கீழே இறக்குங்கள். மணற்சோறடுதல் மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று. இங்குத் தலைவன் தன் நெஞ்சின் குழைந்த நிலையையும், தலைவி பாங்கியர் நெஞ்சம் வலிந்து நிற்கும் நிலையையும் சுட்டிக் கூறியது ஆம்.

(பி - ம்.) 1. நெஞ்சமு முருக்க. 2. காவினடுஞ். (59)

## உட்கோள்சாற்றல்

[தன் உள்ளத்திற்கொண்ட காதலைத் தலைவன் பாங்கிக்குச் சொல்லுதல்]

தொட்டுண்ட வெண்ணெய்க் கசோதைதன் பாசத் துவக்கி [லன்று
கட்டுண்ட மால்தொண்டை மான்கரு மாணிக்கன் கப்பல்வெற்
மட்டுண்ட பூந்துறை வாய்மணற் சோறு மலர்க்கறியும் [பில்
இட்டுண்டு வாழ்வதன் றேமட மாதருக் கில்லறமே.

பாசத் துவக்கில் - கயிற்றுத் தளையில். மட்டு-மணம் ; தேனும் ஆம். மணற்சோறு, மலர்க்கறியாகிய சிறு சோறிடுதல் மடமகளிர்க்கு உரிய விளையாட்டு என்க. இட்டு - பிறருக்குக் கொடுத்து. உண்டு - தாமும் உண்டு. இச்செய்யுள், வெண்ணெய் திருடி அசோதையால் கண்ணபிரான் கட்டுண்ட செய்தியைப் பாட்டுடைத் தலைவன்மேல் ஏற்றிக் கூறியது. தலைவியும் இல்லறம் புகவேண்டு மென்பது குறிப்பு. (60)

## ஊர் பெயர் வினுதல்

[தலைவன், ‹ உம்முடைய ஊரும் பெயரும் யாவை ?' என்று பாங்கியை வினுதல்]

வாருந் தரள வடமும் பொருமுலை வல்லியன்னீர்
சோருங் குருதிவை வேற்றெண்டை வேந்தன் றுவரைவெற்பில்
சாருங் கலையு முழையுஞ்சொல் லீர்தவிர் வீருமக்கிங்
கூரும் பெயருஞ்சொன் ஞலுகு மோதுகி ரொண்முத்தமே.

வார்-கச்சு. தரள வடம் - முத்துவடம். வல்லி அன்னீர் - கொடி போன்றவர்களே ; வைவேல் - கூரிய வேல். கலை - கலைமான். உழை - பெண்மான். சொல்லீர் தவிர்வீர் - சொல்லாது விட்டீர். ஊரும் பெயரும் சொன்ஞல் - உங்கள் ஊர் பெயர் முதலியவற்றைக் கூறி

னல். துகிர் ஒண் முத்தம் - உங்கள் பவழ வாயில் உள்ள பற்களாகிய ஒளியுடைய முத்துக்கள். உகுமோ - சிந்திப் போமோ ? 'பேசினல் வாய்முத்து உதிர்ந்துவிடுமோ' என்று கூறுவது உலகவழக்கு. இச் செய்யுள் கலை விஞ, உழை விஞ ஆகியவற்றைத் தன்னுள் அடக்கிக்கொண்டது. (61)

களிறு விஞதல்

[தன் வேட்டையில் தப்பிய களிறு வந்ததோ என்று வினவு முகத்தால் தன் கருத்தைத் தலைவன் தெரிவித்தல்]

தும்பைவெம் போர்வென்ற தொண்டையர் கோன்கப்பற் சூழ்
கம்பவெம் போதகங் கண்டிலி ராயினுங் கையிகந்த [சிலம்பில்
அம்புகண் டேனுங்க ளானனத்தே செவ்வி யாகத்திலே
கொம்புகண் டேனினிக் கையுமெய் யேயெய்தக் கூடுமின்றே.

தும்பை - தும்பைப் பூமாலை : இது போரிடும் புறத்திணைச் செயலில் ஈடுபட்டோர் அணியும் மாலை ; ஆதலின், இதனைப் போர் மாலை என்பர். அம்பு - இங்குக் கண் ; என் ஆற்றல் கெடச் செய்த அம்பு என்றலும் ஆம். கம்ப வெம் போதகம் - கம்பத்திற் கட்டும் கொடிய யானை. வம்பு - கச்சு. செவ்வி - அழகிய. ஆகத்திலே - உடலிலே. கொம்பு - தனங்கள். கை - துதிக்கை. தலைவியின் கையையும் தான் மெய்யே எய்தக் கூடும் என்று இரு பொருள் படக் கூறினன் என்க. இது சிலேடை யணி.

(பி - ம்.) 2. கையுணர்ந்த. (62)

எண்ணந்தேர்தல்

[இவர் கூறுவனவற்றுள் ஒன்றற்கு ஒன்று மாறாகவுள்ளது ; ஆதலால் இவர் எண்ணம் யாதோவென்று பாங்கி ஆராய்தல்]

உள்ளங் கருதுவ தொன்றுரை யாடுவ தொன்றுநம்பாற் [வஞ்சக்
கொள்ளுங் குறியொன்று கோலமொன் றேகஞ்சன் கோத்த
கள்ளங் கடந்தகண் ணன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பின்
வெள்ளந் தருந்திரு வேயிவர் யார்கொல் விருந்தினரே.

உள்ளங் கருதுவது......கோலமொன்றே - இவை தலைவனின மாறுபட்ட நிலையினைக் கூறின. கஞ்சன் - கம்சன். கோத்த - ஒன்றன்பின் ஒன்ருகப் பல செய்த. வஞ்சக்கள்ளம் - வஞ்சனை

கூடிய திருட்டுச் செயல்கள். வெள்ளம் - மிகுதி அல்லது கடலும் ஆம். வெள்ளந் தரு திரு - பாற்கடல் அளித்த திருப்போன்றவளே. விருந்தினர் - புதியவர். இது, பாங்கி தலைவிமை நோக்கி வினயது.

(பி - ம்.) 1. குலையா நிற்பதோன்று. (63

## எண்ணந்தெளிதல்

[மேற்கூறிய ஆராய்ச்சியால், தலைவியைப் பெறுதற்குத் தலைவன் எண்ணினுனென்று பாங்கி துணிதல்]

பதமலர் வந்து பணியார் மவுலி பணியவெல்லும்
க்தமிகு வெங்களிற் ருன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பின்
மதகரி யென்றுங் கலையென்று மானென்றும் வாளியென்றும்
முதலிவர் சொன்னதெல் லாமிடைட் யாகு முடிவில்வந்தே.

பணியார் - பணியாத பகைவர். கதம் - கோபம். வாளி - அம்பு. இடை - வழி, அல்லது காரணம்; துன்பமும் ஆம். இங்கு, முதல், இடை, முடிவு என்ற முரண் தொடை நயம் காண்க. இவ்வாறு பாங்கி தலைவன் கருத்தைத் துணிந்தனள். (64)

## பாங்கி எதிர்மொழி கொடுத்தல்

[எதிர்மொழி—விடை]

சூட்டுங் கழற்கம லத்தொண்டை வேந்தன் றுவரைவெற்பில்
கோட்டஞ் சனக்கிரி வந்ததுண் டோவென்று கொற்றவந்நீர்
கேட்டிங்கு நிற்ப தடுப்ப தொன்றல்ல கெடுப்பதெல்லாம்
காட்டுந் தொழிற்குரி யார்குன்று காக்கின்ற கானவரே.

கழற் கமலம் சூட்டும் - பகைவர் தலையில் தன் கழல் ஆகிய தாமரையைச் சூட்டும்; கழல் - ஆகுபெயர். கோட்டு அஞ்சன கிரி - கொம்புகளோடு கூடிய கரியமலை போன்ற யானை. அடுப்பது ஒன்று அல்ல - ஏற்ற ஒரு காரியம் ஆகாது. கெடுப்பது காட்டும் தொழில் - அழிவை உண்டாக்கும் தொழில். இதனால் உனக்குத் தீங்கு விளையும் என்று, பாங்கி தலைவனுக்கு எடுத்துரைத்தாள் என்க. (65)

## இறைவனை நகுதல்

[பாங்கி தலைவனைப் பரிகாசம் செய்தல்]

காமா யுதமுங் கலைமா னிவர்க்கெய்யுங் கார்முகமும்
நாமா தரிக்கு முடையுந் தருதலி னல்லளிசூழ்
தூமாலை வேன்முரு கன்ரெண்டை மான்கப்பற் ரேகையன்னீர்
தேமாவை யொக்கு மரமில்லை யேநஞ் சிலம்பிடத்தே.

காமாயுதம் - மாம்பூ. கார்முகம் - வில். நாம் ஆதரிக்கும் உடை - தழையுடை. அளி - வண்டு. தூமாலை - பரிசுத்தமான மாலையையுடைய. தேமா - மாமரத்திற் சிறந்தது. சிலம்பு - மலை. இச்செய்யுள் தலைவனைப் பாங்கி நகைப்பதாக அமைந்துள்ளது. இவர்க்குக் கலைமான் எய்யும் கார்முகமும், அம்பும் தேமாவே கொடுத்தன; நமக்கு உடையும் இம்மரமே உதவுகின்றது ; ஆகவே, நம் சிலம்பிடத்தே தேமாவை ஒக்கும் மரமில்லை என்று கூறி நகைத்தனள். தலைவன் ஓர் இலை உடைகொடுக்க, பாங்கி அதைக் கண்டு இவ்வாறு கூறினள் ஆம். இவர் கையில் வில்லும் இல்லை ; அம்பும் இல்லை ; தழையுடையே கொண்டு நிற்கிறார். இவர் வேட்டையாட வந்ததாகக் கூறுவது உண்மையன்று என்றபடி. ' இவர் பேசர்புரிதற், கேவிலை வில்லிலை வின்னு ணிலையிவர்க் கித்தனையும், மாவிலை ' என்ற திருவாரூர்க்கோவை (96)ப் பகுதியையும் காண்க.

(பி - ம்.) 1. செய்தக் கார்முகமும். (66)

## மதியினவரவர் மனக்கருத்து உணர்தல்

[தலைவன் தலைவிகளின் எண்ணங்களைத் தன் ஆராய்ச்சியினாலே பாங்கி அறிந்துகொள்ளுதல்]

கந்தார் கடகளிற் றுன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
சந்தளி ரளிமுரல் தண்ணறுங் காவினிற் றக்கதொன்றே
செந்தா மரையுங் கருந்தா மரையுந் தினைப்புனத்து
வந்தார் புயத்து மிருந்தார் குயத்து மலர்ந்தனவே.

சந்து ஆர் - சந்தன மரங்கள் விளங்கும். அளி முரல் - வண்டுகள் ஒலிக்கும். செந்தாமரை : தலைவன் கண். கருந்தாமரை - நீலமலர் ; தலைவி கண் வந்தார் - தலைவன். இருந்தார் - தலைவி. இது தலைவன் தலைவியர் ஒருவரையொருவர் நோக்கியது ; இது எதிர்நிரனிறை அணி. இக்குறிகளால் பாங்கி இருவர் மனக்கருத்தையும் உணர்ந்தனள் என்க. (67)

# 6. பாங்கியிற் கூட்டம்

[பாங்கியால் தலைவன் தலைவியை அடைதல்]

## தலைவனுட்கோள் சாற்றல்

[தலைவன் தன் உள்ளத்திற்கொண்ட காதலைச் சொல்லுதல்]

அளிக்கும் புனக்கிளி யாயென்ன வோவண் டரும்பவிழ்தேன்
குளிக்குஞ் சுனையிற் குவளைகொய் கோகுறு காரைவென்று
களிக்குங் கடகளிற் றான்கரு மாணிக்கன் கப்பலன்னீர் [கே.
விளிக்குஞ் சிலம்பழைக் கோவிழைக் கோசிற்றில் மெல்லியற்

'ஆய் எனல் - ஆயோ எனக் கிளியோடடக் கூவல். கொய் கோ - பறிக்கவோ? கிளியோட்டல், சிலம்பெதிர் கூவல், சிற்றில் இழைத்தல் இவை மகளிர் விளையாட்டுக்கள். விளித்தல் - கூப்பிடுதல். மெல்லியல் - தலைவி. 'இவற்றினுள் எவை செய்தால், தலைவிக்கு உவப்பாகும்' என்று தலைவன் வினவினான் என்க. குறு கார் - பகைவர். களிக்கும் கட களிறு - வெற்றிகொண்ட மதயானை.

(பி - ம்.) 3. கப்பலனாய். (68)

## குலமுறை கிளத்தல்

[தலைவன் குலத்தின் மேம்பாட்டையும் தங்கள் குலத்தின் தாழ்மையையும் பாங்கி தலைவற்குச் சொல்லுதல்]

ஒத்தா ரையுமுன் னுயர்ந்தா ரையுமின்றி யோங்கியவான்
கொத்தால் விளங்கு முபய குலோத்தமன் கொண்டலன்ன
கைத்தா மரைத்தொண்டை மான்கரு மாணிக்கன் கப்பலன்னீர்
இத்தா ரணியி லுமக்குமுண் டோமன்ற லேற்பவரே.

ஒத்தார் உயர்ந்தார் - ஒப்பானவரும், தன்னின் உயர்ந்தவரும். வான் - சிறந்த; கீர்த்தி வாய்ந்த. கொத்து - குடி; வான்றோய்குடி என்பது போன்றது. ஒப்பு.: 'கொத்தடிமையான குடிநான் பராபரமே' (தாயு, பராபரக். 148.) உபயகுலம் - இருகுலம். கருமாணிக்கன் தொண்டையர் குலம், திரையர்குலம் ஆகிய இரு குலத்தினுஞ் சிறந்தவன். கொண்டல் - மேகம். 'கப்பலன்னீர்' என்றது தலைவனை. 'இத்தாரணியில் உமக்கும் மன்றல் ஏற்பவர் உண்டோ' என்று கூறியது, தலைவன் குலத்தை மிகுத்துக் கூறித் தன் உடன்பாடின்மையைப் பாங்கி தெரிவித்தது என்க. ஏற்பது, என்ற சொல்லில் தம் எளிமை தொனிப்பது காண்க. (69)

### தலைவன் தலைவி தன்னை உயர்த்தல்

[உயர்த்தல் - மேம்படுத்திச் சொல்லுதல்]

கலைவாணர் கற்பகம் போற்கரு மாணிக்கன் கப்பலன்னீர்
கொலைவா ணயனக் குலக்கன் னியரைக் கொடுத்தனர்முன்
தலைவா னவர்க்குந் தவமுனி வோர்க்குந் தவமல்லவோ
வலைவா ணரும்பொன் மலைவா ணருமுல்லை வாணருமே.

கலைவாணர் விரும்புவன அளிப்பவன் ஆதலின், கற்பகம் எனப்பட்டான். கொலை வாள் நயனக் கன்னியர். வலைவாணர் - நெய்தல் நிலத்தவர். மலைவாணர்:-குறிஞ்சி நிலத்தவர். முல்லை வாணர் - முல்லை நில ஆயர் குலத்தவர். வானவர்க்கும் முனிவோர்க்கும் வலை வாணர் முதலியோர் தம் கன்னியரை வழங்கினர் என்றமையால், தன் பொருட்டும் குலவேறுபாடு பாராட்டற்குரிய தன்று என்பதைத் தலைவன் விளக்கினான் என்க. வலைவாணர்க்கு மச்ச கந்தியும், மலைவாணர்க்கு வள்ளியும், முல்லை வாணர்க்கு நப்பின்னையும் மகளிராயிருந்து வானவரையும் முனிவரையும் மணந் தமைக்குச் சான்றாவர். (70)

### பாங்கி அறியாள் போன்று கூறல்

[தலைவன் விரும்பிய மங்கையைத்தான் இன்னாளென்று அறியாள் போன்று பாங்கி அவனை வினாதல்]

ஒளிக்கத் தகுஞ்செல்வர் பாற்சென்று தீய்ந்தவுள் ளப்புலவர்
களிக்கத் தருஞ்செங்கை யான் கருமாணிக்கன் கப்பன்மைவான்
துளிக்கச் சொரியு மருவிவெற் பாநின் றுணைப்புயங்கொண்
டளிக்கத் தவங்கள்செய் வாரியாவ ரோவண்ட லாயத்திலே.

ஒளிக்கத்தகும் செல்வர் - தம்பொருளைக் கொடுக்க விரும்பாது ஒளிக்கக் கூடிய செல்வர். தீய்ந்த - உலர்ந்துபோன. மைவான் - கருமேகம். துணைப்புயம் - இரு புயங்கள். வண்டல் ஆயம் - வண்டலாடும் ஆய மகளிர். 'என் தோழியருள் உன்னால் விரும்பப் பெற்றவள் யாவள்?' என்று பாங்கி தான் அறியாள் போன்று கூறியது. (71)

### அறியக்கூறல்

[தலைவி இன்னாள் என்பதைப் பாங்கி அறியும் வண்ணம் தலைவன் குறிப்பாகக் கூறல்]

இடம்பெறு ஞாலத்தி லெண்ணில்பல் யோனி யெவற்றினுந்தன்
உடம்பறி யாத வுயிருமுண் டோசுரும் போலவண்டார்
கடம்பொழி யுங்களிற் ருன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
விடம்பெறு வேல்விழி யாயெம்மை நீயென் வினவியதே.

யோனி - பிறவி. இங்குக் கூறிய கருத்தை, 'பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று, வல்லதாந் தாய்நாடிக் கோடலைத் - தொல்லைப், பழவினையு மன்ன தகைத்தே தற்செய்த, கிழவனை நாடிக் கொளற்கு' என்ற நாலடி. (101) பாட்டுடன் ஒப்பிடுக. அன்றியும், 'உடம்பறியாத உயிரு முண்டோ' என்று கூறினமையால், தலைவன் பாங்கியையும் தலைவியையும் ஒன்று கூட்டிக் கூறினனென்றும் கொள்க. 'நீ கண்ணு குவைகினக் கங்குயி ராவள்' என்ற, அம்பிகாபதிக் கோவை (101) என்ற பகுதியை இங்கு ஒப்பிடுக. சுரும்பு - வண்டு. ஓல - ஒலியிட. வண்டு ஆர் - வண்டுகள் பொருந்திய, கடம் பொழி - மதம் பொழிகின்ற. சுரும்பு, வண்டு என்பன, வண்டுகளின் வகைகள். 'விடம் பெறு வேல் விழியாய்' என்றது பாங்கியை. (72)

### பாங்கி தலைவி யருமை சாற்றல்

[நீ குறித்த மங்கை பெறுதற்கரிய ளென்பதைப் பாங்கி தலைவனுக்குச் சொல்லுதல்]

மின்போ லுணங்கு நுணங்கிடை வேற்கண் விளங்கிழையின்
றென்போல் வருதற் கெளியளன் றேயிவ் விருநிலத்தோர்
துன்போட வந்தரு ளுந்தொண்டை வேந்தன் துவரைவெற்பில்
அன்போடு நின்றவள் பொன்னடி போற்று மணங்கினளே.

உணங்கு - வாடிமெலிந்த. நுணங்கு இடை - அசையும் இடை. தான் தலைவியின் பொன்னடி போற்றும் அணங்கு என்றான் பாங்கி. நின்று அவள் என்று பிரிக்க.

(பி - ம்.) 4. நின்றவ ளின்னடி. (73)

### தலைமகன் தலைவி இன்றியமையாமை கூறல்

[தனக்குத் தலைவி இன்றியமையாதவ ளென்பதைத் தலைவன் சொல்லுதல்]

ஒன்றிற் றுயில்கொண் டொருமுலைப் பாலுண் டுடன்வளர்ந்த
மன்றற் குழலியை நீயென வைத்தன னல்லளல்லள்
என்றிப் பொழுதுசொன் னாலெவர்க் கேற்கு மிலங்கிழையாய்
கன்றிற் கனியெறிந் தோன்கரு மாணிக்கன் கப்பலிலே.

இது தலைவன் கூற்று. ஒன்றில் துயில் கொள்ளல் - ஒரே பள்ளியில் படுத்துத் துயில்தல். ஒரு முலைப்பால் உண்டல் - செவிலியின் ஒரு முலைப்பாலைத் தலைவி, பாங்கி இருவரும் உண்டது; பாங்கி செவிலியின் மகள் ஆதலின். நீ என வைத்தனன் - தலைவியே நீ எனக் கருதினன்; உங்கள் இருவருக்கும் வேற்றுமை இன்றாகலின். 'நல்லள் அல்லள் என்று இப்பொழுது சொன்னால் எவர்க்கு ஏற்கும்' என்றமையால், 'ஒன்றுபட்ட கருத்தையுடைய நீ, அவள் கருத்தறியாதவள் போல என்னிடம் கூறுதல் தகாது' என்று தலைவன் பாங்கியை இடித்துக் கூறினான் எனக. இது, கன்றைக் கொண்டு வீசி, விளங்கனிகொண்ட கண்ணபிரான் செயலைக் கருமாணிக்கன் மீதேற்றிக் கூறியது. மன்றல் குழலி - தலைவி. நீ என்றதும் இலங்கிழை என்றதும் பாங்கியை. (74)

### நின்குறை நீயே கூறென்றல்

[நின் குறை - நின் காரியத்தை. நீயே சென்று தலைவியிடம் சொல்லுகவென்று பாங்கி கூறுதல்]

சங்கெறி யுந்திரை நீர்க்கப்பற் காவலன் றண்குவளைத் [பில்
தொங்க னறும்புயன் றெண்டையர் வேந்தன் துவரைவெற்
கொங்குறை பூங்குழற் கொம்பனை யாள்வயிற் கோடலுற்ற
தங்குறை தாமன்றி யேபிறர் கூறத் தகுவதன்றே.

தொங்கல் - மாலை. குவளைத் தொங்கல், கருமாணிக்கனுக்குரிய மாலை. கொங்கு - மணம்; தேன்; பூந்தாது. கோடல் உற்ற - நீ கொண்ட - குறை. காரியம், (பெரும்பாண். 443). இது தன் குறையைத் தானே தலைவியிடம் கூறுமாறு பாங்கி தலைவனை நோக்கிக் கூறியது.

(பி - ம்.) 3. கொண்டறண்ட. (75)

தலைவன் பாங்கியைப் பழித்தல்

ஒருயி ருய்யு மொழியா லொருதனிக் காலத்தென்றால்
ஆருயி ரன்னநல் லாயரி தோவழைத் தாகிலும்பைம்
காரியல் வண்கொடை யான்கரு மாணிக்கன் கப்பல்சுற்றும்
சீரிய நாடர்செய் யாரிது நான்செய்த தீவினையே.

ஆருயிர் அன்ன நல்லாய் என்றது பாங்கியை. அவள் தலைவியின் அரிய உயிர் போன்றவளாதலின். ஒரு தனிக் காலத்து, மொழியால், ஓர் உயிர் உய்யும் என்றால், அரிதோ? என்று இயைத்துத் தலைவன் தனக்குண்டான இத்துன்ப நிலையால், பாங்கி தலைவியிடம் ஒரு சொல் தனக்காகப் பரிந்து கூறித் தன் உயிரைக் காக்க வேண்டினான் என்க. 'சொல்வன்மை யுண்டெனின் கொன்னே விடுத்தொழிதல்...கோறல்' (நீதிநெறி. 69) என்பதனோடு ஒப்பிடுக. அழைத்தாகிலும் - தானே வலுவிற் சென்று அழைத்தேனும். கார் இயல் வண் கொடை - மேகம் போன்ற வளமான கொடை. கப்பல் சுற்றும் நாடு - கப்பல் நகரைச் சூழ்ந்துள்ள நாடு. சீர் இயல் - சிறப்பமைந்த இயல்பு. பைம் கார் - கரிய மேகம். பசுமை இங்குக் கருமையைக் குறிப்பது. சீரிய நாடர் செய்யார், என்றது பழிப்பு.

(மி - ம்.) 2. வலைத்தாகிலும். (76)

பாங்கி தலைவியின் பேதைமையூட்டல்

[தலைவியின் அறியாமையை மனங்கொள்ளும்படி பாங்கி தலைவனுக்குக் கூறுதல்]

வேந்தர் மதிக்கும் விறல்வா ளபிமன் விசயமங்கை
காந்தன் மதிற்றுவ ரைக்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
ஏந்தல் வருத்த மிதுநினை யாளின வேங்கைநிற்கச்
சாந்த மரத்தை யெறிந்துழு வார்பெற்ற தாழ்குழலே.

விறல் வாள் அபிமன் - வாட்போரிற் சிறந்த அபிமன்; அபிமன் - அருச்சுனன் புதல்வன். விசயமங்கை காந்தன் - ஜய லட்சுமியின் கணவன். ஏந்தல் - தலைவன். ஏந்தலின் வருத்தம் இது நினையாள், என்றமையால், அவள் இளமைப்பருவம் கூறியவாறு. சாந்தமரம் - சந்தனமரம். வேங்கையை விட்டுச் சாந்த மரத்தை எறிதல் தலைவியின் மூத்தோர் இயல்பானதால், அன்னோர் பேதைமையைச் சுட்டி அவர்களின் மகளான தலைவியின் பேதைமையை வற்புறுத்தியது. சீரிய நாடர் என்று தலைவன் முன்செய்யுளிற் கூறினமைக்கு விடையாகவும் கூறினாள் என்க. (77)

### தலைவன், தலைவியின் மூதறிவுடைமையைப் பாங்கியிடம் மொழிதல்

[மூதறிவுடைமை - முதிர்ந்த அறிவுடையாளென்பது]

காவியம் போதணி தார்க்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
ஓவியம் போலுநல் லாயுரை யேலொளி ருங்குழைதோய்
வாவியம் போருக மன்னகண் ணாலன்று வல்வினையேற்
காவியென் றுன்னை யறிவித்த மானுக் கறிவின்மையே.

காவி அம் போது; காவி - நீலோற்பலம். ஓவியம் - சித்திரம். குழை தோய் கண் - ஒப்பு: 'குழையொன் றிரண்டு விழி யணங்கே' தனிப்பாடல். மான் - தலைவி. 'தலைவி தன் கண்ணால், உன்னைத் தன் ஆவியென்று வினையேற்கு அறிவித்தனள்; அவள் மூதறிவுடையள்; அவளுக்கு அறிவின்மை கூறுதல் பொருந்தாது' என்றனன் என்க. (78)

### பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல்

[முன்னமே தலைவனுக்குத் தலைவியால் அமைந்திருந்த நட்பை அவனுக்குப் பாங்கி கூறல்]

முன்னங் குவளை விழியாள் மொழிந்து முகமலர்ந்தார்க்
கின்னஞ் சிலசொல்ல வேண்டிய தோவெழு பார்புகழும்
கன்னன் சுரும்பியல் தார்க்கரு மாணிக்கன் கப்பல்விந்த
மன்னன் பொதிய வரைவள நாடநின் வாசகமே.

எழு பார் - ஏழு உலகங்களும். கன்னன் என்றது, கொடைச் சிறப்பை நோக்கி. விந்த மன்னன் - யாதவ குல மன்னன். விந்தன் - இடையன். நாமதீப நிகண்டு. 'விழியால் மலர்ந்தார்க்கு, இன்னம் வாசகம் சொல்ல வேண்டியதோ?' என இயைக்க. ஒப்பு: 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள், என்ன பயனு மில' (குறள். 1100). இவ்வாறு பாங்கி முன்னுறு புணர்ச்சி கூறினள் என்க. வளநாடன் - தலைவன்.

(பி - ம்.) 1. முகம் கலந்தார்க். 2. வேண்டுவதோ. (79)

## தன்னிலை தலைவன் சாற்றல்

[தலைவன், தன் நிலைமையைப் பாங்கியிடங் கூறுதல்]

கதுவா யரம்பொரு வேற்கரு மாணிக்கன் கப்பல்வெற்பின்
மதுவார் மலர்க்குழல் வல்லியன் னாள்கண் வருத்தியநாள்
அதுவா மதற்கவ ளாவியன் னாய்நின் னறிவுமன்பும்
இதுவா மெனிலெது வாமென தாருயிர்க் கின்மருந்தே.

அரம் கதுவாய் பொரு வேல் என இயைக்க. கதுவுதல் - பற்றுதல். வல்லி அன்னாள், தலைவி. அது - முன் தன்னை வருத்திய நிலை; இது - இப்பொழுது பாங்கி நிற்கும் பராமுக நிலை; எது - வேறு யாது? அவள் ஆவி அன்னாய் என்றது தோழியை. 'நின் அறிவும் அன்பும் மாறுபட்டால், என் ஆருயிருக்கு இன் மருந்து வேறில்லை' என்று தலைவன் பாங்கியை நோக்கிக் கூறியது.

(பி - ம்.) 4. லெதுவாமிதற்குள. (80)

## பாங்கி உலகியல் கூறல்

[ஒரு மங்கையை ஒரு தலைவன் சான்றோரறிய மணஞ்செய்து கொள்ளுதல் தான் முறையென்று தலைவனுக்குப் பாங்கி சொல்லுதல். உலகியல் - ஆன்றோரொழுக்கம்]

கான்றோய் கமழ்கண்ணி யான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
ஈன்றோ ரறிவு மிருபெருஞ் சுற்றமு மின்புறவே
சான்றோரை முன்னிட் டருங்கலம் பூட்டுந் தகுதியன்றி
வான்றோய் குடிப்பிறந் தார்க்கற னோவிம் மறைநெறியே.

கான் - மணம். இரு பெரும் சுற்றம்; தலைவன் தலைவியர் தம் இரு பெரிய சுற்றத்தவர். அருங்கலம் பூட்டுதல் - திருமங்கல நாண் பூட்டி மணத்தல்; வரைதல். மறைநெறி - களவொழுக்கம். வான்தோய் குடி - பெருமை தங்கிய உயர் குடி. வான் - பெருமை; நாலடி. 142. ஈன்றோர் அறிவு இன்புற, என்றதனால், பெற்றோர் மணத்துக்கு மனமுவந்து இசைய, என்றனள் ஆம்.

(பி - ம்.) 1. ஈன்றோர் மனமு. (81)

## தலைமகன் உலகியல் மறுத்தல்

கடனாக மண்புரக் குங்கரு மாணிக்கன் கப்பலன்னாள்
உடனாக மேவு முயிரன்ன நீயிங் குரைத்ததெல்லாம்
விடநாக வேகந் தலையுற் றலையுற்று வீழ்பவர்க்கு
வடநாக நீள்முடி யின்னுட னோடு மருந்தொக்குமே.

கடல், நாகம், மண் - கடல், மலை, தரை; கடன் ஆக மண் புரக்கும் கருமாணிக்கன் என்றும் கொள்க. நாக விட வேகம் தலையுற்று என இயைக்க. வடநாகம் - வடதுருவத்திற்கு அருகேயுள்ள ஸஞ்சீவிபருவதம்; கம்பராமாயணம் மருத்துமலைப் படலம் நோக்குக. மருந்து – மிருத ஸஞ்சீவி என்னும் ஓடதி. வடநாக முடி மருந்து இருந்தும் அடைய முடியாததால் பயனற்றது என்றபடி. ஒப்பு: 'முன் கவிகொணர்ந்த, மலைமேல் மருந்துவந் தோதலை மேல்விடம் மாற்றுவதே' (அம்பிகாபதிக். 111); 'எரிந்து வளர்ந்திடுந் தீச்சேரு மெல்லிய னெரியவிக்கத், தெரிந்து சொன்னா லாழம் பார்த்துக் குளங்கல்லச் செப்புதலாம்.' (பேரூர்க். 111). (82)

## பாங்கி அச்சுறுத்தல்

[அச்சுறுத்தல் - அச்சம் அடையும்படி செய்தல்]

மாலையு மாலின் மகனையும் போலன்பர் வானினும்பர்ச்
சோலையு மாரியும் போற்றொண்டை மான்கப்பல் சூழ்சிலம்பில்
வேலையு மம்பையும் வில்லையும் கைக்கொண்டு வெம்பகலும்
காலையும் மாலையும் காவல ராய்நிற்பர் கானவரே.

மாலின் மகன் – மன்மதன். மால், தலைவியின் தந்தையையும், மகன், அவள் உடன் பிறந்தவனையும் கூறியதாகக் கொள்க சோலையும், மாரியும் கானவர் கூட்டத்தையும் நிறத்தையும் குறித்தனவாம். உம்பர்ச் சோலை - கற்பகவனம். மாரி - மழை. இவை கொடையிற் சிறந்தவை. கானவர் - கானக வாழ்க்கையுடைய தலைவியின் சுற்றத்தவர். கானவர் 'காவலராக நிற்பர்; ஆதலின், நீ இங்கு வருதல் தீங்குடைத்து' என்று பாங்கி தலைவனுக்குக் கூறி அச்சுறுத்தியதாகும். (83)

### தலைவன், கையுறை புகழ்தல்

[கையுறை - தான் கொணர்ந்த அப்பொருளை ; இங்கே இதற்குத் தலைவியின் கையில் சேர்த்தற்குரிய தென்பது பொருள். உறை - உறுத்தல் ; சேர்த்தல், உயர்ந்தார்பால் சேர்க்கப்படின் இது காணிக்கை எனப்படும்]

முகைக்கும் களப முலையார் குழற்கு முகமலர்க்கும்
பகைக்கும் பகைவர் பகையிவை காண்பணி யாரணியைத்
துகைக்குங் கடகளிற் றுன்தொண்டை வேந்தன் துவரை
[யினின்
நகைக்கும் தகைமைக்கு நண்புபண் பாலுண்டு நன்னுதலே.

முகைத்தல் - அரும்புதல். முகைக்கும் என்பதனை முலை என்பதனுடன் கூட்டுக. களப முலையார் - சந்தனம் முதலிய வாசனைக் குழம்பு பூசிய முலையினர். பணியார் - வணங்காத பகைவர். அணி - சேனையின் அணி. இவ்விளக்கத்தால் தலைவன் கொண்டுவந்த கையுறை முத்துமாலை என்பது பெறப்படும். இதன் உண்மை அடுத்த செய்யுளாலும் விளங்குவது காண்க. குழற்குப் பகைக்கும் பகைவர் பகை; குழற்கு உவமையால் பகை, இருள்; இருளுக்குப் பகை, வெயில்; வெயிலுக்குப் பகை, நிலவு ; நிலவு வீசுவது, முத்து. முகமலர் - தாமரை ; தாமரைக்குப் பகை, குமுதம் ; குமுதத்தின் பகை, சூரியன்; சூரியனின் பகை, சந்திரன் ; சந்திரன் தகைமையான தண்மை கொண்டது முத்து. வேறு விதமாகவும் விளக்கம் கூறலாம்., இன் நகைக்கும் - இனிய ஒளிக்கும் (தேஜஸுக்கும்); தன்மைக்கும் - இயல் புக்கும் (மனப்பண்புக்கும்) ; நண்பு - ஒற்றுமை. பண்பால் - இயற்கைப் பண்பால். (84)

### பாங்கி கையுறை மறுத்தல்

நாடுந் தமிழ்முரு கன்கரு மாணிக்கன் நண்ணலர்கள்
சூடுங் கனைகழ லான்தொண்டை மான்கப்பல் சூழுஞ்செந்நெல்
காடுங் கரும்புங் கழையுங் குரம்புங் கழனியில்வெண்
கோடும் படுவவெல் லாங்கொற்ற வாநின் குளிர்முத்தமே.

நாடும் - எல்லோராலும் தேடியடையத்தகும். தமிழ் முருகன - தமிழ்த் தெய்வமாகிய முருகன் ; தமிழ் நாடும் முருகன், என இயைத்து, தமிழ் மொழியை நாடி ஆராயும் முருகன் எனலும் ஆம் ; முருகன் தமிழ்ச் சங்கத்துப் புலவருள் ஒருவனாய் இருந்தனன் ஆதலின் ; "முருகன் சங்கத்திருப்பவன் ;" திருவாலவாய்த் திருவிளை. நாட்டுப், 3.) தமிழால் ஆராயப்பெறும் முருகன் எனலும் ஒன்றும்.

கண்ணலர் - பகைவர். கழல் - ஒலிக்கும் வீரக்கழல். கழை - மூங்கில். படுவ - உண்டாவன. கழனியின் வெண் கோடு - வயலில் உள்ள வெண்சங்கு. இச் செய்யுளில் முத்துப் பிறக்கும் இடங்கள் குறிக்கப் பெற்றன. இவ்வாறு கூறிப் பாங்கி தலைவன் கொண்டு வந்த கையுறையை மறுத்தனள் என்க. (85)

## ஆற்ரு நெஞ்சினேடு அவன் புலத்தல்

[பாங்கி மறுத்தலைப் பொருத நெஞ்சையுடையவனுகித் தலைவன் வெறுத்துக் கூறல்]

என்னே குழையுற் றிரந்துபல் பூந்தழை யேந்தியிவர்
பின்னே திரிந்தென் பெறுதிநெஞ் சேபிற ழாவறமும்
சொன்னேய முந்தெரி யுந்தொண்டை மான்கப்பல் சூழ்சிலம்
முன்னே தவம்புரி யார்க்குள வோபின் முடிவதுவே. [பின்

குழையுற்று - வாடி. பிறழா - மாறுபடாத. சொல் நேயம் - அன்புடைய சொற்கள். 'முன் தவம் முயன்றார்க்கே கூடப் பெறுவது ஆகும்; 'வெறும் பானை பொங்குமோ மேல்' என்றது போலப் புலந்து கூறினுன் தலைவன் என்க.

(பி - ம்.) 4. முடிவதுவே. (86)

## பாங்கி தலைவனைத் தேற்றல்

தேங்குஞ் சிறைபொரு தெண்ணீர்த் துவரைமன் றெவ்வர் நின்று
தூங்குங் கடைத்தலை யான்றொண் டைமான்கப்பற் றேகை
வாங்கும் படிசொல்லி வாங்குவ னானே மணியருவி [தழை
ஏங்குந் தடஞ்சிலம் பாவருந் தாதின் றெழுந்தருளே.

தேங்கும் சிறை - தேக்கி வைக்கப் பெற்ற அணை அல்லது அடைப்பு. தெவ்வர் - பகைவர். தெவ்வர் நின்று தூங்கும் கடைத்தலையான் - காணச் சமயங் கிடைக்காமையால், சோர்ந்து நின்று தங்கும் பகைவர்களையுடைய வாயிலான். ஏங்குதல் - ஒலித்தல். நானே நின் தழையைத் தலைவி பெற்றுக்கொள்ளுமாறு செய்வேன்; ஆதலின், நீ வருந்தல் வேண்டாம் என்று பாங்கி தலைவனுக்கு ஆறுதல் கூறியது. சிலம்பன் என்றது தலைவனை.

(பி - ம்.) 4. புலம்பாநின். (87)

## கிழவோன் மடலே பொருளென மதித்தல்

[பனைமடலாற் செய்யப்பட்ட குதிரையின் மேலேறி வீதியிற் செல்லுதலே தலைவியைப் பெறுதற்கு உரிய உபாயமென்று தலைவன் கருதுதல்; மடல், ஆகுபெயர். முற்பட்ட நட்புடைய தலைவியைப் பின்னர்ப்பெறுதற்கு இயலாவிடின் அவள் உருவத்தையும் தன் உருவத்தையும் இருவர் பெயரையும் ஒரு படத்தில் எழுதுவித்துப் பனைமடலாற் செய்த ஒரு குதிரையின்மேலேறிப் பூளையை புனைந்து கொண்டு தலைவன் வீதியில் ஊர்ந்துவருதல் சில தலைவரின் செயல்; அதனைக்கண்ட பெரியோர் உண்மை யுணர்ந்து அவ்விருவருக்கும் மணஞ் செய்விப்பர்.]

காந்துஞ் சுடர்வடி வேற்கரு மாணிக்கன் கப்பனகர்
வேந்தன் சிலம்பினில் வேட்கைப் பெருங்கடல் வீழ்ந்துழல்வார்
சாந்தங் கமழுந் தடமுலை யாய்கடற் சங்கவண்ணன்
ஏந்தும் பதாகை யிவுளிகொண் டேகரை யேறுவரே.

*காந்தும் - எரியும். சாந்தம் - சந்தனம். தடமுலையாய் என்றது பாங்கியை. சங்க வண்ணன் - பலதேவன். பதாகை அவன் பனைக்கொடி. இவுளி - பனையாலாகிய குதிரை: அதாவது மடலூர்தலைக் குறிப்பிட்டது. சங்கவண்ணன் பதாகை, பனை: பனைக்கொடிப் பானிற வண்ணன்போல்' (கலித். முல்லை: 4 : 8) கரையேறுதல் வேட்கைப் பெருங்கடலின் கரை ஏறுதல். இவுளி கொண்டு கரையேறுபவர், என்றது மடலேறுதலைக் குறித்தது;*

குறிப்பு : *செய்யுள் 88-94க்கு* மடற் கூற்றும் மடல் விலக்கும் *என்ற ஒரு தலைப்பு, ஒரு சுவடியில் காண்கிறது.* (88)

## அதனைத் தன்மேல் வைத்துச் சாற்றல்

[அம்மடலூர்தலைத் தான் செய்வதாகத் தலைவன் பாங்கிக்குச் சொல்லல்]

தனித்தொண்டு பட்டுத் தரளமுஞ் சங்குந் தழையுங்கைக் [கொண்
டினிப்பண்டு போலநில் லேனொரு நாள்வரு நாளையென்கை
பனித்துண்ட வாணுதற் சேல்விழிப் பான்மொழிப் பங்கயச் [செங்
கனித்தொண்டை மான்றெண்டை மான்கரு மாணிக்கன் [கப்பலிலே.

பனி துண்ட வாள் நுதல் - குளிர்ந்த துண்டப் பிறை போன்ற நெற்றியும். சேல் விழி - சேல் மீன் போன்று மிளிரும் விழிகளும். பால் மொழி - பால் போன்று சுவைதரும் சொல்லும். பங்கயம் - தாமரை போன்ற முகத்தில் விளங்கும். செம் தொண்டை கனி - சிவந்த ஆதொண்டைக் கனிபோன்ற அதரத்தையுடைய. மான் - மான்போன்ற தலைவி. தொண்டைமான், தொண்டைமான் என்று அடுக்கி வந்தது சொல்லணி. 'மான், தான் மடலூர்தலால் என்கை வரும்' என்றதனால், தலைவன் தலைவியை அடைவது திண்ணம் என்று குறித்தபடி. 'தழை முதலியன கொண்டு இனிப் பண்டு போல் நில்லேன்' என்றதனால், முன்போல் மென்மை வழிக் கொள்ளாது, மடலூர்தலாகிய வன்மை வழி மேற்கொள்ளத் துணிந்தமை கூறப்பட்டது. இஃது அடுத்த செய்யுளாலும் விளங்கும்.

(பி - ம்.) 2. காவினி. (89)

## மடல் விலக்கு

[மடலேறுதலைத் தடுக்கவேண்டி, தலைவியின் அழகை எழுதுதல் அருமையாதலைக் கூறிப் பாங்கி மடல் விலக்கியது]

ஏந்துங் கிழியி லெழுதுவன் யானென் றனைவண்டுசூழ்
பூந்தண் குழலி மழலையஞ் சொல்லையும் பொய்யுமுண்டோ
காந்துஞ் சுடர்க்கழ லான்கரு மாணிக்கன் கப்பனகர்
வேந்தன் கடற்கன்னிக் கோன்வையை நாடர்க்கு மெய்யன்றி [யே.

கடல் கன்னி கோன் - கடல் சூழ்ந்த கன்னி நாட்டரசன்; கருமாணிக்கன். வையை நாடர் - வையை நதி பாயும் பாண்டி நாட்டு மக்கள்; தலைவனும் ஆம். 'வண்டுசூழ் பூம் தண் குழலி அம்சொல்லையும் ஏந்தும் கிழியில் எழுதுவன் என்றனை; வையை நாடர்க்கு மெய்யின்றிப் பொய்யு முண்டோ' என்று பாங்கி கூறி மடல் விலக்கினள் என்க. கிழி - துணி; இது படம் எழுதக் கொள்வது.

(பி - ம்.) 1. யெழுதவல்யான்; தனைவண்டு சூழ். (90)

## மடற்றிறத் தழுங்கல்

[தலைவன் தனக்குத் தலைவியின் வன்கண்மையை மடலில் தீட்ட இயலாமை எண்ணி வருந்திக் கூறல்]

காரார் கொடைதடக் கைக்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
நேராக நீர்கொண்ட நெஞ்சுதந் தாலிந்த நீள்படத்தில்
ஏரார் திருவுரு வெல்லா மெழுத வருமெனக்கு
வாரா திருப்பதய் யோமட வீருங்கள் வன்கண்மையே.

வன்கண்மை - இரக்கமில்லாக் கொடுமை. ஐயோ; இரக்கத்தை உணர்த்த வந்த இடைச்சொல். தலைவியின் இரக்கமில்லா வன்கண்மையே தனக்கு எழுத முடியாதது என்று தலைவன் மடற்றிறத்து அழுங்கிக் கூறினன். இச்செய்யுள் இலக்கண விளக்கம் 509-ஆம் சூத்திரத்தில், தலைவன் தன்னைத்தானே புகழ்தற்கு மேற்கோளாகக் காட்டப்பெற் றுள்ளது.

(பி - ம்.) 2. தந்தாலந்த நெஞ்சு கொண்டே. (91)

## தலைமகன் தான்றற் புகழ்தல்

கழிபெரு நல்கலெங் கோன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
எழுதிய வண்ணமும் யான்கொண்ட வண்ணமு மின்றுகண் [டார்
முழுதுல கீன்ற முனியென்றும் நாலிரு மூர்த்தியென்றும்
தொழுதுவ ழுங்குவ தல்லதென் னோநின்று சொல்லியதே.

கழி பெரு நல்கல் - மிகைபடக் கொடுத்தல். கழிபெரு, ஒருபொருட் பன்மொழி. வண்ணம்; முன்னையது, விதம்; பின்னையது, வேடம். முழுதுலகின்ற முனி - பிரமன். நாலிரு மூர்த்தி - அஷ்ட மூர்த்தியாய் விளங்கும் சிவபெருமான். அட்ட மூர்த்தியுமாகிய அப்பனை' என்பது தேவாரம். வழங்குவது - தலைவியைக் கொடுப்பது. நின்று சொல்லியது என்னே - வீணகப் பேசிநிற்பது என்ன பயனுடைத்து?

(பி - ம்.) 4. வணங்குவதல்ல. (92)

### பாங்கி அருளியல் கிளத்தல்

[மடலின் பொருட்டுப் பனையை நீ வெட்டினால் அதன் மேலுள்ள பறவைகள் அன்புறும் ; அப்பறவைகளின் முட்டைகள் உடையும் ; ஆதலால் அச்செயல் அருளியல்புக்கு மாறென்று பாங்கி தலைவனுக்குக் கூறல்]

எய்தலிங் கெம்மை யெளிதல்ல காணு மிறைவவென்றும்
கைதவன் பார்புக ழுங்கரு மாணிக்கன் கப்பல்சுற்றும்
நெய்தலங் கானல் நினைவிலுண் டோநெடு வாய்க்குடம்பைப்
பைதலம் பார்ப்புஞ் சினையுமில் லாத பனையுமக்கே.

கைதவன்-பாண்டியன் ; கருமாணிக்கன் பாண்டியன் சேனைத் தலைவன் ஆனமை பற்றிக் கைதவன் எனப்பட்டான். நெடு வாய் குடம்பை - நீண்ட வாயையுடைய பறவைக்கூடு. பைதல் அம் பார்ப்பு - பருவமுற்றாத அழகிய இளம் பறவை ; பார்ப்பு - தாய்ப் பறவை பாதுகாக்கும் இளமை நிலையில் உள்ள பறவைக் குஞ்சு. சினை - முட்டை. பனையின் குடம்பையில் பறவைப் பார்ப் பும், சினையும் இருக்கும் ; ஆதலின், நீ பனைகொண்டு மடல் ஏறுதல் அருளின்பாலதன்று என்று தலைவனுக்குக் கூறியது. ஆதலின், 'எம்மையிங்கு எய்தல் உமக்கே எளிதல்ல' என இயைக்க ; காணும் : முன்னிலையசை.

(பி - ம்.) 3. சினையிலுண்டோ. (93)

### பாங்கி, கொண்டு நிலை கூறல்

[தலைவன் குறையை உட்கொண்டு தான் உதவி செய்ய நிற்றலைப் பாங்கி அவனுக்குக் கூறல். நிலை - உடன்பட்டு நிற்றல்]

தேமலி பைந்துள வோய்மடன் மாவொன்று தேடியெங்கள்
மாமணி முன்றில் வரநினைக் கின்றது வண்டமிழ்தேர்
காமரு வுங்கொடை யான்கரு மாணிக்கன் கப்பலன்னார்க்
காமள வின்னஞ்சொன் னால்மறுத் தாலிங் கமையுமின்றே.

தேமலி பைந்துளவோய் என்றது தலைவனை. மடல் மா - பனைக்குதிரை. கா - கற்பகச் சோலை. 'துளவோய் ! நீ நினைக்கின்றது மறுத்தால், மடல்மா ஒன்று தேடி முன்றில் வர நினைக்கின்றது அமையும்' என்று கூறித் தோழி மடல் விலக்கினாள் என்க. கப்பலன் னார் - தலைவி. ஆம் அளவு - என்னால் இயன்ற அளவு. அமையும் - நீ மடலேறுதல் பொருந்தும். இதனால், பாங்கி தலைவன் கருத் துக்கு உடன்பட்டது கூறப்பட்டது.

(பி - ம்.) 1. பைந்தழையோய், 3. கப்பலன்னாட். (94)

## பாங்கி தலைவி இளமைத் தன்மை கூறல்

[இளமைத் தன்மை - பேதைமை]

விரும்புங் கதலியும் பூகமு நாகமு மேதகுபைங்
கரும்புஞ் செறிகப்ப லான்கரு மாணிக்கன் காமர்வெற்பில்
சுரும்பின் பசிக்கரும் புந்துத்தி நாகத்தின் பைத்தலைவாய்க்
கரும்பும் பிறையுங்கண் டீரெங்கள் மானின்க ணன்பினுக்கே.

பூகம் - கமுகு; பாக்குமரம். நாகம் - சுரபுன்னை. சுரும்பின் பசிக்கு அரும்பும் - வண்டுகளின் பசிக்கு உதவ அரும்பும். துத்தி நாகம் - புள்ளிகளையுடைய பாம்பின். பை - படம். அரும்பும் பிறை - இளம்பிறை. நின்கண் அன்பினுக்கு - உன் காதலுக்கு. உன் காதலுக்கு எங்கள் மான் பொருந்ாதவள்: ஏனெனில், காதல் நிரம்பா இளையள் என்பது. சுரும்பின் பசிக்கு அரும்பும், நாகத்தின் வாய்க்குப் பிறையும் பயன்படாமைபோல.

(பி - ம்.) 2. கார்கொள் வெற்பா; காமர் வெற்பா.
3. சுரும்பின் பசிக்கு.
4. பிறையுமன்றே; மானுங்க ளன்பினுக்கே. (95)

## தலைவன் தலைவி வருத்திய வண்ண முரைத்தல்

[தலைவி இளையளாயினும் அவள் தன்னை வருத்திய வண்ணம் உரைத்தல்]

சொரியும் புயலனை யான்றெண்டை மான்வண்டு சூழ்மடுவில்
கரியின் றுயர்கடிந் தோன்கரு மாணிக்கன் கப்பல்மின்னே
அரியின் குழவியு மைவா யரவின் குருளையுஞ்செவ்
வெரியின் பொறியுமன் றேசிறி யாளென தின்னுயிர்க்கே.

கரியின் துயர் கடிந்தது - திருமால் கஜேந்திர ஆழ்வானுக்கு அருள் புரிந்ததைப் பாட்டுடைத் தலைவன் மேலேற்றிக் கூறியது. அரியின் குழவி-சிங்கக்குட்டி. ஐவாய் அரவின் குருளை - ஐந்தலை நாகத்தின் குட்டி. எரியின் பொறி-நெருப்புப் பொறி. தலைவி பருவமடையாதவள் என்று கூறிய தோழிக்குத் தலைவன், அவள் இளமைப்பருவத் தாளாயினும், அவளால் தான் படும் துயரைத் தெரிவித்தான் என்க. அவள் மங்கைப் பருவத்தினள் என்று குறிப்பித்ததும் ஆம். இங்கு, 'அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும், முழையுறை சியமும் என்றிவை நான்கும், இளைய எளிய பயின்

றனஎன் றெண்ணி, இகழின் இழுக்கந் தரும்' என்ற ஆசாரக். 84 ஐயும், அதனைப் பின்பற்றி எழுந்த அம்பிகாப்பதிக் கோவைச் செய்யுளையும் (126) ஒப்பிடுக. சிறியாள் - நீ 'சிறியாள் என்ற தலைவி'. (96)

பாங்கி செவ்வியருமை செப்பல்

[தலைவியைப் பார்த்தற்குரிய காலம் பெறுதற்கரிய தென்பதைப் பாங்கி தலைவனுக்குக் கூறுதல்]

ஆடுங் கழங்கு மருமணி யூசலும் வாசமலர்
சூடுந் தொழிலுந் துறந்துநின் ருள்வெற்புஞ் சூழ்கடலும்
காடும் பகைக்கரு ளுங்கரு மாணிக்கன் கப்பலன்ளுர்க்
கேடொன்று பூங்கதிர் வேலிறை வாவென் னியம்புவதே.

பகைக்கு - பகைவர்க்கு. வெற்பும் கடலும் காடும் அருளுதல், பகைவர்களை மலையிடத்தும் கடலிடத்தும் காட்டிடத்தும் வெருட்டி ஓடச்செய்தல். ஏடு ஒன்று பூம் கதிர் வேல் - ஏடு போன்று இதழ் பொருந்திய அழகிய ஒளி வீசும் வேல், இறைவா என்றது, தலைவனை. ஒப்பு - 'கழங்கா டிலளொழிற் பந்தாடிலளக் கலியறியேன்' (கோடீச். 119). இவ்வாறு கூறிப் பாங்கி, தலைவியிடம் பேச இயலாமை கூறினள் என்க.

(பி - ம்.) 3. கப்பலன்ளுட். (97)

தலைவன், செவ்வி யெளிமை செப்பல்

[தன் செய்தி கேட்குமுன்னே தலைவி செல்வி எளியளாவள் என்பதைத் தலைவன் பாங்கி தலைவனுக்குக் கூறுதல்]

சிறக்கு மலர்ச்செந் திருவையன் ளுடன் செயலையெல்லாம்
மறக்குமென் ருயின்ன வார்த்தைசொன் ளுற்றெவ்வர் மண் [கவர்ந்து
துறக்க மிடுஞ்சுடர் வேற்ரெண்டை மான்கப்பற் ருேகையன்
பிறக்கு மனத்திடை யேபிற வாவொரு பேரருளே. [ளுய்

என்ருய் - என்று கூறினுய். தெவ்வர்-பகைவர். மண் - நாடு. துறக்க மிடும்-போரில் இறந்து வீர சுவர்க்கம் அடையச் செய்யும். 'இன்ன வார்த்தை சொன்னல்; இன்ன வார்த்தை - யான் படுந்

துரைக் குறிக்கும் வார்த்தை. ஒரு பேரருள் பிறக்கும் என இயைக்க. தன் செய்தி கூறினல், தலைவி மனங்கனிவாள் என்று கூறியபடி.

(பி - ம்.) 2. மறக்கு மென்னே. மறக்கு மென்றே. (98)

## என்னை மறைப்ப தென்னென நகுதல்

[தலைவிக்கு இன்றியமையாத என்னிடம் தலைவன் தன் துன்பத்தை வெளிப்படையாகக் கூருமை என் ? என்று பாங்கி கூறித் தலைவனைப் பரிகசித்தது]

பறையார் கடகளிற் ருன்புல வோர்முற்றும் பாடுதமிழ்த்
துறையா னனுபமன் தொண்டையர் கோன்கப்பல் சூழ்திரு [நாட்
டுறைவார் புயல்வந் துறங்கும்வெற் பாவின் றுணர்ந்திலையே
மறையார் மருத்துவர்க் குற்றதந் நோயென்னும் வாய்மொ [ழியே.

பறை ஆர் கட களிறு ; யானை செல்லுமுன் பறையறைந்து போகும் மரபைக் குறிப்பிட்டபடி. பொருந : 172-72 ; சிலப். அடைக்கல: 46-47 ; மணி ; 4-41 ; மலைபடு: 51. சீவக. 1838. கடகளிறு-மதங்கொண்ட யானை. 'மறையார் மருத்துவர்க்கு நோய்'; (பழமொழி. 133). வாய்மொழி உறுதிச் சொல்; பழமொழியும் ஆம். கப்பல் நாட்டு உறை புயல் தங்கும் வெற்பு என்றமையால், நாட்டணிமை கூறப்பட்டது. வார் - நீண்ட. புயல் - மேகம்.

(பி - ம்.) 3. துறையார்புயல். 4. நோயென்னும். (99)

## நகையாற்ருமை

முரியுஞ் சிலைநுதல் வஞ்சியன் ஞய்கஞ்சன் முன்விடுத்த
கரியின் மருப்பொசித் தோன்கரு மாணிக்கன் கப்பலன்ஞர்
வரியும் பருமணி வம்பார் முலைசெய்த மம்மருளத்
தெரியுங் கனலிற் சொரியுநெய் யாமுன தின்னகையே.

முரிதல் - வளைதல். கஞ்சன் விடுத்த கரி ; குவலயா பீடம் எனனும் யானை. வரியும் வம்பு-கட்டப்பட்ட கச்சு. மம்மர்-துன்பம். கனலிற் சொரியும் நெய்; தம்ப : பால. கார்முகப். (100)

### இறைவனைத் தேற்றல்

செறுத்துப் புடைகொண் டிடைவெளி யின்றிச் சிறுமருங்குல்
இறுத்துப் பதிகொண் டெழுமுலை யாளிறைஞ் சாரிறைஞ்சக்
கறுத்துச் சிவந்தவெள் வேற்கரு மாணிக்கன் கப்பல்வெற்பா
மறுத்துச் சிலசொல்லு மேலல்ல வோவுள்ளம் வாடுவதே.

பதிகொள்ளல் - நிலையாய்த் தங்கி நிற்றல். இடமாய்க் கொள்ளலும் ஆம். இறைஞ்சார்-பகைவர். கறுத்து-சினந்து. சிவந்தமை பகைவர் மேற்றாக்க, அவர் உதிரம்பட்டு. இது தலைவி மறுத்துச் சொல்லாள் எனக் கூறித் தலைவனைப் பாங்கி தேற்றியது. (101)

### பாங்கி கையுறையேற்றல்

[தலைவன் கொணர்ந்த கையுறையைப் பாங்கி ஏற்றுக்கொள்ளல்]

செருந்தார் மலர்க்குழல் வல்லிநின் மாற்றஞ் செவிபொறுத்திங்
கிருந்தா ளினித்தழை யேற்கத் தகுமினி யார்நயனக்
கருந்தா மரைபடி தார்க்கரு மாணிக்கன் கப்பல்வெற்பா
வருந்தா தினிநல்கு வாய்மல்கு வாச மலர்த்தழையே.

செருந்து - செருந்தியென்னும் மலர்; மலரின் இதழும் ஆம். வல்லி : தலைவி. இனியார் - இன்பந்தரும் உரிமை மகளிர். கருந்தாமரை - நீலமலர். மல்கு வாசு மலர்த் தழை - மணமிக்க மலர்களாலான ஓர் உடை விசேஷம். ஒரு சுவடியில் 95 செய்யுள் முதல் இச்செய்யுள் முடிய, குறை நேர்தல் என்ற தலைப்பில் கூறப்பெற்றுள்ளது. (102)

### தோழி தலைவன் குறையுணர்த்தல்

[பாங்கி தோழியிடம் வந்து தலைவன் குறையைத் தெரிவித்தல்]

கருவயி ரக்களிற் றுன்கரு மாணிக்கன் கப்பல்நன்னாட்
டிருவரை யொக்கு மிளமுலை யாய்நம் மிரும்புனத்தில்
ஒருவர் குறிப்பறி யேனுழை தேடித் தழைகைக்கொண்டு
வருவர் திகைப்பர் நகைப்பருள் ளாவி வருந்துவரே.

கரு - கருமை, பெருமையும் ஆம். வயிரக்களிறு - பகைமை, அல்லது சினம்கொண்ட களிறு. இரு வரை - இரண்டு மலைகள். உழை - மான். (103)

### தலைவி, அறியாள்போன்று குறியாள் கூறல்

[தலைவி தான் கேட்டறியாள் போல மனத்திற் கருதாத வேறொன்றைக் கருதிக் கூறல்]

மின்னீர்மை கொண்ட மருங்குனல் லாய்வெய்ய சாபமுற்ற
கன்னீர்மை மாற்று கழற்கரு மாணிக்கன் கப்பல்சுற்றும்
முன்னீரும் வெண்சங்க மும்புடை சூழ்மணி முத்தினமும்
மன்னீர் விசும்பு மதியும்பன் மீனு மருட்டுமின்றே.

மின் நீர்மை - மின்னலின் தன்மை; நுண்மை. நல்லாய், என்றது பாங்கியை. கல் நீர்மை - கல்லாய் இருந்த தன்மை; இது அகலிகை சாபம் தீர்த்த வரலாறு குறித்தது. முன்னீர் - கடல்; முந்நீர் என்பது எதுகை நோக்கித் திரிந்தது. மன் நீர் விசும்பு - நிலை பெற்ற தன்மையுடைய ஆகாயம். பன்மீன் - பல நட்சத்திரங்கள். தோழி ஒன்று கூற, தலைவி இவ்வாறு வேறொன்றைக் கூறியதற்குக் காரணம் அவள் நாணமே. (104)

### பாங்கி இறையோற் கண்டமை பகர்தல்

[பாங்கி தான் தலைவனைக்கண்டமை தலைவிக்குக் கூறுதல்]

ஆர்க்குங் கனைகழல் வெங்குரத் தூளியி னாழ்கடலைத்
தூர்க்கும் பரிவல்ல தொண்டையர் கோன்கப்பல் சூழ்சிலம்பில்
யார்க்குந் தெரிவரி தாமென்கொ லோவவ ரெண்ணநின்னைப்
பார்க்கு முயிர்க்கு மறைக்குங்கண் டாலென்னைப் பான்
[மொழியே.

ஆர்க்கும் கனை கழல் - ஒலிமிகச் செய்யும் கழல். குரம் - குளம்பு. பரி - குதிரை. பான்மொழி, என்றது தலைவியை. உயிர்க்கும் - பெருமூச்சுவிடும். என்னைக் கண்டால், மறைக்கும் என இயைக்க. இச்செய்யுளில் பாங்கி விளக்கமாகத் தலைவன் நிலைமைத் தலைவிக்குக் கூறினள் என்க.

(பி - ம்.) 3. தெரிவரிதா யென்கொல்; வியனெண்ண. (105)

### பாங்கியைத் தலைவி மறைத்தது

[தலைவி பாங்கிக்கு உண்மை கூறாது மறைத்தல்]

இறவார் குருகினந் தங்குபைங் கானலி லின்றளவும்
பிறவாத தொன்று பிறந்தது வேபெரு நீருலகில்
சுறவார் கொடியுயர்த் தோன்றொண்டை மான்கப்பல்
[சூழ்திருநாட்
டுறைவார் தமக்கிது வுந்தகு மோசொல்லு வொண்ணுதலே.

இறவு ஆர் குருகு இனம் - இறால் மீன்களைப் பிடித்து அருந்தும் நாரைகளின் கூட்டம். கானல் - கடற்கரையடுத்த சோலை. சுறவு ஆர் கொடி உயர்த்தோன் - சுறாமீன் எழுதப்பெற்ற கொடி உயர்த்திய மன்மதன் போன்றவன்; அல்லது, இது கருமாணிக்கன் கொடியும் ஆம். பிறவாத தொன்று பிறந்தது என்றது, அலர் என்க. 'இதுவரையும் பிறவாவொரு வார்த்தையிப் போதுற்றதே' என்பது ஆனந்தரங்கன் கோவை (115). இச்செய்யுள் இலக். விளக். 509-ஆம் செய்யுளில், பாங்கியைத் தலைவி மறைத்தற்கு மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளது.

(பி - ம்.) 4. சொல்லு மொண்ணுதலே. (106)

## பாங்கி என்னை மறைத்த தென்னெனக் கழறல்

[பாங்கி, என்னை மறைப்பது என்னெனத் தலைவிக்குக் கூறுதல்]

நினக்குற்ற துன்பமு மின்பமு மன்புற்ற நெஞ்சுடையாய்
எனக்குற்ற துன்பமு மின்பமு மேயின வண்டிமிரும் [சிலம்பின்
சுனைக்குற்ற நாண்மலர்த் தார்த்தொண்டை மான்கப்பல்சூழ்
மனக்குற்ற முஞ்செற் றமுமில்லை யேநங்கள் வாணுதலே.

ஏயின - பொருந்தின ஆயின. இமிரும் - ஒலிக்கும். சுனை குற்ற - சுனையிலிருந்து பறித்த; குறுதல் - பறித்தல்; 'பூக்குற் றெய்திய புனலணி யூரன்' (ஐங். 23). இனி, சுனைக்கு உற்ற நாண் மலர் எனப் பிரித்தும் பொருள் கொள்ளலாம். மனக் குற்றம் - மனத்தின் வேறுபாடு. செற்றம் - பகைமை. வாணுதல், என்றது தலைவியை. இவ்வாறு கூறியதால், தலைவி நாணத்தை விட்டுத் தன்னிடம் உண்மை கூறப் பாங்கி வேண்டினாள் என்க. (107)

## பாங்கி கையுறை புகழ்தல்

[பாங்கி தலைவன் தந்த கையுறையைத் தலைவியிடம் புகழ்ந்து கூறுதல்]

முடிக்குங் குவளையு நின்முலைக் காவன் முத்துங்கையில்
பிடிக்கும் கமலமும் பெற்றுவந் தேனடி பேணலர்க்குத் [கண்
துடிக்கும் படிகொண்ட வேற்ருெண்டை மான்கப்பல் சூழ்மலைக்
ஒடிக்குந் தழையுன தல்குலுக் காமிங் கொளியிழையே.

முடிக்கும் குவளை - தலையிற் சூட்டிக் கொள்ளும் நீலமலர். வன்முத்து - ஆணி முத்துமாலை. கமலம் - தாமரை மலர். பேணலர் -

பகைவர். தழை, தலைவன் தந்தது. ஒளியிழை என்றது தலைவியை. இவ்வாறு தலைவன் தந்த கையுறைகளைப் பாங்கி புகழ்ந்தனள் என்க. (108)

### பாங்கி கிழவோன் துயர்நிலை கூறல்

[பாங்கி தலைவியிடம் தலைவன் வருந்தும் நிலைமையைக் கூறல்]

சொல்லாய வல்லவன் ழுண்டையர் கோன்கப்பல் சூழ்சிலம்பில்
செல்லாத நீதவஞ் செய்தனை யேதிரு வேயொருவர்
நில்லா நிறையும் குறையையுங் கேட்டே நிலையுங்கண்டால்
கல்லா யினுமுரு கும்முரு காதுன் கருத்தொன்றுமே.

சொல் ஆய வல்லவன் - கற்றோர்களுடனிருந்து சொற்களின் சிறப்புக்களை ஆராயவல்ல கல்வியறிவுள்ளவன். செல்லாத - வெளிச் செல்லாத. நிறை - ஆடுஉக் குணம் நான்கனுள், காப்பன காத்துக் கடிவன கடியுந் திண்மை; (பிங்.); இறை. அகப் 2.29. குறை - மனக்குறை. இது தலைவியை இடித்துக் கூறியதாம்.

### பாங்கி தலைவன் குறிப்பு வேருக நெறிப்படக் கூறல்

[தலைவன் வேறு நினைப்பினனாகத் தோற்றுகிறானென்று பாங்கி தலைவிக்கு அறிவித்தல்]

கன்றோ டினம்புரக் குங்கரு மாணிக்கன் கப்பலன்னீர்
நன்றோ பிறிதுகொல் லோவறி யேனிது நம்புனத்தின்
நின்றோ ரொருவ ரெனைமுகம் பார்த்துங்க ணீள்சிலம்பில்
என்றோ வருவதென் றூர்தடந் தேரு மிரவியுமே.

கன்றோடு இனம் புரக்கும் - கன்றுகளோடு கூடிய பசுக் கூட்டங்களைக் காக்கும்; இது, கண்ணபிரான் கன்றொடு பசுக்களை மேய்த்த செய்தியைக் கருமாணிக்கன் மேலேற்றிக் கூறியது. தேரும் இரவியும் வருவது என்றோ என்றதனால், தான் மடலேறி வருதலைக் குறிப்பாகத் தலைவன் கூறியதாகப் பாங்கி சொன்னது என்க. (110)

## பாங்கி தலைவியை முனிதல்

[முனிதல் - சினந்து கூறல்]

வம்பார் மலர்த்தழை வண்ணங் கருக மயங்கியிங்ஙன்
நம்பா லிதுசெய்த னன்றென்கொ லோநடுங் கார்நடுங்கும்
கம்பார் முளரியங் கைக்கரு மாணிக்கன் கப்பல்வஞ்சிக்
கொம்பார் மருங்குனல் லாய்மற்று வேறென் குறையவர்க்கே.

வம்பு ஆர் மலர் தழை - மணம் பொருந்திய மலர்களால் அமைத்த தழை என்னும் உடை. வண்ணம் - நிறம். கருக - காய. இங்ஙன் மயங்கி இது செய்தல் நம்பால் நன்று என்கொலோ, என இயைக்க. இது செய்தல் - கையுறை ஏற்காது விடுதல். நடுங்கார் நடுங்கும் - பிறருக்கு நடுங்காத வீரர்களும் கண்டு நடுங்கும். கம்பு ஆர் முளரி அம் கை - சங்கு விளங்கும் தாமரைபோன்ற அழகிய கை. கம்பு - சங்கு; 'கம்புவைத் தரித்த கையிற் கார்முகந் தரித்தான் வந்தான்' (உத்தர. அசுவமேதப் : 73). கொம்பு - பூங்கொம்பு. மருங்குல் - இடை. நல்லாய் என்றது தலைவியை. இது பாங்கி தலைவியை முனிந்தது. (111)

## தலைவியுரைத்தல்

[தலைவி பாங்கியின் கூற்றுக்கு இணங்கிக் கூறுதல்]

உனக்குத் தகுமென் றுளங்கொண் டனையொன்றை யின்றதுவே
எனக்குத் தகுமென் றியைவதல் லாலெறி நீர்பருகும்
கனக்கொத்த மாகுழ லாய்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
நினைக்கத் தகுவதுண் டோபின்னை வேறொரு நெஞ்சுகொண்டே.

உனக்குத் தகுந்தது எனக்கும் தகுந்ததே, என்று தலைவி உடன்பட்டமை கூறியது. கனக்கு ஒத்த மா குழலாய் - மேகத்திற்கு ஒப்பான நீண்ட கரிய கூந்தலையுடையவளே! கனத்திற்கு என்பது, கனக்கு எனத் தொகுத்து நின்றது விகாரம். இனி கன கொத்த மா குழலாய் எனப்பிரித்து, மேகம்போலத் தொகுத்து அடர்ந்து விளங்கும் கூந்தலையுடையவளே, எனப் பொருள் கோடலும் அமையும். அடுத்த செய்யுளால் தலைவி கையுறை ஏற்றுக் கொண்டமை அறியப்படும். 103-ஆம் செய்யுளிலிருந்து இச்செய்யுள் முடியக் குறைநயப்பித்தல் என்று ஒரு சுவடி குறிக்கும். (112)

## தழை நயப்புரைத்தல்

[தலைவி கையுறை யேற்றதைப் பாங்கி தலைவனுக் குரைத்தல்]

ஆனும் பணிலமு மம்போ ருகமு மமரர்பெரும்
கானும் புகழ்செங்கை யான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
யானும் பிறரு மெதிர்கூ றுவதல்ல வென்னிலுநீ
தானும் பெருயைய னேதையல் பாலுன் தழைபெற்றதே.

ஆன் - காமதேனு. பணிலம் - சங்கநிதி. அம்போருகம் - பதுமநிதி. அமரர் பெரும் கான் - தேவர்களது பெரிய கற்பகச் சோலை; இவை வேண்டியவர் வேண்டியவாறு அளிக்கும் கொடைச் சிறப்பமைந்தவை. யானும் பிறரும் எதிர்கூறுவதல்ல, என்றமையால் அதன் அருமை சொல்லிலடங்காது என்றபடி. 'என்னிலும் நீதானும் பெருய்' என்றதனால், பாங்கி, தலைவனிலும் தான் கொண்ட மகிழ்ச்சியைப் புலப்படுத்தினள் என்க.

(பி - ம்.) 3. மெதிர் சொல்லுவதல்ல. (113)

## பகற்குறியிடங் கூறல்

[தலைவியைப் பகலில் காண்பதற்கான இடத்தைப் பாங்கி தலைவனுக் குரைத்தல்]

தொண்டைமன் கற்றவர் சுற்றமெண் ணார்புவி தோள்வலியால்
கொண்டவன் கப்பற் குளிர்பூந் துறைவமென் கோல்வளையார்
வண்டலம் பாவையுஞ் சிற்றிலும் பண்ணி வழங்குமிடம்
கண்டலும் பானலுங் கைதையுஞ் சூழ்கமழ் கானலுமே.

தொண்டை மன் - தொண்டையர் குரிசில். கற்றவர் சுற்றம் - கற்றோர்களுக்கு உறவினன். எண்ணார் - தன் வலிமையைக் கருதாத பகைவர். துறைவன் என்றது, தலைவனை. கோல் வளையார் - சித்திர வேலையமைந்த வளைகளணிந்த மகளிர். வண்டல் அம் பாவை - வண்டல் விளையாட்டுப் பாவை; வண்டல் - கடற்கரையில் மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று. பண்ணுதல் - இழைத்தல்; விளையாட்டயர்தல். கண்டல் - ஒருவகை முட்செடி. பானல் - குவளை. கைதை - தாழை. கானல் - கடற்கரையடுத்த சோலை. இவ்விடமே தலைவியைக் காணத்தக்க இடம் என்று தலைவனுக்குப் பாங்கி குறித்தனள் என்க. (114)

## குறியிடங் கொண்டு சேறல்

[பாங்கி தலைவியைக் குறியிடத்திற்கு அழைத்துச் செல்லுதல்]

காதார் விழியணங் கேகரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
போதா யருவிப் புனல்குடைந் தாடவும் பூஞ்சுனையில்
தாதார் மலர்கொய்ய வும்குயி லோடு தருக்கவும்பின்
வாதாய் மடமயி லாடவும் காண நம் வார்பொழிற்கே.

காது ஆர் விழி - காது அளவு நீண்டு விளங்கும் விழி. வார் பொழிற்கே போதாய் என இயைக்க. புனல் குடைந்தாடல் முதல் மயிலாடல் வரை உள்ளன, மகளிர் விளையாட்டுக்கள். குயிலொடு தருக்கல் - குயில் தோற்றுப் போகுமாறு இனியகுரல் கொண்டு கூவுதல். வாது ஆய் மட மயில் ஆடல் - பந்தயம் போட்டுக் கொண்டது போல மயிலொடு எதிர் நின்று போட்டியாக ஆடுதல். ஆடவும், காணப்போதாய் என்று இயைக்க. இது, பாங்கி தலைவியைக் குறியிடம் கூறி, அங்கு அழைத்துச் சேறல். (115)

## குறியிடத் துய்த்தகறல்

[பாங்கி தலைவியைக் குறியிடத்து வைத்துத் தான் மலர்கொய்து வருவேனென்று செல்லுதல்]

வனையுற்ற பூங்கழல் மாயோன் மருகன்தன் வள்ளியென்றே
நினையத் தகினுந் தகுமிங்கு நீநின் னெறிகுழற்குச்
சுனையிற் குவளையுந் தொண்டையர் கோன்கப்பல் சூழ்சிலம்பின்
நனையுற்ற முல்லையுங் கொய்துவல் லேவந்து நண்ணுவனே.

வனையுற்ற - சித்திர வேலைப்பாடுகள் அமைந்த. மாயோன் மருகன் தன் - திருமால் மருகனை முருகனுடைய. வள்ளி என்றே - வள்ளி நாச்சியார் என்றே. இங்கு நீ நில் - இங்கு நீ தங்கி இரு. நெறி குழற்கு - சுருண்டு விளங்கும் உன் கூந்தலுக்கு. நனை உற்ற முல்லையும் - முல்லை அரும்புகளையும். வல்லே - விரைவில். இது பாங்கி தலைவியைக் குறியிடத்து உய்த்து அகன்றமை கூறியது. தலைவியை வள்ளி என்றதில், வள்ளி முருகனை அடைந்தது போலத் தலைவியும் தலைவனை அடையலாம் என்ற குறிப்பும் அமைந்தமை காண்க.

(பி - ம்.) 4. கொண்டு வல்லே. (116)

## இறையோ னிடத்தெதிர்ப்படுதல்

[தலைவி தலைவனை அங்குச் சந்தித்தல்]

அம்புய முஞ்சங்கு மாலால முமமு தும்பிறையும்
வெம்புகர் வேழமும் நீயுமிங் கேவர வென்றிமிகும்
கம்ப மதக்களிற் றுன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
வம்பவிழ் பூந்திரு வேயிமை யோரென் வருந்தியதே.

அம்புயம் - தாமரை : இது தலைவியின் முகத்திற்கு. சங்கு, கழுத்துக்கு ; ஆலாலம் - விடம், இது கண்களுக்கு ; அமுது, வாய்ச் சொற்களுக்கு ; பிறை - நுதலுக்கு; வெம் புகர் வேழம் - விரும்பத் தக்க அழகிய புள்ளிகளையுடைய யானை ; இது கொங்கைகளுக்கு. நீ - இவற்றையுடைய நீ. வம்பு அவிழ் பூம் திருவே - மணம் சொரியும் அழகிய தாமரை மலரில் உள்ள திருவைப் போன்றவளே ! இவை, தலைவியை நோக்கித் தலைவன் கூறியவை. இமையோர் வருந்தியது, திருவாகிய உன்னையும் பதுமம் முதலியவற்றையும் அங்குக் காணாமை யால். இது, திருவோடு உடன்தோன்றிய அம்புயம் முதல் வேழம் ஈறுகக் கூறப்பட்டவை, திருவாகிய தலைவியோடு உடனமைந்து இங்கு வந்தமை குறிப்பிட்டபடி ஆம். என் - ஏன் ?

(பி - ம்.) 4. வருந்தியுமே. (117)

## புணர்ச்சியின் மகிழ்தல்

சுரும்புண் கருங்குழல் சோரக்கை சோரத் துளங்குநெய்தல்
அரும்புங் கமலத் திளவெண் ணிலாவர வன்னமன்னுர்
கரும்பங் கயமலர்த் தார்க்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
விரும்புங் கலவி விளைத்தம ரான விசையநன்றே.

சுரும்பு உண் கரும் குழல் சோர - வண்டுகள் மணத்தை உண்ணும் சிறப்பமைந்த கரிய கூந்தல் சோர்வுற்று அவிழ்ந்தசைய. கை சோர - கைகள் சோர்வுற. துளங்கு - கலங்கும். நெய்தல் அரும்பும் கமலம் - நீலோற்பலமாகிய கண்கள் பொருந்திய தாமரை போன்ற முகம் ; நெய்தல், கமலம், வெண்ணிலா, இவை உவமையாகு பெயர்கள். நிலா - நிலவு. அன்னமன்னுர் - தலைவி. கரும் பங்கயம் - நீலோற்பலம். அமரான விசயம் ; இது, காமப்போரில் வென்றி கண்டமை. (118)

### விடுத்தல்

[தலைவன் தலைவியைப் பாங்கியினிடம் அனுப்புதல்]

சொரிகின்ற கொண்டலன் ன்றொண்டை மான்கப்பல்
[சூழ்சிலம்பில்
முருகொன்று முல்லை முகுளநகை யீர்நும் முகமுங்கொங்கை
இருகுன்றும் யானொரு காண்மற வேனினி யேகும்பின்னே
வருகின்ற தென்னெஞ்சு போகின்ற சாரல் வழிவிடவே.

கொண்டல் - நீருண்ட மேகம். முருகு - மணம். ஒன்று - பொருந்திய. முகிழ் நகை - அரும்பு போன்ற பற்கள். தலைவியைச் செல்லவிடுத்த தலைவன் அவள் செல்கின்ற சாரலிலே வழிவிடத் தன் நெஞ்சு பின்னே வருகின்றது என்றான் என்க. (119)

### பாங்கி கையுறை காட்டல்

[பிரிந்து சென்றிருந்த பாங்கி தலைவிக்குத் தான் பறித்து வந்த மலர்களைக்காட்டல்]

மழலைப் பசுங்கிளி யேகுழைக் காமணி நீலமுநின்
குழலுக்கு நெய்தலும் கொய்துவந் தேன்கொடி யும்பருந்தும்
சுழலச் சுழல்களிற் ருன்றொண்டை மான்கப்பல் சூழ்சிலம்பின்
நிழலுற்று நீதனி யேநின்ற போதென் நினைந்தனையே.

குழைக்கு ஆம் மணி நீலம் - குழை என்னும் உன் காதணிக்கு ஆகும் சிறந்த நீலமலர்கள். குழலுக்கு நெய்தல் - நின் குழலிற் சூட்டிக் கொள்ளத் தக்க நெய்தல் மலர்கள். கொடி - காகம். காகமும் பருந்தும் சுழல யானை வருவது, அதன் மதத்தை உண்ணவும், பகைவரது பிணம் முதலியவற்றை யுண்ணவும். இஃது அடுத்த செய்யுளாலும் விளங்குவது காண்க. இது, ' நீ தனியே நின்றதால் அஞ்சி வருந்தினையோ ?' என்று பாங்கி ஒன்றும் அறியாள் போலத் தலைவியை வினயது. (120)

### தலைவியைப் பாங்கிற் கூட்டல்

[பாங்கி தலைவியை ஆயமகளிரோடு கூட்டுதல்]

பாதஞ் சிவப்பப் பதியஞ்சு வேண்டிய பஞ்சவர்க்குத்
தூதன்று போய்வந்த தொண்டையர் கோன்கப்பல் சூழ்சிலம்பில்
தாதொன்று பூங்குழ லாய்தாயர் தேடத் தகுவநெடும்
போதுண் டலர்கொய்ய வும்புன லாடவும் போந்ததுவே.

இது, கண்ணபிரான் பஞ்சவர்க்காய்த் தூது நடந்த செய்தியைப் பாட்டுடைத் தலைவன் மேல் ஏற்றிக் கூறியது. தாது - மகரந்தம். தாயர் - நற்றாய், செவிலி முதலியோர். போந்தது நெடும் போது உண்டு; தாயர் தேடத்தகுவ என்றியைக்க. இது, நெடுநேர மானமை கூறித் தலைவியைப் பாங்கிற் கூட்டியது. இச்செய்யுளை ஒட்டி, ஆரூர்க்கோவை 99 அமைந்துள்ளமை காண்க. (121)

## பாங்கி தலைவற் கோம்படைசாற்றல்

[அவ்விடம் விட்டு நீங்கும் தலைவனுக்குப் பாங்கி, தலைவியை அவன் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்ளுதல்]

ஒழுகுங் கடமு மடையா ருடலு முவந்துவண்டும்
கழுகுந் தொடர்களிற் றுன்கரு மாணிக்கன் கப்பலன்னார்
மெழுகுங் களப முலையிள நீர்கணின் மெய்யகலம்
முழுகுங் கருத்து முயல்கவிவ் வாறு முடிவதன்றே.

கடம் - மதம். அடையார் - பகைவர். அகலம் - மார்பு. முலை மெய்யகல முழுக முயங்கல்; ஒப்பு: 'மன்னன் புயஙின்வன முலைக்குக் கச்சாகு மென்ன முயங்கு விப்பேன்' (நள. 1. 51). முயல்க - முயற்சி செய்வாயாக. இவ்வாறு முடிவதன்று என்றது, இக்களவொழுக்கத்தால் காரியம் முற்றுப்பெறாது; ஆதலின், வரைதல் வேண்டும் என்ற குறிப்பு. இது தலைவற்குப் பாங்கி ஓம்படை கூறல்; ஓம்படை - பாதுகாப்பு; தலைவியை எப்பொழுதும் பாதுகாக்க வேண்டுமென்று கூறுதல்; வரைந்து கொள்க என்றதும் ஆம். (122)

## விருந்து விலக்கல்

[பாங்கி, செல்லும் தலைவனை விருந்துண்டு செல்லுமாறு கூறி அவன் செலவு விலக்குதல்]

மானும் புலியு முறவாய் வரையு முருகிவெய்ய
கானும் தழைக்குங் கழைக்கரு மாணிக்கன் கப்பல்வெற்ப
தேனுங் குழைத்ததினை மாவுஞ் செம்மரைப் பாலுஞ்செஞ்சூட்
டேனுங் கிடைக்கு மிருந்துண்டு போமெங்க ளூர்மனைக்கே.

இது, கண்ணபிரான் குழல் ஊதுஞ் சிறப்பைப் பாட்டுடைத் தலைவன்மேல் ஏற்றிக்கூறியது. கழை - புல்லாங்குழல். குழலோசையில் ஈடுபட்டு, மானும் புலியும் பகைமை பாராட்டா; வரையும்

உருகும் - மலையும் உருகும். கானும் தழைக்கும் என்க. குழைத்த தேனும் தினைமாவும் என இயைக்க. மரை : மான். செம் சுட்டு ஊன் - சிவந்த சுடப்பட்ட இறைச்சி. (123)

### விருந்திறை விரும்பல்

[தலைவன் விருந்தை விரும்புதல்]

முருந்தார் முறுவல் முகமலர்ந் திங்ஙன் மொழிந்தவுண்டி
அருந்தா தவரெவ ரன்னமன் னீரன் றமரருய்யக்
கருந்தா னவரைவென் றோன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
இருந்தார் தமக்கும் விருந்தாவ திப்படி யில்லையன்றே.

முருந்து - பறவை இறகின் அடி. இது பல்லுக்கு உவமை. விருந்து சிறப்புறுவது முகமலர்ந்து அளிப்பதால் ; குறள். 84. கரும் தானவர் - கரிய அசுரர்கள் ; கருமை, பெருமையும் ஆம். கருந்தானவரை வென்றது கண்ணபிரான் செயல். (124)

---

## 7. ஒருசார் பகற்குறி

[பகற்குறியிடத்து ஒருவரை ஒருவர் எய்தாமல் தலைவனும் தலைவியும் வருந்துதல்]

### தலைவி, மாலையம் பொழுது கண்டிரங்கல்

[தலைவன் பிரிந்தவழி, தலைவி, அந்திமாலைப் பொழுதுகண்டு ஆற்றாது வருந்துதல்]

கனமே யனையசெங் கைக்கரு மாணிக்கன் கப்பற்கம்புள்
இனமே கருங்கழிக் கானலஞ் சேர்ப்ப ரினியசெம்பொன்
தனமே முயங்கி மயங்கியிப் போது தணந்தனரென்
மனமே யிடமறிந் தோமருண் மாலை வளைந்ததுவே.

கனம் - மேகம். கம்புகள் இனம் ஏகு அரும் கழி ; கம்புள், ஒருவகை நீர்வாழ்ப் பறவை. 'தனமே முயங்கி மயக்கித் தணந்தனர்' என்க. தணத்தல் - பிரிதல். மருண்மாலை - மயக்கத்தை உண்டாக்கும் அந்திப்போது. 'மாலை மலருமிந்நோய்'; (குறள். 1227.) என்றது காண்க. இடம் - தான் தனித்திருந்து வருந்தும் நிலை. வளைந்தது - சூழ்ந்து கொண்டது. (125)

## பாங்கி புலம்பல்

[தலைவியின் துயர்நிலை கண்டு பாங்கி வருந்திக் கூறுதல்]

செருக்கும் படைமன்னர் கைம்முகஞ் சாய்த்தவர் செம்முகங்கள்
கருக்குங் கதிர்வடி வேற்கரு மாணிக்கன் கப்பலன்னுள்
இருக்கின்ற வண்ண மிதுசென்ற காதல ரெண்ணமது
முருக்கும் படியென்செய் வேனந்தி மாலையு மூண்டதுவே.

கை முகம் - யானை ; முகத்திற் கையுடைமையால். செம் முகம் - கோபத்தாற் சிவந்த முகம். புண்பட்டு இரத்தம் தோன்றியதால் சிவந்து தோன்றும் முகமும் ஆம். கருக்கும் - புண்பட்டுக் காய்ந்து கருகும்படி செய்யும். முருக்குதல் - அழித்தல், கொல்லுதல். இஃது அந்தி மாலை தலைவியை வருத்தக்கண்ட பாங்கி, ‘சென்ற தலைவர் எண்ணம் மாறி அவர் வர உபாயம் என் செய்வேன்’ என்று கூறி வருந்தியது.

(பி - ம்.) 1. படிமன்னர். (126)

## தலைவன் நீடத் தலைவி வருந்தல்

[தலைவன் வாராது பொழுது நீட்டிக்கத் தலைவி ஆற்றாது வருந்துதல்]

காரார் பொழிற்கப்ப லான்கரு மாணிக்கன் கைதவற்குப்
பாராளும் வீரப் பரிவீர நாரணன் பைம்பொன்வெற்பில்
பேராய வெள்ளம் பிரிந்திங்ங னேநிற்கப் பெற்றுமன்பர்
வாரா ரிதற்கென்செய் வேனென்செய் வேன்முன்செய்
[வல்வினையே.

கைதவர் - பாண்டியர் ; கருமாணிக்கன் பாண்டியன் பிரதிநிதியாகக் கப்பல் நகரில் இருந்து ஆண்டவனாதலின். பேர் ஆய வெள்ளம் - பெரிய தோழியர் கூட்டம். அன்பர் - தலைவர். இக் கருமாணிக்கன் வீரப்பரியுடைய வீரநாராயணன் என்னும் பெயருடையவன், 184. (127)

## பாங்கி தலைவி துயரந்தணித்தல்,

[தலைவி துயருறக் கண்ட பாங்கி தலைவிக்குத் துணிவுரைத்தல்]

புறந்தந்த மன்னர்பின் போர்செய்ய நாணிப்பொன் [மேருவின்பால்
துறந்தங் கிருக்கவைத் தோன்றொண்டை மான்கப்பற் [சூழ்சிலம்பில்
நிறந்தங்கு வேல்விழி யாயொரு போதவர் நெஞ்சிலுன்னை
மறந்தங் கிருக்கவென் வல்லரோ வென்னே வருந்துவதே.

கருமாணிக்கன் தன் பகைவரைப் புறங்காட்டியோட அடித்து அவர்களை மேருவுக்கு அப்பால் போய்த் தங்கியிருக்க விட்டவன் என்பதாம். ஒருபோது - ஒருபொழுதிலே. நிறம் தங்கு - ஒளிதங்கிய. வல்லரோ என்றமையால், தலைவன் மறந்திருக்க வல்லா னல்லன் என்று பாங்கி, தலைவிக்கு வருந்தாது இருக்கத் துணிவு கூறியது. (128)

## தலைவி, பாங்கியொடு பகர்தல்

துப்போது செவ்விதழ்த் தோகைநல் லாய்தொண்டை மான் [துவரை
மைப்போ தணிந்தும் வரிவளை யேற்றியு மன்னவரென்
கைப்போது கண்முகத் தொற்றியுஞ் சோருநீர்க் [கண்துடைத்தும்
அப்போது சொன்னவெல் லாமென்ன மாய மறிந்திலமே.

துப்பு ஒது செ இதழ் - பவழம் என்று சொல்லத்தக்க சிவந்த இதழ். தோகை - மயில் போன்றவள். இவை தலைவியைக் குறித்தவை. மை போது அணிந்தும் - கருநிற நீல மலர்களை அணி வித்தும். வரிவளை ஏற்றியும் - வரிகளோடு கூடிய வளையல்களை என் கைகளில் ஏற்றிச் சீர்பெறச் செய்தும். மன்னவர் - தலைவர். கைப் போது - கையாகிய தாமரை. கண் முகத்து - கண்ணிடத்து ; கண்ணிலும் முகத்திலும் எனினும் ஆம். (129)

## தலைவியைப் பாங்கி யச்சுறுத்தல்

[அச்சுறுத்தல் - அச்சமுறச் செய்தல்]

காவியம் போதணி தார்க்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
மேவியம் பன்ன விழிசிவப் பூறவென் மெய்யும்மெய்யில்
ஆவியும் போலினி யாயவர் மேல்வைத்த வன்புகொண்டிங்
கோவியம் போயிருந் தாலழி யாதுகொ லொண்புனமே.

*காவி - நீலோற்பலம். விழி சிவப்பு ஊற - தலைவன் பிரிவால் வருந்தி அழ, அதனால் கண் சிவப்பு அதிகரிக்க. மெய்யும் மெய்யில் ஆவியும் போல் இனியாய் என்றது, பாங்கி தலைவியை நோக்கிக் கூறியது; உடலும் உயிரும் போன்று ஒன்றுபட்ட தன்மை கூறியது. ஓவியம் போல் - சித்திரம் போல் அசைவற்று. ஒள் புனம் அழியாது கொல் - நாம் காவல்புரிய வேண்டிய சிறந்த தினைப்புனம் அழியாதோ? இவ்வாறு பாங்கி தலைவியை நோக்கி அச்சுறுத்தி அவள் கவலையை மாற்றினாள் என்க.*

(பி - ம்.) 4. ஒன்புனமே. (130)

## தலைவி, நீங்கற்கருமை நினைந்திரங்கல்

[தலைவி தலைவனை நீங்கியிருத்தலை நினைந்து வருந்துதல்]

இமையாத வேழமோ ரெட்டுங் குலகிரி யேழுமுற்றச்
சுமையாற வந்தரு ளுந்தொண்டை மான்கப்பற் றோகையன்னீர்
அமையாத வன்புதந் தார்பிரிந் தாலரி தாற்றுவதென்
றுமையா ளறிந்தல்ல வோசிவந் தாடன் னொருபக்கமே.

*இமையாத வேழம் ஓர் எட்டு - எட்டுத் திசை யானைகள்; அவை தெய்வ வேழங்கள் ஆதலின், இமையாத வேழம் எனப் பட்டன. குலகிரி ஏழு - சப்த குல பருவதங்கள்; 8, 225 செய்யுள்களை நோக்குக. ஆற்றுவது அரிது என்று - பொறுத்துக்கொள்வது அரிதே என்று. உமையாள் தன் ஒரு பக்கம் சிவந்தது, இறைவன் தன்னைப் பிரிவானோ என்ற எண்ணத்தில் உண்டான அச்சத்தால் என்று தற்குறிப் பேற்றமாகக் கூறியது. சிவந்தமை, தன் மனப்புழுக்கத்தால்; இது, அர்த்த நாரீசுவர உருவத்தில் ஒரு புறம் சிவபிரான் அமைந்திருத்தலாகிய உண்மையைக் குறித்தது. இச்செய்யுள் இலக். விளக். 531 ஆம் சூத்திரத்தில் 'நீங்கற் கருமை*

தலைவி நினைந்திரங்கல்' என்பதற்கு மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளது.

(பி - ம்.) 1. யேழு முற்றும். (131)

தலைவிக்குத் தலைவன் வரவு பாங்கி சாற்றல்

கார்க்குன்ற மால்களிற் றுன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
பார்க்கின்ற கொங்கையுஞ் செங்கயற் கண்ணும் பணிமொழியாய்
போர்க்கின்ற பொன்னும் பொழிகின்ற முத்தமும் போகவிங்ஙன்
ஆர்க்கின்ற தால்வரை மேலன்பர் தேரி னணிமணியே.

கார் குன்ற மால் களிற்றுன் - கரிய குன்று போன்ற பெரிய யானையுடையவன்; களிறு போன்றவனும் ஆம். போர்க்கின்ற பொன் என்றது, தலைவிக்குண்டான பசலை நோயையும், பொழிகின்ற முத்தம் என்றது தலைவன் பிரிவு நோக்கிப் பொழியும் முத்துக்கள் போன்ற அவள் கண்ணீர்த் துளிகளையும் குறிப்பன. பார்க்கின்ற கொங்கை என்றது நிமிர்ந்து விளங்குஞ் சிறப்பு நோக்கி. இது, தலைவன் தேரின் அணி மணி ஆர்க்கின்றதால், தலைவன் வரவை அறிந்து, பாங்கி தலைவிக்குக் கூறி அவளை ஆற்றுவித்தது. ஆர்க்கின்றது, பொன்னும் முத்தமும் போக; என்று இயைக்க. (132)

பாங்கி தலைவற்குச் சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல்

[தலைவன் வேலிப்புறத்தே நிற்க, தலைவி வீட்டினுள்ளே செறிக்கப்பெற்றமையைப் பாங்கி தனக்குள்ளே கூறுவாள் போலத் தலைவனுக்கு அறிவித்தல்]

ஒளிகா லயிற்படைத் தெவ்வேந்தர் மங்கைய ரோடரிக்கண்
துளிகால வேல்தொட்ட தொண்டையர் கோன்தென் துவரை [வெற்பில்
அளிகா மரஞ்செய்யும் பூமரஞ் சூழு மகன்பண்ணைவாய்
கிளிகா ளறிந்திலி ரேயுங்கள் வாழ்வெங்கள் கேடென்பதே.

ஒளி கால் அயில் படை - ஒளியை விடும் வேற்படை. ஓடு அரி கண் - சலித்தோடும் செவ்வரி படர்ந்த கண். துளிகால - கண்ணீர் துளி சிந்த. அளி காமரம் செய்யும் - வண்டுகள் காமரம் என்னும் பண் இசையை ஒலிக்கும் பண்ணை - வயல். தலைவி இற்செறிப் புற்றமையால், கதிர்களைக் கவரவரும் கிளிகளுக்கு வாழ்வும், தலைவனைக் காண இயல மாட்டாமையால் தலைவிக்குத் தாழ்வும் வந்

தமையை அக்கிளிகளுக்குக் கூறுவது போலச் சிறைப்புறத்திருந்த தலைவனுக்குப் பாங்கி கூறியது.

(பி - ம்.) 2. வேல்தொட்ட வேள் தொண்டைமான்தேன். (133)

## ஓம்படை சாற்றல்

[தலைவிக்கு உய்யுமாறு வேறில்லையென்று பாங்கி தலைவற்கு உரைத்தல்]

காவைப் பொருவுசெங் கைக்கரு மாணிக்கன் கப்பல்வெற்பின்
கோவைப் பொருவுசெவ் வேற்கொற்ற வாநின் குறைநயந்த
மாவைக் குளிர்நிழ லாக்கிய வென்னை மறக்கிலுமென்
பூவைக்கு நல்லுயிர் நீயுடம் பேகொண்டு போகின்றதே.

கா - கற்பகச் சோலை. கோ - கருமாணிக்கன். நின் குறை நயந்து - உன் குறையை விரும்பி ஏற்று. மாவைக் குளிர் நிழலாக்கிய என்னை - மாமரம் குறியிட மாக்கிய என்னை. என் பூவைக்கு நல் உயிர் நீ என்றது, தலைவனை. உடம்பு என்றது தலைவியை. பாவை உயிரற்ற உடலாக இருக்கின்றாள்; அவளை வரைந்து வாழ்விக்க வேண்டுமென்ற குறிப்பு. இச் செய்யுள், இலக். விளக். 513-ஆம் செய்யுளில்; 'பாங்கி தலைவன் முன்னின்று இற்செறிப் புணர்த்தி, ஓம்படை சாற்றற்கு' மேற்கோளாக உள்ளது,

(பி - ம்.) 1. கப்பல் வன்னி. கப்பல் வள்ளி.
2. கோவைப் பொரு செய்ய. 3. மறப்பினுமென். (134)

## தலைவன் நெஞ்சொடு கிளத்தல்

[தலைவன் தனக்கொரு பற்றுக்கோடு பெறாது, தன் நெஞ்சொடு கூறுதல்]

கானே கமழ்தெரி யற்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
மானே மறந்தும் மறப்பிக்கு மேயொண் மதிநுதலார்
தேனேர் மொழியும் விழியுஞ்செவ் வாயும் திருநகையும்
தானே வளர்கள பத்தன பாரமுஞ் சாயலுமே.

மறந்தும் மறப்பிக்குமே; நான் மறைப்பதானாலும் தலைவியின் மொழி முதலியன நினைவூட்டுமே. முன் செய்யுளிலும், 'என்னை மறக்கிலும் (அவளை மறவேல்)' என்று பாங்கி கூறியதற்கு விடையாகக் கூறினான் என்க. மதி நுதலார் - தலைவி. கான் - மணம்.

தெரியல் - மாலே. மான் - பாங்கி. தேன் நேர் மொழி - தேனைப் போன்ற மொழி. தானே வளர் - பிறர் வளர்க்காமல் இயல்பாய் வளர்ந்துள்ள. களப தன பாரம் - சந்தனக் குழம்பு பூசப்பெற்ற தனங்களின் பாரம். சாயல் - மேனி. 'தலைவி என்னை மறந்தாலும், அவள் மொழி முதலியன என்னை அவளை மறப்பிக்கச் செய்யா' என்று தலைவன் தன் நெஞ்சுடன் கூறிப் புலந்தது. (135)

---

## 8. பகற்குறி இடையீடு

[பகற்குறிக்கு இடையிற் சில தடைகள் நிகழ்தல்]

### இறைவனைக் குறிவரல் விலக்கல்

[குறித்த இடத்திற்குத் தலைவன் வருதலைப் பாங்கி தடுத்தல்]

புனமுங் கிளியின முமன்பு கூர்ந்தது பூண்டவன்பும்
தனமு முதிர்ந்தது தண்சிலம் பாசங்குந் தாமரையும்
கனமும் பொருவுகை யான்கரு மாணிக்கன் கப்பலன்னூட்
டனமொன் றியநடை யாளன்னை தானு மயிர்த்தனளே.

புனமும் கிளியினமும் அன்பு கூர்ந்தமை, தினைப் புனம் காவ லின்மையால். பூண்ட அன்பும் தனமும் முதிர்ந்தமை, கலவி யின்மையால். அனம் ஒன்றிய நடையாள் - தலைவி. சங்கு - சங்க நிதி. தாமரை - பதுமநிதி. கனம் - மேகம்; இவை கருமாணிக்க னுக்கு ஒப்பு. தலைவியிடம் தாய் அயிர்த்தனள் ஆதலின், பாங்கி தலைவனைப் பகற்குறிவரல் விலக்கியது. கூர்ந்தது, முதிர்ந்தது; ஒருமை பன்மை மயக்கம்.

(பி - ம்.) 2. கப்பலன்னூட். (136)

### பாங்கி, இறைவியைக் குறிவரல் விலக்கல்

[பாங்கி தலைவியைக் குறியிடம் செல்லாது விலக்குதல்]

அதுநா மறிந்தில மன்னையிப் போதணி நீர்த்துவரைத்
துதிநா வலர்புகழ் தொண்டையர் கோன்வெற்பிற் [றேண்மெலிவும்
புதுநாண் மதிநுதல் வண்ணமும் பார்த்துப் புகையுயிர்த்தாள்
இதுநா மினியன்ன மேவண்ட லாடுமிடமல்லவே.

தலைவியின் தோள்மெலிவு, மதிநுதல் வண்ணம் முதலியன மாறினமை பார்த்துத் தாய் புகையுயிர்த்தாள்; புகையுயிர்த்தது, கோபத்தால். ஆதலின், இனி நாம் வண்டலாடும் இடம் சாரல் தகுதியன்று என்று கூறிப் பாங்கி தலைவியைக் குறிவரல் விலக்கியது. இச்செய்யுள், இலக். விளக். 515 ஆம் சூத்திரத்தில், இத்துறைக்கு மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளது.

(பி - ம்.) 2. துதி நாவலர் புகழுந் தொண்டைமான். (137)

## ஆடிடம் நோக்கியழிதல்

[தலைவி தான் தன் தோழியரோடு விளையாடுமிடம் நோக்கி வருந்துதல்]

மாறும் புனத்தினில் வந்தென்று காண்பது வண்டமிழ்நாள்
தோறும் தெரிமுரு கன்றொண்டை மான்கப்பல் சூழ்சிலம்பில்
ஏறுங் கழையி தணுமெதிர் கூவு மிருஞ்சிலம்பும்
ஊறுஞ் சுனையு மருவியஞ் சாரலு மூசலுமே.

கழை இதண் - மூங்கில் பரப்பி யமைத்த பரண். சிலம்பு எதிர் கூவல் - மலைப்புறத்தே நின்று எதிரொலி தோன்றக் கூவுதல்; இது, குறிஞ்சி நில மகளிர் விளையாடல்களில் ஒன்று. ஊறும் சுனை நீர் ஊறும் மலையில் உள்ள சுனை. அருவி அம் சாரல் - அருவியோடும் அழகிய மலைச்சாரல். ஊசல் - விளையாடும் ஊஞ்சல். இவற்றை இனி என்று மறுபடியும் வந்து காண்பது என்று தலைவி வருந்தியது. (138)

## நீங்குந் தலைவி யிரங்கல்

[நீங்கும் தலைவி, தலைவன் ஆடிடம் வந்து பார்த்துத் தன்னைக் காணாது வருந்துவனே யென்று இரங்குவது]

கருவிப் புயலனை யான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
குருவிக்கு மென்கிளிக் குங்கொள்ளை யூட்டிக் குரலரிந்த
இருவிப் புனத்தையு மென்னையில் லாத விதணையும்வந்
தருவிச் சிலம்பர்கண் டாலென்செய் வாரென் றறிந்திலமே.

கருவிப் புயல்: மழைக்கு முதற் கருவியாகிய புயல்; கருவி மாமழை என்பதுபோல. கருவி - தொகுதியும் ஆம்; புறநா. 159. குரல் - தினைக்கதிர். இருவிப் புனம் - தினை முதலிய பயிரின் அரிதாள்களோடு விளங்கும் புனம்; இருவி- அரிதாள்; 191. என்னை இல்லாத இதண் - யான் இல்லாத பரண். சிலம்பர் என்றது, தலைவனை. (139)

### பாங்கி தலைவியை ஆடிடம் விடுத்துக் கொண்டு அகறல்

[விளையாடு மிடங்களை விட்டுத் தலைவியை நீக்கிக்கொண்டு
பாங்கி வீட்டுக்குச் செல்லுதல்]

காகம் படிவடி வேற்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
ஏகும் கொடிசொன்ன தென்னென்று கேட்கி னினமயில்காள்
ஆகின்ற வன்பு மழிகின்ற வாவியு மாயலைந்து
போகின்ற வாறுகண் டீரினி நானென் புகல்வதுவே.

*காகம் படிதல் - வேலில் உள்ள நிணம், தசை முதலிய வற்றை அருந்த. வடிவேல் - கூரியவேல். கொடி - தலைவி. 'கொடி சொன்னது என்?' என்று தலைவன் கேட்கின், எனக்கொள்க. 'அன்பு மேன்மேலும் வளரவும், ஆவி அழியவும் அலைந்து தலைவி சென்றதைத் தலைவனிடம் கூறும்' என்று மயில்களைத் தலைவி வேண்டிக் கொண்டனள் என்க; இனமயில் - மயிற்கூட்டம். இது, பாங்கி கூற்று.* (140)

### தலைவன் புனங்கண்டழுங்கல்

[தலைவன் புனத்திடை தலைவியைக் காணாது வருந்துதல்]

வளையாக் கொழுங்கதி ரீன்றுதன் பாலற வற்றிமுற்றி
விளையாத் தினையை விதைத்தில ரேவெகுண் டாருடலம்
துளையாக் கியவடி வேற்றெண்டை மான்கப்பல் சூழ்சிலம்பில்
களையாக் கணியைநட் டாரெம்மை வாழ்வித்த கானவரே.

*கணி - வேங்கை மரம். 'களையாக வெட்டியெறிய வேண்டிய கணியை வெட்டாமல் வளர்த்தார்; அது மலர்ந்தது' மலர்ந்தமை கண்டு கானவர் தினை கொய்தனர்; பின்னும் விதைத்திலர், ஆதலின், யான் இனி இங்கு வருதற்கில்லை. தலைவியை இனிக் காணும் வாய்ப்பும் அற்றது' என்று தலைவன் வருந்திக் கூறியது. வாழ்வித்த கானவர் என்றது, வெறுப்புத் தோன்றக் கூறிய வஞ்சப் புகழ்ச்சியாகும்.* (141)

### வறுங்களங் காண்டல்

[தலைவியில்லாது பாழ்பட்டதுபோன்ற இடத்தைத் தலைவன் கண்டு வருந்துதல்]

தொடைவந்த தண்ணந் துழாய்த்தொண்டை வேந்தன் துவரை
இடைவந்த கானவ ரேகென்ற போதி லிருகயற்கண் [வெற்பின்
கடைவந் துகுபுனற் கச்சிள நீர்புகக் கால்களெங்ஙன்
நடைவந்த தோமயில் காளெம்மை வாழ்வித்த நன்னுதற்கே.

தொடை - மாலை. ஏகென்றது - இணை கொய்தாராதலின். கண்கடை வந்து உகு புனல் கச்சு இளநீர் புக - கடைக்கண் வழி வந்து சிந்தும் கண்ணீர் மார்பிலே வழிய ; கச்சு - வார். இளநீர் - கொங்கை. தலைவியின் கால்கள் எவ்வாறு நடந்து சென்றனவோ ? என்றது, அவள் தன் உடன்பாடின்றிச் சென்றமையைத் தலைவன் உணர்ந்து கூறினதாம். தலைவன் புனத்தலை வந்து பார்த்துத் தலைவி இனி வாரான் என்று கருதி வருந்திக் கூறியது. இச் செய்யுள், இலக். விளக். 515-ஆம் சூத்திரத்தில், ' தலைமகன் வறுங் களம் நாடி மறுகற்கு ' மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளது.

(பி - ம்) 3. நீருக ; நீர்புக்க ; கால்க ளங்ஙன். (142)

வாழுமூர் நோக்கி மதிமயங்கல்

[தலைவி வாழும் ஊரை நோக்கித் தலைவன் மதிமயங்கிக் கூறுதல்]

காக்குஞ் சிறுகுடி யுங்கழை வேலியுங் கற்சுரமும்
தேக்கு மருவியுஞ் சீறூரு மற்றவை திண்கரடம்
தூக்கும் கடகளிற் ருன்ரெண்டை மான்கப்பல் சூழ்சிலம்பில்
போக்கு மிருப்பும் விருப்புமென் னுகுங்கொல் பூங்கொடிக்கே.

காக்கும் சிறு குடில் - ஊர்க் காவலாய் வெளியில் உள்ளோர் காக்கும் சிறு குடில்கள். கழை - மூங்கில். கல் சுரம் - கற் பாறைகள் அடர்ந்து, நடந்து செல்ல முடியாத பாலை நிலம். தேக்கு - பெரிய தேக்கு மரங்கள். சீறூர் - சிறு ஊர். இது, மலைவாணர் வாழும் தலைவியின் ஊர். கரடம் - யானையின் கவுளில் உள்ள மதம் பெருகும் துவாரம். போக்கு - போவது. இருப்பு - தங்கியிருப் பது. விருப்பு - தான் தலைவனை அடையவேண்டுமென்ற ஆசை. தான் தலைவி வாழும் ஊருக்குச் செல்வது எப்படி என்று தலைவன் தயங்கிக் கூறியதாம்.

(143)

## 9. இரவுக்குறி

(தலைவனும் தலைவியும் இரவிற் கூடுமாறு குறிக்கப்பெற்ற இடம்)

### இறையோன் இருட்குறி வேண்டல்

[தலைவன் தலைவியை இரவிற் கூடுமாறு குறியிடம் வேண்டல்]

அகிலொன்று பூங்குழ லார்புன லாடிய வன்றுநெஞ்சும்
துகிலுங் கவர்திரு மால்தொண்டை மான்கப்பல் தூரமுண்டு
முகிலுங் குவிந்தது செங்கதிர் போய்விழ மூண்டதந்தி
இகலுந் தடமுலை யாய்வய மாவு மிளைத்தனவே.

அகில் - இங்கு அகிற்புகை மணம். நெஞ்சும் துகிலும் கவர் திருமால் - கோவியர் மனத்தோடு துகிலையும் கவர்ந்த கண்ண பிரான். கப்பல் - தலைவன் ஊர். முகிலும் குவிந்தது - மேகமும் சூழ்ந்து மூடிக்கொண்டது. செங்கதிர் போய்விழ முகிலுங் குவிந்தது என இயைக்க. மூண்ட தந்தி - சினங்கொண்ட யானை. வயமா - தலைவன் ஊர்ந்து வந்த தேரில் பூட்டிய குதிரைகள். இது, தான் இரவில் தலைவியை அடைய வேண்டுமென்ற கருத்தை இம் முறையில் தலைவன் பாங்கிக்குத் தெரிவித்து, இரவுக்குறி வேண்டினன் என்க. *(144)*

### பாங்கி நெறியின தருமை கூறல்

[பாங்கி, இரவில் வருவதால் உள்ள வழி யருமையைத் தலைவனுக்குக் கூறுதல்]

வரியுங் கரியு மலைவாண ருஞ்சிங்க மாவுங்கங்குல்
திரியுஞ் சிலம்பிது திண்சிலம் பாசெம்பொன் மாரியென்றும்
சொரியும் புயலனை யான்றொண்டை வேந்தன் றுவரைவெற்பில்
புரியுங் கருத்துனக் கோவுண்டு காணுமென் பூவைக்குமே.

வரி - புலி. இது கொடுவரி என்பதின் முதற்குறை; வரிமா என்பதின் கடைக் குறையும் ஆம். சிலம்பா என்றது தலைவனை. புரியும் கருத்து - வர விரும்பும் எண்ணம். என் பூவைக்கும் காணும் - எங்கள் தலைவிக்கும் நெறியருமையைப் பற்றிய கவலை உண்டு. இது பாங்கி தலைவற்கு உரைத்தது (145)

### நெறியெளிமை கழறல்

[தலைவன் இரவில் வருதல் தனக்கு எளிமை யென்று கூறுதல்]

அரவுக்கு மெல்லியல் சாயலுள் ளேயுண் டறவிருண்ட
இரவுக் கினிய திருமுகந் தோன்று மெடுத்தவெண்ணெய்க்
கரவுக் கடியுண்ட மால்கரு மாணிக்கன் கப்பலன்னாய்
உரவுக்கு நீதந்த காமவெந் தீயுண்டென் னுள்ளத்திலே.

அரவுக்கு மெல்லியல் சாயல் உள்ளே உண்டு - பாம்புக்கு நான் அஞ்சாமைக்குக் காரணம், என் மனத்தில் சாயலையுடைய (தலைவியாகிய) மயில் உண்டு. இரவுக்கு...தோன்றும் - இரவுக்கு அஞ்சாமைக்குக் காரணம், இனிமை அளிக்கும் (தலைவி முகமாகிய) சந்திரன் தோன்றி ஒளிதரும். உரவுக்கு - (வலிமையுடைய) இடிக்கு, நீ தந்த - உன் மூலம் யான் அடைந்த, காம வெம் தீ உண்டு - தலைவியால் கொண்ட காமமாகிய கொடிய தீ என்னிடம் இருக்கிறது. இது, தலைவன் நெறியினை தெளிமை கூறற்கு, இலக், விளக்கம், 517. ஆம் சூத்திரத்தில் மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளது.

(பி - ம்.) 3. கரவுக்கிழுக்குண்ட.
4. உருமுக்கு நீதந்த. (146)

### பாங்கி அவன் நாட்டு அணியியல் வினாதல்

[பாங்கி, தலைவன் நாட்டு மகளிர் அணியும் அணிகலன்களையும் அன்னோர் இயல்புகளையும் தலைவனிடம் வினவுதல்]

மாதங்க முய்ய மடுவின் கரைவண் கராமடிய
காதும் புயத்திகி ரிக்கரு மாணிக்கன் கப்பல்வெற்பா
போது புனைகல னும்நல மேவிய பூச்சுமெவை
ஏதுங்க ளூரினி யார்வண்ட லாடு மிரும்பொழிலே.

மாதங்கம் - யானை; கயேந்திரன். கராம் - முதலை. காதும் - கொன்ற. புய திகிரி - கையில் ஏந்திய சக்கரப்படை. இது, கஜேந்திரனுக்குத் திருமால் அருளிய செயலைக் குறித்தது. போது - பூ; பொழுதுக்குரிய என்றும் ஆம். கலன் - அணிகலன். பூச்சு - பூசிக் கொள்ளும் களபக் கலவை. பொழில் எது, என்றிணைக்க.

(பி - ம்.) 2. காதும் புயன்திகிரி. (147)

## அவனூட்டணியியல் தலைவன் வினாதல்

[தலைவன், பாங்கியின் நாட்டுமகளிர் அணியவகைகளை வினவுதல்]

என்னூட் டணியியல் சொல்லியிங் கென்பய னிங்கெனக்கு
நின்னூட் டணியியல் நீசொல்ல வேண்டு நிலமுழுதும்
கன்னாட் டியபுக ழான்கரு மாணிக்கன் கற்றவர்தம் [நகையே
சொன்னாட் டியதொண்டை மான்கப்பல் மால்வரைத் தூ

கல் நாட்டுதல் - தன் புகழைக் கல்லிற் பொறித்து நிலை நாட்டுதல். சொல் - புகழ்; புத்திமதி அல்லது உறுதிமொழியும் ஆம். தூ நகை என்றது பாங்கியை. இவ்வாறு தலைவன் கேட்டது, தான் தலைவிக்கு அவை அளிக்க எண்ணி. (148)

## தன்னூட்டணியியல் பாங்கி சாற்றல்

[பாங்கி, தன்னூட்டு மகளிர் அணியும் அணிகலன்களையும், அன்னோர் இயல்புகளையும் தலைவனுக்கு எடுத்துரைத்தல்]

நீரிங் குரைக்கின்ற தென்சொல்லு வேனவ நீதமுண்ட
சோரன் றுவரைமன் றொண்டையர் கோன்கப்பல் சூழ்சிலம்பில்
பாரந் தனமென் றிளைக்குநுண் ணேரிடைப் பைந்தொடியார்க்
காரந் தழையு மிழையுமெய் பூசி யணிவதுமே.

நவநீதம் - வெண்ணெய். சோரன் - கள்வன். கண்ணபிரானுக்கு நவநீத சோரன் என்ற பெயருண்மையும் நோக்குக; தனம் பாரம் என்று இளைக்கும் நுண் இடை. ஆரம் தழையும், இழையும், மெய் பூசி அணிவதும்; ஆரம்; தழை, சந்தனத்தழை உடையாகவும், ஆரம், முத்து என்ற பொருளில் முத்து வடமாகிய இழையாகவும், அவ்வாரம், சந்தனம் என்ற பொருளில் மெய்பூசி அணிவதாகவும் அமைந்தமை காண்க. ஆரம் என்ற சொல் இங்குப் பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல். தழை - உடை விசேஷம், இழை - அணிகலம், மெய்பூசி அணிவது சந்தனக் களபம். (149)

## பாங்கி தலைவிக்கு இறைவன் குறையறிவித்தல்

[குறை - கருத்து]

திருவே திரைவந்த தெள்ளமு தேதெவ்வர் தேயமெல்லாம்
கருவேல் விதைத்தவெள் வேற்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
ஒருவேல் வலங்கொண்டு நீதந்த மாலென்னை யுய்க்கிலிங்கு
வருவே னிரவிலென் றுரென்சொல் வேனந்த மன்னவர்க்கே.

திருவே - திருமகள் போன்றவளே! - திரை வந்த தெள் அமுதே - பாற்கடலி லுதித்த தெள்ளிய அமுது போன்றவளே! தெவ்வர் - பகைவர். கருவேல் - முள்ளடர்ந்த கருவேல்விதை. ஒரு வேல் வலம் கொண்டு இரவில் வருவேன் என்ருர் என்றியைக்க. வலம் - வலிமை; துணை. மால் - ஆசை, காமம். உய்க்கில் - செலுத்து மாறல். இது, பாங்கி தலைவன் இரவில் வருவதாகக் கூறியதைத் தலைவிக்குக் கூறியது.

(பி - ம்.) 1. வரைவந்த, தரைவந்த.
4. வென்றுவென். (150)

## நொந்துரைத்தல்

[பாங்கி மொழிக்குத் தலைவி உடன்பட்டுப் பின் மனம் நொந்துரைத்தல்]

தோயுங் சுடர்வடி வேற்ருெண்டை மான்கப்பல் சூழ்சிலம்பில்
பேயுந் துயிலும் பிறங்கிருள் வாய்ப்பெரு வாய்ப்புவியும்
காயுங் களிறுங் கடந்தொரு வர்வரக் காதலென
நீயும் பொறுத்தனை யேயென்செய் வேன்வஞ்ச நெஞ்சினுக்கே.

சுடர் தோயும் - ஒளிபொருந்திய. பேயும் துயிலும் பிறங் கிருள் - பேய்களும் தூங்கக் கூடிய நடு நிசிப் போது; 'பேயுந் துயின்றதால் பேரியாமம்' (நள. வெண். 2. 94). நீயும் என்றது, தன் நெஞ்சினை நோக்கிக் கூறியது. இதனால், தலைவி வரவு நேர்ந் தமை குறிக்கப்பட்டது. நீயும் என்பதனைத் தோழியை நோக்கிக் கூறியதாகவும் கொள்ளலாம். (151)

## பாங்கி இரவுக்குறி ஏற்பித்தல்

[பாங்கி தலைவியிடம் இரவுக்குறியை ஏற்குமாறு கூறுதல்.]

துளவம் புனைபுயன் ருெண்டையர் கோன்கப்பல் சூழ்திரை
களவன் பெடையோ டிடைகண்டு நீழற் கலந்தணைத்துக் [வாய்க்
கொளவன்பர் கண்டுநின் ருர்கொள்ளைப் போதவர் கூறியதெவ்
வளவென்று சொல்லநல் லாயென்செய் வார்பின்
[னறிந்திலமே.

புயன் - புயத்தையுடையவன். திரை வாய் - கடலிடத்து. நீழல் இடை - நிழலிலே. களவன் - நண்டு; பிறரைக் கண்டவுடன்

கள்வன்போல் தன்னை ஒளித்துக் கொள்ளும் தன்மையுடைமையால். கொள்ளைப்போது - நெடுநேரம். சொல்ல - நான் சொல்லத்தக்கது.

## இரவுக்குறிநேர்தல்

[தலைவி இரவுக்குறிக்கு உடன்படுதல்]

சீராடு பாவையைத் தீண்டிய தேதென்று பண்டிளையார்
தூராத வெங்கடற் றூர்க்குந் துறையவர் தொண்டையர்கோன்
வீராக ரன்கப்பல் மின்னனை யீரென்னை வேண்டியிங்கு
வாராத கங்குல்வந் தாலென்செய் வேனினி மற்றிதற்கே.

சீராடு பாவை - தாம் சீராட்டி விளையாட வைத்த குரவம் பாவை; குரவமலர், பாவை வடிவுடன் விளங்குவதால் அவற்றைத் தம் பாவைகளாகக் கொண்டு மகளிர் விளையாடுவது மரபு. அப் பாவைகளைக் கடல்நீர் அடித்து இழுத்துச் சென்றமையால் அக்கடல் மீது சினந்து, மகளிர் அதனைத் தூர்க்க முயன்றனர் என்க. வீராகரன் - வீரத்திற்கு இருப்பிடமானவன். வாராத கங்குல் - யாவரும் வரமுடியாத அச்சத்தைத் தரும் இரவு. 'வாராத...இதற்கே' என்றமையால் தலைவி நேர்ந்தமை குறிக்கப்பட்டது.

(பி - ம்.) 2. மின்னனை யாயென்னை. (153)

## நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக் குரைத்தல்

[தலைவி இரவுக்குறி நேர்ந்தமையைப் பாங்கி தலைவனுக்கு உரைத்தல்]

கறுத்தார் பரவுங் கழற்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
குறுத்தாட் கரியரி கொண்டுண் பதுசுரங் கொம்பனையாள் [லப்
மறுத்தாள் வருதியென் றஞ்சிவந் தாரென்று மாற்றஞ்சொல்
பொறுத்தா ளினியென்செய் வாள்வரு வாயெம் பொருப்
[பிடத்தே.

கறுத்தார் - பகைவர். குறு தாள் கரி அரி கொண்டு உண்பது சுரம் - குறுகிய தாள்களையுடைய யானையைச் சிங்கம் பற்றிக் கொண்டு உண்பதான கொடிய சுரம். கொம்பனையாள் - பூங்கொம்பு போன்ற தலைவி. வருதி என்று - நீ வருகிறாய் என்று. அஞ்சி மறுத்தாள் - சுரத்தின் கொடும் வழிக்கு அஞ்சி நீ வரவேண்டாமென்று முதலில் மறுத்துரைத்தாள். வந்தார் என்னும் மாற்

றம் சொல்ல - வந்துவிட்டார் என்ற சொல்லைக் கூற. பொறுத்தாள் அச்சத்தைப் பொறுத்துக்கொண்டாள்.

(பி - ம்.) 3. வந்தாயென்னு. (154)

## பாங்கி இரவுக்குறி வரவு அறிவுறுத்தல்

[பாங்கி தலைவன் இரவுக் குறியிடம் வருவதைத் தலைவிக்கு அறிவித்தல்]

வெயில்கொண்ட வேல்கொண்டு மேவா ரெயில்கொண்டு [வெற்றிகொண்டு
கயில்கொண்ட வார்கழற் காற்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
குயில்கொண்ட மென்சொற் கொடியிடை யாய்குளிர் பூங்கணி [மேல்
துயில்கொண்ட தோகையெல் லாந்துயி லாதென் றுளங் [கினவே.

வெயில் - ஒளி. மேவார் - பகைவர். எயில் - அரணுகிய மதில். கயில் - கொக்கிவாய்ப் பூட்டு. வார்கழல் - நீண்ட வீரக்கழல். பூங்கணி - மலர்ந்து விளங்கும் வேங்கை மரம். தோகை - மயில். துளங்கின - நடுங்கின. பாங்கி, மயில்கள் துளங்கினமை கூறித் தலைவன் வரவைத் தலைவிக்கு உணர்த்தியது.

(பி - ம்.) 1. வென்றிகொண்ட. (155)

## தாய்துயிலறிதல்

[பாங்கி தாய் துயிலுவதைச் சோதித்த அறிதல்]

சுந்தர மேருவன் ஞன்றெண்டை மான்கப்பல் சூழ்சிலம்பில்
வந்தொரு வேழநம் வாவி கலக்கிமென் மல்லிகைப்பூம்
பந்த ரிடந்து பருமணி யூசல் பறித்தெறிந்து
சந்தன நாகந் தமாலந்தண் மாலதி சாய்க்கின்றதே.

மேரு உவமையானது, கருமாணிக்கனின் அளக்கலாகா அளவு முதலியவற்றால். வேழம் - யானை. வாவி - தடாகம். இடந்து - பெயர்த்தெறிந்து. ஊசல் - ஊஞ்சல். நாகம் - புன்னகம். தமாலம் - பச்சிலைமரம். மாலதி - ஒருவகைப் பூங்கொடி. இவ்வாறு கூறியது, தாயின் உறக்கத்தைச் சோதிக்க என்க. (156)

## குறியிடங் கொண்டு சேறல்

[பாங்கி தலைவியை இரவுக்குறியிடம் அழைத்துச் செல்லுதல்]

குழலுக்கு மல்லிகை யுங்குலைக் காந்தளுங் கொவ்வைச்செவ்வாய்
மழலைக் கிளிமொழி நாங்கொய்ய வாமரு வாரைவென்று
கழலுற்ற சேவடி யான்கரு மாணிக்கன் கப்பல்வண்டு
சுழலுற்ற நாண்மலர்ப் பூஞ்சுரும் பார்தடஞ் சோலையிலே.

கொவ்வைச் செவ்வாய் மழலைக் கிளிமொழி என்றது தலைவியை. குலை - கொத்தாகவுள்ள. வா - வருவாயாக. மருவார் - பகைவர். கழலுற்ற - வீரக்கழல் அணிந்த. நாண்மலர் - அன்று மலர்ந்த மலர். சுரும்பு - வண்டு. ஆர் - நிறைந்த. (157)

## குறியிடத்துய்த்து நீங்கல்

[பாங்கி தலைவியைக் குறியிடத்தே நிறுத்திவிட்டுப் பூக்கொய்து வருவதாக அவ்விடம் விட்டு நீங்குதல்]

ஏலக் குழலுக் கெறிகடல் போல்பவ னேந்துசங்கம்
போலக் குவிமுகை மல்லிகை நான்கொய்யப் பொய்யில்வண்மை
காலப் புயலனை யான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
நீலத்தை வெல்விழி யாய்நில்லு நாகத்தி னீழலிலே.

ஏலம் - கூந்தற்கு ஊட்டும் சாந்து. ஏலக் குழலுக்கு மல்லிகை கொய்ய, என்றியைக்க. மல்லிகை அரும்புக்குச் சங்கம்; 'மல்லிகையே வெண்சங்காய் வண்டூத,' (நள - வெண். சுயம்வர : 98); 'மல்லிகை வெண் சங்கூதும் மதிலரங்க மென்பதுவே' (பெரியாழ்வார் திருமொழி. 4, 8 : 8). நீலத்தை வெல் விழியாய் என்றது, தலைவியை. நீலம் - குவளை மலர். நாகம் - புன்னாகம், அல்லது சுரபுன்னை. (158)

## தலைவன் இடனெதிர்ப்படுதல்

[தலைவன் அக்குறியிடம் வந்து தலைவியைச் சந்தித்தல்]

அரும்பாக் கமலத்தி லாரணங் கேயென்னை யாளவென்று
விரும்பாக் கனங்குழை மாணிக்க மேவிளக் காகவென்றிச்
சுரும்பார்க்கு மல்லிகைத் தார்த்தொண்டை மான்கப்பல் சூழ்சிலம்பில்
வரும்பாக் கியமெனக் கோவிங்ங னேவந்து வாய்த்ததுவே.

அரும்பா கமலத்தின் ஆர் அணங்கு - கூம்பாது எப்பொழுதும் மலர்ந்து விளங்கும் தெய்வத் தாமரையில் விளங்கும் திருமகள் போன்றவள். தலைவி அணிந்திருந்த கனங்குழையின் மாணிக்கமே இரவில் விளக்காகக் கொண்டு, வந்த தன் பாக்கியத்தைத் தலைவன் வியந்தது. கனம் - பொன்; கலித். 57.

(பி - ம்.) 2. காகவென்றுஞ். 3. வேந்தன் றுவரை வெற்பில். 4. வாய்ப்பதுவே. (159)

## தலைவன் புணர்ச்சியின் மகிழ்தல்

கரபங்க யன்ருெண்டை மான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
அரவுங் களிறுந் திரிகங்குல் வாயென்னை யாளவென்று
வரவுங் கலந்தென்னை வாழ்விக்கு மாறும் வகுத்தவனோர்
இரவும் வகுத்தில னேபுல ராம லெனக்கெனவே.

கர பங்கயன் - கையாகிய தாமரையை யுடையவன். பங்கயம் கரத்துக்கு அதன் வனப்பாலும், பதுமநிதி போன்ற கொடையாலும் உவமை கூறியது என்க. புலராமல் ஓர் இரவு வகுத்திலனோ என்றான் தலைவன். (160)

## தலைமகள் ஆற்றினதருமை நினைந்திரங்கல்

[தலைவி, தலைவன் இரவில் வரும் வழி அரிதாயிருத்தலை எண்ணி வருந்துதல்]

கானந் தருந்தொங்க லான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பின்
வானும் நிலனும் புதைகங்குல் வாய்வரும் போதுநின்னைத்
தானஞ் சொரிகளி றும்வய மாவுந் தனியரவும்
ஊனஞ் செயிலண்ண லேயென்செய் வேன்வெற் றுடம்பு
[கொண்டே.

கானம் - மணம். புதை - தெரியாமல் மறையச் செய்யும். தானம் - மதநீர். வயமா - புலி. தனி அரவு - ஒப்பற்ற கொடிய பாம்பு. ஊனம் - ஊறு; கேடு. வெற்றுடம்பு - உயிராகிய நீ இல்லாத வெறும் உடம்பு; இது, தலைவன் இறந்துபடில், தன்னுயிர் நீங்கும் என்பதைத் தலைவி குறிப்பிட்டது. (161)

## இல்வயின் !விடுத்தல்

[தலைவன் தலைவியை அவள் வீட்டிற்சேருமாறு விடுத்துச் செல்லுதல்]

இனம்போன மானென்ன நீயிங்ங னேகினை யென்றுநின்றன்
மனம்போலும் வல்லி வருந்தத் தகும்வரை யாப்பருவக்
கனம்போ லுதவுகை யான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
அனம்போலு மென்னடை யாய்விடை நீதந் தருளெனக்கே.

*இனம் போன - தன் கூட்டத்தைவிட்டுத் தனித்துப் போன. வல்லி - உன்னைப் பிரிந்த பாங்கி. வரையா - அளவின்றி, அதாவது மிகுதியாக. பருவ கனம் - மாரி காலத்து மேகம். அனம் போலும் மென்னடை என்றது, தலைவியை.*

(பி - ம்.) 4. *தந்தரு ளெனக்கே.* (162)

## பாங்கி கையுறை காட்டல்

[பாங்கி தலைவிக்குத் தான் பறித்துவந்த மலர்களைக் காட்டியது]

மிகைக்கும் புயவலி கொண்டெதி ரேன்றதெவ் வேந்தை
[யெல்லாம்
துகைக்கும் கடகளிற் றுன்றுெண்டை மான்கப்பற் றுரைகை
[யன்னுய்
நகைக்குங் குழைபொரு கண்ணுக்கு மன்ன னயந்தெதிராப்
பகைக்கும் பனிமலர் கொய்துவந் தேனிவை பார்த்தருளே.

*மிகைக்கும் - மேம்பட்ட. எதிர் ஏன்ற - போரில் வந்து எதிர்த்த. தெவ்வேந்தர் - பகையரசர். நகை - பல். வண்ணம் - நிறம். அண்ணல் - தலைவன். தோழி பறித்து வந்தவை முல்லையும் குவளையும். இவை தலைவியின் பல்லுக்கும் கண்ணுக்கும் ஒப்பாகா என்பது குறிப்பு.*

(பி - ம்.) 3. *வண்ண நயந்தெரியா.* (163)

## பாங்கி தலைவியை இற்கொண்டேகல்

புடைக்குந் தரங்கப் புணரிவெந் தீயிற் புலரவன்று
கடைக்கண் சிவந்த பிரான்கரு மாணிக்கன் கப்பல்மின்னே
அடைக்கும் பசும்பொற் கபாடமு மன்னைகண் ணும்மடைக்கப்
படைக்கண் படைகொளப் போதுகம் வாமலர்ப் பாயலிலே.

புடைக்கும் - தாக்கும். தரங்கம் - அலை. புணரி - கடல். புணரி புலர கடைக்கண் சிவந்த பிரான்; இராமபிரான் வருணன் மேற் பகழி விட்டு அதனைத் தீயச் செய்த செய்தி குறிப்பிட்டது. அடைக்கும் கபாடம் - சாத்தும் கதவு. கண் அடைக்க - கண் மூட. அன்னை - தலைவியின் தாய். படைக்கண் படை கொளா - வேல், அம்பு போன்ற கண்கள் மூடித் துயில. பாயல்-படுக்கை. (164)

### பாங்கி தலைவனை வரவு விலக்கல்

[பாங்கி தலைவனை இரவுக்குறி வருதலை விலக்குதல்]

காவும் பணிலமும் போற்கரு மாணிக்கன் கப்பல்வெற்பின்
மேவுங் கொடியை விரும்பினை யேல்விறல் வேங்கையுங்கைம்
மாவும் பொருது வயங்கிருள் யாமத்து வானருவி
தாவுஞ் சிலம்ப வினித்தனி வாரலெஞ் சாரலுக்கே.

கா - கற்பகச்சோலை. பணிலம் - சங்கநிதி. கொடி - பூங் கொடி போன்ற தலைவி. பொருது - போரிடுகின்ற. கைம்மா - யானை. வானருவி - ஆகாயத்திலிருந்து கீழே தாவி விழும் மலை அருவி; வாளருவி என்று பாடங்கொண்டால் - ஒளிபொருந்திய அருவி என் பதாம். வாரல் - வராதே; வரின், உனக்கு விலங்குகளால் கேடு வரும்; அதனால், தலைவியும் இறந்து படுவள் என்று கூறினள் என்க.

(பி - ம்.) 3. மயங்கிருள்; வாளருவி. 4. வாரலெஞ் சாரலுக்கே. (165)

### தலைவனிரங்கல்

[பாங்கி தன் வரவு விலக்கியதற்கு ஆற்றாது தலைவன் இரங்கிக் கூறியது]

வேய்கொண்ட தோளி மொழிகின்ற வாறிது மேலிதற்கு
நீகொண்ட காத லிலையிது வாநெஞ்ச மேபுணரி
தோய்கொண்ட லன்னகை யான்றொண்டை வேந்தன் [றுவரையர்கோன்
சேய்கொண்ட மேனிகொண் டான்திரு நாட்டென்கொல் [செய்குவமே.

வேய் கொண்ட தோளி - மூங்கில் போன்ற தோள்களை யுடைய பாங்கி ; 'வேயுறு தோளி பங்கன்' என்றமையும் நோக்குக. நீ என்றது, நெஞ்சினை நோக்கி. புணரி தோய் கொண்டல் - கடலிற் சென்று நீருண்ட மேகம். சேய் கொண்ட மேனி - முருகன் மேனி போன்ற திருமேனி ; முருகன் வடிவிற் சிறந்தவனாதலின் ; கொண்ட ; உவம வாசகம். (166)

### தோழி தலைமகள் துயர்நிலை கிளந்து தலைவனை விடுத்தல்

[விளக்கு—கூறி]

தேடிய செல்வமெல் லாந்தெவ்வர் சேரத் திறையிடவே
சூடிய வார்கழற் காற்றெண்டை வேந்தன் றுவரையினீர்
கூடிய வாறு குறிக்குந் திறனெங்கள் கோலக்கொம்பை
நீடிய தோளண்ண லேகுறிப் பாயிந் நெறிகடந்தே.

தேடிய - தாம் தேடிய. சேர - ஒருமிக்க. நீர் துவரையின் கூடியவாறு - நீர் உம் ஊர் ஆகிய துவரையை அடைந்ததை. குறிக்கும் திறம் - தெரிவிக்கும் விதமாக. குறிப்பாய் - தெரிவிப்பாயாக. இது, பாங்கி தலைவனிடம் கூறித் தலைவியின் துயரினை அவனுக்குத் தெரிவித்தனள் என்க. கோலக் கொம்பு - தலைவி. (167)

---

## 10. இரவுக்குறி இடையீடு

(இரவுக்குறியிடத்து நிகழும் தடைகள்)

### பாங்கி, இறைவன் வரவுணர்த்தல்

[பாங்கி, தலைவிக்குத் தலைவன் வருவதை அறிவித்தல்]

பருதி மறைத்த படையாழி மாதவன் பைங்கழையில்
சுருதி படைத்தரு ளுந்தொண்டை மான்கப்பல் சூழ்சிலம்பின்
மருவு மழைக்கணி மேற்றுயில் கூரு மயிலினங்கள்
வெருவி யழைக்க விளைந்ததென் னேசொல்லு மெல்லியலே.

பருதி மறைத்த படை ஆழி மாதவன் - பாரதப் போரில் ஒருநாள் சூரியனைப் பகற் போதிலே மறைத்த சக்கரப்படையுடைய

மாதவனும், பைம் கழையில் சுருதி படைத்தருளும் - பசிய புல்லங் குழலில் இனிய கானம் செய்தவனுமான கண்ணபிரான்; இது பாட்டுடைத் தலைவனைக் கண்ணபிரானாகச் சிறப்பித்துக் கூறியது. மழை மருவு - குளிர்ந்த மேகம் படிந்து விளங்கும். கணி - வேங்கைமரம். விளைந்தது - நிகழ்ந்தது. மயிலினங்கள் வெருவி அழைக்க விளைந்தது என்றதால், தலைவன் வரவு குறித்தது என்க.

(பி - ம்.) 4. விழைந்ததென்னோ. (168)

## தான் குறிமருண்டமை தலைவி பாங்கிக்கு உரைத்தல்

[குறி மருண்டமை-வேறொரு ஒலியைத் தலைவன் செய்த குறியாக மயங்கியதை]

கயலொன்று கண்ணியர் வேள்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
அயிலொன்று வேலன்பர் செய்ததென் னோவருஞ் சூரணங்கு
பயிலுங் கனையிருட் பன்மலர்ச் சோலையிற் பாயல்கொள்ளும்
மயிலின் துயில்கெடுத் தென்னையும் பாவம் வரவழைத்தே.

கயல் ஒன்று கண்ணியர் வேள் கருமாணிக்கன் - கயல் மீன் போலும் கண்களையுடைய தன் காதன் மகளிர்க்கு மன்மதன் போன்ற கருமாணிக்கன். அயில் ஒன்று - கூர்மை பொருந்திய. சூர் அணங்கு - கொடிய வன தெய்வம்; இது வனத்து வரும் ஆடவரை மயக்கி வருத்துந் தன்மையது. கனை இருள் - செறிந்த இருள். மயிலின் துயில் கெடுத்தது, அங்கு எழுந்த ஒலியால். வேற்றொலி ஒன்றினால் மயிலும் தானும் மயங்கியதைத் தலைவி தோழிக்குக் கூறினாள் என்க.

(பி - ம்.) 1. கண் மடவீர், 2. சீரணங்கு. வரு மாரணங்கு. (169)

## தலைவி குறிபிழைத் தழுங்கல்

[தான் கேட்டகுறி தவறித் தலைவன் வாராமற்போனமைக்குத் தலைவி வருந்துதல்]

தண்ணந் துறைவர்வந் தானெய்தல் காளொன்று சாற்று
கண்ணுங் கடிநகர்க் காவலும் நீந்திக் கழுதினமும் [மன்னை
துண்ணென்ற கங்குலின் வாய்த்தொண்டை மான்கப்பல் [சூழ்சிலம்பில்
வண்ணம் பசந்திங்ஙன் யான்வந்து போகின்ற வல்வினையே.

தண் அம் துறைவர் - குளிர்ந்து அழகிய நீர்த்துறைகளையுடைய தலைவர். ஒன்று சாற்றும்-இந்த ஒரு செய்தியைச் சொல்லுங்கள். கழுது இனமும் துண் என்ற - பேய்க் கூட்டங்களும் திடுக்கிட்டு நடுங்குவதான. வண்ணம் பசந்தது,' தலைவனைக் கூடப்பெருமையால் விரகமேலிட்டு உடல் நிறம் பசலைகொண்டு. வினையே - தன் கொடுவினையையே. இது, தலைவி நெய்தல் மலர்களிடம் தன் வருத்தத்தைத் தெரிவித்தது. (170)

(பி - ம்.) 4. வண்ணங் கரந்திங்கன்; வன்கண்மையே.

## புலந்து அவன் போதல்

[தலைவன் வருந்தி மீண்டேகுதல்]

கரும்புங் கனியுங் கலந்தசொல் லார்கயற் கண்ணும்வண்டும்
சுரும்பும் புனைதண் டுழாய்த்தொண்டை மான்கப்பல் சூழ்
அரும்புந் தனமயி லன்னா ருமை யறிந்திருந்தும் [சிலம்பில்
விரும்புந் தனிநெஞ்ச மேயென்செய் வேனிந்த வெந்துயர்க்கே.

கயல் கண் புனை துழாய் தொண்டைமான் - நேய மகளிர் கயல் மீன் போன்ற கண்கள் விரும்பி நோக்கி மொய்க்கும் துழாய் மாலை அணிந்த தொண்டைமான்; வண்டும் சுரும்பும் புனை துழாய்த் தொண்டைமான் என்க. அரும்பும் தன மயில் அன்னார்' என்றது, தலைவியை. அரும்புதல் - அப்பொழுது தோன்றினமை; அதாவது, இளன்மையைக் குறித்தபடி. அருமை - வெளிவர முடியாத காவல் உடைமை. தனி நெஞ்சம் என்றது, தன் நோக்கம் தலைவியை அடைதல் ஒன்றையே மேற்கொண்டமை கருதிக் கூறியது; துணையற்ற நிலைமையைக் கூறியதும் ஆம். வெம் துயர் - தலைவியைக் கண்டு மகிழ முடியாத கொடுந் துயர்.

(பி - ம்.) 1. 'கரும்பு மமுதங். (171)

## வறுங்களம் தலைவி கண்டிரங்கல்

[பொழுது விடிந்தபின் தலைவி, தலைவனில்லா இடத்தைக்கண்டு வருந்துதல்]

நாம்வந்த வேற்கை நரபாலன் நாவலர் போய்வழுத்தும் [பில்
தோம்வந் தடர்மொழித் தொண்டையர் கோன்கப்பல் சூழ் சிலம்
தேம்வந் தலர்புன்னை காள்கைதை காள்நெய்தற் சேர்ப்பர்
[கங்குல்
தாம்வந் திலர் கொல்பின் யாம்வந்து போனது சாற்றுமினே,

நாம் வந்த வேல் கை - அச்சத்தை உண்டாக்கும் வேல் ஏந்திய கை ; நாம் - அச்சம். நரபாலன் - அரசன். தோம் - துன்பம். தேம் - இனிய சுவை ; மணமும் ஆம் ; 'தேம் படுபனை' என்றதும் நோக்குக. கைதை - தாழை. நெய்தல் சேர்ப்பர் - நெய்தல் நிலத் துறைகளையுடைய தலைவர். சாற்றுமின் - சொல்லுங்கள். இச் செய்யுள் இலக். விளக். 519-ஆம் சூத்திரத்தில், 'புலந்தபின் வறுங் களந் தலைவி கண்டிரங்கல்' என்னும் துறைக்கு மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளது.

(பி - ம்.) 2. தடர்பொழிற் றெண்டையர் ; சூழ் துறையில்.
4. நாம் வந்திலர்சொல் பின். நாம் வந்தனர் சொல்லியான் வந்து போனபின். (172)

## தலைவி தன்றுணைக் குரைத்தல்

[தலைவி பாங்கிக்குத் தான் வந்த அடையாளத்தைக் கூறி வருந்துதல்]

தனியா யிரந்தலை நாகத்து வைகிய தாரணிமான்
துனியாற வந்தரு ளுந்தொண்டை மான்கப்பல் சூழ்சிலம்பர்
கனியா ரிதழ்வஞ்சி கன்னலுக் கின்னறுங் கண்ணிபெய்தார்
இனியா ரொருவர்க் கின்னாருள ரோபண் டிருநிலத்தே.

தாரணி மான் - புவிமடந்தை. துனி ஆற - துன்பந் தீர. சிலம்பர்-மலைவாணர் ; தலைவனைக் குறித்தது. கனி ஆர் இதழ் வஞ்சி : பாங்கியைக் குறித்தது. சிலம்பர் கன்னலுக்கு இன் நறும் கண்ணி பெய்தார்-தலைவர் கரும்பு ஒன்றுக்கு இனிய மணம் பொருந்திய கண்ணியை அணிவித்தார். இவ்வாறு அவன் செய்தது, தான் வந்து சென்றமையைத் தெரிவிக்க என்க. இனியார் ஒருவருக்கு-இனிய நட்புக்குணம் அமைந்த ஒருவருக்கு. பண்டு இரு நிலத்தே-பழமையான இந்தப் பெரிய உலகில். இன்னார் உளரோ-பகைவர் உள்ளாரோ ; இல்லையென்றபடி. இது, தலைவன் தன்னிடம் அன்பு கொண்டமை குறிப்பிட்டது. (173)

## தலைமகள் அவலம் பாங்கி தணித்தல்

[தலைவி கொண்ட துன்பத்தைப் பாங்கி தணித்து ஆற்றுதல்]

கொழித்த மணற்குன்று சூழ்பொய்கை வாழுங் குருகெழும்பி
அழித்தது நம்மை யவர்குறி யேயன்றி யாடரவின்
கழுத்தசை யாமல்வந் தோன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
பழுத்தது பைங்கொம்பின் மேனிற்கு மோசொல் பணிமொழியே

குருகு-கொக்கு முதலிய நீர்வாழ் பறவைகள். குருகு எழும்பி, ஓசை செய்து அவர் குறி அழித்தது. ஆடு அரவின்-படம் எடுத்தாடும் ஆதிசேடனின். கழுத்து அசையாமல் - பூமியைத் தாங்கும் சுமை அழுந்தி அதன் கழுத்து அசைந்து வருந்தாமல். வந்தோன்-வந்து புவிபுரப்பவன். பழுத்தது பைங்கொம்பில் நிற்குமோ ; இது பழமொழி. பணிமொழி என்றது தலைவியை. தலைவன் அன்பு தவறாது என்று பாங்கி தலைவிக்குக் கூறி, அவள் அவலம் தணித்தனள் என்க. (174)

## இறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றல்.

[இரவுக்குறி தவறியதற்குப் பாங்கி தலைவன்மேல் பிழையேற்றிக் கூறல்]

பொய்யின்றி வந்த வருள்பூண்ட சொல்லும் புயலனைய
கையும் படைத்துவந் தோன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பா
மெய்யென்று கங்குல் விழித்திருந் தேமுன்சொல் வேறெனினும்
மையொன்று சாரல் வரைக்கே தினிநாம் வருநெறியே.

பொய்யின்றி வந்த - தவறாமல் வந்த. புயல் அனைய கை - கொடையால் மேகம் போன்ற கை. வெற்பா என்றது தலைவனை. உன் சொல் மெய் யென்று விழித்திருந்தேம் என இயைக்க. வேறு எனின் - உன் கருத்து வேறானால். நும் மை ஒன்று சாரல் வரைக்கு நாம் இனி வரும் நெறி ஏது - உங்களுடைய இருள் செறிந்த இடத்துக்கு நாம் வரும் வழி இன்னதென்று கூறுவாயாக. இவ்வாறு பாங்கி தங்கள் மனத்துணிவைத் தெரிவிப்பதற்காகக் கூறினாள் என்க. ஒப்பு. " உம்மூர்வரத்துணிந் தோமன்பர் கூறுமவ ரெமக்கே " தஞ்சைவாணன். 197) இனி, மை யொன்று........நெறியே 'என்பதற்கு' இனி உன் சொல்லை நம்பி இவ்விடம்வர எங்களுக்கு வழி ஏது ?' என்று கடிந்து கூறினாளும் ஆம்.

(பி - ம்.) 4. வரைக்கேது நாங்கள். (175)

## இறைவிமேல் இறைவன் குறிபிழைப்பேற்றல்.

[தலைவன் தலைவியே குறிதவறினள் என்று கூறுதல்]

சுருளுங் குழன்மட வாய்தொண்டை மான்கப்பல்சூழ்
மருளுந் தனிநெஞ்சு மாலுழந் தேனு மனைப்புறத்த [சிலம்பின்
இருளின்கண் வந்தெது போதுநின் றேனித் தனையுநின்கண்
அருளின்மை யாலறி யாதென்கொ லோநின் றழுங்குவதே.

மடவாய் என்றது பாங்கியை. மால் உழந்தேன் - மயங்கி வருந்தினேன். எதுபோது - எவ்வளவு நேரம். அழுங்குவது - வருந்துவது. தான் சொல் தவறாது வந்ததைக் கூறித் தலைவியே குறி பிழைத்தனள் என்று தலைவன் கூறினன் என்க.

(பி - ம்.) 3. வந்திதுபோது. (176)

## அவள் குறி மருண்டமை அவள் அவற்கியம்பல்

[வேறொன்றைத் தலைவி தலைவன் குறியென்று எண்ணித் தவறியதைப் பாங்கி தலைவற்குக் கூறுதல்]

அல்லார் வருங்குறி வந்துநின் றென்னிலு மாரணங்கு
சொல்லா தனவில்லை தொல்சிலம் பாதன் சுரும்பழைக்கும்
கல்லார நாண்மலர்த் தார்க்கரு மாணிக்கன் கற்றவர்க்கு
நல்லான் வருங்கப்பல் சூழ்நறுஞ் சாரலின் நள்ளிருளே.

அல்லார் வரும் குறி - அல்லகுறி; தலைவனாலன்றி நிகழுங் குறி; நம்பியகப். 159. சொல்லாதன இல்லை - தலைவி சொல்லிப் புலம்பாச் சொற்கள் இல்லை. ஆரணங்கு - தலைவி. சுரும்பு அழைக்கும் - வண்டுகளைத் தன்னிடம் வரும்படியாக அழைக்கும். கல்லார நாண் மலர் - குவளைப் புதுமலர். கல்லாரம்: இது கல்ஹாரம் என்னும் வடசொல்லின் திரிபு. கற்றவர்க்கு நல்லான் - கற்றோர்க்கு நண்பன். (177)

## பாங்கி தலைவன் சொல்லிய கொடுமையைத் தலைவியிடம் சாற்றல்

கறியார் சிலம்பிற் கழற்கரு மாணிக்கன் கைபுகழ
வறியார் மனத்தின் மயங்கிருள் நாளம் மனைகடந்து
குறியா வருங்குறி வாய்வந்து நீகொள்ளைப் போதுநின்ற
தறியா தவர்தம்மை யேபுலந் தாரொன் றறிவின்றியே.

கறி - மிளகுப்பயிர்; புகழ அறியார் மனத்தின்-புகழ அறியாத மனத்தினரைப் போல. மனை கடந்து-நம் வீட்டைக் கடந்து வந்து. குறியா-குறித்துச் சொல்லி வந்த. குறிவாய் வந்து-குறியிடத்தே வந்து. கொள்ளைப்போது-நெடுநேரம். புலந்தார்-வெறுத்துக் கூறினர். ஒன்று அறிவு இன்றியே-அறிவு என்பது ஒன்று இல்லாமல்; அதாவது உண்மை நிலை அறிந்து கொள்ளாமல் என்றபடி. (178)

## அது தன்பிழை அன்று என்று இறைவி நோதல்

[அது தன்பிழை அன்று என்று தலைவி வருந்திக் கூறுதல்]

போயறி யாவட மன்னர்பின் ஞணிற் பொருஞ்சரங்கள்
தூயறி யாதவில் லான்ஞெண்டை மான்கப்பல் தோகை
ஆயறி யாம லிடையிரு ஞள்வந் திழைத்ததெல்லாம் [யன்னுய்
நீயறி யாயல்லை யேபுலந் தாரன்பர் நீள்வினையே.

போய் அறியா வட மன்னர்பின் - போரில் போய் அறியாது பின்புறம் காட்டிய வடமன்னர் பின்தொடர்ந்து. நாணில்-நிலை நாணில். சரம் தூய் அறியாத-அம்பு பொழிந்து அறியாத. தோகை அன்னாய்-மயில் போன்றவளே! இது, பாங்கியை நோக்கித் தலைவி கூறியது. ஆய்-தாய். இழைத்தது எல்லாம்-நாம் செய்தவை எல்லாம். நீ அறியாய் அல்லையே - நீ அறியாதவள் அல்லளே. நீள் வினையே-அன்பர் புலந்தது, நான் முன்செய்த பெருந்தீவினையே.

(பி - ம்.) 4. நீயறியா யல்லலே. (179)

## தலைவி தான் வருந்தொழிற் கருமையுரைத்தல்

[தலைவிதான் வருவதற்கு உள்ள இடையூறுகளைக் கூறுதல்]

ஊருந் துடியு ஞமலியு மியாயு மொளிர்மதியும்
நேருங் குடிஞையுங் கோழியும் வாய்ப்ப நிலம்புரக்கும்
காருந் தருவுமன் ஞன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
சேருந் திறமென் கொலோமன மேநஞ் சிலம்பிடத்தே.

ஊர் - ஊரில் உள்ள மாந்தர். துடி-காவற்பறை. ஞமலி - நாய். யாய்-தாய். ஒளிர் மதி-நிலவொளிதரும் சந்திரன். குடிஞை-கோட்டான். கோழி-சாமத்திற் கூவும் சேவல். ஊர் முதல் கோழி வரை யுள்ளவை இரவில் வெளி வருகைக்கு, ஒலித்தும், கூவியும் தடைப்படுத்துவன. இஃது, இரவில் வருவதில் உள்ள இடையூறுகளைத் தலைவி தன் நெஞ்சுடன் கூறிக் கொண்டது. (180)

# 11. வரைதல் வேட்கை

[தலைவி தன்னைத் தலைவன், ஊர் அறிய மணஞ் செய்துகொள்ள விரும்புதல்]

## பருவரல் பாங்கி வினுதல்

[தலைவியைப் பாங்கி பருவரல் வினுதல் ; பருவரல்—துன்பம்]

குழலன்ன மென்மொழிக் கோமள மேயிக் குறியினின்று
நிழலுன்னை நீங்கிலு நீங்குகி லேனிறை நீருலகில்
கழன்மன்னர் சென்றிறைஞ் சுங்கரு மாணிக்கன் கன்றினர் [போல்
அழன்மன்ன நீயு முயிர்த்தென்கொ லோநின் றழுங்குவதே.

குழல் - புல்லங்குழல். கோமளமே - அழகிய தலைவியே, கோமளம் - அழகு. குறி - தலைவனைச் சந்திப்பதற்கு ஏற்படுத்திக் கொண்ட இடம். இறை நீங்குகிலேன் - சிறிதும் நீங்குவேனல்லேன். கன்றினர் - பகைவர். அழல் மன்ன - நெருப்பு மிக. உயிர்த்து - பெருமூச்சு விட்டு. அழுங்குவது - வருந்துவது. மன்ன அழல், என இயைத்து, மிகவும் அழாதே என்றும் பொருள் கொள்ளலாம். (181)

## தலைவி தலைவன் வருந்தொழிற் கருமை சாற்றல்

யாயுங் கடியு ஞமலியு மூரு மெறிதுடியும்
காயுங் கலைமதி யும்மிவை யாகக் கமலமங்கை
தோயும் புயன்றெண்டை மான்கப்பற் காவலன் சொற்றமிழ்
ஆயுஞ் சிலம்பர்நம் பாலெங் ஙனேவந் தடுப்பதுவே. [நூல்

கடியும் - காவலும். ஞமலி - நாய். ஊர் - ஊர் மக்கள். எறி துடி - பம்பை என்னும் தாக்கியடிக்கும் ஒருவகைப் பறை. கமல மங்கை - தாமரையில் உள்ள திருமகள். சிலம்பர் - தலைவர். அடுப்பது - வந்து சேருவது. இது தலைவி தோழிக்குக் கூறியது.

### தலைவி தலைவனூருக்குச் செல வொருப்படுதல்

[ஒருப்படுதல்-உடன்படுதல்]

அன்றே கொடியகஞ் சன்னறி யாம லசோதைகுலக்
கன்றே யெனவளர்ந் தோன்கரு மாணிக்கன் கப்பல்நகர்ச்
சென்றே தலைமையுஞ் செய்ந்நன்றி யுஞ்செறி வானபண்பும்
நன்றே யுமக்கென்று நாஞ்சொல்ல வாவல்ல நண்பருக்கே.

தலைமை - தலையளி. செறிவான பண்பும் நிறைந்த குணச் சிறப்பும். கப்பலூருக்கே சென்று, தலைவரைக் கண்டு, 'உமக்கு நன்றே'' என்று நாம் சொல்லவா என்று கூறித் தலைவனூருக்குச் செல்லத் தலைவி துணிந்தாள் என்க. கஞ்சன்னறி; னகரவொற்று விரித்தது செய்யுள் விகாரம்.

(பி - ம்.) 3. செறிவான நண்ப. (183)

### எதிர்மறை

[தலைவி தான் செல்லுதற்குத் தடையாயுள்ளவற்றை எடுத்துக் கூறல்]

கறியார் சிலம்பிற் கலைக்கரு மாணிக்கன் கப்பலன்னீர்
செறியார் கனையிருட் சேறற் கரிதன்று தீயுருமும்
பொறிவா ரணமும் புலியுந் திரிநெறி போந்ததென்னோய்
அறியார் சிலரைப் பெறிலது வேயங் கரியதொன்றே.

கறி - மிளகுப் பயிர்கள். கப்பலன்னீர், என்றது பாங்கியை. செறி ஆர் கனை இருள் - அடர்ந்து நிறைந்த இருள். தீ உருமும் - தீயைக் கக்கும் இடியும். பொறி வாரணமும் - புகர்ப் புள்ளிகளை யுடைய யானையும். திரி நெறி - திரியும் கானவழியே. 'தலைவன் ஊர் சேறல் அரிதன்று; என் நோய் அறியார் சிலரைப் பெறில் அது அரிதாகும்.' என்றதனால், தலைவி துணிந்தமையையும், ஆனால், அதற்குள்ள தடைகளையும் பாங்கிக்குத் தலைவி எடுத்துக்கூறினாள் என்க. நோய் அறியார் - தாய், முதலியோர். (184)

### பாங்கி தலைவன் இயல்பைப் பழித்தல்

சாலாப் பெருஞ்செல்வர் தம்பா னடந்தெய்த்த தண்டமிழோர்
காலாற் றியகொடை யான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
பாலாற் றியதண் பணிமொழி கொண்டிங்ஙன் பாவிநெஞ்சை
மாலாக்கி வைத்திங் ஙனேமறந் தாரென்ன வன்கண்ணரே

சாலா - சிறப்புக் குணம் இல்லா. எய்த்த - வருந்தியிளைத்த. கலாற்றிய கொடையான் - இனிப் பிறரிடம் நடந்து சென்று வருந்தாதவாறு பொருளளித்தவன். பால் ஆற்றிய - விதி கொடுத்த, பால்போன்ற எனலும் ஆம். தண் பணிமொழி - குளிர்ந்த பணிவுள்ள மொழியுடைய தலைவியை. மாலாக்கி வைத்து - காமத்தால் மயங்கி வருந்த வைத்து. வன்கண்ணர் மறந்தார் - இரக்கமற்ற கொடியவர், என்னை மறந்தார். வன்கண்ணரென்றது தலைவனை. இதுவும் பாங்கி கூற்று.

(பி - ம்.) 3. தம்பணிமொழி. (185)

## தலைவி தலைவன் இயற்பட மொழிதல்

[தலைவி பாங்கிக்குத் தலைவன் நல்லியல்பை அறிவுறுத்துதல்]

கூராழி மாதவன் கோதண்ட ராமன் குரைகடல்சூழ்
பாராளும் வீரப் பரிவீர நாரணன் பண்டெதிர்ந்து
சூராழி வேலெறிந் தோன்றெண்டை மான்கப்பல் சூழ்சிலம்பர்
வாரா ததுவுநம் மேல்வைத்த காதல் மதிநுதலே.

வீரப்பரி வீரன் - வீரப்பரியூர்ந்து போர்புரியும் வீரன்; வீரப்பரி நாரணன்; 125. சூர் - அச்சத்தைத் தரும். ஆழி வேல் எறிந்தோன் - உக்கிர பாண்டியனுய்க் கடல் சுவற வேல் எறிந்தவன். உக்கிர பாண்டியன், முருகப் பெருமான் திருவவதாரமாதலின் முருகனை இப்பாட்டுடைத் தலைவனைக் கொண்டது; இனி, சூர் ஆழி வேல் எறிந்தோன் - ஆழியில் ஒளிந்த சூரனை வேல்கொண்டு அழித்த முருகன், எனலும் ஆம். ஆழி சூர் என இயைக்க. சிலம்பர் வராதது - தலைவன் வராதது. நம்மேல் வைத்த காதல்; வந்து துயருக்கு ஆளாகில், அது நம்மைப் பெரிதும் வருத்துமாதலின், நம்மேல் உள்ள அன்பினால் வாராது இருந்தான் தலைவனெனத் தலைவி பாங்கிக்குக் கூறியது என்க. (186)

## தலைவி நலிபு உரைத்தல்

[தலைவி தான் தலைவனைக் காணுங் கனவினால் அடையும் துயரைப் பாங்கிக்கு உரைத்தல்]

கனவென வொன்றுநல் லாய்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
நினைவென வந்தெய்தி நேர்பட்ட கங்குலை நீடுமென்று
நனவிது வென்று நலந்திளை யாது புலந்தவரோ
டினவனை சோரநின் றேனென்ன மாயஞ்செய் தேகினரே.

நினைவு என - (கனவு) உண்மையில் நினைவே போல. நேர் பட்ட - எதிர்ப்பட்ட. நலம் திளையாது - அவரோடு கூடி மகிழாது. புலந்து - ஊடல்கொண்டு. இன வளை சோர நின்றேன்; வளை சோர்தல், காமவிகாரத்தால் உடல் மெலிந்ததால் என்க. என்னமாயம் செய்து ஏகினரே - ஏதோ மாயஞ்செய்து என்னை விட்டு யான் அறியாதவாறு சென்றுவிட்டார்.; என்ன : இது என்ன ஆச்சரியம் ! என்றும் கொள்ளலாம். ஒப்பு : ' ஓராற்ற லென்கண்ணிமைபொருந்த வவ்வளவில், கூரார்வேன் மாறனென் கை பற்ற - வாரா, நனவென் றெழுந்திருந்தேன் நல்வினையொன் றில்லேன், கனவும் யானிழந்த வாறு' (முத்தொள்ளாயிரம்), இதுவும் தலைவி பாங்கிக்குக் கூறியது. (187)

## தலைவி கவின் அழிவு உரைத்தல்

[தலைவி தான் தலைவனைக் காணாமையால் தன் அழகு அழிந்தமை பாங்கிக்குக் கூறுதல்]

கன்ன லழித்தசொல் லாய்கரு மாணிக்கன் கப்பல்வண்டு
புன்னை மலர்த்துமென் பூந்துறை வாயென்னைப் புல்லியநாள்
என்னை யளித்த நலனின்றியே யென்னை யீன்றெடுத்த
அன்னை யளித்த நலனுமொன் றாக வழிகின்றதே.

அழித்த - சுவையிற் கேடுறச் செய்த. வண்டு புன்னை மலர்த்தும் - வண்டுகள் புன்னைப் போதிற் புகுந்து அவை மலரும்படி உழக்கும். துறைவாய் - கடற்றுறையிடத்து. என்னை அளித்த நலன் - எனக்கு உண்டாக்கிய புதிய அழகு; என்னை, வேற்றுமை மயக்கம். என் ஐ அளித்த - என் தலைவன் அளித்த என்றும் கொள்ளலாம்; ' எனக்கு மாகா தென்னைக்கு முதவாது' (குறுந். 27). அன்னை அளித்த நலன் - அன்னை என்னை வளர்த்தளித்த அழகு. ஒன்றாக - சேர்ந்து. அழிகின்றது - கேடுறுகின்றது. காதலால் நான் பெற்ற அழகும், அன்னை என்னை அழகுற வளர்த்த அழகும் ஒருங்கே அழிந்தன என்றாள் என்க. புதிய வெள்ளம் பழைய வெள்ளத்தையும் கொண்டு போயிற்று என்பது போல. (188)

## தன்றுயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல்

[தலைவி தன் துயரைத் தலைவற்கு உணர்த்துமாறு பாங்கியை வேண்டல்]

சீலமும் பண்பு மறிவுஞ் செறிவுஞ் சிறந்தமுன்னைக்
காலம்வந் தாலன்ன வன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
ஏலமென் பூங்குழ லாயிது நீபண் டினியவஞ்சிக்
கோலமென் பாயில்லை யேகொடி நாண்மலர்க் கொண்டு
[சென்றே.

முன்னைக் காலம் - கிருதயுக காலம்; கிருதயுகத்து மாந்தர்க்குச் சீலம், பண்பு, அறிவு, செறிவு முதலியன சிறந்து ஓங்கி நிற்கும். கருமாணிக்கன் பெருமை கூறப்பட்டது. வன் - வலிமை மிக்க. ஏலம் - மகளிர் குழற்குப் பூசும் சாந்து. வஞ்சிக் கோலம் - இளம் பெண் கோலம். கொடிய நாண்மலர் - பீர்க்கம்பூ. 'நீ கொடி நாண் மலர் கொண்டு சென்று, இது பண்டு வஞ்சிக்கோலம் என்பாய் அல்லையே' என்று தலைவி பாங்கிக்குக் கூறினள் என்க. இச்செய்யுள், 'இன்ன ளாயின ளன்னுத லென்றவர்த், துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே, நன்றுமன் வாழி தோழிநம் படப்பை, நீர்வார் பைம்புதற் கலித்த, மாரிப் பீரத் தலர்சில கொண்டே' என்ற (குறுந். 98) செய்யுளைத் தழுவி வந்தது. (189)

## அலர்பார்த் துற்ற அச்சக் கிளவி

[தலைவி, அயலார் தன்னைப்பற்றிக் கூறும் பழிச்சொற்களால் தனக்குண்டான அச்சத்தைப் பாங்கியிடம் கூறுதல்]

உவருங் கருங்கடல் சூழுல கேழு முறியினெய்யும்
கவருந் திருமணி வாய்க்கரு மாணிக்கன் கப்பல்நன்னாட்
டெவருந் திரண்டு திரண்டிடந் தோறு மிருந்தெனக்கிங்
கிவரன்ப ரென்ப ரலாதுசொல் லாதிவ் வகனகரே.

உவரும் - உவர்க்கும். உறியின் நெய்யும் - உறியில் ஆய்ச்சியர் வைத்திருந்த நெய்யும். உலகேழு முறியினெய்யும் கவர்தல்; ஒப்பு. 'சுருங்குறி வெண்ணெய் தொடுவுண்ட கள்வனை வையம் முற்றும், ஒருங்குற வுண்ட பெருவயிற்றாளனை' (இயற்பா-திருவிருத்தம் 91.). திரு மணி வாய் - அழகிய பவழம் போன்ற வாய். உலகமேழ் உண்ட திருமால் அவை போதாது, கண்ணனாய் வந்து நெய்யுண்டது குறிக்கப்பெற்றது. இவ்வக நகர், எனக்கு இங்கு இவர் அன்பர்

என்னும்; அலராலாது சொல்லாது என இயைக்க. அகநகர் - ஊரார். இவ்வாறு அலரச்சம் கூறியதாயிற்று. (190)

## ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி.

[தலைவி, தலைவன் வரும் வழியின் அருமையைக் கருதித் தான் உற்ற வருத்தத்தைப் பாங்கியிடங் கூறுதல்]

கருங்கற் பகவெறிந் தோன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
மருங்கற்ப மான மதிநுத லாய்வெங்கை வாரணமும்
நெருங்கற் பொழுதுங் கழுதுநங் கேள்வர் நினைவுமிந்த
அருங்கற் சுரமுமெல் லாமென்ன வாமென் றறிந்திலமே.

கரும் கல் பக எறிந்தோன் கருமாணிக்கன் - பெரிய கிரௌஞ்சகிரி என்னும் மலை பிளவுபட வேல் எறிந்த முருகனென்று சொல்லத்தக்க கருமாணிக்கன்; இது, பரசுராமனைக் குறித்ததும் ஆம்; கம்ப. பால: பரசுராமப்: 14. மருங்கு அற்பமான மதிநுதலாய் - இடை அற்பமாக உள்ள பிறைமதி போன்ற நுதல் உடையவளே! மதிநுதல்: தோழி. வெம் கை வாரணம் - அச்சத்தைத் தரும் துதிக்கையுடைய யானை. நெருங்கு அல் பொழுது - அடர்ந்த இருள் கொண்ட இராப்பொழுது. கேள்வர் - தலைவர். அரும் கல் சுரம் - கொடிய கற்கள் அடர்ந்த பாலை நிலம். இது, வழியிடையுள்ள அச்சத்தை எடுத்துரைத்தது. (191)

## தலைவி, நெறி விலக்குவித்தல்

[அத்தகைய அரியநெறி வழியே தலைவன் வருதலைத் தவிர்க்குமாறு தலைவி பாங்கிக்கு உரைத்தல்]

கன்னடர் மண்கவ ருங்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
இன்னா நெறியு மிருளுங் கடந்திகல் வேறுணையாய்
மன்னா வினியெங்கண் மாமலைச் சாரலில் வாரலென்று
சொன்னா லுனக்கு வருந்துன்ப மேது துடியிடையே.

கன்னடர் - கன்னட நாட்டினர். கன்னடர் நாட்டைக் கருமாணிக்கன் வென்று கொண்டமை இதனால் அறியப்படும். இன்னா நெறி - கொடியவழி. இகல் வேல் துணையாய் - எதிர்க்கும் தன் வேலையே துணையாகக் கொண்டு. வாரல் - வாராதேகொள். உனக்கு வரு துன்பம் எது - அதனால் உனக்கு வருவது என்ன துன்பம்? துடியிடை என்றது, தோழியை. இது, தலைவனைக் குறியிடத்து வாராதபடி விலக்கத் தலைவி பாங்கியை வேண்டல். (192)

## குறி விலக்குவித்தல்

களங்கனி யன்னவண் ணன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
வளங்கனி சார லிருவியெல் லாமறு காற்கிளைத்த
இளங்கனி வாய்ப்புள் ளினங்கடி வீர்கள்சென் றின்ன [மென்னோ
உளங்கனி காதல்தந் தாரறி யாரிங் கிவையொன்றுமே.

களங்கனி - களாப்பழம்; வண்ணத்தைக் குறித்தது; 'காக்கையிற் கரியது களம்பழம்' என்றதனால். வளம் கனி சாரல்- வளம் மிகப் பெற்ற மலைச்சாரல். இருவி - அரிதாள், 137. மறுகால் கிளைத்த - திரும்பவும் கிளைத்துள்ளனவான. புள் இனம் - பறவைக் கூட்டம். பெற்றோர்கள் தன்னைப் புனத்துக்கு அனுப்பி விட்டமையால், குறி பயன்படாதாயிற்று என்பது குறிப்பு. ஒப்பு. தஞ்சை வாணன்-224.) (193)

## வெறிவிலக்குவித்தல்.

[வெறியாடுதலை விலக்கும்படி பாங்கிக்குத் தலைவி கூறுதல்]

நீடுந் தடங்கண் முகங்கா லகங்கை நிறங்கமலக்
காடு மலர்ந்தகண் ணன்தரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
கோடுந் தடங்குறி கொள்ளாமல் வேலன் குருதிச்செந்தீ
ஆடும் பெருங்களத் தேவரி லோவெங்க ளன்பருக்கே.

கண், முகம், கால், அகங்கை, நிறம் - இவை கமலக்காடு மலர்ந்த போன்ற கண்ணபிரான் போன்றவன். 'எங்கள் அன்பருக்கே கோடும் தடம் குறிகொள்ளாமல், வேலன் குருதிச் செந்தீ ஆடும் பெருங்களத்தே வரிலோ'—என இயைக்க; அன்பருக்கே கோடும் தடம் குறி—தலைவரை அடையக்கொண்ட குறியிடம். கொள்ளாமல் - யான் அடையாமல். வரிலோ என்றமை, வந்தால் என்னாகுமோ என்று அஞ்சியது. இது, தலைவி பாங்கியிடம் கூறி வெறிவிலக்கியது. வேலன் - வெறியாடுவான். குருதிச் செந்தீ ஆடுங்களம் - ஆட்டைவெட்டி அதன் உதிரத்தைத் தீயிலிட்டு வெறியாடும் இடம். (194)

## பிறர்விலக்குவித்தல்

[தன்னை மணம்புரிய வரும் பிறரை உண்மை கூறி விலக்கும்படி தலைவி பாங்கிக்குக் கூறல்]

கார்க்குன் றெதிர்களிற் ருன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
கூர்க்கின்ற வேல்விழிக் கொம்பரன் ஞரிரு கொங்கையின்மேல்
போர்க்கின்ற பைம்பொன் புலப்படு மாறு பொலிமறுகால்
ஆர்க்கின் றதுபிறர்க் கோவவற் கோவிவ் வணிமுரசே.

கூர்க்கின்ற - கூர்மையாயுள்ள. போர்க்கின்ற பைம்பொன் - பொன் போர்த்தாற் போலப் பரவியுள்ள பசலைநோய். அவற்கோ - தலைவன் பொருட்டோ. பிறர்க்கோ - மணம் கேட்க வந்த பிறர் பொருட்டோ. முரசு ஆர்க்கின்றது - முரசு முழங்குகின்றது. (195)

## ஏறுதழுவல்

[தலைவிக்கு மணம் நிகழ்த்துதற்கு ஏறு ஒன்றை வெளிவிட்டு அதனைத் தழுவிப் பிடிப்போர்க்கே தலைவி உரியள் என்று தமர் கருதியுள்ளதைப் பாங்கி தலைவிக்குக் கூறுதல்]

கடைக்கொம் பணிதரு கோளகை நீள்களிற் ருன்றுளவத்
தொடைக்கொம்பு சேர்புயன் றெண்டையர் கோன்கப்பற் [ரேகையன்ஞர்
இடைக்கொம்பு தாங்கு மிருகொம் பையண்ட ரீர்ந்துவிட்ட
விடைக்கொம் பிவையினி மேற்றெரி யாது விளைவனவே.

கொம்பு கடை அணிதரு கோளகை நீள் களிற்ருன் - என இயைக்க; கோளகை - கிம்புரி; (பிங்களம்). துளவ தொடை புயன், கொம்பு சேர் புயன் எனக் கூட்டுக. கொம்பு - சயமகள். கப்பல் - கப்பல் நகரிலுள்ள. தோகை அன்ஞர் இடை கொம்பு தாங்கும் இரு கொம்பை - மயில் போன்றவளும், கொம்பு போன்ற இடைதாங்கும் இரு யானைக் கொம்புகளாகிய தனங்களையுடைய வளுமான தலைவியைக் கருதி. அண்டர் - இடையர். ஈர்தல் - சீவிக் கூராக்குதல். விடைக்கொம்பு - எருதுகளின் கொம்பு. இஃது ஏறு தழுவுதல் என்ற ஆயர் மரபைக் கூறியது. இதனைப் பாங்கி தலைவனிடம் கூறித் தலைவியை வரைந்துகொள்ள வேண்டிக் கூறியதாகவுங் கொள்ளலாம். (196)

### குரவரையெதிர்கொள விடுத்தல்

[தலைவன் தன்னை மணம்புரியுமாறு ஏற்றுக்கொள்ளத் தன் தாய்தந்தையர்க்குக் கூறும்படி தலைவி பாங்கிக்குக் கூறுதல்]

காமா நிதியன்ன கைக்கரு மாணிக்கன் கப்பலந்தண்
பூமா நறுங்குழற் பொற்றொடி யாயப் புழைத்தடக்கை
மாமா னவரெதிர் வந்துயிர் மீட்ட வலம்புனைவேல்
கோமான் வரைவெதிர் கோடல்கொள் வாய்நங் குரவருக்கே.

கா - கற்பகம். மா நிதி - சங்கநிதி, பதுமநிதியாகிய பெரும் செல்வங்கள். தண் பூ மா நறும் குழல் பொற்றொடியாய் - என்றது தோழியை. புழை தட கைமா மான்-யானை; மான், விலங்குகளின் பொதுப் பெயர்; இங்கு யானையைக் குறித்தது. இது, ஒரு யானைமுன் வந்து தலைவன் தன் உயிரைக் காப்பாற்றியதாக ஒரு செய்தியைப் படைத்துக்கொண்டு கூறியதாம். ஒப்பு: 'களிற்றுருவாய் நம்மைத் தேடிவந்த கூற்றம் கடிந்த நம் கோமான்' (அம்பிகாபதிக். 258). வலம்புனை வேல் கோமான்-வெற்றி புனைந்த வேலேந்திய கோமானாகிய தலைவனை. நம் குரவருக்கே - நம் பெரியோராகிய தந்தை முதலியவரிடத்து. வரைவு எதிர் கோடல் கொள்வாய் - என்னைத் தலைவர் வரைந்து கொள்ளுமாறு கேட்கும்படி வேண்டிக் கொள்வாயாக!.

---

## 12. வரைவுகடாதல்

(தலைவியை மணஞ்செய்துகொள்ளுமாறு பாங்கி தலைவனிடம் வற்புறுத்திக் கூறுதல்)

### வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல்

[செவிலிக்கு மறைத்தமை பாங்கி தலைவர்க்குக் கூறுதல்]

சுளையார் பொழிற்றுவ ரைத்தொண்டை மான்கப்பல் சூழ்துறைவா
இளையாள் வருந்துவ தென்னையென் றுளன்னை யாமிருந்து
விளையாடு சிற்றிலை வெண்டலைத் தெண்டிரை வேலையெற்றும்
வளையா லழித்ததென் றேனென்செய் வாள்மதி வாணுதலே.

சுளை ஆர் - பலாப்பழங்கள் மிகுந்த. இளையாள் - தலைவி. அன்னை - செவிலி. வெண்தலை - வெண்மையான நுரையைத் தலையிற் கொண்ட. எற்றும் - மோதுகின்ற. வளை - சங்கு. வாள் மதி வாணுதல் - ஒளிதங்கிய பிறை போன்ற நெற்றியையுடைய

தலைவி. ஒப்பு : கலித்தொகை. குறிஞ்சி: 15. இவ்வாறு தலைவற்குக் கூறிப் பாங்கி வரைவு கடாயது.

(பி - ம்.) 4. தென்றுனென்செய். (198)

அருமறை யெங்கு மறிந்தமை கூறல்

[களவொழுக்கம் யாரும் அறிந்து கொண்டமையைப் பாங்கி தலைவற் குரைத்தல்]

சுருள்போ தணிகுழற் றோகையர் வேள்தொண்டை மான் [சுருதிப்
பொருள்போ லெவர்க்கும் புகல்கின்ற வாய்மையன் போதருந்தி
மருள்போ தளிமுரல் வண்கப்ப லாய்வல்லி மீதுவைத்த
அருள்போல் முடிவி லவன்புகழ் போலெங்கு மாயினவே.

போது அணி சுருள் குழல் என இமைக்க. தோகையர்க்காதன் மகளிர். வாய்மைக்குச் சுருதி. மருள்போது - மயக்கம் கொள்ளும்பொழுது. அளி - வண்டு. கப்பலாய் - தலைவனே! அருள் - தலைவன் தலைவிபால் கொண்ட அருள் - காதல். போல், அசை. அவன் - நாட்டுடைத் தலைவனை கருமாணிக்கன். எங்கும் ஆயின: அருமறை வெளிப்பட்டு எங்கும் பரந்தது; தலைவன் அருள், அலராகி எங்கும் பரந்தது என்னும் குறிப்பு. (199)

தாயறிவுறுத்கல்

[தாயறிந்த தன்மையைப் பாங்கி தலைவனுக்கு உரைத்தல்]

வெடிக்குங் குரவமு மென்மலர்க் காந்தளும் வேங்கையும் [பொன்
முடிக்குங் கடிமலர் வேறுமுண் டோவென்று முத்தணிபொற்
றொடிக்குங் குமப்புயத் தான்றொண்டை மான்கப்பல் [சூழ்சிலம்பில்
வடிக்குங் கிளிமொழி யாளன்னை கூறினள் மன்னவனே.

வெடிக்கும் - முகையாய் இருப்பது வெடித்து மலரும். குரவம் - குராமலர். வேங்கை - வேங்கைமலர். முத்தணி பொற்றொடி குங்குமப் புயத்தான் - முத்துக்களால் அலங்கரிக்கப்பெற்ற பொன் வளையல்களை யணிந்த காதன் மகளிர் பூசியிருந்த குங்குமக் குழம்பு படிந்த புயங்களையுடைய கருமாணிக்கன் எனக் கொள்க. வடிக்கும் - தெளிவாய்ப் பேசும். மன்னவனே என்றது தலைவனை. கடிமலர் வேறுமுண்டாவென்று, கூறினள் அன்னை என இயைக்க.

கிளி மொழியாள் என்றது தலைவியை. குரவம் முதலிய இயற்கை மலர்களால் வரும் மணமன்றி, தலைவியிடம் வேற்றுமணங் கண்டு தாய் வினவினமை கூறப்பெற்றது. (200)

### வெறியச்சுறுத்தல்

[சுற்றத்தார் வெறியாட்டயர்தலைக் கூறிப் பாங்கி தலைவனுக்கு அச்சம் உண்டாக்குதல்]

வெந்தேறு தீயன்ன வேட்கைநின் மேல்வைத்த மெல்லியலைச்
சந்தேறு சாரற் றடமலை நாடநின் றண்ணளிபோல்
கந்தேறு திண்புயத் தான்கரு மாணிக்கன் கப்பன்மன்றில்
வந்தேறு மம்மட வார்முகங் காணவும் வாழ்வித்ததே.

தட மலை நாட! மெல்லியலை மன்று வந்தேறவும், மடவார் கண் காணவும், நின் தண்ணளி வாழ்வித்தது என்றியைக்க. வெந்து ஏறு தீ - எரித்து மேற்படரும் தீ. சந்து ஏறு சாரல் - சந்தன மரங்கள் அடர்ந்துயர்ந்த மலைச்சாரல். கந்து ஏறு திண்புயம் - கந்து போலுயர்ந்த திண்புயம்; கந்து - கட்டுத்தறி. இங்கு ஏறு என்ற சொல் உவமவாசகமும் ஆம். மன்று - பொது இடம்; வெறிக்களமும் ஆம். வந்தேறல் - வந்தடைதல். அம்மடவார் - பிறபெண்கள். முகம் காணுதல் - தலைவி மாறுபாடடைந்த முகத்தைக் காணுதல். உன் மீதுள்ள காதலால் தலைவி வெறிக்களம ஏறவும், ஊரார் நகைக்கவும் ஆயிற்று என்பது பொருள். வாழ்வித்ததே என்றது, வஞ்சப் புகழ்ச்சி. (201)

### பிறர்வரைவுரைத்தல்

[தலைவியை அயலார் மணஞ்செய்து கொள்ள முற்பட்ட செய்தியைப் பாங்கி தலைவனுக்குக் கூறுதல்]

அரும்புங் குவளை யலர்கின்ற செவ்வி யகத்துறைதேன்
விரும்புஞ் சுரும்புகள் வெள்ளமன் ருேவிளை செந்நெலும்பைங்
கரும்புஞ் செறிகப்ப லான்கரு மாணிக்கன் காசினியேழ்
தரும்பங் கயவுந்தி யான்வையை நாடன் றமிழ்வெற்பனே.

செவ்வி - அழகு. தரும் - உண்டாக்கிய. பங்கய உந்தியான் - உந்தித் தாமரையையுடைய திருமால் போன்றவன். தமிழ் வெற்பு - மலயமலை; தமிழ் வெற்பன் என்றது தலைவனை. தேன் விரும்புஞ் சுரும்புகள் வெள்ள மன்ருே என்றதால், தேனைச் சுரும்புகள் விரும்புவது போலத் தலைவியைப் பலர் வரைய விரும்புகின்றனர் என்று பாங்கி தலைவனுக்குக் கூறி அவன் விரைவில் வரைதலைத் தூண்டியது. (202)

### வரைவெதிர்வுணர்த்தல்

[நீ தலைவியை மணந்துகொள்ளுதலை எம்மவர் ஏற்றுக்கொள்வரெனப் பாங்கி தலைவனுக்கு உணர்த்துதல்]

கல்வியுஞ் செல்வமும் வான்றோய் குலனுங் கவினுங்கண்டென்
செல்வியுங் கேளிரு மன்னையுந் தந்தையுஞ் சிந்தையினால்
நல்விருந் தாற்ற நயந்தன ரான்முன்னை நாவலர்தம்
சொல்விருந் தாற்றவல் லான்றெண்டை மான்வண்
[டுவரையிலே.

வான் தோய் குலம் - புகழால் மிகச் சிறப்புற்ற குலம். 'வான்றோய் குடி' (நாலடி. குடிப். 2) என்றாற்போல இலக்கணை வழக்கு. கவின் - அழகு. என் செல்வி - தலைவி. முன்னை நாவலர் சொல் விருந்து ஆற்ற வல்லான் - சபையில், முன்னிருக்கவல்ல நாவலர் சொல் விருந்தை நடத்தி மகிழும் கல்விச் சிறப்புடையவன். நல் விருந்து ஆற்ற நயந்தனர் - உன்னை அழைத்து நல்ல விருந்து செய்து உபசரிக்க விரும்பினர். கல்வியும் செல்வமும் குலனும் கவினும் என்றது, வரைந்து கொள்ளும் தலைவனுக்கு உள்ள அருஞ் சிறப்புக்கள், 'இருவருக்கும் இவை பொருந்த அமைந்திருத்தலைக் கண்டேன்' என்னலும் ஆம். (203)

### வரைவு நாளுணர்த்தல்

[மணஞ்செய்து கொள்வதற்கு உரியநாள் நெருங்கியுள்ளதைப் பாங்கி தலைவனுக்குக் கூறுதல்]

கனந்தங்கு வண்கவி கைக்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
புனந்தங்கு வேங்கைபொன் பூத்தன திங்களும் பூரணமாம்
மனந்தங்கு வல்லி மலர்முகம் போல மயிலொடும்வந்
தினந்தங்கு சாரல்வெற் பாவென் கொலோவினி
[யெண்ணுவதே.

கனம் - மேகம். கவி கை - கவித்து அபயம் அளிக்கும் கை. புனம் - தினைப் புனம். வேங்கை பொன் பூத்தன - வேங்கை மரம் பொன் போல் மலர்ந்தன. மனம் தங்கு வல்லி மலர்முகம் போலும் திங்களும் பூரணமாம் என இயைக்க. திங்களும் பூரணம் ஆம் - சந்திரன் விளக்கமாக இருந்தது; என்றது, சந்திரன் பரிவேடங் கொண்டதைச் சுட்டியது; திருவாரூர்க் கோவை 271ஆம் செய்யுளுக்கு ஸ்ரீ ஐயரவர்கள் எழுதிய குறிப்புரையைக் காண்க; 'வேங்

கையும் ஒள்ளிணர் விரிந்தன, நெடுவெண் டிங்களு மூர்கொண் டன்றே' (அகநா. 2) என்றதையும் நோக்குக; முழுமதி நாளெனலும் ஆம். வேங்கை மலர்ந்ததும், மதி பூரணம் கொண்டதும் வரைவு நாளைக் குறிப்பிட்டபடி. மாது இனம் - மகளிர் கூட்டம். என் கொலோ இனி எண்ணுவதே -வேறு கருதுவதற்கு இடமில்லை. (204)

## தலைமகளறிவு அறிவுறுத்தல்

[தலைவியின் முதிர்வைப் பாங்கி தலைவனுக்குக் கூறி வரைவு வற்புறுத்தல்]

கார்க்குஞ் சரம்வழங் குங்கரு மாணிக்கன் கப்பல்வெற்பா
ஆர்க்குந் தெரிவை யறிவின ளாயன்னை தான்முதலாப்
பார்க்கின்ற மாதரும் பண்பின்மை கூறும் பழிக்குநொந்து
போர்க்குந் துகில்கை விடாண்மெய் விடாதபொன் பூசுதற்கே.

கார் குஞ்சரம் வழங்கும்- இரவோர்க்குக் கரிய யானைகளைக் கொடுக்கும். வெற்பா என்றது, தலைவனை. ஆர்க்கும் தெரிவை - அழகு சிறக்கும் தெரிவை; தலைவி. தெரிவை ஆர்க்கும் அறிவினள், என்று கொண்டு, தலைவி, மகளிர் யாவரினும் அறிவு மிக்கவள் எனலும் ஆம். அன்னை முதல் மாதரும் பண்பின்மை கூறும்; பண்பின்மை கூறுதல் - தலைவியை இழிவுபடுத்திக் கூறுதல்; அலர் தூற்றல். மெய் விடாத பொன் பூசுதற்கு - தன்னுடலை விடாது பசலை நோய் கொண்டதற்கு; பசலை நோய் கொண்டது காம மிகுதியால். போர்க்கும் துகில் கைவிடாள் - தான் போர்த்துள்ள துகிலை விடாது கொண்டிருக்கின்றாள். தலைவி, பிறர் கூறும் பழிக்கு நொந்தும், தன் உடல் வேற்றுமை புலப்படாதபடி, போர்த்த தன் துகிலைக் கைவிடாதிருந்தாள்' என்று கூறித் தலைவியின் அறிவைப் பாங்கி தலைவனுக்கு அறிவித்தனள். (205)

## குறிபெயர்த்திடுதல்

[பாங்கி குறியிடம் மாற்றிக் கொள்ளுமாறு தலைவனிடங் கூறுதல்]

காயு மதகளிற் றுன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பா
வேயுமிழ் முத்தம் விளங்குதண் சாரல் விரும்பிமுன்னே
தாயர் வளர்த்த தனிமா தவியிது தவ்வையெனக்
காய தலத்திலன் றேயன்பு கூர்நகை யாடுவதே.

காயும் - கோபிக்கும். வேய் உமிழ் முத்தம் - மூங்கில் முற்றிச் சிந்தும் முத்து. சாரல் - சாரலிலே. முன்னே - முன்பே. 'மாதவி - குருக்கத்திக் கொடி. இது, எனக்கு ஆய தவ்வை - (என்னை வளர்த்தற்கு முன்னே வளர்க்கப்பட்டமையால்) இக்கொடி எனக்கு அக்காள் முறையாகும். அன்புகூர் நகை ஆடுவது—காதலொழுக்கம் புரிவது. ஆய தலத்தில் அன்று - அவ்வாறு தமக்கை இருக்கும் இடத்தில் தகாது. 'எனக்கு' என்றது, தன்னையும் தலைவியையும் ஒன்றாகக் கருதியதால் என்க. இவ்வாறு கூறியது, குறியிடம் மாற்ற. (206)

## பகல் வருவானை இரவு வருகென்றல்

[வருகென்றல் — வருக எனக் கூறுதல்]

சூதாம் பணைமுலை யாள்தொண்டை யாதிமண் பண்டளந்த
பாதாம் புயன்கப்பல் சூழ்பனி வாவியிற் பாயல்கங்குல்
போதாம் பனிமல ரெய்திப் பனிக்கதிர் புல்லுகைக்குச்
சேதாம்ப லென்ன தவஞ்செய்த தோவென்று செப்பினளே.

சூது - சூதாடும் வட்டுக்காய்; சூது, தனத்துக்கு உவமை. மண் பண்டு அளந்த பாதாம்புயன் - திரிவிக்கிரமனாய் முன் உலகளந்த திருமால் போன்றவன் என்ற குறிப்பு. தொண்டை ஆதி - தொண்டையர் கோன். பனி வாவியின் பாயல் - குளிர்ந்த தடாகம் என்ற பாயலிலே. கங்குல் போது ஆம் - இரவில் மலரும். பனி மலர் எய்தி - குளிர்ந்த மலர்ப்படுக்கையை அடைந்து. பனி கதிர் - மதியின் குளிர்ந்த கிரணங்களை. புல்லுதல் - தழுவுதல். சேதாம்பல் - செவ்வல்லி. 'சூதாம் பணை முலையாள், கதிர் புல்லுகைக்குச் சேதாம்பல் என்ன தவம் செய்ததோ என்று செப்பினளே' என இயைக்க. இக்குறிப்பால், பகல் வரும் தலைவனை இரவுவரக் குறிப்பிட்டது. (207)

## இரவு வருவானைப் பகல் வருகென்றல்

முடித்தாம மேவு முகுண்முலை காலை முகமலரும்
கடித்தா மரைகண்டு கைதவ மாயினள் காவலர்பொன்
தொடித்தா மரைகுவிக் குந்தொண்டை மான்கப்பல் சூழ்பொழிற்பொன்
அடித்தா மரையண்ண லேயெண்ண மேதவ் வணங்கினுக்கே.

முடி தாமம் மேவும் முகும் முலை - தொடுக்கப்பட்ட மாலை தழுவி அரும்பிய இள முலைகளையுடைய தலைவி ; இஃது அன்மொழித் தொகை. காலை - காலையில். முகம் மலரும் கடி தாமரை கண்டு - (கதிரவனைக் கண்டு) முகம் மலரும் மணம் பொருந்திய தாமரை மலரைக் கண்டு. கைதவம் ஆயினள் - தலைவி வருந்தினாள் ; கைதவ மானமை, தானும் அம்மலரைப் போல, காலையிலே தலைவனைக் கண்டு மலர முடியாமையால். காவலர் பொற்றொடி தாமரை - பிற அரசர்களின் பொன் வளைகள் அணிந்த தாமரை போன்ற கைகள். குவித்தல் - கூப்பி வணங்குதல். பொன் அடித்தாமரை அண்ணலே என்றது, தலைவனை. எண்ணம் அ அணங்கினுக்கு ஏது - 'நீ பகலில் வரவேண்டுமென்ற எண்ணமின்றி வேறு எண்ணம் அத் தலைவிக்கு ஏது?' இவ்வாறு கூறித் தலைவனைப் பாங்கி பகல் வரவேண்டினாள் என்க. (208)

## இரவும் பகலும் வருகென்றல்

செந்தா மரையுங் குமுதமுஞ் செய்தவஞ் செப்பிமின்பால்
வந்தால் வருவது தீமையுண் டோமழு வேந்துசெங்கைக்
கந்தா ஞெழித்தரு ளுங்கரு மாணிக்கன் கற்றவர்க்குத்
தந்தா சலநல்கு வோன்கப்பல் சூழுந் தமிழ்வெற்பரே.

மின் பால் - தலைவியினிடம். மழு ஏந்து செங்கை கம் தான் ஒழித்தருளும் - மழுவேந்திய சிவபிரான் செங்கை விட்டு நீங்கா திருந்த பிரமன் கபாலம் நீங்க அருள்செய்த (திருமால் போன்ற) கரு மாணிக்கன். கம் - தலை (ஓடு). தந்த அசலம் - யானை. தமிழ் வெற்பர் என்றது, தலைவனை. தமிழ் வெற்பு - பொதிய மலை. செந்தாமரை பகலில் மலரும் ; குமுதம் இரவில் மலரும் ; ஆதலின், பகல் இரவு இருபோதும் வருகெனத் தலைவனுக்குப் பாங்கி குறிப்பிட்டனள் என்பது. (209)

(பி - ம்.) 1. சொல்லி மின்பால், 2. கந்தா னழித்தான்,

## வரைவு கடாதல்

[பாங்கி, தலைவன் இரவில் சுரத்தின் வழியே வருதலை நினைந்து தலைவி வருந்துவதாகக் கூறி அவன் தலைவியை வரைந்து கொள்ளுமாறு வேண்டல்]

வரமா தரிக்கும் மடந்தையர் போற்றும் வனசைவளைக்
கரமா தரிக்கும் புயன்கரு மாணிக்கன் கப்பலென்னும்
புரமா தரிக்கும் புகையிருள் கூர்திண் பொருப்பி னில்வெஞ்
சுரமா தரிக்குமென் னுவண்ண லேவஞ்சி யஞ்சுவதே.

வனசை - தாமரையில் உதித்த திருமகள். வளை கரம் ஆதரிக்கும் - வளையணிந்த கைகளால் தழுவப்பெறும். புயன் - தோள்களை யுடையவனுன. இருள் கூர் திண் பொருப்பினில் - இருட்டு மிகும் வலிய மலையை யடுத்த. வெம் சுரம் ஆதரிக்கும் என்னு - கொடும் பாலை நில வழியைத் தலைவன் ஆதரித்து வரக்கூடுமே யென்று. வஞ்சி - தலைவி. அஞ்சுவது - அஞ்சுகின்றுள் ஆகும். ஏ : அசை. இது, வரைவு வேண்டிய குறிப்பைப் புலப்படுத்தியது. (210)

## உரவோனூடு முருங் குலனு மரபும் புகழும் வாய்மையுங் கூறல்

[பாங்கி, தலைவன் ஊர் குலம் முதலியவற்றைப் பாராட்டிக் கூறித் தலைவியை மணந்துகொள்ள வேண்டுதல்]

நன்னுடு மூரு நலனுங் குலனுநின் னல்லிசையும்
இன்னு தெனும்பழி யேற்கவன் றேயின் றியலிசைதேர்
சொன்னு வலர்புகழ் தொண்டையர் கோன்கப்பல் சூழ்சிலம்பின்
மன்னு மடந்தையை நீவரை யாது வருத்துவதே.

இசை - கீர்த்தி. இன்னுது - விரும்பத் தகாதவை. இயல் இசை தேர் சொல் நாவலர் - இயல் இசை கூடிய சொற்களில் தேர்ச்சி யுற்ற நாவலர். மன்னு என்றது தலைவனை. வரையாது வருத்துவது - மணந்து கொள்ளாமல் துன்பத்திற் குள்ளாக்குவது; ஏனே என்று பாங்கி கூறியது. வருத்துவது, உன் ஊர் முதலியவற்றிற்குப் பொருந்தாது என்னும் பழியைச் சுமத்தும் என்று கூறி வரைவு கடாயது என்க. (211)

(பி - ம்.) 2. பழி சூழ ; லிசைத்தேன்.
4. வரையாமல்.

காவன் மிகவுரைத்தல்

[பாங்கி, காவலின் மிகுதியைத் தலைவனுக்கு எடுத்துக் கூறுதல்]

கறங்காழி மண்புரக் குங்கரு மாணிக்கன் கப்பனகர்ப்
புறங்கா வலருண்டு வெண்ணில வுண்டு புலரளவும்
உறங்காத வன்னையுண் டேலினி வேண்டுவ தோரிரவும்
அறங்காவ லெம்மையும் நீயணு காம லகலுவதே.

கறங்கு ஆழி - முழங்கும் கடல். நகர் புறங் காவலர் - நகரைச் சுற்றிக் காவல் புரிவோர். புலர் அளவும் - பொழுது விடியும் வரையும், நீ ஓர் இரவும் அணுகாமல் அகலுவதே அறம் என்று இயைக்க. அறம் காவல் - நீ அறத்தைப் பாதுகாத்தல் ஆம் என்றும் கூறலாம்; இப்பொருட்கு 'ஆம்' என்ற ஒருசொல்லை வருவிக்க. அறம் - இல்லறம். இவ்வாறு கூறி வரைவு கடாவினாள் என்க. (212)

காமமிகவுரைத்தல்

[தலைவியின் காம மிகுதியைப் பாங்கி தலைவனுக்குக் கூறுதல்]

என்னையன் பாலினி யெண்ணுதி யேலிய லோர்தெரிந்த
சொன்னயந் தேரவல் லான்றொண்டை மான்கப்பற் றோகை
கன்னையுஞ் சேரியு மூருமெல் லாமலர் தூற்றியதால் [யன்னார்க்
பின்னையும் வேட்கை பிறப்பதல் லாது மறப்பதன்றே.

இயலோர் - இயல் நூல் அறிவிற் சிறந்த புலவர். தோகையன்னார் - தலைவி. சேரி - ஊரின் பகுதி. பின்னையும் வேட்கை பிறப்பதல்லாது மறப்பது அன்று - இவ்விடையூறுகளால் வேட்கை பின்னும் அதிகம் தோன்றுமே அன்றித் தணியாது. மறப்பது - தலைவி வேட்கையை மறந்து நிற்பது. (213)

கனவு நலிவுரைத்தல்

[கனவால் தலைவி வருந்துவதைப் பாங்கி தலைவனுக்கு உரைத்தல்]

புல்லவும் புல்லிப் புடைபெயர் காலைப் புலந்துசில
சொல்லவுஞ் சொல்லறி யுந்தொண்டை மான்கப்பற் றோகை
[யன்னாள்
பல்லவ மன்னமென் பாதம் பணிந்துமென் பாயலின்மேல்
வெல்லவுங் கண்ட கனவைமெய் யாக விழித்தனளே.

புடை பெயர் காலை - பக்கத்தில் சிறிது அகன்றபோது. புலந்து ஊடல் கொண்டு. சொல்லறியும் தொண்டைமான் கப்பல் தோகை அன்னாள், கண்ட கனவை மெய்யாக எண்ணி விழித்தனள் என்க. தோகை அன்னாள் - தலைவி. புல்லவும், புலந்து சில சொல்லவும், பணிந்து வெல்லவும் கண்ட கனு என இயைக்க. பல்லவம் அன்ன மென் பாதம் பணிந்து - தளிர் போன்ற மென்மையான பாதங்களைத் (தலைவன்) பணிந்து. மென்பாயலின் மேல் - மெல்லிய சயனத்தின் மீது. வெல்லவும் - தலைவன்வெல்லவும். கண்ட கனவு - தலைவி கண்ட கனவு. ஊடலில் தலைவன் தலைவியின் பாதம் பணிதல்; 'சில்லரிக் கிண்கிணிமென் தெய்வ மலர்ச் சீறடியைத் தொல்லை மணிமுடியிற் சூடினான்' (நள. கலிதொடர்: 22;) 'இம்மென்றளி முரல்பாயலி லின்பத்தை வளர்த்தும், பொம்மென்பரி புரநாண் மலர் பொற்சென்னியில் வைத்தும்' (வி. பா. அருச்சுனன்றீர்த்தயாத். 9.) கண்ட கனவை மெய்யாகக் கொண்டு விழித்து, நலிந்தனள் என்று பாங்கி கூறி வரைவு கடாயினாள் என்க. (214)

(பி - ம்.) 2. தோகை யன்னாய். 3. பாயலினான்.
4. விழித்திலசே.

## கவினழிபுரைத்தல்

[தலைவியின் அழகு அழிவதைப் பாங்கி தலைவனுக்கு உரைத்தல்]

படுக்கும் பணியணைப் பாலாழி மாதவன் பாவலவர்
தொடுக்குந் தமிழலங் கற்றொண்டை வேந்தன் றுவரைவெற்பா
வடுக்கும் வடுவகி ரன்னகண் ணாள்வண்ணம் வந்துநின்னை
அடுக்குந் தொடர்பென்ன வேநாளு நாளு மழிகின்றதே.

பணி அணை - அரவணை. பால் ஆழி - பாற்கடல். தமிழ் அலங்கல் - தமிழ்ப் பாடல்களால் ஆன மாலை; அதாவது, பாமாலை. வடுக்கும் வடு - பிஞ்சாகத் தோன்றும் மாவடு. வகிர் - பிளவு; மாவடுவின் பிளவு மகளிர் கண்ணுக்கு உவமை. வண்ணம் - அழகு; நிறமும் ஆம். நாளுநாளும் - நாள்தோறும். தொடர்பு என்ன, வண்ணம் அழிகின்றது என்று கூட்டுக. (215)

சிறைப்புறம்

[தலைவி காமத்திறத்தை அவன் கேட்கும்படி பாங்கி மறைவில் கூறுதல்]

கால்கொண் டொழிய வழிதெரி யாதமைக் கங்குலின்கண்
மால்கொண்ட வன்பர் வருநெறி யாற்றினும் வண்டரளம்
சூல்கொண்ட சங்கு சொரிநீர்த் துவரைமன் றெண்டையர் [கோன்
வேல்கொண் டனையகண் ணாள்கொண்ட காதலை மீட்பரிதே.

கால் கொண்டு ஒழிய - கால்களைக் கொண்டு நடந்து செல்ல. வழி தெரியாத - வழி அறியமுடியாத. மை கங்குலின் கண் - மை போன்ற கரிய இருட்டினிடத்து. மால் கொண்ட அன்பர் - விருப்பங்கொண்ட தலைவர்; விருப்பம் தலைவிபாற் கொண்டது. ஆற்றினும் - பொறுத்துக் கொண்டாலும். சூல்கொண்ட சங்கு வண் தரளம் சொரி என இயைக்க. வேல்கொண்டு அனைய - வேலைப் போன்ற; கொண்டு: உவம வாசகம். கொண்ட காதல் - தலைவன்பாற் கொண்ட காதல். (216)

---

## 13. ஒருவழித் தணத்தல்

(தலைவன் தலைவியை ஒருவாறு பிரிதல்)

தன்பதிக் ககற்சி தலைவன் சாற்றல்

[தலைவன் தன்னூருக்குச் செல்வதைப் பாங்கி மூலம் தலைவிக்கு அறிவித்தல்]

இன்றே வருதல் சிறுகால் வருதற் கிடையிடையே
சென்றே முடிக்குங் குறைசிறி துண்டு சிலம்பிடைமான்
கன்றே கலைதெரி யுங்கரு மாணிக்கன் கப்பலொண்பொன்
குன்றே யனைய வனமுலை மாதர்க்குக் கூறிலின்றே.

மான் கன்றே - மான் கன்று போன்றவளே; இது தலைவன் பாங்கியை நோக்கிக் கூறியது. கலை தெரியும் கருமாணிக்கன் - பல கலைகளையும் அறிந்த கருமாணிக்கன். சிலம்பிடை மான் கன்றே கலை தெரியும் என்று கூட்டி, நாட்டின் கலைவளத்தைக் கூறினார் என்றும் கொள்ளலாம். ஒள் பொன் குன்றே அனைய - ஒளிதங்கிய பொற்குன்றே போன்ற. வனமுலை மாதர் என்றது - தலைவியை; வனம் - அழகு. கூறிலின்று - கூறுவாயாக. இன்று, ஏ: அசைகள்.

சிறுகால் வருதற்கு இடையே சென்றே முடிக்கும்குறை சிறிது உண்டு; (அதனை முடித்துக் கொண்டு) இன்றே வருதல் என்றியைக்க. (217)

(பி - ம்.) 4. வளமுலை; கூறி நின்றே.

## பாங்கி விலக்கு

[பாங்கி தலைவன் செல்லுதலை விலக்குதல்]

உமக்கு முடிக்குங் குறையுள தாகலி னுண்மைசொல்லி
எமக்கு முடிக்க வரிதுவெற் பாவெழு பாரரவம்
சுமக்கு முடிக்குத வுந்தொண்டை மான்பண்டு பஞ்சவர்கள்
தமக்கு முடித்தருள் தாளுடை யான்கப்பற் றையலுக்கே.

எழு பார் அரவம் சுமக்கும் முடிக்கு உதவும் - எழு உலகங்களைச் சுமக்கும் ஆதிசேடனுக்குத் தான் புவி புரப்பதால், அதன் பளுவைக் குறைத்து உதவும். வெற்பா; என்றது தலைவனை. பஞ்சவர் - பாண்டவர் ஐவர். முடியாகச் சூடிக்கொள்ளும் திருவடியுடைய கண்ணபிரான் ஆன கருமாணிக்கன். இது, தலைவிக்கு உண்மை கூறி உன் பிரிவுக்கு உடன்படச் செய்தல் தனக்கு அரிதென்று பாங்கி கூறிச் செலவு விலக்கினது. (218)

(பி - ம்.) 1 தாதலின் னுண்டு. 2. முடிப்ப.

## நீங்கல் வேண்டல்

[தலைவன் தான் செல்லவேண்டிய இன்றியமையாமையைப் பாங்கியிடங் கூறுதல்]

துன்றுஞ் சுரும்பறை தார்த்தொண்டை மான்கப்பல் சூழ்மலயக்
குன்றுஞ் சிவந்த குயமயி லேகொடி யேனகர்க்கே
சென்றென் குறைமுடித் தெய்துவ னுளையித் திண்சிலம்பில்
ஒன்றும் பிரிந்தது நீயுரை யேலென் னுயிர்க்குயிரே.

துன்றும் சுரும்பு அறை - மொய்க்கும் வண்டுகள் ஒலிக்கும். மலய குன்றும் சிவந்த குலமயிலே - மலய மலையும் கோபித்த தனங்களையுடைய மயில்போன்றவளே! சிவத்தல் - சினத்தல். கருமாணிக்கன் நாட்டு மலயமலையும் தான் ஒப்பாகாமைகண்டு பகைமை கொண்ட தனங்களுடைய மயில் போன்ற பெண்ணே! இது, பாங்கியை நோக்கிக் கூறியது. கொடியேன் - நகர்க்கே சென்று என் குறை முடித்து நாளை எய்துவன். தான் தலைவியைப் பிரிய வேண்டிய நிலையில் இருப்பதால் தன்னைக் கொடியேன் என்றான். உயிர்க்

குயிர் என்றது தலைவியாகிய என் உயிர்க்கு உயிர் போன்றவளே என்று தலைவன் பாங்கியை நோக்கிக் கூறியது. உரையேல் - தலைவியிடம் சொல்லாதே.

(பி - ம்.) 2. சியந்த குலமயிலே ; கொடி. வேர்தர்க்கே. (219)

## பாங்கி விடுத்தல்

[தலைவனைப் பாங்கி செல்ல விடுத்தல்]

முடிவது சென்று முடியா தொழிவது முன்னங்கங்குல்
விடிவ துமக்கெங்கள் வெற்பில்வெற் பாவிரும் பாவரசு
கடிவது கற்றவை வேற்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
வடிபொரு பார்வைமின் னுள்வருந் தாமன் மறைக்குவனே.

எங்கள் வெற்பில், கங்குல் விடிவது முன்னம், முடியா தொழிவது சென்று முடிவது, என்றியைக்க விரும்பா அரசு கடிவது கற்ற - பகையரசர்களைக் அழிப்பதைக் கற்ற. வை வேல் கரு மாணிக்கன் ; வை - கூர்மை. வடி பொரு பார்வை - மாவடு போன்ற கண்; வடி-மாவடு; 'நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த'; (பெரும்பான். 309.) மறைக்குவனே - நீ செல்வது தலைவிக்குத் தெரியாமல் நான் மறைத்து விடுகிறேன். இது தலைவனுக்குப் பாங்கி ஆறுதல் கூறி விடுத்தது. (220)

(பி - ம்.) 1. முடிகுவ தென்று. 4. பாவை மின்னுள்.

## இரவு நலிபுரைத்தல்

[தலைவி இரவு தன்னை வருத்துவதைக் கூறுதல்]

பூத்த செழும்புவ னந்தயங் காமற் பொதுவறவே
காத்தரு ளுந்தொண்டை மான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பர்
நீத்த தறிந்து செறியந்த கார நிறைகடன்மண்
கோத்தது வோவில்லை யோகதி ரோனிக் குவலயத்தே.

பூத்த - படைத்த. புவனம் தயங்காமல் - உலகம் தளர்ச்சியடையாமல். பொது அற - பலருக்கும் பொது என்பது இன்றி ; அதாவது தனக்கே உரித்தாக. வெற்பர் - தலைவர். நீத்தது அறிந்து - தன்னைவிட்டுத் தலைவன் சென்றது அறிந்து. செறி அந்தகாரம் - அடர்ந்த இருள். நிறை கடல் மண் - நீர் நிறைந்த கடல் சூழ்ந்த இவ்வுலகத்தை. கோத்ததுவோ - தன்னுள் அடக்கிக்

கொண்டதோ? அல்லது, கதிரோன் இக்குவலயத்தே இல்லையோ? என்று தலைவி இரவின் துன்பத்தைக் கூறி வருந்தினாள் என்க. (221)

## தலைவிக்கு அவன் செலவுணர்த்தல்

[தலைவிக்குப் பாங்கி தலைவன் பிரிவுணர்த்தல்]

ஒருநா ளிடைவிட் டொருநாள் வருத லொழியல்மற்றும்
வருநா ளிதுநம் மறைநெறிக் கேத மலர்க்குவளைக்
கருநாண் மலர்த்தொங்க லான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
திருநா ளுருவநல் லாய்குன்ற வாணருந் தீயரன்றே.

ஒரு நாள் இடைவிட்டு ஒருநாள் வருதல் - தலைவர் ஒருநாள் இடைவிட்டு மறுநாள் வருவர் என்பது. மறை நெறிக்கு ஏதம் - களவொழுக்கத்திற்குக் குற்றஞ் செய்வதாகும். நம் குன்றவாணரும் தீயர் அன்று - நம் தலைவரும் அந் நெறிமுறை தவறும் தீயர் அன்று. வருநாள் இது - ஆதலின் (தலைவர்) திரும்பி வருநாளும் இதுவேதான். மற்றும் ஒழியல் - வேறு நீ நினைப்பதைவிட்டு நீங்குவாயாக; இவ்வாறு பாங்கி தலைவிக்குக் கூறித் தலைவன் பிரிவுணர்த்தினள் என்க. (222)

(பி - ம்.) 1. ளிடையிட் டொழியமற்றும்.

## பிரிவதற் காற்ருமை

[தலைவி தலைவன் பிரிந்ததற்கு ஆற்ருது வருந்திக் கூறுதல்]

கூட விரும்பிய வன்றே பிரிவுங் குறிக்கவல்ல
ஆடவர் நெஞ்சு மொருநெஞ்ச மோவடல் மானடவிக்
காடவர் மண்கவ ருங்கரு மாணிக்கன் கப்பலன்னப்
பேடை நடந்தனை யீர்பிழை காணுநம் பெண்பிறப்பே.

அடல் மான் நடவி - வலிமிக்க குதிரையைச் செலுத்தி; காடவர் மண் - பல்லவர் நாடு. அன்னப்பேடை நடந்தனையீர் — பெண் அன்னப் பறவை நடப்பது போன்றவளே! இது, பாங்கியை நோக்கி, 'ஆடவர் நெஞ்சும் ஒரு நெஞ்சமோ? (அவரை நம்பிய) நம்பெண் பிறப்பே பிழை யுற்றது' என்று கூறித் தலைவி வருந்தினள் என்க.

(பி - ம்.) 1. மாநடவிக். (223)

## ஆற்றுவித்தல்

[பாங்கி தலைவியை ஆற்றுவித்தல்]

கூடிய் தொன்றும் பிரிவும் பிரிந்தது கூடுதலும்
நீடிய வையத்து நீட்டியன் றேநினை யார்மகுடம்
சூடிய வார்கழற் காற்றெண்டை வேந்தன் றுவரைமின்னே
வாடிய தென்பிரிந் தாரின்று நாளை வருவதற்கே.

கூடியது ஒன்றும்; பிரிவும், பிரிந்தது கூடுதலும, ஆகிய மூன்றும், நீடிய வையத்து நீட்டியன்றே என இயைக்க; நீட்டியன்றே - நெடுங்கால வழக்கல்லவோ? நினையார் - பகைவர். நாளை வருவதற்கே பிரிந்தார்; வாடியது என்? (224)

(பி - ம்.) 2. நீடி யன்றே; நீடி யின்றே. 4. வருவரன்றே.

## அழுங்கல்

[தலைவி வருந்துதல்]

பைகொண்ட நாகம் பரிக்கும் படியிரு பங்கயச்செங்
கைகொண்டு காத்தரு ளுங்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
மெய்கொண்டு பைம்பொன் விழிதந்த நீரில் விளையச்சென்றார்
பொய்கொண்டு நிற்குங்கொல் லோவரு வேமென்று
[போனநெஞ்சே.

பை - படம்; விஷப்பையும் ஆம். நாகம் பரிக்கும் - ஆதி சேடனை பாம்பு சுமக்கும். படி - பூமியை. இரு பங்கயச் செங்கை கொண்டு காத்தருளும் - தன் இரு தாமரை மலர்கள் போன்ற சிவந்த கைகளால் தாங்கி அன்போடு காத்தருள் செய்யும். விழி தந்த நீரில் - என விழிகளிலிருந்து வந்த நீரிடையே. மெய்கொண்டு-தன் உடல் கொண்டு. பைம் பொன் விளையச் சென்றார் - பசிய பொன் தேடச் சென்றார்; விளைய - உண்டாக. விழி தந்த நீரில் பொன் விளையச் சென்றார் என்றது ஒரு நயம். வருவேம் என்று போன நெஞ்சு - விரைவில் வருவேன் என்று கூறிச் சென்ற அவர் மனம். பொய் கொண்டு நிற்கும் கொல்லோ - பொய்யைத் தன்னிடங் கொண்டு வாரமல் அங்கே நின்று விடுமோ?.

(பி - ம்.) 1. கப்பலன்னீர். 3. மெய்கொண்ட. (225)

## கழிபடர்கிளவி

[தலைவி காமத்தினால் தனக்குண்டான பெருந்துயரை அன்றில்களிடத்துக் கூறுதல்]

கைப்போ தகம்வழங் குங்கரு மாணிக்கன் கப்பல்முன்னீர்த்
துப்போடு முத்தஞ் சொரியுந் துறைவரென்.சொற்பகர்ந்த
அப்போது சொல்லுமி னீரன்றில் காளன் றருளப்பெற்றாள்
இப்போ தளவிருந் தாள்தெரி யாதினி யென்றவர்க்கே.

கை போதகம் - யானைக் கன்று. துப்பு - பவழம். முத்தம் - முத்து. அன்றில்காள் அன்றில் பறவைகளே! துறைவர் என் சொல் பகர்ந்த அப்போது - தலைவர் என்னைப்பற்றிப் பேசிய அப்போது. அன்று அருளப் பெற்றாள் - அன்று உம்மால் தலையளி செய்யப்பெற்றவள். இப்போது அளவு இருந்தாள் - இந்நேரம்வரை (உம்மை எதிர்பார்த்து) இருந்தாள். இனி தெரியாது - இனிமேல் அவள் யாதாயினள் என்பது தெரியாது; என்று அவர்க்கே நீர் சொல்லுமின் என இயைத்துப் பொருள் கொள்க. (226)

## கடலொடு புலம்பல்

[தலைவி கடலை நோக்கிக் கூறி வருந்துதல்]

மயிலாய தன்குல மால்வரை யேழு மழவிடையோன்
கயிலாய மாக்கும் புகழ்க்கரு மாணிக்கன் கப்பலென்போல்
வெயிலாய செங்கதிர் போய்க்கங்குல் வாயவ் விடிவளவும்
துயிலா யிருங்கட லேநின்னை யாவர் துறந்தவரே.

மயில் ஆய-மயில்கள் பொருந்திய. தன் குலவரை எழும்-தனது எழு குலபருவதங்களும்; அவை, கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, என்பன; மீங்ஙனம். எழு குல வரைகள்; 8 : 29., செய்யுள்களையும் நோக்குக. மழவிடையோன் - இளமை வாய்ந்த இடபத்தை வாகனமாகவுடைய சிவபிரானுடைய. மழ - இளமை; 'மழவுங் குழவும் இளமைப் பொருள' (தொல்.) கயிலாயம் ஆக்கும் - கயிலாய மலைபோல் வெண்ணிறமாகச் செய்யும். புகழ் கரு மாணிக்கன் - புகழை யுடைய கருமாணிக்கன்; புகழ் வெண்ணிற மென்பது கவிமரபு. வரையேழும் கயிலாய மாக்கியது என்றது கருமாணிக்கன் புகழ் உலகமெல்லாம் பரந்து எழு குல

கிரிகளையும் போர்த்தமையால் என்க. இருங்கடலே, விளி. வெயில் ஆய செங்கதிர்போய் விடியளவும் - வெயில் பொருந்திய சூரியன் அத்தமித்துப் பொழுது விடியுமளவும். கங்குல்வாய் என்போல் துயிலாய்; நின்னை யாவர் துறந்தவரே என இயைத்துப் பொருள் கொள்க. கங்குல் - இரவு. நின்னை - (என்னைப்போல) உன்னை. இது இரவில் கடல் ஓயாது இரைவது நோக்கித் தலைவி கூறியது ; ஒப்பு. திருவரங்கக் கலம்பகம். 21 ; நள. வெண். கலிநீங்கு. 20. (227)

(பி - ம்.) 2. கொடைக் கருமாணிக்கன்.

## குருகொடு புலம்பல்

[தலைவி நாரையொடு புலம்பல்]

[குருகு—நாரை]

காருந் தருவுமன் ஞன்கரு மாணிக்கன் கப்பல்முன்னீர்
ஊருஞ் சுரிசங்கும் வானூர் மதியொக்கு மொண்டுறையில்
நேருங் குருகினங் காளுங்கள் சேவலை நீத்திருந்து
பாருந் தனியிருந் தார்பாவி யாவி பதைக்கின்றதே.

கார் - மேகம். தரு - கற்பகம் முதலிய ஐந்தருக்கள். முன்னீர் ஊரும் சுரி சங்கு - கடல் நீரில் சஞ்சரிக்கும் பல சுழன்ற முறுக்குக்களையுடைய சங்கு. வான் ஊர் மதி - வானில் ஊரும் சந்திரன். சங்கு மதிக்கு, நாச்சியார் திருமொழி 7 : 4. உங்கள் சேவலை நீத்திருந்து, அப்பொழுது தனி இருந்தார் பாவி ஆவி பதைக்கின்றது பாரும், என இயைக்க. சேவல் - ஆண்பறவை. (228)

(பி - ம்) 1. மொண் டுறைவாய். 2. நீரும்.
4. யாவி படுந்துயரே.

## கையறுகிளவி

[செயலொழிந்த நிலையில் தலைவி இரங்கிக் கூறியது]

காலப் புயலனை யான்கரு மாணிக்கன் கப்பல்சுற்றும்
ஓலக் கடற்றிரை யேகரை யேவுள மொன்றுபட்ட
சீலத் தனிக்குரு கேயரு கேநின்ற தேம்பொழிலே
நீலக் கொடியடம் பேயுடன் பேயிங்கு நிற்கின்றதே.

காலபுயல் அனையான் - பருவக்கால மேகம்போல வழங்குபவன். ஓல கடல் திரையே - வாய்விட்டுப் புலம்பும் கடலின் அலையே! கரையே - கடற்கரையே!. உளம் ஒன்றுபட்ட சீலம் - மனம் ஒன்றாய்க் கலந்த நன்மை; இனமாயிருக்குந் தன்மை. தனி குருகே - தனியே இருக்கும் குருகே! அருகே - கரையருகே. தேம் பொழிலே - இனிய கனி வகைகளைத் தரும் சோலையே! நீல கொடி அடம்பே - நீல நிற மான அடப்பங்கொடியே! அடம்பு ஒரு மரமும் ஆம்; அங்ஙனங் கொண்டால் நீலக் கொடிகள் சூழ்ந்த அல்லது சுற்றிய அடப்பமரம் என்க. உடம்பே இங்கு நிற்கின்றது - என் உடல் மட்டுமே இங்கு இருக்கின்றது; உயிர் பிரிந்த தலைவனோடு சென்றது என்பது தாம். தலைவி, தன் கையற்ற நிலையில் புறத்திலிருந்த பொருள்களை நோக்கிக் கூறியது. இது, கழிக்கரைப் புலம்பலும் ஆம். (229)

கூடலிழைத்தல்

[கூடல் - கூடல் என்னும் குறியிட்டுப் பார்த்தல்]

சூழி மதக்களிற் றுன்றெண்டை வேந்தன் றுவரையன்னாள்
தாழை மலர்ப்புன்னை தங்குபைங் கான றனிலிருந்து
வாழி யெனத்தன் வளைக்கரத் தால்வெண் மணற்பரப்பி
ஆழி யிழைக்குஞ் சுழிக்குமெந் நாள்வந் தடுக்குமென்றே.

சூழி - யானையின் முகபடாம். தாழை மரங்களும், மலர்ப்புன்னை மரங்களும்; இவை நெய்தற்றிணைக்குரியன. பைம் கானல் - கடலடுத்த பசிய சோலை. வாழி என - நலந்தருவதாக என்று. எந்நாள் வந்து அடுக்கும் என்றே - என்றைக்குத் தலைவன் வந்து சேர்வனோ என்று. ஆழி இழைக்கும் - கூடல் இழைத்துப் பார்ப்பாள்: கூடல் இழைத்தல் - தலைவன் எப்பொழுது வருவான் என்பதை மணலிற் சுழிகளாகக் கோடுகள் வரைந்து பார்த்தல்; திருக்கோவையார்; 186; இதன் விரிவை, நாச்சியார் திருமொழியிற் காண்க. எந்நாள் வந்து அடுக்கும் என்றே சுழிக்கும் - என்று இங்கு வந்து சேருவாரோ என்று ஆழி சுழித்து வருந்துவாள்;

(பி - ம்.) 1. ஆழி யிழைக்கும் சுளிக்கும்.
4. என்னுவர் தடுக்குமென்றே. (230)

### பாங்கி தலைவன் வரவறிவித்தல்

கான்றோ யலங்கலெங் கோன்கரு மாணிக்கன் கப்பல்மன்னும்
சான்றோர்தம் வாய்மை தவறுவ ரோதணந் தேவருந்தி
மீன்றோய் கணைவிழி யாளிற வாமுன்னம் வெம்புரவி [கே.
வான்றோய் கொடிநெடுந் தேர்மன்னர் தோன்றினர் மாநகர்க்

கான் தோய் - மணம் தோய்ந்துள்ள. அலங்கல் - மாலை, தணந்தே வருந்தி - பிரிந்ததனாலே வருந்தி. மீன் தோய் கணை விழியாள் - மீனும் கணையும் பதிந்தன போன்ற விழிகளையுடைய தலைவி. இறவா முன்னர் - தலைவன் பிரிவால் வருந்தி இறப்பதின் முன். புரவி தேர் மன்னர் - புரவி பூட்டிய தேர்மீது வரும் தலைவர். வான்றோய் கொடி ; கொடியின் உயரத்தைக் குறித்தது. (231)

### வந்தோன் றன்னோடு நொந்து வினாதல்

கருப்பாட லஞ்சிலை வேள்கரு மாணிக்கன் கப்பலெங்கள்
திருப்பாவைச் செல்வித் திருமுகங் கண்டனை தெள்ளருவிப்
பொருப்பாநின் வாய்மையைப் பொய்ம்மையென் றுதுயிர்
[போற்றியிங்ஙன்
இருப்பார் தமக்குவந் திங்கிவை யோவின்ன மெய்துவதே.

கருப்பு ஆடல் அம் சிலை வேள் - ஆடல் கருப்பு அம் சிலைவேள் என இயைக்க ; வெற்றியைத் தரும் கரும்பு வில்லையுடைய மன்மதன் போன்ற; கருப்பு : கரும்பு என்பதன் விகாரம். திருப்பாவை செல்வி திருமுகம் - பாவை போன்ற தலைவியின் அழகிய முகம். கண்டனை - காண்பாயாக. பொருப்பா என்றது தலைவனை. வாய்மை-கூறிச்சென்ற உறுதிமொழி. போற்றி -கடைபிடித்து ; ஆதரித்து. இங்ஙன் இருப்பார் தமக்கு - இவ்வாறு இருக்கின்ற தலைவிக்கு. இங்கு இவையோ இன்னம் எய்துவதே - இங்கு இன்னம் இத்துன்பங்களோ அடைவது?

(பி - ம்.) 4. விரைந்தெய்துவதே. (232)

## 14. வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிதல்

[மணஞ்செய்து கொள்வதற்கு இடையே, பொருளீட்டுவதற்குத் தலைவன் பிரிதல்; வைத்து ; சொன்னடை ; இடைவைத்து - இடையீடாக நீக்கி வைத்தென்பீர் ;
தொல். களவு. சூ. 21, ந.]

### தலைவன் பாங்கிக்குச் செலவுணர்த்தல்

கலைக்காங் கயன்றுவ ரைக்கரு மாணிக்கன் கப்பலன்றுள்
முலைக்காங் கருவி முழுமலை நாட்டு முறைகுறித்த
விலைக்காங் கனகம் பிறர்புலம் போய்முற்ற மீளலென்று
குலைக்காந்த ளன்னகை யாய்மொழி நீயக் கொடியிடைக்கே.

கலை காங்கயன் - கலையறிவில் காங்கயன் என்னும் வீடுமன் போன்றவன் ; காங்கயன் முருகனும் ஆம். அருவி மலை நாட்டு முழு முறை குறித்த முலைக்கு ஆம் கனகம், என இயைக்க ; அருவி மலை நாட்டு முழுமுறை குறித்த - அருவிகளையுடைய மலை நாட்டு முழு வழக்கத்திற்குப் பொருத்தமான. முலை விலைக்கு ஆம் கனகம் - முலை விலைக்கு ஏற்றதான பொன். பிறர் புலம் போய் - பிறநாடு சென்று. ஆங்கு முற்ற - அங்குத் தேடி முடிந்த பின். மீளல் என்று - நான் திரும்பி வருவேன் என்று. நீ அ கொடியிடைக்கே மொழி - நீ அந்தத் தலைவிக்குச் சொல்வாயாக! குலை காந்தள் அன்ன கையாய் - கொத்தாக மலரும் காந்தட் பூக்கள் போன்ற கையை யுடையவளே ! இது, தலைவன் பாங்கியை நோக்கிக் கூறிய விளி.

(பி - ம்.) 1. கலைக்காமதன். 2. நாடர் மொழிகுறித்த. (233)

### மறுத்தல்

[பாங்கி நின்பிரிவை நீயே தலைவனுக்குச் சொல் என்று தலைவனுக்குக்கூறி மறுத்தல்]

வரியுங் கழன்மன்னன் கோபா னலம்பொன்ற வாளிமழை
சொரியுஞ் சிலைமுகில் தொண்டையர் கோன்கப்பற் றோகை
அரியுண் கயலினங் கூடினும் வாடு மளவுமந்திப் [யன்றுள்
பிரிவுஞ்சொன் றலென்ன தாகுமைய் யோவிப் பெருந்தகைக்கே

வரியும் கழல் மன்னர் - கட்டிய வீரக்கழலையுடைய பகை அரசர். கோபானலம் - கோபத்தீ; (கோப அனலம் ; அனலம் - தீ.) பொன்ற- அழிய. வாளி மழை - அம்பு மாரி. தோகை அன்றுள் - மயில்

போன்ற தலைவி. அரி உண் கயல் இனம் கூடினும் வாடும் - பல செவ்வரிகளையுடைய கயல்மீன்கள் போன்ற கண்கள் கூடினாலும் அவள் வாட்டம் அடைவாள்; 'இமைப்பிற் கரப்பாக் கறிவல்' (குறள் 1129) என்றதுபோல. கண் கூடுதல் - இமைகளோடு மூடுதல். அளவு - அந்நிலையளாக; கண்ணிமைகள் மூடும் சிறு நேரமும் பிரிவைப் பொறுதவள் என்பதாம். அந்திப் பிரிவும் சொன்னால் - இவ்வந்திப் போதில் நீ அவளைப் பிரிந்து போவதையும் சொன்னால். என்னதாகும் - யாதாக முடியும்? காமநோய் மாலை மலருமாதலின், அந்திப் பிரிவும் சொன்னால் தலைவியின் நிலை யாதாகுமோ என்று பாங்கி தலைவற்குக் கூறி, 'இதனை நீயே போய்ச் சொல்வாயாக' என்று அவற்குக் கூறியது.

(பி - ம்.) 3. அரியுங் கடலினம். (234)

நீடே னென்றல்

[தலைவன் தாமதித்திரேன் என்று கூறல்]

வானியைந் தார்வர மும்மன்னை வேண்டும் வரமுமுற்றக்
கானியைந் தானன்ன வன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
தேனியைந் தாலன்ன சொல்லியை நீத்துஞ் சிறந்திருப்ப
யானியைந் தாலுமென் னெஞ்சியை யாதின்சொ லின்னகையே.

வான் இயைந்தார் வரம் - தேவர்கள் பெற்றவரமும். வரமும் மன்னை; மகரவொற்று விரித்தது. அன்னை வேண்டும் வரமும் - கைகேயி தயரதன் பால் பெற்ற வரமும். முற்ற - முற்றுப் பெறும் பொருட்டு. கான் இயைந்தான் - கானகத்துச் சென்ற இராமபிரான். தேன் இயைந்தால் அன்ன சொல்லியை - தேன் போன்ற சொல்லையுடைய தலைவியை. நீத்தும் சிறந்து இருப்ப - பிரிந்தும் வருந்தாது சிறப்புடன் இருக்க. யான் இயைந்தாலும் - நான் சம்மதித்தாலும். என் நெஞ்சு இயையாது - என் மனம் ஒருப்படாது. இன்சொல் இன்னகை என்றது பாங்கியை. நெஞ்சு இயையாது என்றமையால் தலைவன் பாங்கியை நோக்கி, 'நீடேன்' என்று குறித்தபடி. (235)

## சூளினை நினைந்துரைத்தல்

[தலைவன் கூறிய வஞ்சினத்தைப் பாங்கி அயலனுக்கு நினைப்பூட்டுதல்]

கடவா ரணந்தரு கைக்கரு மாணிக்கன் கப்பலன்ன
மடவா ரளவுநின் வாய்மைபொய் யாமெனில் வாளிரவி
குடவா ரியிலெழுங் கொண்டலு மாறுங் கொதிக்குமதி
நடவா துபின்வள்ள லேமனு நீதியு நானிலத்தே.

கட வாரணம் தரு கை - இரப்போர்க்கு மதயானையை வழங்கும் கையுடையவன். மடவார் அளவில் - மகளிர் திறத்து. நின் வாய்மை பொய் ஆம் எனில் - உன் வாக்குத் தவறுமேல். வாள் இரவி குடவாயில் எழும் - ஒளியுடைய சூரியன் மேற்கே உதிக்கும். கொண்டலும் - நீருண்ட மேகமும். மாறும் - பெய்யாமல் பொய்த்துப் போம். மதி கொதிக்கும் -குளிர்ந்த மதியும் சூடுண்டு கொதிப்பேறும்; நானிலத்து மனு நீதியும் நடவாது. வள்ளலே என்றது, தலைவனை. இது, தலைவன் முன் கூறிய சூளினை நினைப்பூட்டியதாகும்; அன்றி, அவன் சொல் தவறினால் வரும் கேடுகளை அறிவுறுத்தியது மாகும். (236)

## தலைவன் பிரிவுரைத்தல்

[பாங்கி தலைவிக்குத் தலைவன் பிரிவுரைத்தல்]

கன்னவி லும்புயத் தான்கரு மாணிக்கன் கப்பல்மின்னே
அன்னவர் தூற்று மலரஞ்சி நாமழுங் காதவண்ணம்
மின்னவில் நுண்ணிடை மெல்லிய லாய்மன்றல் வேட்கையினம்
மன்னவ ரின்று வளநகர்க் கேகினர் வன்சுரமே.

கல் நவிலும் புயத்தான் - மலையென்று சொல்லத்தகும் திண் புயத்தையுடையவன். மின்னே என்றது, தலைவியை. கப்பல் மின்னே அன்னவர், என்று கூட்டி, கப்பல் ஊரிலுள்ள பெண்டிர் என்றுரைக்கினும் ஒன்றும். அலர் அஞ்சி-பழிச் சொல்லுக்கு அஞ்சி. அழுங்காத வண்ணம் - வருந்தாதபடி. மின் நவில் நுண் இடை மெல்லியலாய் - மின்னல் என்று சொல்லத்தக்க நுண்ணிய இடையையுடைய பெண்ணே! இது தலைவியை நோக்கிப் பாங்கி கூறியது. மன்றல் வேட்கையின் - மணம் செய்து கொள்ளும் விருப்பத்தினால். நம் மன்னவர் - நம் தலைவர். வன் சுரமே வளநகர்க்கு ஏகினர் - கொடிய பாலைவனத்தின் வழியே தம் வளநகருக்குச் சென்றனர். (237)

### தலைமகளிரங்கல்

[தலைவன் பிரிவைக் கேட்ட தலைவி வருந்தியது]

ஒருயிர் நீயென் றுரைத்தவன் றேயின் றொருப்படுமென்
ஆருயிர் தாமென் றறிந்தில மேயடை யாருடல்வெம்
சோரி யுகுஞ்சுடர் வேற்றொண்டை வேந்தன் றுவரைசுற்றும்
மாரிய கன்கிரி மென்மட வாய்நம் மதியின்மையே.

*அடையார் உடல் வெம் சோரி உகும் வேல் தொண்டை வேந்தன் - பகைவர் உடலிலிருந்து வெம்மையான இரத்தத்தைச் சிந்தும் வேலையுடைய தொண்டை வேந்தன் ; கரும்மாணிக்கன். மாரி அகல் கிரி - மேகங்கள் படிந்த பரந்த மலைநாட்டு. மெல் மடவாய் - மென்மை பொருந்திய பெண்ணே ! இது, பாங்கியைக் குறிப்பது. ஓர் உயிர் என்றபோதே, ஆருயிர் தாம் இன்று ஒருப்படும் என்று அறிந் திலமே மதியின்மையே, என்றமையால், முன் தலைவன் தானும் அவளும் ஓர் உயிர் என்ற காலத்திலே, இன்று இவ்வாறு அவன் நீங்கத் தன்னுயிரும் நீங்கும் என்றதை அன்று அறிவின்மையால் அறியவில்லை என்று தலைவி கூறி இரங்கினாள் என்க. ஒருப்படுதல்- ஒருவுதல் ; நீங்குதல் ; ஒருப்படுதல் - ஒரு தன்மையாதல் ; உயிர் தன் உடல்விட்டு அவனுடன் செல்லுதல் என்றும் கொள்ளலாம். (238)*

### பாங்கி ஆற்றுவித்தல்

[தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல்]

சென்றோர் முகமு மனமு நடைபயில் சேவடியும்
கன்றாம னல்கு கப்பறகரு மாணிக்கன் கஞ்சன்வஞ்சம்
வென்றா னடையலர் போல்விழி நீர்மல்க மெய்ம்மறந்து
நின்றா லமுதனை யாய்நினை யாரென் னினைவர்களே.

*சென்றோர்.........கன்றாமல் நல்கும் - சென்றடைந்தோர் முகமும் மனமும் வாடாமல் மகிழ்ச்சியுறவும், பாதம் நடந்து அலைந்து இனி என்றும் வருந்தாமலிருக்கவும் கொடுக்கும் கஞ்சன் வஞ்சம் வென்றான் - கண்ணன் ; 'கஞ்சனார் வஞ்சங் கடந்தானை' (சிலப். ஆய்ச்சியர் குரவை.) அடையலர் - பகைவர். மல்க - பெருக. நினையார் - என் துயர் கருதாது அலர் தூற்றுபவர். என் நினைவர்கள் - என்ன நினைப் பார்கள் ? அமுதனையாய், என்றது தலைவியை. இது, பாங்கி கூற்று.*

## தலைவி கொடுஞ்சொற் சொல்லல்

[தலைவி பெண் பிறப்பே இழிவென்று தன்னை யிகழ்ந்து கூறுதல்]

துறக்கத்தை யெண்ணலர் நண்ணத் தொடுங்கதிர்
[வேற்றொண்டைமான்
சிறக்கத் தமிழ்தெரி கப்பனன் னுட்டன்பர் செய்தியெல்லாம்
மறக்கத் தகாதென்று வாடுநெஞ் சேமண்ணி லாடவராய்ப்
பிறக்கிற் பிறக்கப் பிறவா தொழிகவிப் பெண்பிறப்பே.

துறக்கம் - வீர சுவர்க்கம். எண்ணலர் - பகைவர். எண்ணலர் துறக்கத்தை நண்ணக் கதிர் வேல் தொடும் தொண்டைமான் என இயைக்க. தொடும் - தூண்டும். அன்பர் - தலைவர். இது, தலைவி பெண் பிறப்பை நிந்தித்து கூறியது; ஒப்பு: 'பிறவா தொழிகைநன் றேயொரு காலமும் பெண் பிறப்பே' (தஞ்சை வாணன். 310).

## வருவா ருண்டெனப் பாங்கி வலித்தல்

கழற்கால் வயமுரு கன்கரு மாணிக்கன் கப்பலன்ன
புழற்கா னறுமலர்ப் பூவையன் னுயன்பர் போனசுரம்
அழற்கானில் வேழ மருஞ்சூற் பிடிவய வாற்றிநின்று
நிழற்கா வணங்கழை மேற்றழை வேய்ந்திடு நீள்சுரமே.

கழல் கால் வய முருகன் - வீரக்கழல் அணிந்த கால்களோடு கூடிய வெற்றிமிக்க முருகன் போன்றவன். புழல் கால் நறுமலர் பூவை அன்னாய் - துவாரமுள்ள கால்களோடு கூடிய நறிய பூவை அணிந்த நாகணவாய்ப் புள் போன்றவளே. சுரம் அழல் கானில் - பாலை நிலமாகிய தீய காட்டில். வேழம் - களிறு. அரும் சூல் பிடி - அரிய சூல்கொண்ட தன் பெண் யானையின். வயவு - மயற்கை நோயை. ஆற்றி நின்று - தணிவித்து நின்று. காவணம் - பந்தலாக. கழை மேல் தழை வேய்ந்திடும் - மூங்கில்களின் மேல் தழைகளை ஏற்றி அதற்கு நிழல் தர வேய்ந்திடும்; அதனைக் கண்டு உன் நினைவு தூண்டத் தலைவன் உன்பால் வருவன் என்று வற்புறுத்திப் பாங்கி தலைவியை ஆற்றுவித்தது. ஒப்பு :—' அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற் கடியவே கனங்குழாய் காடென்றா ரக்காட்டுள் துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப் பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே.' (கலி. பாலை. 11.)

(பி - ம்.) 3. பிடிவாய் வாற்றிநின்று. (241)

## வன்பொறையெதிர்தல்

[பிரிவாற்றியிருந்த தலைவி, தனிமையின் வருத்தத்தைப் பாங்கியிடங் கூறுதல்]

மறக்கும் படியென் னவர்தந்த காதலை வண்ணமெல்லாம்
நிறக்கும் பசலை நினைவிக்கு மானினை யார்நினைவைத்
துறக்குஞ் சுடர்வடி வேற்றொண்டை மான்றொலை [ஞாலமெல்லாம்
சிறக்கும் பெரும்புக ழான்கப்ப னுடன்ன சேயிழையே.

வண்ணம் - மேனி. பசலை - பசலை நோய். நினைவிக்குமால் - நினைப்பூட்டும் ஆதலால். நினையார் - பகைவர். நினைவை - எண்ணத்தை. துறக்கும் - போக்கும். சேயிழை என்றது, தலைவியை. 'தலைவர் பிரிந்ததால் எனக்கு உண்டாகும் பசலை நோயே தலைவரை யான் மறவாதபடி எனக்கு நினைப்பூட்டி நிற்கும்; ஆதலின், யான் அவரை மறப்பது எப்படி?' என்று தலைவி தன் துயரைப் பாங்கிக்குக் கூறியது. (242)

## தலைவி பருவங்கண் டிரங்கல்

[தலைவி கார்காலம் வந்தது, தலைவர் வரவில்லை என்று வருந்துதல்]

கூர்கால வோடைக் குருகினங் காள்குறு கார்குருதி
சோர்கால வேன்முரு கன்றொண்டை மான்கப்பற் [றொன்னகர்வாய்க்
கார்காலம் வந்தது கண்புனல் சோர்கின்ற தென்புயல்போல்
ஆர்கால மென்றறி யேனறி வாருக் கழகிதுவே.

ஓடை - ஓடையில் உள்ள. கூர் கால குருகு இனங்காள் - கூரிய கால்களையுடைய கொக்குக்களே! கூர்கால் - நீண்ட கால்களையுடைய, என்றலும் ஒன்றும். குறுகார் - பகைவர். குருதி சோர் - இரத்தம் சோர்ந்து சொரியும். கால வேல் முருகன் - தொண்டைமான்; யமன்போன்ற வேல் ஏந்திய முருகன் போன்ற கருமாணிக்கன். சோர்கின்ற தண் புயல் - பொழிகின்ற குளிர்ந்த மேகம். கண் புனல் ஆர் காலம் - கண்களில் நீர் பெருகுகின்ற கார்காலம். அறிவாருக்கு அழகு இதுவே-என் வருத்தத்தை அறிய வல்ல தலைவற்கு, இஃது அழகோ?

(பி - ம்.) 3. சாய்கின்ற; தென்புயல்போல்.
4. கனவிதுவே. (243)

## பருவ மன்றென்றல்

[பாங்கி இது பருவ மழை அன்று என்று கூறியது]

கம்ப மதகளிற் ருன்கரு மாணிக்கன் கப்பலன்னீர்
நம்பெரு மான்சொன்ன காலமன் றேயிது நாற்றிசையும்
கொம்பு தழைக்கக் கொடிபூச் சிதறவெங் கோடையுற்ற
வம்பு மழைக்கு மலர்ந்தன காந்தளு மவ்வலுமே.

சொன்ன காலம் அன்று - தலைவன் தான் திரும்பி வருவதாகச் சொல்லிச் சென்ற காலம் இஃது அன்று. வம்பு மழைக்கு - எதிர்பாராத கோடைப் புது மழைக்கு; வம்பு - புதுமை. மவ்வல் - வன முல்லை; இது மௌவல் எனவும் வழங்கும். இது, 'தலைவன் சொல்லிச் சென்ற மாரிக்காலம் அன்று; புதிதாய்த் தோன்றிய கோடை மழை' என்று பாங்கி தலைவிக்குக் கூறியது. மழை கொம்பு தழைக்கவும், கொடியும் பூவும் சிதறவும் உற்றது என்க. காந்தளும் மவ்வலும் கார்காலப் பூக்கள். (244)

## எதிர்மறை

[தோழி கூறியதைத் தலைவி மறுத்து எதிர் கூறுதல்]

சொல்லிய சொல்வழு வாத்தொண்டை வேந்தன் [றுவரைவெற்பில்
புல்லி யருஞ்சுரம் போனவர் வார்த்தையிற் பொய்மையென்றும்
இல்லை யெனுங்கொடி யேயது போக விவையும்பொய்யோ
மல்லிகை முல்லை செருந்திவிற் பார்சொல்லும் வார்த்தைகளே.

புல்லி - தன்னைத் தழுவிப் பின். கொடி - பாங்கி. மல்லிகை... விற்பார் வார்த்தைகள் இவையும் பொய்யோ என்றியைக்க. மாரிதான் வம்பு என்றால், விற்பார் விலைகூறும் வார்த்தைகள் 'இது பருவ மழையே' என்று அறிவிக்கின்றது; இதுவும் பொய்யோ? என்றாள் தலைவி. (245)

(பி - ம்.) 1. மான்கப்பல் சூழ்சிலம்பில்.
3. யென்றுய் மடவரயது போக விலுவும். 4. மௌவல்.

அவர் தூதுவந்த பருவமென்றல்

[இந்த மேகம் தலைவர் விட்ட தூதாக வந்தது என்று பாங்கி கூறியது]

செருவது நண்ணிச் செயிர்த்தெழுந் தேறிய தெவ்வர்குலம்
கருவற வைத்தசெவ் வேற்கரு மாணிக்கன் கப்பல்நம்மைப்
பொருவது நாடிமுன் போந்ததன் றேயன்று போனவன்பர்
வருவது ரைப்ப வரவிட்ட தூதிந்த வண்புயலே.

*செரு - போர்க்களம். செயிர்த்து - பகைத்து. கரு அற வைத்த - அடியோடு அழியச் செய்த. பொருவது நாடி முன்போந்தது அன்று - நம்மை அழுங்கச் செய்வதற்காக எழுந்த பருவமேகம் அன்று. வரவிட்ட தூது இந்த வண் புயல் - தலைவர் வருவதை முன்னதாக அறிவிக்க அவர்விட்ட தூது ஆகும் இந்த மேகம். இவ்வாறு கூறிப் பாங்கி தலைவியை ஆற்றுவித்தது.* (246)

(பி - ம்.) 4. வலர்விட்ட.

தலைவியாற்றல்

[அதைக் கேட்டுத் தலைவி ஆற்றியிருத்தல்]

யாமன்பு கொண்டிருந் திவ்வா றிரங்கவின் றேசுகின்ற
பூமென் கருங்குழற் பூவையர் காணப் பொதுவறுத்துச்
சோமன் குலம்புரக் குந்தொண்டை மான்கப்பல் சூழ்சிலம்பர்
தாம்வந் ததற்கொக்கு மேசொன்ன காரின்று தான்வந்ததே.

*ஏசுகின்ற பூவையர் - அலர் தூற்றும் மகளிர். பொது அறுத்து - யாருக்கும் பொது என்ற தன்மையை அறுத்து ; தனக்கே உரிமையாக்கி. சோமன் குலம் புரக்கும் - சந்திர குலத்துதித்த பாண்டியன் வம்சத்தைக் காக்கும். இவ்வாறு கூறியதால், கருமாணிக்கனல் பாண்டியகுலம் காக்கப்பட்டது என்றும் கொள்ளலாம். கார் இன்று வந்தது, அவர் வந்ததையே ஒக்கும் என்று தலைவி ஆறினமை கூறியது.* (247)

பாங்கி புலம்பல்

கார்க்குன்ற மேந்துகை யான்கரு மாணிக்கன் கப்பல்முன்னீர்
ஆர்க்கும் விருப்புள்ள் வானெடுந் தேரென் றறிவழிந்து
பார்க்கு மிருக்குங் கிடக்குமென் பாவை பதைக்குமங்கம்
வேர்க்கும் வெதும்புந் ததும்புங்கண் ணீர்வண்ணம் வேறுபட்டே.

*கார் குன்றம் ஏந்து கையரன் - கரிய கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்து ஏந்திய கையையுடைய கண்ணன் போன்ற கரு மாணிக்கன். முன்னீர் - கடல் நீரை. ஆர்க்கும் - குடிக்கும். வான் - மேகத்தை. நெடும் தேர் என்று - தலைவனுடைய நெடிய தேர்தான் வருகின்றதென்று எண்ணி. வண்ணம் - உடல் நிறம். பாவை பார்க்கும் இருக்கும்......கண்ணீர் ததும்பும் என்று கொள்க.*

(பி - ம்.) 1. குல மன்னகையால். (248)

தலைவன் புலம்பல்

அன்னே மதக்கய மூலமென் ரேதவன் ரேலமென்று
சொன்னேன் வரிகழற் ரெண்டையர் கோன்கப்பற் றுன்னலர்
முன்னேட நெஞ்ச முயலுஞ் செயல்முடி விற்புகல்வ [போல்
தென்னே வறிகின்றி லேன்குறி யாவி யிளங்கொடிக்கே.

*அநோ மதம் கயம் - அந்தத் துன்புற்ற யானை. அந்நோ என்பது எதுகை நோக்கி அன்னே எனத் திரிந்தது. அன்று - முன்னொரு நாள். மதகயம் - யானை. ஓலம் - அபயமளிக்கும் ஒலிக்குறிப்பு. இது, திருமால் கஜேந்திரனுக்கு அருள்புரிந்ததைப் பாட்டுடைத் தலைவன்மேல் ஏற்றிக் கூறியது. துன்னலர் போல், செயல் முடிவில் நெஞ்சம் முன் ஓட முயலும் என்றியைக்க. துன்னலர் - பகைவர். செயல், இங்குப் பொருள்தேடும் செயல். ஆவி இளங்கொடிக்குக் குறி அறிகின்றிலேன் என்றது, தன் உயிர் போன்ற தலைவிக்குத் தன் வரவைத் தெரிவிக்கக் குறியாக எதனை அனுப்புவது என்று அறியாமல் தடுமாறுகின்றேன் என்று தலைவன் வருந்தியது.*

(பி - ம்.) 1. மூலமென் ரேதியன் ரேலமென்று. (249)

தலைவன் பாகற்குரைத்தல்

ஐய மருங்கு லவரா வியுமென தாவியுநின்
கையினும் வெம்பரிக் காலிலு மேபொற் கனதனந்தோய்
தொய்யின் மடந்தையர் வேள்தொண்டை மான்கப்பல் [சூழ்புணரி
வைய மருங்குவல் லாய்பழு தாமின்றென் வாய்மொழியே.

ஐய மருங்குலவர் - நுட்பமான இடையுடைய தலைவியின். நின் கையினும் - உன் கை வல்லமையினும். வெம் பரி காலினுமே - விரும்பத்தக்க குதிரைகளின் கால் வேகத்திலுமே உள்ளன என்று தலைவன் தன் பாகற்குக் கூறினன் என்க. கன - பாரமுள்ள. தொய்யில் - தொய்யிலாகிய சாந்துக்கோலம். மடந்தையர்க்கு வேள்போன்றவன் என்க. (நீ விரைந்து செல்லாவிடில்), புணரி சூழ் வைய மருங்கு, இன்றென் வாய்மையும் பழுதாம், என்றியைக்க; வைய மருங்கு - உலகிடத்து. வல்லாய் - தேர் ஓட்டுவதில் வல்லவனே; இனி, புணரி சூழ் கப்பல், வைய மருங்கு வல்லாய் எனக்கொண்டும் பொருள் கொள்ளலாம்; வையம் - தேர். இது, தலைவன் தேரை விரைவிற் செலுத்துமாறு பாகனுக்குக் குறிப்பிட்டபடி.

(பி - ம்.) 4. வாய்மையுமே. (250)

தலைவன் மேகத்துக்குரைத்தல்

சுருப்பார வாரவண் டார்த்தொண் டைமான்கப்பல் சூழ்கனகப்
பொருப்பார வோடும் புயலினங் காள்பொலன் றேர்வழிபார்த்
துருப்பாவை யென்ன வரும்பா வியைநினைந் தொன்றுஞ் [சொல்லா
திருப்பா ரொருவர்முன் னீருஞ்சென் றுலவ ரென்செய்வரே.

சுருப்பு: சுரும்பு என்றதின் வலித்தல் விகாரம். ஆரவார - பேரொலியுடைய. வண் தார் தொண்டைமான். பொருப்பு ஆர - மலையில் போய்த் தங்கியிருக்க. ஓடும் புயலினங்காள் - ஓடும் மேகங்களே! பொலன் தேர் வழி பார்த்து - எனது பொற்றேர் வரும் வழி பார்த்து. அரும் பாவியை நினைந்து; தலைவன் தான் இதுகாறும் வாராமல் தலைவிக்குத் துயர் விளைத்தமை நோக்கித் தன்னை அரும் பாவி என்றான். உரு பாவை என்ன - அழகிய பதுமைபோல. அரும் பாவியை நினைந்து உரு பாவை யென்ன ஒன்றும் சொல்லாதிருப்பார்

ஒருவர் முன் என இயைக்க ; ஒருவர் : தலைவி. நீரும் சென்றால் - நீங்களும் போனால்; நீங்களும் என்றது, மேகங்களை. மேகத்தைக் கண்டு கார்காலம் வந்தும் தலைவன் வரவில்லையேயென்று, தலைவி மேலும் வருந்த இடமாமே எனத், தலைவன் அம்மேகத்தை நோக்கி வருந்திக் கூறியது. (251)

## தலைமகன் வந்துழிப் பாங்கி கூறல்

நடுங்கப்பல் கோடி நரபால ருக்கொரு நாதன்கங்கை
தொடுங்கப்பற் காவலன் றெண்டையர் வேந்தன் றுவரையினும்
ஒடுங்கப்பல் கால மறந்தவர் தேரி லுததியின்முன்
கெடுங்கப்பல் வந்தென வந்தார் நமக்கென் கிளிமொழியே.

நடுங்கு அ பல் கோடி நரபாலருக்கு ஒரு நாதன். கங்கை தொடும் கப்பல் காவலன் - கங்கை வரை வடநாட்டவர்களை வென்ற கப்பல் காவலனான. நாம் ஒடுங்க - நாம் ஒடுங்கி வருந்தியிருக்க. பல் காலம் மறந்தவர் - பல காலமாய் நம்மை மறந்த தலைவர். உததியின் முன் - கடலினிடத்து. கெடும் கப்பல் வந்தென - அழியும் கப்பல் (கெடாமல் திரும்பி) வந்தமைபோல ; இது, தலைவனைக்குறித்தது. உததி - கடல் ; வடசொல். கிளிமொழி ; தலைவியைக் குறித்தது. நமக்கு என் – (இனி,) நமக்கு வருத்தமேன் ? (252)

## தலைவன் வந்துழி நினைந்தமை வினாதல்

[தலைவன் பொருளைமட்டும் நினைத்துத் தம்மை நினையாமையைப் பாங்கி எடுத்துரைத்தது]

வஞ்சக் களிறு மருதுஞ் சகடும் வரவிடுத்த
கஞ்சற்கு நன்மரு கன்கரு மாணிக்கன் கப்பலன்னார்
அஞ்சத் தகும்வெஞ் சுரம்போ யரும்பொரு ளார்வமுற்ற
நெஞ்சத்து நாங்களும் வந்தறி யேங்கொ னெடுந்தகையே.

வஞ்சக் களிறும் - வஞ்சகமாய்க் கஞ்சன் ஏவ வந்த குவலயாபீடம் என்னும் யானையையும். மருது - இரு மருதமரங்களையும். சகடு - சகடாசுரனையும். அரும் பொருள் ஆர்வம் உற்ற நெஞ்சத்து - அரிய பொருள் தேடும் ஆசையுள்ள உம் மனத்து. நாங்களும் வந்தறியேம் கொல் - எங்கள் நினைப்பு வந்ததாகத் தெரியவில்லையே ? ஒப்பு : தடங் கடலின்...... இவள் மேவ மனத், திடந்தந் தறிவதுண் டோவொரு

நாள்நம் இறையவனே ’ (அம்பிகாபதிக். 324.). நெடுந்தகை — தலைவன் ; நெடுந்தகை என்றது வஞ்சப் புகழ்ச்சியும் ஆம். இது, தலைவனுக்கு ஆசை முதலில் பொருண்மேலேயே ஒழிய, எங்கள் மேல் இல்லை யென்று பாங்கி இடித்து கூறியது.

(பி - ம்.) 3. ஆர்வ மும்பின். (253)

## நினைந்தமை செப்பல்

[தலைவன், தான் தலைவியை எப்பொழுதும் நினைத்திருந்தமை செப்பல்]

நிரைநின்று மேயமுன் கோலொன்றை யூன்றிநன் னீர்யமுனைக்
கரைநின் றுறங்குகண் ணன்கரு மாணிக்கன் கப்பல்முன்னீர்த்
திரைநின்று வந்த திருவனை யாயென்றன் சிந்தையுன்றன்
வரைநின்ற தால்நினைப் பேன்மறப் பேனெங்ஙன் மற்றுனையே.

நிரை நின்று மேய - பசுக் கூட்டம் நின்று மேயுமாறு. கோல் ஊன்றி நின்று உறங்கும் கண்ணன் என்க. முன்னீர் திரை நின்று வந்த திரு அனையாய் - பாற்கடல் அலையிடை நின்று தோன்றிய திருமாது போன்றவளே ! இது தலைவியை நோக்கிக் கூறியது. உன்றன் வரை நின்றதால் - உன்னையே அளவு அல்லது எல்லையாகக் கொண்டு நின்றதால்; எங்ஙன் நினைப்பேன், மறப்பேன்? (நெஞ்சிலேயே இருத்தலால்), நினைப்பதும் மறப்பதும் நிகழா என்றபடி.

(பி - ம்.) 3. சிந்தை யுன்னை. (254)

## ஆற்றுவித் திருந்தமை வினுதல்

[தலைவன், தன் பிரிவில் பாங்கி தலைவியை ஆற்றுவித்திருந்தமையை வினவுதல்]

வணங்கப் பகைவடி வாளெடுத் தோன்வெய்ய வாணெடுங்கண்
சுணங்குற்ற கொங்கையர் வேள்தொண்டை மான்கப்பற் [சேரலர்போல்
உணங்கத் தனிவைத் தரும்பொருள் மேற்செல்ல [வொண்டொடிநீ
அணங்கைத் தனியிருந் தாற்றிய வாறிங் கறிந்திலமே.

பகை வணங்க, என மாற்றுக. வடி வாள் - கூரிய வாள். வெய்ய வாள் நெடும் கண் - கொடிய வாள்போன்ற நீண்ட கண். சுணங்கு உற்ற கொங்கையர் ; சுணங்கு - பொற்றேமல். சேரலர் - பகைவர். உணங்க - வருந்திவாட. தனி வைத்து - தனியே இருக்க விட்டுச் சென்று. ஒண்டொடி என்றது பாங்கியை. அணங்கை - தலைவியை ; தலைவி தன்னைவிட்டுப் பிரிந்து இருந்த நிலையில் பாங்கி அவளை ஆற்றியதை வியந்து தலைவன் வினவியது.

(பி - ம்.) 1. செவோ. (255)

## ஆற்றுவித் திருந்தமை கூறல்

[பாங்கி தலைவியைத் தான் ஆற்றுவித்திருந்தமைக் கூறுதல்]

வாட்டிய வெங்கலி வாராமல் வையத்து மற்றையுகம்
காட்டிய மால்தொண்டை மான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பா
தீட்டிய தொய்யிற் றிருமுலை யாடுயர் தீர்க்கரிதோ
சூட்டிய காவியு நீமுத லுட்சொன்ன சொல்லுமுண்டே.

கலி - பஞ்சம். மற்றையுகம் - இக்கலியுகம் அல்லாத முன்னைக் கிருத, திரேதா, துவாபர யுகங்கள் ; 189. தொய்யில் - மகளிர் கொங்கைகளிலும், தோள்களிலும் அணிபெற எழுதுங் கோலம். தீட்டிய - எழுதிய. சூட்டிய காவி - நீ தலைவிக்குச் சூட்டிய நீலமலர். இப்பொழுதும் அதனை அவள் கூந்தலை விட்டு நீக்காமல் வைத்துக் கொண்டிருத்தலையும், வேறு புதிய மலர் முதலியன அணியாமை யையும் குறித்தது. முதலுட் சொன்ன சொல் ; 9 ஆம் செய்யுளிற் காண்க. இது, பாங்கி தலைவியின் கற்பின் திறத்தையும், உறுதி யையும் தலைவற் குரைத்தது.

(பி - ம்.) 3. திருமுலை யாண் மையல், திருமுலை யார்துயர். (256)

## 15. வரைவு மலிவு

[மணஞ் செய்துகொள்ளுஞ் செய்திகளின் மிகுதி]

### வரைவு மறுத்தல்

தளையாரு நண்புடைச் சான்றவ ரான்ற தளையவிழ்பூங்
களையார் வயற்றுவ ரைக்கரு மாணிக்கன் கப்பல்சுற்றும்
வளையாழி கண்டன்ன சுற்றமெல் லாம்வர வேண்டுமின்னம்
இளையா ளிவளும் விரைவதென் னீர்வரைந் தெய்துதற்கே.

தளை ஆரும் நண்பு - பிணிப்புக்கொண்ட நட்பு. சான்றவர் - மேலோர். ஆன்ற - சிறந்த. தளை அவிழ் பூம் களை ஆர் - கட்டவிழ்ந்த பூக்களாகிய களைகள் பொருந்திய. வயல் துவரை - வயல்கள் சூழ்ந்த துவரை நாட்டிலுள்ள. கப்பல் சுற்றும் - கப்பல் நகரைச் சூழ்ந்துள்ள. வளை ஆழி கண்டன்ன - சங்குகளையுடைய கடலைக்கண்டாற் போன்று நிறைந்த. சுற்றம் எல்லாம் வர வேண்டும் - சுற்றத்தவர் யாவரும் வரவேண்டும்; சுற்றத்திற்குக் கடல் ஒப்பு. இவளும் இன்னும் இளையாள் - இத்தலைவியும் மேலும் இளமைப் பருவத்தினள்; வரைந்து எய்துவதற்கு நீர் விரைவது என் - மணந்து அவளை அடைவதற்கு ஏன் விரைகின்றீர்? இது, தலைவற்குப் பாங்கி கூறியது.

(பி - ம்.) 2. களைமார். (257)

### மறுத்துழித் தலைவியிரங்கல்

[மறுத்தமை அறிந்து தலைவி பாங்கியிடங் கூறி வருந்துதல்]

சொல்லே ரலங்கலெங் கோன்றெண்டை வேந்தன் றுவரை
அல்லே பெரும்பக லாக்கிய மாய னணிவரையில் [மன்னன்
எல்லேர் மணிமுலை யாயென்ன தாகு மிறைவர்நெஞ்சம்
வல்லே வரைவிசை யாதிசை யோடு மறுத்ததற்கே.

சொல் ஏர் அலங்கல் - அழகிய சொல்மாலை. பெரும் பகல் அல்லே ஆக்கிய மாயன்: இது பாரதப் போரில் கண்ணபிரான் பகலில் கதிரவனை ஆழியால் மறைத்து இருட்டாக்கிய செய்கை குறிப்பிட்டபடி. எல் ஏர் மணி முலையாய் - ஒளி சிறந்த இரத்தின ஆரங்கள் அணிந்த முலையாய்; இது, பாங்கியை நோக்கித் தலைவி விளித்தது. மணி, முத்தும் ஆம். வல்லே - விரைவில். இசையாது - உடன்படாது. இசையோடு - ஆதாரத்தோடு, பொருத்தத்தோடு. மறுத்ததற்கு இறைவர் நெஞ்சம் என்னதாகும் என இயைக்க. (258)

## காதலன் முலைவிலை காதலிக்குரைத்தல்

[தலைவன் விடுத்த பரிசத்தைப் பாங்கி தலைவிக்குரைத்தல்]

கனத்துக் கிசைந்தகை யான்கரு மாணிக்கன் கப்பலெங்கள்
இனத்துக் கிசைந்த விளங்கொடி யேநின்னை யீன்றவன்னை
மனத்துக்கும் நின்றந்தை வாடா வளமைக்கும் வாய்த்தநின்
[பொன்
தனத்துக்கு மேற்பத் தனங்கொடுத் தார்நந் தலைவரின்றே.

கனம் - மேகம். இனம் - பெண்களின் இனம். நின் தந்தை வாடா வளமை - உன் தந்தையின் குறையாச் செல்வச் சிறப்பு. தனம் - முன்னது கொங்கை, பின்னது பொன். அன்னை, தந்தை இவர்களின் விருப்பத்திற்கும், தன் தகுதிக்கும் ஏற்பத் தலைவர் கொடுத்தார் பொன் என்க. (259)

## குரவர்வரைவு எதிர்ந்தமை கூறல்

[தலைவியின் மணத்திற்கு உறவினர் இசைந்தமை பாங்கி கூறுதல்]

சென்னெலுங் காவியுஞ் சேலுங் கயலுஞ் செறியுமிளம்
கன்னலுஞ் சூழ்துவ ரைக்கரு மாணிக்கன் கப்பலன்னாய்
மன்னவன் சிந்தை மகிழநங் கேளிர் வரைவெதிர்ந்தார்
அன்னைதன் கண்ணு மயலவர் வாயு மடைக்கவென்றே.

சென்னெல் ; சம்பாநெல் ; செந்நெல் என்பது எதுகை நோக்கித் திரிந்தது. காவி - நீலமலர். சேல், கயல் ; இவை மீன் வகைகள். கன்னல் - கரும்பு. மன்னவன் - தலைவன். கேளிர் - உறவினர். வரைவு எதிர்ந்தார் - நீ மணம் புரிதலுக்கு உடன்பட்டனர். அன்னை தன் கண் - தலைவியை வெளியேகாவாறு உற்று நோக்கியிருந்த அன்னை கண்கள். அயலவர் வாயும் - அலர் தூற்றுபவரான அயலார் வாய்களும். அடைக்க - அடைத்துக்கொண்டு ஒடுங்க. இது, பாங்கி கூற்று. (260)

(பி - ம்.) 2. கப்பலன்னீர். 3. மகிழுநங் கண்ணு மலைவாயின் வாயும்
4. மடைக்கெனவே.

## தலைவி மகிழ்ச்சி

[வரைவுக் குடன்பட்ட செய்தி கேட்ட தலைவி, தன் மகிழ்ச்சியைப் பாங்கிக்கு அறிவித்தல்]

தோட்டியை யுஞ்சுளி யுங்களி யானைமன் றெண்டையர்கோன்
நாட்டிய செந்தமிழ்க் கப்பனன் ஞட்டி னலமுதனாள்
காட்டிய பாலு மிடையின் முயன்று கடையிலிங்ஙன்
கூட்டிய நீயுமுண் டாகவென் னேபின் குறையெனக்கே.

தோட்டி-யானையைச் செலுத்தும் அங்குசம். சுளியும்-கோபித்து ஒடிக்கும். களி - மதங்கொண்ட. முதல்நாள் - முதலில் தலைவனைக் கண்ட அன்று, நலம் காட்டிய பாலும் - எனக்கு நன்மை அளித்த விதியும். இடையின் முயன்று - இடையே பல முயற்சிசெய்து. கடையில் - முடிவில். இங்ஙன் கூட்டிய நீயும். இவ்விதம் தலைவன் என்னை வரைந்து கொள்ளுமாறு கூட்டுவித்த நீயும். உண்டாக - ஏற் பட்டிருக்க. இது, தலைவி, பாங்கியின் முயற்சியைப் பாராட்டிக் கூறியது. (261)

## பாங்கி மகிழ்ச்சி

கவ்வைக் கலிகடிந் தோன்கரு மாணிக்கன் கப்பல்சுற்றும்
பவ்வத் தமுதன்ன பான்மொழி யாய்பல நாளுமுற்ற
எவ்வக் கடல்கடந் திப்படிக் காணவு மெய்தியநின்
செவ்வித் திருமுக முங்களி கூரவென் சிந்தையதே.

கவ்வை - துன்பம். கலி - கொடுமை, அல்லது வறுமை. பவ்வம் - கடல். பவ்வத்து அமுது அன்ன பால் மொழியாய் - பாற் கடலிற் பிறந்த தேவாமிருதம் போன்ற இனிய மொழியுடைய தலைவியே! எவ்வம் - துயரம். இப்படிக் காணவும் - தலைவன் உன்னை மணந்து கொள்ளுமாறு காணவும். நின் செவ்வி திருமுகம் - உன் அழகிய திருமுகம். களிகூர - மிக்க மகிழ்ச்சி கொள்ளவே. பலநாளும் உற்ற - நெடுங்காலமாக உள்ள. என் சிந்தையது - என் மன நோக்கமாகும். இனி, பல நாளுமுற்ற எவ்வக் கடல் எனினும் ஒன்றும்.

(பி - ம்.) 2. பான் மொழியான்; 3. எய்தியதென். 4. களிகூருமென், (262)

### தலைவி மணம்பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல்.

[தலைவி தன் மணம் பொருட்டாகத் துர்க்கா தேவியை வழிபடுதலைப் பாங்கி தலைவனுக்குக் காட்டுதல்]

சூத வனம்புடை சூழ்துவ ராபதித் தொண்டையர்கோன்
போதவிழ் சாரற் பொதியில்வெற் பாநின் பொருப்பனைய
மேதகு திண்புய மாமுலை தோய்முன்றில் வேட்டுநின்றே
காதலி யிங்கு னணங்கைப் பராநிலை கண்டருளே.

சூதவனம் - மாந்தோட்டங்கள். மே தகு - சிறப்பமைந்த. மா முலை தோய் பொருப்பு அனைய மே தகு திண்புய முன்றில் வேட்டு என இயைக்க. வேட்டுநின்று - மணத்தை விரும்பி நின்று. முன்றில் - இடம். அணங்கை - துர்க்காதேவியை. பரா நிலை - வணங்கும் நிலை. (263)

### கண்டோன் மகிழ்ச்சி.

[அதனைக் கண்ட தலைவனது மகிழ்ச்சி]

வான்வேண் டவுமணிவேண் டவும் வால்வளை வேண்டவும்பொன்
கான்வேண்ட வுந்தருங் கைக்கரு மாணிக்கன் கப்பலன்ஞள்
யான்வேண்ட நின்று வருந்தும் பொருளுக் கிவளணங்கைத்
தான்வேண்டி நின்று தளர்கின்ற வாவென் றனிநெஞ்சமே.

வான் - மேகம். மணி - சிந்தாமணி. வால்வளை - ஒளி தங்கிய சங்கநிதி. பொன்கான் - பொன்னுலகில் உள்ள கற்பகவனம்; பொன் மயமான கற்பகவனமும் ஆம். அவன்போலக் கொடுக்கும் தகுதிபெற, வான் முதலியன தவங்கிடக்கும் பெருமை வாய்ந்தவன் கருமாணிக்கன் என்றது. 'தனி நெஞ்சமே, யான் வேண்ட நின்று வருந்தும் பொருளுக்கு, இவள் அணங்கைத் தான் வேண்டித் தளர்கின்றவா' என்? என்க. பொருள் : இங்கு வரைவு. (264)

## 16. அறத்தொடு நிற்றல்

(அறத்தொடு நிற்றல் - உண்மை கூறுதல்; உண்மை கூறுதலே அறமாதலின், இஃது இப்பெயர் பெற்றது. அறம் என்பது தக்கது, பெண்டிற்கு அறமாவது கற்பு)

கையறு தோழி கண்ணீர் துடைத்தல்.

[தலைவியை ஆற்றிச் செயலற்ற தோழி அவள் கண்ணீரைத் துடைத்தல்]

முழவந் தழங்கிய முன்றிலி னின்று முடியரசர்
தொழவந்த தொண்டையர் கோன்கப்பல் சூழ்பசுந் தோகை
எழவந் தருவி யிழுமெனுஞ் சார லிருகயற்கண் [யினம்
அழவந்த காரண மென்னைகொல் லோவின்சொ லாரணங்கே.

முழவம் தழங்கிய முன்றிலில் - பேரிகை முழங்கும் வாயிலின் முன்புறத்தில். அருவி எழ வந்து இழும் எனும் சாரல் - மலையருவிகள் மேற்கிளம்பி விழ இழும் எனும் ஓசையை உண்டாக்கும் மலைச் சாரலில். பசும் தோகை இனம் - பசுமையான மயில் கூட்டம். எழ - எழும்படி. அணங்கு என்றது, தலைவியை. (265)

கலுழ்தற்காரணங் கூறல்.

[தலைவி தான் வருந்துவதற்குக் காரணங்கூறல்]

மாமே னகுலன்சொன் மாமத வாரண மேலுதயன்
தோமேது மில்லவன் றொண்டையர் கோன்கப்பற் றோகை
[யன்னீர்
யாமேது மில்லை யிடர்செகுத் தன்ப ரெதிர்ப்பட்டநாள்
தாமே மகிழ்ந்தின்று தாமே கலுழ்ந்த தடங்கண்களே.

மா மேல் நகுலன் - குதிரையேறிச் செலுத்துவதில் நகுலன் போன்றவன்; பாண்டவரில் ஒருவனான நகுலன் குதிரையேறிச் செலுத்துவதில் சிறந்தவன்; 'நகுலன் பரியேறினல்' (பெருந். பாரதம். உத்யோக.) சொல் - புகழ்ச்சொல். உதயன் - உதயணன்; இது தொகுத்தல் விகாரம். இவன் யானையை அடக்கியாளும் வித்தையில் வல்லவன். தோம் ஏதும் இல்லவன் - குற்றம் யாதும் இல்லாதவன். இடர் செகுத்து - துன்பங்களை அழித்து. கலுழ்ந்த - கலங்கின. தடங்கண்கள் அன்பர் எதிர்ப்பட்டநாள் தாமே மகிழ்ந்து, இன்று தாமே கலுழ்ந்த: யாம் ஏதும் இல்லை, என இயைக்க. இது, தலைவி கூறியது. (266)

### தெய்வந் தெளிந்தமை கூறல்

[தலைவன் தெய்வங்காட்டிச் சூளுரைத்துத் தன்னைத் தெளியச் செய்யத் தான் தெளிந்தமையைத் தலைவி பாங்கிக்குக் கூறுதல்]

ஏற்றிய வங்க மெதிர்கட ஞேக்கி யினியசொல்லித்
தேற்றிய வஞ்சினந் தேறினம் யாமெண் டிசாமுகமும்
தோற்றிய வண்புக ழான்ரெண்டை மான்கப்பல் சூழ்துறையில்
போற்றிய வன்பரென் ஞேநினை வாரின்று பூங்கொடியே.

ஏற்றிய வங்கம் - சரக்குகள் ஏற்றப்பெற்ற கப்பல். எதிர் கடல் நோக்கி - எதிர்கொண்டு தான் செல்லவேண்டிய கடலைப் பார்த்து. தேற்றிய - எனக்கு ஆறுதலளித்த வஞ்சினம் - சூளுரையை. தேறினம் யாம் - நாம் தேறி ஆற்றியிருந்தோம். இங்குத் தலைவன் கடல் மீது ஆணையிட்டுக் கூறியது குறிக்கப்படுகிறது. எண் திசாமுகமும் தோற்றிய வண் புகழான் - எட்டுத் திக்குக்களிலும் உண்டாக்கிய கொடைப் புகழை உடையவன். துறையில் - கடற்றுறையில். போற்றிய அன்பர் - தெய்வத்தைப் போற்றிச் சூளுரைத்த அன்பர். என்னோ நினைவார் - என்ன நினைப்பார்? பூங்கொடியே என்றது பாங்கியை.

(பி - ம்.) 1. தேறின னியாமெண். (267)

### தெய்வம் பொறைகொளச் செப்பல்.

[தலைவன் சூளுரை தவறியதற்கு அவனைப் பொறுக்குமாறு தெய்வத்தை வேண்டல்]

கார்க்குன்று கொண்டு கவிக்கட லாகக் கருங்கடலைத்
தூர்க்குங் கனைகழற் ரெண்டையர் கோன்கப்பல் சூழ்சிலம்பர்
யார்க்கும் பழுதுரை யாரிது நீமற வின்னருவி
ஆர்க்கும் வரையணங் கேயணங் கேலென்ப மன்பருக்கே.

கரும் கடலை கவி கடலாக - கரிய கடலைக் குரங்குக் கடல் ஆகும்படி. கார் குன்று கொண்டு தூர்க்கும் கரிய மலைகளைக் கொண்டு தூர்க்கும். கவிக்கடல் என்றது, குரங்குகளின் மிகுதியைக் குறித்தது. இது, இராமபிரான் சேதுபந்தனம் செய்ததைக் குறித்துப் பாட்டுடைத் தலைவனை இராமபிரானாக ஏற்றிக் கூறியது. சிலம்பர் - தலைவர். யார்க்கும் பழுது உரையார் - யாரிடமும் தவறான சொல் கூறமாட்டார். நீ மற - நீ தலைவர்பால் கொண்ட தவறான எண்ணத்தை மறந்துவிடு. இன் அருவி ஆர்க்கும் - இனிய அருவிகள் ஒலிக்கும். வரை அணங்கே - மலை வாழும் சூர மகளான தெய்

வமே. அன்பருக்கு அணங்கேல் - தலைவருக்குத் தீங்குண்டாக்காதே. என்பம்- என்று துதிப்போம். (268)

## இல்வயிற் செறித்தமை கூறல்.

[தலைவி, தன்னை அன்னை வீட்டின்புறம் போகாது தடுத்தமையைப் பாங்கிக்குக் கூறுதல்]

மாவையன் னார்தம் மதனையன் னான்வண்மை வானவர்தம்
காவையன் னான்றெண்டை மான்கரு மாணிக்கன்கப்பல்வெற்பில்
பூவையன் னாய்புறம் போகலென் றாளன்னை பொற்றொடிக்கைப்
பாவையன் னாயழற் பார்வைதன் னாலென்னைப் பார்த்திருந்தே.

மாவை அன்னார்தம் - திருமகள் போன்ற அழகுடைய தன் காதன் மகளிருக்கு. மதனை அன்னான் - மன்மதனைப் போன்றவன். வண்மை - கொடையில். வானவர் தம் காவை அன்னான் - தேவர்களுடைய கற்பகச் சோலையை ஒப்பவன். பொற்றொடிக்கை பூவை அன்னாய் என்றது, தலைவியை நோக்கிச் செவிலி கூறியது. பூவை - நாகணவாய்ப்புள். புறம் போகல் - வெளியே போகாதே! அன்னை, என்னை அழற் பார்வை தன்னால் பார்த்திருந்தே, 'பூவை அன்னாய் புறம்போகல்' என்றாள் என இயைக்க; பாவை அன்னாய், என்றது, பாங்கியை. அன்னை - செவிலி. இது, மறை புலனானமையைத் தலைவி தோழிக்குக் கூறியது. (269)

## கனையிருள் அவன் வரக்கண்டமை கூறல்

[தலைவன் இருட்போதில் வந்தமை செவிலி அறிந்து கூறியதைத் தலைவி பாங்கிக்கு அறிவித்தல்]

மருக்கொண்ட பூங்கொடி மல்லிகைப் பந்தரில் மானிடர்தம்
உருக்கொண்டு சாலநின் றொல்குமென் றாளன்னை யொண்டிரை
[தோய்
கருக்கொண்ட லன்னகை யான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
வெருக்கொண்ட கங்குல் வரவறிந் தாள்கொல் விளங்கிழையே.

மரு - மணம். சால நின்று ஒல்கும் - நெடுநேரம் நின்று மிகவும் தளரும். ஒள் திரை தோய் கரு கொண்டல் - ஒள்ளிய கடலில்

படிந்த நீருண்டு கருவுற்ற மேகம்; திரை: சினையாகு பெயராய்க் கடலைக் குறித்தது. வெருக்கொண்ட - அச்சத்திற்கு இடமாகக் கொண்ட. கங்குல் வரவு - இரவில் தலைவன் வருவதை. அறிந்தாள் கொல் - தாய் அறிந்து கொண்டாள் போலும். விளங்கிழையே என்றது, பாங்கியை. மானிடர் உருக்கொண்டு ஒல்கும் என்ற கருவல், செவிலி தான் கண்டது ஒரு பேயோ என்று ஐயுற்றாள் என்பதும் ஆம். ஒப்பு: 'செறியிருட்கண், பேயொன்று கண்டஞ்சினே னென்று கூறினள் பெய்வளையே' (அம்பிகாபதிக். 345.) இதுவும் தலைவி பாங்கிக்குக் கூறியது. (270)

## வெறிக்கழுங்கல்.

[வெறியாடலின் பின் செவிலி வருந்தினமையைப் பாங்கி தலைவிக்கு உரைத்தல்]

கழுங்குங் குறமகள் கட்டும் படுகுறி கண்டெனன்னை
தழங்குஞ் சிறுகுடி வேலற் கரிதேனுந் தாரரசர்
தொழுங்குன்ற வேளனை யான்றெண்டை மான்வண் டுவரை
[மின்னே
அழுங்குந் தனிநெஞ் சடாப்பழி மேல்வந் தடுத்ததற்கே.

கழங்கு - வேலன் கழற்சிக் காய்களைக் கொண்டு குறி கூறுவது. குறமகள் கட்டு - குறத்தி கூறும் குறி; குறத்தி குறி சொல்பவளாதலின், கட்டுவிச்சி எனப்படுவள்; திருக்கோவையார் 285. கோளு; திருநெடுந்தாண்டகம். 11; 'கட்டினுங் கழங்கினும் வெறியென இருவரும், ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்' என்ற, தொல். பொருள் 113. ஆம். சூத்திரமும் காண்க. கண்டேன் என்பது கண்டென் எனக் குறுகியது; விகாரம். படுகுறி - கேட்டை அறிவுக்கும் குறி; பொய்க்குறியும் ஆம். தழங்கும் சிறு குடிவேலன் - ஒலியுடைய சிறு குடியில் வாழும் வேலன்; வேலற்கு அரிதேனும் - வேலனுக்குத் தலைவி நோயின் உண்மைநிலை அறிந்து கூறமுடியாதேனும். குன்றவேல் அனையான் - மலைக்கடவுளாகிய குமாரவேள்போன்ற கருமாணிக்கன் என்க. மின்னே என்றது, தலைவியை. அடாப்பழி - தகாத பழிச்சொல். அடாப்பழி வந்து அடுத்தற்கு அன்னை தனி நெஞ்சு அழுங்கும்என இயைக்க. தனி நெஞ்சு - இதுவரை துன்புற்று வருந்தாத ஒப்பற்ற மனம். இது, பாங்கி தலைவிக்குக் கூறியது. (271)

தலைவி தோழிக்கறத்தொடு நிற்றல்.

கருந்தினை யார்புனத் திற்கரு மாணிக்கன் கப்பல்வெற்பர்
விருந்தின ராய்வந்து வெம்பசி கூறி விளங்கிழையாய்
திருந்திய சிற்றிற் சிறுசோ றிடுமென்று தேக்கிலையிட்
டிருந்த விருப்புமென் னேவன்ன மேயின்ன மென்கண்ணதே.

கரும் தினை ஆர் - கருந்தினை என்னும் தானியம் நிறைந்த. விளங்கிழையாய்: இது, தோழியை நோக்கித் தலைவி கூறியது. வெற்பர் - தலைவர். திருந்திய சிற்றில் - நாம் முன் செவ்வையாய் அமைத்த சிற்றிலில். வெம் பசி கூறி சிறு சோறு இடும் என்று தேக்கு இலை இட்டு இருந்த இருப்பு அன்னமே இன்னம் என் கண்ணதே எலா இமைக்க. என்னே - இது என்ன காரணம்? இவ்வாறு தலைவி தோழிக்கு அறத்தொடு நின்றனள் என்க.

(பி - ம்.) 1. யார்புனத். (272)

பாங்கி வெறிவிலக்கு

என்னிரு கைகுவித் திங்குன்னை யானுன் றிரப்பனுயர்
சொன்னிரு பற்கினி யான்றெண்டை மான்கப்பற் றெரல்
[சிலம்பின்
முன்னிரு கைகொண் டொருகைவெற் போட முனிதெய்வமே
பன்னிரு கைகொண்டு வந்ததென் னேவிந்தப் பான்மறிக்கே.

இரப்பன் - இரந்து வேண்டிக் கொள்கின்றேன். உயர் சொல் நிருபற்கு இனியான் - உயர்ந்த சொல்வேந்தராகிய புலவர்க்கு இனிய நண்பன். முன் - முன்னம். இருகை கொண்டு - இரண்டு கைகளைக் கொண்டே. ஒரு கை வெற்பு ஓட முனி - துதிக்கையுடைய ஒரு யானை ஓடும் வண்ணம் கோபித்த. இது, வள்ளியம்மையாரின் திருமணச் செய்தி. தெய்வமே - தெய்வமாகிய முருகனே! இப்பால் மறிக்கே - இந்த வெள்ளாட்டிற்காக. பன்னிரு கைகொண்டு வந்தது என்னே - பன்னிருகைகளுடன் வந்தது ஏன்? இது, முருகனை இகழ்ந்தது போல, வேலனைப் பரிகசித்தது. இவ்வாறு பாங்கி வேலனிடம் கூறி வெறிவிலக்கினள் என்க. பால்மறி - வெள்ளாடு. ஒரு கை வெற்பு - யானை; வெற்பு என்றது - அதன் உருவின் பெருமை நோக்கி.

(பி - ம்.) 1. திரப்பனியல். (273)

### தோழியை வினுதல்.

வெயிலுற்ற மாணிக்க மேவுஞ் சுடிகை வெயிலணைமேல்
துயிலுற்ற மாதவன் றெண்டையர் வேந்தன் றுவரையர்கோன்
அயிலுற்ற வேற்க ணணங்குற்ற காத லறிந்தனையோ
குயிலுற்ற மென்சொல் மயிலுற்ற சாயற் கொடியிடையே.

*வெயில் உற்ற - ஒளிபொருந்திய. சுடிகை - உச்சிக் கொண்டை. வெயில் அணை - வெப்பத்தைத் தரும் ஆதிசேடனாகிய படுக்கை. அயிலுற்ற வேல் கண் அணங்கு - கூராய் அராவப்பட்ட வேல் போன்ற கண்களையுடைய தலைவி. குயிலுற்றமென் சொல் மயிலுற்ற சாயல் கொடியிடையே, என்றது பாங்கியை நோக்கி விளித்தது. உற்ற - அடைந்த. சாயல் - நிறம் அல்லது அழகு ஆம். இது, செவிலி வினு.* (274)

### பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடுநிற்றல்.

[முன் தலைவன் தலைவிக்குக் கொடுத்த பூமாலை காரணமாக உண்டானவற்றைப் பாங்கி செவிலிக்குக் கூறி அறத்தொடு நின்றது]

எடுத்தான் வரைமர மேழுந் துளைபட வெங்கணைமுன்
தொடுத்தான் வரிகழற் றெண்டையர் கோன்கப்பல் சூழ் [சிலம்பில்
அடுத்தா னொருவன் றொடுத்தநன் மாலையை யாதரிப்பக்
கொடுத்தா னவனிவள் கொண்டாள் வளர்குங்கு [மக்கொங்கையே

*வரை எடுத்தது, கிருஷ்ணவதாரத்தில். மரம் ஏழும் துளைபட - ஏழு சால விருக்ஷங்களும் ஒருங்கே துளைபடுமாறு; இது, இராமாயண வரலாறு. 'சிலம்பில் ஒருவன் அடுத்தான்; மாலையைக் கொடுத்தான்; அதனை இவள் கொங்கை கொண்டாள்' என்று பாங்கி செவிலிக்குக் கூறி, அறத்தோடு நின்றாள் என்க. வளர் கொங்கை, குங்குமக் கொங்கை என்று கூட்டுக. ஆதரிப்ப - ஏற்குமாறு.*

(பி - ம்.) 1. வெய்கணை. 3. யாதரித்தக். (275)

## புனறரு புணர்ச்சியறத்தொடு நிற்றல்

[தலைவி கடற்றிரையால் முன்னொரு நாள் ஈர்த்துச் செல்லப்பெற்று அழுந்திய நிலையில், அங்கு ஓர் ஆடவன் தோன்றி அவளை எடுத்துக் காப்பாற்றிய செய்தியைப் பாங்கி கூறி அறத்தொடு நின்றது.]

காருந்து மென்குழ லாய்கரு மாணிக்கன் கப்பல்மன்றில்
ஆருந் தொகுவுழிக் கண்டில மேல்வண்ட லாடுமெம்மை
ஆருந் திரைகொண் டொழுகிய நாளுட னாழ்ந்தெடுத்துச்
சோருந் துயரமொழிந்ததென் றுரனொரு தோன்றலன்றே.

கார் உந்து மென் குழலாய் - மேகம் என்று சொல்லும்படி வளர்ந்த மென்மையான கூந்தலையுடையவளே ! கார் - மேகம்; குழலுக்குக் கார்; அடர்த்தி யாலும் நிறத்தாலும். குழலாய் : செவிலியை விளித்தது. மேல் வண்டல் ஆடும் எம்மை - கரைமீது வண்டல் விளையாடிக் கொண்டிருந்த எங்களை, ஆரும் திரைகொண்டு ஒழுகிய நாள் - நிறைந்த அலையீர்த்துக் கொண்டு சென்றபோது. ஆரும் தொகு உழி கண் டிலம் - (உதவியின் பொருட்டு) ஒருவரும் அங்கு வந்து சேரும் வழியைக் கண்டோம் இல்லை. உடன் - உடனே. ஒரு தோன்றல் ஆழ்ந்து எடுத்து - ஒரு தலைமகன் எங்களை மூழ்கி எடுத்து. சோரும் துயரம் ஒழிந்தது என்றான் - வருந்தும் துயரம் நீங்கிற்று என்று ஆறுதல் கூறி அருள்புரிந்தான். இவ்வாறு கூறி, தன்னை வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றனள் என்க. (276)

## களிறுதரு புணர்ச்சி யறத்தொடுநிற்றல்

[தலைவியை முன் ஒரு யானை தாக்கவர அவளை அதனின்று தலைவன் காப்பாற்றிய செய்தியைப் பாங்கி செவிலிக்குக் கூறி அறத்தொடு நிற்றல்]

கங்கைக்கு வாய்த்த கழற்கரு மாணிக்கன் கப்பலன்னீர்
இங்கித் தலத்து நிகரில்லை யேயெங்க ணீர்புலர்த்தி
வெங்கைக் கரும்பை விடுவித்து மேல்வந்த வெங்களிற்றின்
துங்கப் பருமணிக் கோடுபுக் கீடு தொலைத்தவர்க்கே.

கங்கைக்கு வாய்த்த கருமாணிக்கன் - கங்கைக்கு இடமான பாதத்தையுடைய திருமால் போன்ற கருமாணிக்கன். இது திருமால் பாதத்தினின்று கங்கை பிறந்த புராண வரலாற்றைக்

குறிப்பதாகும்; அன்றேல், கருமாணிக்கன் கங்கைபாயும் வடநாட்டை வென்ற செய்தியைக் கூறியதும் ஆம். என் கண்ணீர் புலர்த்தி - என் கண்ணீரை அறச் செய்து. வெம் கை கரும்பை விடுவித்து - தலைவியின் கையிலிருந்த விரும்பத்தக்க கரும்பை அவள் கையைவிட்டு நீங்கச் செய்து; (தலைவியின் கையில் கரும்பு இருந்ததை யானை கண்டு அவள்மீது எதிர்த்துச்செல்ல அதைத் தலைவன் பார்த்து, அக்கரும்பினை நீக்கி, என்க.) மேல் வந்த - அவளைத் தாக்க வந்த, வெம் களிறு - கொடிய களிறு. துங்க பரு மணி கோடு - உயர்ந்த முத்துக்கள் பிறக்கும் இடமான கொம்புகளின் இடையே. முத்துக்கள் பிறக்கும் இடங்களில் யானைத் தந்தமும் ஒன்று ஆகும். மணி - அழகும் ஆம். ஈடு - அதன் வலிமையை. தொலைத்தவர், தலைவர். (277)

## நற்றாய் செவிலியை வினுதல்

[நற்றாய்—தலைவியைப் பெற்றதாய்]

நீலமுண் ணுவுவர் நீருமுண் ணுவிண்ணி னின்றதிரும்
காலமெண் ணுமுகில் போல்கரு மாணிக்கன் கப்பல்மின்னே
வேலுமுண் ணுநஞ்சும் வெஞ்சுடர் வாளியு மேவுகண்ணுள்
பாலுமுண் ணுள்கண்ணும் பாயல்கொள் ளாளென் பரிவுற்றதே.

(மேகத்தைப் போல்) நீலம் உண்ணு - கருநிறம் அடையாமலும். உவர் நீரும் உண்ணு-கடலின் உவர் நீரைப் பருகாமலும். விண்ணின் நின்று அதிரும் - வானில் நின்று ஒலிக்கும். காலம் எண்ணு - மாரிக் காலத்தை எதிர் நோக்காத. முகில் போல் - மேகத்தைப் போன்ற கருமாணிக்கம் என்க. இஃது இல் பொருள் உவமை. முகில் கருநிறத்தை மேற்கொள்ளும்; கடலின் உவர் நீரைக் குடிக்கும்; விண்ணில் நிற்கும்; மாரிக்காலத்தில்தான் பெய்யும்; அவ்வாறின்றிக் கருமாணிக்கன் எக்காலமும் இரப்போர்க்குக் கொடுப்பவன் என்க. வேலும் நஞ்சும் அம்பும் போன்ற கண்ணுள் என்க; வேல், கூர்மைக்கு; நஞ்சு, கொடுமைக்கு; சுடர்வாளி, ஒளிக்கு. உண்ணு நஞ்சு, சிவபிரானுல் உண்ணப்படாத நஞ்சு. வாளி - அம்பு. கண்ணும் பாயல் கொள்ளாள் - பாயலில் கண்ணும் துயில் கொள்ளாள். என் பரிவு உற்றது - (இவளுக்கு) என்ன துய்ரம் ஏற்பட்டதோ தெரியவில்லை. இது நற்றாய் செவிலியை வினயது. (278)

### நற்ருய்க்குச் செவிலி அறத்தொடு நிற்றல்

கலையா கரன்ரெண்டை மான்கரு மாணிக்கன் கப்பல்முன்னீர்
அலையா ரமுதுந் திருவுமன் ஞளறி வுந்நிறைவும்
நிலையாய நாணமும் பேணுநன் னீர்மையு நீதியுமென்
தொலையாத கற்புநல் லாய்வட மீனுந் தொழத்தகுமே.

கலை ஆகரன் - எல்லாக் கலைகளுக்கும் இருப்பிடமானவன். அலை ஆர் முன்னீர் அமுதும் திருவும் அன்னுள் - அலைகளோடு கூடிய கடலில் பிறந்த தேவாமிர்தத்தையும் திருமகளையும் போன்ற தலைவியின். நிறைவு - குணநிறைவு. நிலை ஆய நாணம் - நிலைபெற்ற நாணம். பேணும் நல் நீர்மை - யாவரும் போற்றத்தக்க நல்லொழுக்கம். நீதியும் என் - நீதி என்பதையும் சொல்வது ஏன்? (அவை அன்றி) தொலையாத கற்பும் - (தலைவியின்) கெடாத கற்பும். வடமீனும் தொழத் தகும் - (கற்புக்குஎடுத்துக்காட்டான,) வட நட்சத்திரமான அருந்ததியும் தொழுது வணங்கத்தக்கதாகும். அருந்ததியைத் தொழுதல் என்று பொருள் கொண்டு, மணவினையைக் குறித்தாள் எனலும் ஆம். நல்லாய் என்றது நற்ருயை. (279)

### நற்ருய் தமருக் கறத்தொடு நிற்றல்

[தமர்—சுற்றத்தார்]

துருவ வயப்பரித் தொண்டையர் கோன்கப்பற் ருேகையன்ஞள்
பருவ வசத்தி லறிவுமெய்ந் நாணம் பயின்றகல்வி
உருவ மொழுக்க முயர்குலஞ் சால்புற்ற செல்வஞ்சுற்றம்
மருவி யவர்க்கன்றி நீர்மண நேர்தல் மரபல்லவே.

துருவ வய பரி - வேகமும் வெற்றியும் மிக்க குதிரை. தோகை அன்னுள் - மயில் போன்ற தலைவியின். பருவ வசத்தில் - பருவ நிலைக்கு ஏற்றபடி. மருவியவர்க்கு அன்றி - மேற் கூறிய அறிவு முதல் சுற்றம் வரையுள்ள சிறப்புக்கள் பொருந்தின தலைவர்க்கு அல்லாமல். நீர் - சுற்றத்தவராகிய நீவிர். மணம் நேர்தல் மரபு அல்ல - மணம் நடத்த உடன்படுதல் முறை ஆகாது. இவ்வாறு நற்ருய் சுற்றத்தாருக்குக் கூறி அறத்தொடு நின்றது. (280)

---

## 17. உடன் போக்கு

(தலைவி தமரைப்பிரிந்து தலைவனுடன் செல்லுதல்)

### உடன் போக்குணர்த்தல்

சொன்னு வலர்புகழ் தொண்டையர் வேந்தன் றுவரைநகர்
அன்னு ளமர்பசப் புற்றருந் தாய ரருவிலைக்குப்
பொன்னு கமுமிப் புவியுங்கொள் ளாரெமர் போற்றரிய
மன்னு விவளுநின் மார்பம் பெருதுயிர் வாழ்வரிதே.

சொல் நாவலர் - சொற்களிற் சிறந்த நாவலர். அன்னாள் - தலைவி. 'போற்றரிய மன்னு! எமர் அரும் தாயர் அருவிலைக்கு பொன் நாகமும் இபுவியும் கொள்ளார்; இவளும் அமர் பசப்புற்று நின் மார்பம் பெருது உயிர் வாழ்வரிது' எனக்கொண்டு கூட்டிப் பொருள் கொள்க. அரும் தாயர் அரு விலைக்கு - அரிய தாயர்களுக்குக் கொடுக்கவேண்டிய அரிய முலைவிலைக்கு. பொன் நாகம் - பொன் னாகிய மேருமலை. இது, பாங்கி தலைவனிடம், தலைவி, தமர் உடன் படாமை அறிந்து, பசப்புற்று, உயிர்வாழ்வரிதானுள் என்று கூறிய தால், அவள் உடன்போக்குக்கு இசைந்தமையைத் தலைவற்குக் குறிப்பில் உணர்த்தினுள் என்க.

(பி - ம்.) 4. மார்பமற் ரேருயிர். (281)

### தலைவன் உடன்போக்கு மறுத்தல்

கண்ணுகி மண்புரக் குங்கரு மாணிக்கன் கப்பனகர்
எண்ணுரு மஞ்சு மிருஞ்சுரம் போக வெள்ளிதல்லவே
நண்ணு வெயில்தெறு நண்பகற் கான நடக்கவற்ரே
பண்ணுர் மொழிவஞ்சி பஞ்சும் பொருவடிப் பல்லவமே.

கண் ஆகி - கண்போலக் கருதி. மண் புரக்கும் - உலகைக் காப்பாற்றும். எண்ணரும் - பகைவரும். இரும் சுரம் போக - பெரிய பாலைநில வழியே உடன் போக. நண்ணு வெயில் தெறு நண் பகல்- அணுகமுடியாத வெயில் சுடும் நடுப்பகற் போழ்தில். பண் ஆர் மொழி வஞ்சி - தலைவி. பஞ்சும் பொரு அடி பல்லவம் கானம் நடக்கவற்ரே - பஞ்சையும் மிதிக்கப்பொருத அவள் அடிகளாகிய துளிர்கள் கானத்தின் கொடுமையைத் தாங்கக் கூடியனவோ? இது, தலைவன் பாங்கியிடம் உடன்போக்கு மறுத்துக் கூறியது.

(பி - ம்.) 4. யஞ்சும்பொரு. (282)

## உடன்போக்குக்குத் தலைவனை உடன்படுத்தல்

அரும்புந் துணைமுலை வல்லிக்கு நீசொன்ன வாரழற்கான்
விரும்புந் தலைவநின் பின்வரும் போது வினைமுகத்துச்
சுரும்பும் பருந்துந் தொடர்களிற் றுன்றெண்டைக் காவலன்
கரும்புங் கமுகுஞ் செறிகப்ப லூருங் கழனியுமே. [பைங்;

அரும்பும் துணை முலை - தோன்றி வளரும் இரு தனங்கள் இது தலைவியின் இளமையைக் குறித்தபடி. வல்லி - கொடி போன்ற தலைவி. ஆர் அழல் கான் - நெருப்புப் போல் சுடும் சுரம். தலைவ நின் பின் வரும்போது ஆரழல் கான் விரும்பும்; விரும்பும் - விரும்பத்தக்கதே ஆகும். வினைமுகத்து - போர்க்களத்து. சுரும்பும் பருந்தும் தொடர்தல்: சுரும்பு மதத்தையும், பருந்து பகைவர் ஊன், குருதி, நிணம் முதலியவற்றையு உண்ணக்கருதி. தலைவன் பின் போகும்போது தலைவிக்குக் கொடும் சுரம் கரும்பும் கமுகும் செறிந்து விளங்கும், கப்பலூரும் கழனியும் போன்று இன்பந்தருவ தாகும. இது, பாங்கி தலைவனுக்குக் கூறியது.

(பி - ம்.) 1. வார்கழற்கான். (283)

## தலைவன் உடன்படுதல்

கைதவன் செந்தமிழ் தேர்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
செய்தவ மிப்படிச் செய்யு மதாகிலத் தீயசுரத்
தெய்திய நானு மிவளுமல் லாதில்லை யேயினியப்
பொய்தலும் வண்டலும் பாவையும் பூவையும் பொய்கையுமே.

கைதவன் என்றது பாண்டியன்; கருமாணிக்கன் அவன் ஆட்சிக்கு உட்பட்ட சேனைத் தலைவன் ஆதலின், கைதவன் எனப் பட்டான். பொய்தல் - மகளிர் விளையாட்டுகளில் ஒன்று; சிற்றில் அமைத்தலும் ஆம். சுரம் போக்கில் தலைவியின் விளையாட்டுக் குரிய பொருள்களான பொய்தல் முதலியன, தானும் அவளுமே என்று தலைவன் கூறி, உடன் போக்குக்கு இசைந்தனன் என்க.

(பி - ம்.) 1. றென்றமிழ்; கப்பலின்யான்.
3. மானுமற் றியானும். (284)

## பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்

நாளைக் குரவு நறும்பா டலமும் நறுந்தரளப்
பாளைச் சுருள்கொந் தளபந்தி மீது பணிமொழியாய்
காளக் கவிகை தருங்கரு மாணிக்கன் கப்பல்நின்பொன்
தோளைப் பிரிவறி யாத்தோளி ளுர்கொய்து சூட்டுவரே.

நாளை - நாளைத்தினம். குரவு - குராமலர். பாடலம் - பாதிரிப்பூ. நறும் தரள பாளை சுருள் - நறிய முத்துக்கள் போன்ற அரும்புகளை யுடைய தெங்கு முதலியவற்றின் பாளைச் சுருள்களை. கொந்தள பந்தி மீது - உன் கூந்தற் பந்தியில்; பந்தி - வரிசையில். பணிமொழி யாய் - மென்மையான சொற்களையுடையவளே! இது, தலைவியை நோக்கிக் கூறியது. காளக் கவிகை - எக்காளத்தோடு குடை முதலிய வரிசைகளை. தோளினுர் - தலைவர். நாளை தோளினுர், குரவு, பாடலம், பாளைச்சுருள் கொய்து கொந்தள பந்திமீது சூட்டுவர் என இயைக்க. இது, பாங்கி, தலைவிக்குத் தலைவன் உடன் போக்குக்கு இசைந்தமை கூறியது. (285)

## நாணழிவு இரங்கல்

[தலைவி, தலைவனுடன் உடன் போக்கில் தன் நாணம் அழிந்து விடுமே என்று இரங்கல்]

கோணுங் கனக னுரமும் வரமுங் கொடுங்கையின்மேல்
தூணும் பகவுதித் தோன்ருெண்டை மான்கப்பல் சூழ்சிலம்பில்
பேணுங் குரவரும் பேராய மும்மென் பிரிவறியா
நாணுங் கடக்க நலந்தந்த வாவின்றெ னல்வினையே.

கோணும் - மாறுபட்ட, அதாவது பகைமை கொண்ட. கனகன் - இரணியன். உரம் - மார்பு. கொடுங்கையின் மேல் தூண்- கொடுங்கையை மேலே கொண்டுள்ள தூண். பக - பிளவுபட்டு அழிய. உதித்தோன் - நரசிங்கமாய்த் தோன்றிய திருமாலை ஒத்த கருமாணிக்கன். குரவர் - பெற்ருேர் முதலிய பெரியோர். பேராய மும்மென்; மகரவொற்று மிகுந்தது விகாரம். ஆயம் - தோழியர் ஆகிய மகளிர். என் பிரிவு அறியா நாண் - என்னைவிட்டுப் பிரிதலை இதுவரை அறியாத நாணம்; 'நாணொடுடன் பிறந்த நான்' (முத்தொள்ளாயிரம்). கடக்க - யான் கடந்து தலைவருடன் செல்ல. என் நல்வினை இன்று நலம் தந்தவா - நான் செய்த புண்ணியம் எனக்கு இன்று நன்மை அளித்ததேபோலும்!

(பி - ம்.) 4. நலந்தந்த தாவின்றென். (286)

## ஒருப்பட்டெழுதல்

[உடன் போக்குக்குத் தலைவி உடன்பட்டெழுந்தது]

இருவ ரிருந்த விடந்தொறு நின்றிம் மடந்தையரென்
பருவரல் கூறும் பதிதங்கி வாழ்வதிற் பாகடரும்
கருவரை போறகளிற் றுன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
ஒருவ ருடன்சுரம் போகனன் றேநெஞ் சொருப்பட்டதே.

இருவர் மடந்தையர் இருந்த இடந்தொறும் நின்று - இரு மகளிர் கூடிய இடந்தோறும் அவர்கள் நின்று. என் பருவரல் கூறும் - என்மீது துன்பமொழிகளாகிய அலர் தூற்றும். பதி தங்கி வாழ்வதில் - இவ்வூரில், (யான் தலைவனின்றித்) தனித்து இருந்து வாழ்வதைவிட. பாகு அடரும் கருவரை போல் களிற்றுன் - பாகனை அழித்து அடங்காமற் செல்லும் கரிய மலைபோன்ற யானையையுடைய கருமாணிக்கன். ஒருவருடன் - ஒப்பற்ற தலைவருடன். சுரம்போகல் - பாலைவனம் வழியே போதலே. நெஞ்சு ஒருப்பட்டது நன்றே - என் மனம் இணங்கியது நல்லதேயாகும். (287)

## தலைவி மருட்சி

[தலைவி, உடன் போக்கின்முன் தனக்குப் பழக்கமானவற்றைக் கண்டு மருண்ட நிலையைப் பாங்கி கூறியது]

காத்தான் விரும்புங் கொடைக்கரு மாணிக்கன் கப்பனகர்
ஏத்தார் பயிலு மிருஞ்சுரம் போக விசைந்தவஞ்சி
பூத்தாழ் பொழிலையும் போற்றுங் கிளியையும் பூவையையும்
பார்த்தாள் நெடிதுயிர்த் தாள்பனித் தாள்தன் படைக்
[கண்களே.

கா தான் விரும்பும் - கற்பகக் காவே விரும்பும். ஏத்தார் - பகைவர். பயிலும் - வாழும். வஞ்சி - கொடி போன்ற தலைவி. பூ தாழ் பொழில் - பூக்கள் தழைந்த சோலை. போற்றும் - விரும்பி வளர்க்கும். பூவை - நாகணவாய்ப் புள். நெடிது உயிர்த்தாள் - பெருமூச்சு விட்டாள். பனித்தாள் - கண் நீர் சொரிந்தாள். படைக்கண்கள் - வேல் வாள் அம்பு என்னும் படைகள்போன்ற கண்கள். (288)

### பாங்கி கையடை கொடுத்தல்

[கையடை - அடைக்கலம்]

வழியாக் கியமறை நூல்வழு வாதவின் மண்ணிரண்டும்
பழியாக் கினும்புக ழாக்கினு நீபடைக் குங்கொடைக்கும்
சுழியாத் திருமுகத் தான்றெண்டை வேந்தன் றுவரைவெற்பா
அழியாக்க வுன்னின் னருளன்றி வேறில்லை யாயிழைக்கே.

வழி ஆக்கிய - பரம்பரையாக மேற்கொண்டு ஒழுகப்பெற்ற. மறைநூல் வழுவாத நீ - வேத சாஸ்திரங்களின் வழிநீங்காத நீ. படைக்கும் கொடைக்கும் சுளியா - போர்க்கும் கொடைக்கும் முகம் மாறுபடாத; வேந்தன் என இயைக்க. விண் மண் இரண்டும் - சுவர்க்கம் பூமி ஆகிய இரண்டிலும். பழி ஆக்கினும் - பழியை உண்டாக்கினாலும், புகழ் ஆக்கினும் - புகழை உண்டாக்கினாலும்; விண்ணும மண்ணும் உன்னைப் பழித்தாலும் புகழ்ந்தாலும் எனவும் பொருள் கொள்ளலாம். உன் இன் அருள் அன்றி ஆயிழைக்கு அளி ஆக்க வேறில்லை. அளி - தண்ணளி. அளி - என்பது அழி என்று எதுகை நோக்கித் திரிந்தது.

(பி - ம்.) 2. பலர்க்குங். (289)

### வைகிருள் விடுத்தல்

[பாங்கி, தலைவியைத் தலைவனுடன் இரவில் செல்ல விடுத்தல்]

வடக்குங் குமமுலை வல்லியு நீயுமிவ் வல்லிருளில்
கடக்குங் களவை யுரியகற் பாக்கக் கணையமுங்கால்
துடக்குஞ் சுளிகளிற் றுன்றெண்டை மான்கப்பல் சூழ்சிலம்பில்
நடக்குஞ் சுரத்துமை நண்ணுவல் யானு நடந்தருளே.

வட குங்கும முலை வல்லியும் - மணி வடங்களும் குங்குமச் சேறும் அணிந்த கொங்கைகளையுடைய கொடிபோன்ற தலைவியும். கடக்கும் களவை - கடந்து செல்லும் களவு முறையை. உரிய கற்பாக்க - தலைவிக்குரிய கற்பு நெறியாக்குமாறு. கணையமும் - கட்டுத் தறியையும் அல்லது கணைய மரத்தையும். கால் துடக்கும் - காலில் கட்டியிருக்கும் சங்கிலியையும். சுளி - கோபித்துத் தகர்த் தெறியும். களிற்றுன் - யானையையுடையவன். நடக்கும் சுரத்து - நீங்கள் நடந்து செல்லும் பாலையினிடத்து. உமை யானும் நண்ணுவல் - உங்களை யானும் வந்தடைவேன். நடந்தருளே, என்றது தலைவனை நோக்கிக் கூறியது.

(290)

### சுரத்துய்த்தல்

[தலைவன், தலைவியைச் சுரத்தில் கொண்டு செல்லுதல்]

தூருந் தரளஞ் சொரிகன்னல் சூழ்கப்பற் றெண்டையர்கோன்
போருண் பகைவர் புகலருங் கானகம் போக்கரிதென்
றீருந் தொடிமுன்கை யேந்திழை நீயஞ்ச லஞ்சலிடை
ஊருங் குளிர்புன லியாறும்பல் சோலையு மோடையுமே.

தூர் - அடிவேர். தரளம் - முத்து. கன்னல் - கரும்பு. போர் உண் - போரையேற்ற. புகல் அரும் கானகம் - புகுவதற்கு அரிதான கொடிய காடு. ஈரும் தொடி முன் கை - பசிய அல்லது குளிர்ச்சி பொருந்திய வளையல்கள் அணிந்த முன் கைகளையுடைய. ஏந்திழை என்றது தலைவியை. அஞ்சல் அஞ்சல் - பயப்படாதே; அடுக்கு, உறுதியளிக்கும் பொருளில் வந்தது. வழியிடையே ஊரும் குளிர் புனல் யாறும், சோலையும் உள்ளன என முடிக்க. (291)

### அசைவறிந்திருத்தல்

[தலைவன், தலைவியின் சோர்வை அறிந்து ஓரிடத்தில் தங்குதல்]

துறுகான் மலர்க்குழ லாய்தொண்டை மான்கப்பற் றுன்னலர் [போல்
மறுகா தொழிவழி போதில மிங்கினி வன்கதிரோன்
முறுகா முறையறல் மொய்புன லாற்று முரிகரையில்
அறுகா னறுமலர்ச் சோலையி னுமிருந் தாறுவதே.

துறு கான் மலர் குழலாய் - அடர்ந்த மணமிக்க மலர்களை யணிந்த கூந்தலையுடையவளே! துன்னலர் போல் - பகைவர் போல. மறுகாது ஒழி - மனக்குழப்பங்கொண்டு வருந்துதலை விடுவாயாக. வழி போதிலம்-இப்பொழுது நாம் வழியே போகாமல். கதிரோன் முறுகா முறை - சூரியன் கடுமையாய் எரிக்காதபடி. அறல் மொய் - கரிய நுண் மணல் நிறைந்த. ஆற்று முரி கரையில்-இக் கானியாற்றின் இடிந்த கரையில் உள்ள. அறுகால் நறுமலர் சோலையில் - வண்டுகள் மொய்க்கும் மணம் நிறைந்த பூக்களையுடைய இச்சோலை யிடத்தே. நாம் இனி இருந்து ஆறுவதே முறை - நாம் இனித் தங்கியிருந்து இளைப்பாறுவதே முறை ஆகும்.

(பி - ம்.) 1. கார்மலர்க். 3. முறுகாமுறை. (292)

### உவந்தலர் சூட்டி யுண்மகிழ்ந்துரைத்தல்

[தலைவன், தலைவிக்கு மலர்சூட்டி மனமகிழ்ந்து கூறியது] °

தூணம் பொருகளிற் றுன்றொண்டை வேந்தன் றுவரையர்
பூணும் புகழ்மலி கப்பலன் ஞர்புனை பூங்குழலும் [கோன்
நாணுங் குறுவெயர் வுஞ்சிறு நோக்கு நகையரும்பும்
காணுந் தொறுநெஞ்ச மேகளி கூருமென் கண்ணிணையே.

தூணம் - தூண். புனை - அலங்கரித்த நாண் - வெட்கம். குறு வெயர்வும் - சிறிது துளிர்த்துத் தோன்றும் வெயர்வையும். சிறு நோக்கும் - கடைக் கண்ணாற் சிறிது பார்த்தலும். நகை அரும்பும் - முத்துப் போன்ற பற்கள் சிறிது தோன்றும் புன் முறுவலும். (293)

### கண்டோ ரயிர்த்தல்

[தலைவனையும் தலைவியையும் இடைச்சுரத்தில் கண்டோர் அயிர்த்துக் கூறியது]

மாலுந் திருவு முருமாறி யிந்த வனத்தில்வந்தார்
போலும் புணர்ந்தின்று போற்றற் கரியவெம் போரில்வெந்தீக்
காலுங் கதிர்வடி வேற்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
வேலுந் தொடியும் விளங்குகை யார்சில வேடங்கொண்டே.

வேலும் தொடியும் விளங்கு கையார் மாலும் திருவும் உருமாறி சில வேடங்கொண்டே புணர்ந்து இன்று இந்த வனத்தில் வந்தார் போலும்; போற்றற்கு அரிய - இவர்கள் உருவம் போற்றித் துதித்தற்கு அருமையானவை. வேலுந்தொடியும் ; வேல், தலைவன் ஏந்தியது ; தொடி, தலைவி கைகளில் அணிந்தவை. வெம் தீ காலும் ; காலும் - கக்கும் அல்லது உமிழும்.

(பி - ம்.) 2. புன்னார்த் தின்று ; செந்தீக்.
3. கப்பலன்ஞர். (294)

### கண்டோர் மகிழ்ச்சி

இளையா ரிருவர் நலனுமெய்ந் நாணு மிடைதடுக்க
வளையா வருவ ரொருவர்செல் லார்முன் மலர்க்கையில்வேய்த்
துளையா னிரையழைக் குந்தொண்டை மான்கப்பல் சொல்ல
[வொண்ணார்
கிளையாரும் வெஞ்சுரம் போய்முடி வாரல்லர் கேவலமே,

இருவர் இளையர் - இருவரும் இளம் பருவத்தினர். நலன் - அழகு. மெய்நாண் — இயல்பான வெட்கம். மெய்நலம் எனவும்

இயைத்துப் பொருள் கொள்ளலாம். வளையா - சூழ. நாணும் நலனும் இடையே நின்று தடுக்க வளைந்து வருவர் என்க. ஒருவர் செல்லார் முன் - ஒருவரை ஒருவர் விட்டு முன் செல்லாராய்ச் சேர்ந்தே செல்கின்றனர். மலர் கையில் வேய் துளை - தன் தாமரை மலர்போன்ற கையிற் கொண்ட புல்லங்குழலின் துளைகளின் இசையால். ஆன் நிரை அழைக்கும் - பசுக் கூட்டங்களைத் திரும்பி வரச் செய்யும். கப்பல் சொல்ல ஒண்ணார் கிளை ஆரும் சுரம் - கப்பலைப் புகழமாட்டாத பகைவர் சுற்றம் வந்து தங்கும் பாலை; சொல்ல - புகழ. போய் முடிவார் அல்லர் - முழுதும் கடந்துபோக முடியக் கூடியவர் அல்லர். இளையார் முடிவாரல்லர் என்க. கேவலமே - இது, ஒரு தனிப்பட்ட காட்சியே ஆகும்; கேவலம் - இணையற்றதும் ஆம்.

(பா - ம்.) 3. சொல்ல வொண்ணார். (295)

## கண்டோர் காதலின் விலக்கல்

[கண்டோர் 'பொழுது சாய்ந்தமையால், இனி நீங்கள் இவ்வழிப் போதல் தகாது' என்று கூறி அவர்கள் போதலை விலக்கியது]

வேலையில் வந்தெழு வெங்கதி ரோனுயர் வெற்படைந்தான்
மாலை யிருண்டது வல்லிமெய் வாடினள் மாவலைதூங்
காலையி லெங்க ளுழைமா னதள்படுத் தல்கிலையா
காலையி லேகுமெங் கோன்கரு மாணிக்கன் கப்பலிலே.

உயர் வெற்பு - உயரிய அத்தகிரி. வல்லி - தலைவி. மா வலை தூங்கு - பெரிய வலைகள் தொங்கவிடப்பட்டுள்ள. ஆலையில் - எங்கள் இருப்பிடமாகிய சாலையில். எங்கள் உழை - எங்கள் அருகில். மான் அதள் அல்கில் படுத்து-மான் தோலில் இரவில் படுத்திருந்து. ஐயா, எங்கள் உழை மான் அதள் படுத்து, காலையில் ஏகுமின் என இயைக்க. ஐயா, என்றது தலைவனை. காலை - விடியற்காலை. (296)

### தன்பதி யணிமை சாற்றல்

[தலைவன் தலைவிக்குத் தன் ஊர் அருகேயுள்ளது என்று கூறல்]

படந்தா ழரவல்குற் பைந்தொடி யாயிந்தப் பாலையுள்ள
இடந்தா னிரண்டரை யம்பிடை போதும்வந் தென்றபொய் [மான்
தொடர்ந்தா னணிகழற் றெண்டையர் வேந்தன் றுவரை
கடந்தா லவன்பழ னக்கப்பல் நாடுங் கழனியுமே. [யன்னீர்

படம் தாழ் அரவு அல்குல் பைந்தொடியாய் என்றது தலைவியை. இரண்டரை அம்பு செல்லுந் தூரமே இடையில் உள்ள அளவு ஆகும் என்று கூறியது, நடக்கவேண்டிய தூரத்தைக் கண்டு தலைவி அஞ்சாமலிருக்க என்க. வந்தென்ற பொய்மான் தொடர்ந்தான் - வனத்தில் வந்த பொய்மானை மாரீசனைத் தொடர்ந்த இராமபிரான் போன்ற; வந்தென்ற; என்ற என்பது இசை நிறைக்க வந்த இடைச் சொல்; சொல்லசையும் ஆகும். கடந்தால் - இந்த இரண்டரை அம்பு இடை தூரம் உள்ள வழியை நாம் தாண்டினால். பழனம் – பொய்கை; மருத நிலப்பகுதியும் ஆம். கழனி - வயல். துவரையன்னீர் என்றதும் தலைவியைக் குறித்த விளி. (297)

### தன்னகர் காட்டல்

[தலைவன், தலைவிக்குத் தன்பதி அருகில் உள்ளதைக் காட்டல்]

புரந்தோ னகற்புவ னம்பதி னாலும் பொருந்தலரைத்
துரந்தோன் றொடுகழற் றொண்டையர் வேந்தன் றுவரை [வெற்பில்
அரந்தோய்ந்த வேலன்ன கண்ணியஞ் சேனம் மணிநகர்க்கண்
மரந்தோன்று மாளிகை சூளிகை தோன்று மதில்தோன்றுமே.

அகல் புவனம் - அகன்ற உலகங்கள். பொருந்தலர் - பகைவர். அரம் தோய்ந்தவேல் அன்ன கண்ணி - அரத்தினால் தீட்டப்பெற்ற வேல் போன்ற கண்களையுடையவளே ! இது, தலைவியை நோக்கிய விளி. அஞ்சேல் - பயப்படாதே. நம் அணி நகர்கண் - நமது அழகிய நகரினிடத்து. மரம், மதில், மாளிகை, சூளிகை முதலியன தோன்றும் என்றது, ஊருக்கு அணுகினமை அறிவிக்க என்க. சூளிகை - மேன் மாடம்.

(பி - ம்.) 1. அடல் புவனம். 4. மதில்தோறும். (298)

## 18. கற்பொடு புணர்ந்த கவ்வை

(தலைவி தலைவனுடன் சென்றதைப் பலரும் அறிதல் கவ்வை - பலரறி பழிச்சொல்)

### செவிலி பாங்கியை வினவுதல்

பன்னலஞ் செந்தமிழ்ப் பாமாலை வல்லவன் பாவையர்க்குக்
கன்னலஞ் செஞ்சிலை வேள்கரு மாணிக்கன் கப்பலன்னுள்
நென்னலிங் குன்னுட னின்றனள் கங்குலி னீங்கவந்த
இன்னலிங் கென்னைகொல் லோவுரை யாயென் னிளங்
[கொடியே.

பன்னல் அம் செந்தமிழ் பாமாலை - விளக்கிச் சொல்கின்ற அழகிய செந்தமிழ்ப் பாமாலைகள். வல்லவன் - ஏற்றுப் புகழ் பெற்றவன். கன்னல் அம் செம் சிலை வேள் - கரும்பாகிய அழகிய சிவந்த வில்லையுடைய மன்மதன் போன்றவன். நென்னல்-நேற்றிரவு. கங்குல் - இரவு. இன்னல் - துன்பம். இளங்கொடியே என்றது பாங்கியை ; அவள் செவிலியின் மகளாதலால். (299)

### பாங்கி செவிலிக்குணர்த்தல்

தோட்டார் மலர்க்குவ ளைத்தொண்டை வேந்தன் றுவரை
[வெற்பில்
கோட்டானை யின்வெங் கொலைதவிர்த் தார்க்குக் குறைமறந்து
மாட்டாத வர்க்கு வரைவியைந் தாரென்னு மாற்றஞ்சற்றே
கேட்டாள் நெடிதுயிர்த் தாள்பனித் தாள்கண் கிளிமொழியே.

தோடு ஆர் மலர் குவளை - இதழ்களால் விளங்கும் குவளை மலர். கோட்டு ஆனையின் கொலை தவிர்த்தார்க்கு - கொம்புகளோடு கூடிய யானையினால் தனக்கு ஏற்பட்ட மரணத்தை நீக்கிய தலைவருக்கு. குறை மறந்து - யான் காட்டவேண்டிய கடமையை மறந்து. மாட்டாதவர்க்கு - எனக்கு விருப்பமற்ற வேறொருவருக்கு. வரைவு இயைந்தார் என்னும் - மணம் செய்விக்கத் தமர் சம்மதித்தார் என்று சொல்லப்பட்ட. மாற்றம் சற்றே கேட்டாள் - வார்த்தையைச் சற்றே கேட்டவளாகி. நெடிது உயிர்த்தாள் - பெருமூச்சு விட்டாள். கண் பனித்தாள் - கண்ணீர் துளித்தாள். கிளிமொழி-தலைவி. (300)

செவிலி பாங்கியொடு புலம்பல்

விடுத்த சுரும்பும் விரும்பிய மாதர் விழியுமொக்கத்
தொடுத்த பசுந்தண் டுழாய்த்தொண்டை வேந்தன் றுவரை
வடித்த கிளிக்கு மனத்தறி வூட்டி மருங்குலினேர் [வெற்பின்
எடுத்து வளர்த்ததெல் லாமிதற் கோவின் றிலங்கிழையே.

மாதர் - தன் காதன் மகளிர். விடுத்த சுரும்பும் - தூதாக விட்ட வண்டுகளையும். விழியும் - அவர்கள் விருப்பொடு பார்க்கும் விழிகளையும். ஒக்க - ஒன்றுசேர. தொடுத்த - தொடுத்தது போல் விளங்கிய. வடித்த கிளிக்கு - கிளிபோல் அழகாய்ப் பேசும் என் பெண்ணாகிய தலைவிக்கு. மனத்து அறிவு ஊட்டி - மனத்தில் நல்லறிவு உண்டாகும்படி போதித்து. மருங்குலின் - என் இடுப்பிலே. நேர் எடுத்து வளர்த்த தெல்லாம் - இதுகாறும் அழகாய் எடுத்து வளர்த்துவந்ததெல்லாம். இன்று இதற்கோ - இன்று இப்படி அவள் செய்வதற்கோ ? இதற்கு என்றது, பிறர் அறியாமல் தலைவி தலைவனுடன் சென்றதைக் குறித்தது. இலங்கிழையே என்றது, பாங்கியை. (301)

செவிலி நற்றாய்க்குரைத்தல்

கலையார் தமிழ்க்கவிப் பாவலர் காவல ராகவென்றும்
தொலையா வளந்தருந் தொண்டையர் வேந்தன் றுவரை
[யன்னாள்
நிலையாய கற்பின ளென்பதெண் ணாதுநுண் ணேரிடைக்கு
விலையாய் மதித்தன ரென்றுசொன் னாளுன்றன் மெல்லியலே.

கலை ஆர் - கலைகளில் நிறைந்த. பாவலர் காவலர் ஆக - பாவலர்கள் உலகாளும் அரசர் போலச் செல்வமுற்றோங்க. துவரை அன்னாள் - தலைவி. நிலை ஆய கற்பினள் - மாறாது நிலைபெற்ற கற்பையுடையவள். ஒருவனுக்கு உரியளாகி விட்டனள் என்றது கருத்து. எண்ணாது - அதனை எண்ணாமல். நுண் எர் இடைக்கு - நுட்பமான அழகிய இடையையுடைய தலைவிக்கு. விலை ஆய் மதித்தனர் - விலை பேசி மதிப்பிட்டார்கள். இவ்வாறு, செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றாள் என்க. (302)

செவிலியிரங்கல்

கழைக்குன்ற மேந்துசெங் கைக்கரு மாணிக்கன் கப்பலன்னூர்
இழைக்கின்ற சிற்றிலும் பாவையு மோவிவை யின்னறுந்தேன்
குழைக்கின்ற வள்ளத் தமுதுங்கொள் ளாதுபொற் கூட்டிலிருந்
தழைக்கின்ற கிள்ளைக்கி யாளென் கொலோசொல்லி
[யாற்றுவனே.

கழை குன்றம் - மூங்கில் அடர்ந்த மலையாகிய கோவர்த்தனகிரி. இழைக்கின்ற - அமைக்கின்ற. பாவை - மணற்பாவை. இன் நறும் தேன் - இனிய சுவையையும் மணத்தையுமுடைய தேன். குழைத்தல் - கலக்குதல். வள்ளம் - கிண்ணம். அமுது - சோறு. அழைக்கின்ற - தலைவியைக் காணாது அவள் பெயரைச் சொல்லி அழைக்கின்ற. இது, செவிலி, தலைவி பிரிந்தமைக்கு வருந்திக் கூறியது. (303)

செவிலி தன்னறிவின்மை சாற்றல்

எரிகட் செவிமுடி யேந்திய பாத னிருங்கனகம்
சொரிகைப் புயலன்ன தொண்டையர் கோன்கப்பற் றோகை
[யன்னாள்
வரிகச் சிளமுலை வண்ணத்தி னுஞ்சொன்ன வார்த்தையினும்
தெரிகைக்கு வேண்டுவ துண்டறி யாததென் றீவினையே.

எரி கட்செவி முடி - நெருப்புப்போன்ற கொடிய காளியன் என்னும் பாம்பின் தலை; கட்செவி - பாம்பு. ஏந்திய பாதம் - தாங்கிய பாதத்தையுடைய. புயல் அன்ன இரும் கனகம் சொரி - மேகம் (மழை சொரிவது போல) மிகுதியாகப் பொன்னைச் சொரியும். தோகை அன்னாள் - மயில் போன்ற தலைவி. வரி கச்சு - கட்டப்பட்ட கச்சினையுடைய. வண்ணத்தினும் - அடைந்துள்ள பசலை நிறத்தாலும். சொன்ன வார்த்தையினும் - பேசிய சொற்களாலும். தெரிகைக்கு - தெரிந்து கொள்வதற்கு. அறியாதது - யான் ஊகித்து அறிந்து கொள்ளாமற் போனது. என் தீவினையே - யான் செய்த தீவினையே ஆகும்.

(பி - ம்.) 3. வார்த்தை யின்னம். (304)

## இனைய லென்போர்க்கு எதிரழிந்து மொழிதல்

[செவிலி தன்னைத் தேற்ற வந்தோர்க்கு எதிர் வருந்திக் கூறியது]

கூற்றும் பயிலுங் கொலைக்களிற் றான்குறு கார்நினைவும்
காற்றுங் கடந்ததிண் டேர்க்கரு மாணிக்கன் கப்பலன்னாள்
மாற்றங் கொடுத்து வளர்க்குங் கிளியுமவ் வண்டலுங்கண்
டாற்றுந் திறமென் கொலோமட வீரென் னலைகின்றதே.

கூற்றும் - யமனும். பயிலும் - அதனிடம் தெரிந்து கொள்ளும் குறுகார் - பகைவர். நினைவும் - எண்ணமும். குறுகார் எண்ணத்தையும் காற்றையும் கடந்து வேகமாய்ச் செல்லும் திண் தேர் என்க. மாற்றம் - பேச்சு. வண்டல் - வண்டலாடும் இடம். ஆற்றும் திறம் - நீங்கள் ஆற்றிக்கொண்டிருக்கும் திறமை. என்கொலோ - என் என்று சொல்வது! மடவீர் என்றது, தேற்றவந்த மகளிரை. அலைகின்றது என் - வீணே அலைகின்றது யாது பயனுடைத்து? (305)

## நற்றாய் இரங்கல்

கழைக்குன் றெறிந்தசெவ் வேட்கரு மாணிக்கன் கப்பல்
மழைக்கொந் தளக மடமயி லேவண்ட லாயமுடன் [வெற்பில்
இழைக்குந் தனிச்சிற் றிலும்பெற்ற பாவியும் யானுமெதிர்
அழைக்குங் குயிலுமுண் டோவின்று போன வருஞ்சுரத்தே.

கழை குன்று எறிந்த செவ்வேள் - கிரௌஞ்சகிரி என்னும் மலையைப் பிளந்த முருகனை. இது பாட்டுடைத் தலைவனை முருகப் பிரானாகக் கூறியது. மழை கொந்து அளக - மேகம் போன்று பூங்கொத்துக்கள் அணிந்த கூந்தலையுடைய. மடமயிலே என்றது தலைவியை. வண்டல் - வண்டல் என்னும் விளையாட்டு ஆயம் - ஆய மகளிர். தனி சிற்றில் - ஒப்பற்ற சிற்றில். எதிர் அழைக்கும் குயில் - குயிலைப்போலக் கூவி அதனை எதிர் கூவ அழைக்கும் விளையாடல். உண்டோ - இருக்குமோ. இராதே; அதனால் அவள் எவ்வாறு விரும்பி அவ்வழிச் சென்றாள் என்று செவிலி வருந்திப் புலம்பியது.

(பி - ம்.) 1. கப்பல் வந்த. (306)

### நற்ருய் பாங்கியரொடும் புலம்பல்

நன்ருய செந்தமிழ் நாவலர் கால்புல்லர் பானடந்து
கன்ருமல் வந்தரு ளுங்கரு மாணிக்கன் கப்பலன்னீர்
நின்ருர் திகைப்ப நகைப்பவுள் ளாவியு நெஞ்சுமெய்யும்
ஒன்ருய வும்மையும் நீங்கின ளோவென் ஞெளியிழையே.

நன்று ஆய - நன்கு அமைந்த. நாவலர் கால் - நாவலருடைய கால்கள். புல்லர் பரல் நடந்து கன்ருமல் - அற்பர்களிடம் பரிசுபெற நடந்து சென்று வருந்தாமல். வந்து - அவர்களிடம் தேடிவந்து. நின்ருர் திகைப்ப நகைப்ப - இங்கு நின்ற சிலர் திகைக்கவும் சிலர் நகைக்கவும். உள் ஆவியும் நெஞ்சும் மெய்யும் ஒன்று ஆய - உள் உயிரும் மனமும் உடலும் ஒன்ருனது போலப் பயின்ற. உம் மையும் - பாங்கியர்களாகிய உங்களையும்; உம்மை உயர்வு சிறப்பு. ஒளி இழை - தலைவி. ஒளியிழை நீங்கினளோ? என்க. (307)

### நற்ருய் பயிலிடந் தன்ெடு புலம்பல்

மாவே மனைவளர் மல்லிகை யேகொய்யு மைக்குவளைப்
பூவே படியும் புனற்றட மேபுவ னம்புரக்கும்
காவே யனையகை யான்கரு மாணிக்கன் கப்பல்மன்கை
ஏவே யனையகண் ணுளென்ன மாயமின் றெண்ணியதே.

மாவே - மாமரமே. மை குவளை பூவே - கருங்குவளை மலரே· படியும் - அவள் தோயும். புனல் தடமே - நீர் நிலையே. கா - கற் பகச் சோலை. மன் கை - அரசன் கையில் உள்ள. ஏவே அனைய - அம்பே ஒத்த. கண்ணுள் - கண்களையுடைய தலைவி. இன்று இவ்விடம் விட்டுச் செல்ல எண்ணியது என்ன மாயம்! (308)

(பி - ம்.) 2. புனை தடமே.

### நிமித்தம் போற்றல்

[நற்ருய் காக்கைக் குறிபார்த்தல்]

துடியே ரிடைமங்கை யர்துகில் வாரிய தொண்டையர்கோன்
வடியே ரயிற்படை மானதன் கப்பலில் வள்ளலுடன்
கொடியே வரக்கரை யிற்கொடி யேனக் கொடியருந்தும்
படியே தருவன் பருகுதண் ணீரும் பலியுமின்றே.

துடி ஏர் இடை - உடுக்கைபோலும் அழகிய இடையையுடைய. ஏர் - தோற்றப் பொலிவு. மங்கையர் துகில் வாரிய - கோவியர் ஆடைகளைத் தொகுத்து எடுத்துக் கொண்ட. வடி ஏர் அயில் படை - கூர்மையும் அழகும் சிறந்து விளங்கும் வேற்படை; மான தன் - அரசன். வள்ளலுடன் - தலைவனுடன். கொடியே வர - கொடிபோன்ற தலைவியே வருமாறு. கரையில் - (காக்கை) கூவு மானால்; காக்கை கரையில் தாம் விரும்பினவர் வருவர் என்பது நம் மனோர் துணிபு; 'உரையார் தொல்புகழுத்தம னைவரக், கரையாய் காக்கைப் பிள்ளாய்' என்றதும் நோக்குக; (பெரிய திருமொழி 10. 10 : 2;) கொடி அருந்தும்படி - அக்காக்கை இனம் உண்ணும்படி. பலி - சோறு. கொடியேன் என்றது, நற்றாய் தன்னை இழித்துக் கூறிக்கொண்டது. (309)

### சுரந்தணிவித்தல்

[நற்றாய் சூரியனைச் சுரத்தில் தன் வெயிலைத் தணித்துக் கொள்ளும்படி வேண்டுதல்]

அயிலயில் வாளெயிற் றைவா யரவணை மீதுறங்கும்
துயிலறி யாத்திரு மால்தொண்டை வேந்தைத் தொழாதவர்போல்
மயிலறி யாத வனம்படர்ந் தாள்வரம் வேண்டுவல்யான்
வெயிலெறி யாதொழி மேகத்தி னூடுசெல் வெங்கதிரே.

அயில் அயில் - அரத்தால் அராவப்பெற்றுக் கூர்மையான. வாள் எயிற்று - ஒளிதங்கிய பற்களையுடைய. ஐவாய் அரவணை மீது - ஐந்தலைப் பாம்புப்படுக்கையின்மீது. உறங்கும் துயில் அறியா திருமால் - உறங்குவதாகிய தூக்கம் இன்றி, அறி துயில் என்னும் யோகநித்திரையில் இருக்கும் திருமாலாகிய. தொழாதவர் - தொழாத பகைவர். மயில் - மயில் போன்ற என் மகள். அறியாத வனம் படர்ந்தாள் - முன்போய் அறியாத கான் சென்றாள்; மயில் அறியாத வனம் என்றதால் பாலை நிலத்தின் தன்மை கூறியதும் ஆம்; பாலை நிலம் மயில் வாழு மிடமில்லை ஆதலின். வெங்கதிரே - வெப்பம் மிக்க கதிரவனே! வெயில் எறியாது ஒழி - வெயில்காயாமல் செல்வாயாக. மேகத்தின் ஊடு செல் - மேகத்தினுட்புகுந்து மறைந்து செல்வாயாக. வரம் வேண்டுவல் யான். இந்த வரனை யான் உன்னிடம் கேட்டுக் கொள்கின்றேன். (310)

### தன்மகளிளமைத் தன்மை சாற்றல்

சிற்றி லிழைத்துச் சிறுசோ றடுகை திருந்தவின்னம்
கற்றிலை சுற்றங் களையுமெவ் வாறென் கரும்பனையாய்
சொற்றமிழ் வல்லவன் றெண்டையர் கோன்கப்பற் சொன்ன
மற்றொரு வள்ளல்பின் னேசுரம் போக மதியுனக்கே. [வரார்

சிற்றில் இழைத்தல், சிறு சோறு அடுதல் இவை பருவம் நிரம்பா இளம் பெண்களின் விளையாட்டுச் செயல்கள். திருந்த - செம்மையாக. இன்னம் கற்றிலை என்றதால், தலைவி மிக இளமைப் பருவத்தினள் என்பதாம். சுற்றம் எவ்வாறு களையும் - இவ்விளம் பருவத்தில் சுற்றத்தவர் உன்னை எவ்வாறு நீங்கியிருப்பர்? என் கரும்பு அனையாய், இது, தலைவியைக் கருதிக் கூறியது. மதி உனக்குச் சொன்னவர் ஆர்? என இயைக்க. வள்ளல் - தலைவன். மற்று - அசை. இது, நற்றாய், தலைவியை நோக்கிக் கூறுவதுபோலக் கூறி வருந்தியது.

(பி - ம்.) 2. எவ்வாறு கரும்பனையாய். (311)

### நாடத்துணிதல்

[செவிலி, நற்றாயைத் தேற்றித் தலைவியை நாடத் துணிதல்]

இலையு ளடங்கு மிறைவனைப் போல்வைய மெங்குமெண்ணெண்
கலையு ளடங்கிய சீர்க்கரு மாணிக்கன் கப்பலன்னீர்
மலையு ளடங்கு மறைமுனி யங்கையில் வந்தடங்கும்
அலையு ளடங்கு மளவையன் றோவிந்த வம்புவியே.

இலையுள் அடங்கும் இறைவன் - ஆலினிலையுள் பாலனாய்ப் பள்ளி கொள்ளும் இறைவனான திருமால். எண் எண் கலையுள் அடங்கிய - அறுபத்து நான்கு கலைகளைத் தன்னுள் அடங்கக் கொண்ட. மலை உள் அடங்கும் மறை முனி - விந்தமலை உள்ளடங்கக் காரணமான அகத்திய முனிவர். அம் கையில் வந்து அடங்கும் - உள்ளங்கையின் எடுத்து ஆசமனம் செய்யும் அளவாக அடங்கிய. அலையுள் - கடல்களுக்குள். இந்த அம்புவி அடங்கும் அளவை அன்றோ - இந்தப் பூமி அடங்கும் அளவு உள்ளது அல்லவோ? அதாவது, கடல் சூழ்ந்த புவி உள்ள இடமெல்லாம் தலைவியைத் தேடிப் பார்த்துக் கண்டு பிடிப்பேன்' என்று துணிந்து செவிலி கூறியது. (312)

### முக்கோற் பகவரை வினுதல்

[தலைவியைத் தேடிச்சென்ற சென்ற செவிலி, தன் எதிர்ப்பட்ட முக்கோற் பகவரை வினுதல்]

குடையுங் கரகமுந் தோலுமுந் நூலுமுக் கோலுஞ்செம்மை
உடையுந் தரித்தொல்கி முன்வரு வீர்கட லுள்ளமையக்
கடையும் புயன்ருெண்டை மான்கரு மாணிக்கன் கப்பல்
[வெற்பில்
விடையும் புணர்துணை யும்வந்த தோவிந்த வெஞ்சுரத்தே.

கரகம் - கமண்டலம். தோல் - மான்தோல். முந்நூல் - பூணூல். முக்கோல் - திரிதண்டம். செம்மை உடை - செங்காவியுடை. ஒல்கி - தளர்ந்து. கடல் உள் அமைய கடையும் - பாற்கடலுள் முன் பொருந்தக் கடையும். புயன் - தோள்களையுடையவன். விடையும் புணர்துணையும் - ஓர் இடபமும் அதனைத் தொடர்ந்த ஒரு பசுவும்; தலைவனை விடையாகவும், தலைவியை இளம் பசுவாகவும் கூறியது; ஒப்பு. 'மல்லன் மறுகின் மடநா குடனுகச், செல்லும் மழவிடைபோற் செம்மாந்து' (நள, சுயம்வர: 156.)

(பி - ம்.) 2. வருவீ ருவராழி வெற்பால். (313)

### மிக்கோர் தெருட்டல்.

[முக்கோற்பகவர் செவிலிக்கு உலக இயல்பை அறிவுறுத்தியது]

கற்ருய ரில்வளர்ந் தோன்கரு மாணிக்கன் கப்பல்மன்னன்
பொற்ருண் முளரி பொருந்தலர் போலப் புகையெழுந்தீ
வற்ருத வெஞ்சுரம் வந்தது நீமட வாய்மகவைப்
பெற்ருயு மில்லைப் பிறந்தாயு மில்லையோர் பெண்வயிற்றே.

கன்று ஆயர் இல்லில் - கன்றுகளையுடைய இடையர்கள் வீட்டில்; கன்று கற்றென வலித்தது எதுகை நோக்கி. வளர்ந்தோன் - குழந்தைப் பருவத்தில் வளர்ந்த கண்ணபிரான். பொன் தாள் முளரி - பொன்னணிந்த பாதத் தாமரைகளை; பொன்முளரித்தாள் என இயைத்தலும் ஒன்றும். பொருந்தலர் - வந்து வணங்காத பகைவர். வந்தது - வந்த செய்கையால். நீ மகவைப் பெற்றவளும் அல்லை; ஒரு பெண் வயிற்றே பிறந்தவளும் அல்லை போலும்; மகளைப் பெற்ற தாய்க்கும், மகளாய்த் தாய் வயிற்றில் பிறந்த பெண்ணுக்கும் தெரியும் மகட்பிரிவு, தாய்ப் பிரிவு என்பன; இவ்வியல்புகள் உன்னிடம் இல்லையே எனச் செவிலிக்கு அறிவுறுத்தியது. (314)

## எயிற்றியை வினுதல்

[செவிலி, எதிர் வந்த எயிற்றியை வினுதல்
எயிற்றி - வேடர்குலப் பெண்]

காலிப்பின் வந்த கழற்கரு மாணிக்கன் கப்பலன்ஞர்
போலிச் சுரத்தொரு கன்னியுங் காளேயும் போந்தனரோ
பீலிச் சுரிகுழற் பெய்தழை யல்குற் பெரும்புலிப்பல்
தாலிக் கழுத்துத் தனிக்குன்றி மாலேத் தனத்தினளே.

காலி பின் வந்த - பசுக்களின் பின் அவற்றை ஓட்டிவந்த; ஒப்பு. 'காலிக்குப் பின்னேயுங் காணலாம்;' (நள. கலிநீங்கு. 1.) கன்னி - தலேவி. காளே - தலேவன். பீலி சுரி குழல்-மயிற்பீலி அணிந்த சுருண்ட கூந்தல். பெய் தழை - அணிந்த தழைகளேயுடைய. புலி பல் தாலி - புலிப்பற்கள் கோக்கப்பெற்ற தாலி. தனி குன்றி மாலே- ஒப்பற்ற குன்றிமணிகளாலான மாலேகள்; தனி - வேறென்றிலாத எனலும் ஆம். அணிந்த தனத்தினளான எயிற்றி என்க. தனத்தினளே! சுரத்து ஒரு கன்னியும் காளேயும் போந்தனரோ? என முடிக்க. (315)

## குரவொடு புலம்பல்

[செவிலி, குராமரத்தொடு புலம்பல்]

கரவேல் வயமுரு கன்கரு மாணிக்கன் கப்பனென்னல்
இரவே வொருவிற் குரிசில்பின் னேயிவ் விருஞ்சுரத்தே
குரவே முதிர்பல கொம்புடை யாயிளங் கொம்பொன்றிங்கு
வரவே தகைந்திலே யோபெற்ற பாவி வருமளவே.

கர வேல் வய முருகன் - கையில் வேல் ஏந்திய வெற்றிமிக்க முருகனை. இரவே - இரவு நேரத்தில். ஒரு வில் குரிசில் பின்னே- வில்லேந்திய ஒரு தலேவன் பின்னே. குரவே - குராமரமே! பல கொம்பு உடையாய் - நீயும் பல கொம்புகளே யுடையவள். கொம்பு: இங்குச் சிலேடை. இளம் கொம்பு ஒன்று - ஓர் இளங் கொம்பு போன்ற (என் பெண்) ஒருத்தி. இங்கு வரவே - இங்கு வந்தபோது. பெற்ற பாவி வரும் அளவு தகைந்திலேயோ; தகைந்திலேயோ - நீ தடுக்கவில்லேயோ? (316)

(பி - ம்.) 2. வெருவிக் குருசில்; வொருவிக் குருசில்.

## சுவடுகண் டிரங்கல்

[செவிலி, தலைவன் தலைவியர் அடிச்சுவடுகளைக் கண்டு வருந்திக்கூறுதல்]

தூவடி வேல்முரு கன்கரு மாணிக்கன் ஞெண்டையர்கோன்
பூவடி வந்து புகழாரில் வெஞ்சுரம் போர்க்களிற்றின்
பாவடி போனவை மீண்டவை யாண்டகை பைங்கழற்பொன்
சேவடி நின்றவை யென்செல்வி நூபுரச் சீறடியே.

தூ வ்டி வேல் முருகன் - பரிசுத்தமான கூரிய வேலையுடைய முருகப்பிரான். பூ அடி - தாமரைப்பூப் போன்ற பாதம். புகழாரில் - புகழாத பகைவரைப்போல. போனவை போர் களிற்றின் பாவடி - முன் போனவையாய் உள்ளவை, போர் பொர வந்த யானையின் பரவிய பாதச்சுவடுகள். மீண்டவை ஆண்டகை பைம் கழல் பொன் சேவடி - திரும்பினவையாய்க் காணப்படுபவை தலைவனின் பசிய பொற்கழல் அணிந்த சேவடிகளின் சுவடுகள். நின்றவை-ஒரே இடத்தில் தங்கி நின்றவையாய் உள்ள சுவடுகள். என் செல்வி - என் மகளின். நூபுர சீறடியே - நூபுரம் அணிந்த சிறிய பாதங்களின் சுவடுகளே. சுரத்தில் ஒரு களிறு வர, அதைக்கண்டு தலைவி அஞ்சிநிற்க, தலைவன் அக்களிற்றை வெருட்டி மீண்டது முதலியவற்றை அங்குக் கண்ட அடிச்சுவடுகளால் செவிலி அறிந்து கொண்டாள் என்பதாம்.

(பி - ம்.) 4. சிற்றடியே. (317)

## கலந்துடன் வருவோர்க் கண்டுகேட்டல்

[காதலன் காதலியர்களாய்ச் சேர்ந்து வருபவர்களைச் செவிலி வழியிற் கண்டு வினவுதல்]

ஒருவாத வன்புட னெங்களை நீங்கியிங் குங்களைப்போல்
வருவா ரிருவரைக் கண்டில ரோவண் மலர்த்தடக்கைக்
கருவார் புயலனை யான்கரு மாணிக்கன் கப்பற்பிரான்
செருவாசி கண்டுடை யுந்தெவ்வர் போகுமித் திண்சுரத்தே.

ஒருவாத - நீங்காத. அன்புடன் - அன்போடு. கரு வார் புயல் - கருக்கொண்ட பெரிய மேகம்; அதாவது நீருண்ட மேகம்; கரு ஆர் மேகம் எனக்கொண்டு, கருவுற்ற மேகம் எனலும் ஆம். செரு வாசி - போர்க்குதிரை. உடையும் - தோற்றுப் போகும். தெவ்வர் - பகைவர். இத் திண் சுரத்தே உங்களைப் போல் ஒருவாத அன்புடன் வருவார் இருவரைக் கண்டிலிரோ என இயைக்க. (318)

## செவிலியை மீட்டல்

[அன்னோர், செவிலியை மீண்டேகுமாறு கூறுதல்]

வாளையுந் தும்பை வயமாலை யும்பொன் வரையனைய
தோளையும் பாடு தமிழ்த்தொண்டை மான்வண் டுவரைவந்து
வேளையெண் ணார்பயில் வெஞ்சுரம் போக்கொழி மீளினியக்
காளையுங் கன்னியும் போய்க்கப்ப லுடின்று காண்பர்களே.

தும்பை வய மாலை - போர்க்குரிய வெற்றியைத் தரும் தும்பை மாலை. பொன் வரை அனைய - மேருமலை போன்ற. பாடு - புகழ்ந்து பாடுகின்ற. தமிழ் தொண்டைமான் ; தமிழ்மொழியிற் றேர்ச்சி யுற்ற தொண்டைமான். துவரை வந்து - துவராபுரி வந்து. வேளை - முருகவேள் போன்ற அத்தொண்டைமானை. எண்ணார் - நினையாத பகைவர். பயில் - வாழ்கின்ற. வெம் சுரம் போக்கு ஒழி; இனி மீள் - கொடிய சுரத்திலே இனி நீ போதலைத்தவிர் ; ஊருக்குத் திரும்பு. காளையும் கன்னியும் - தலைவனும் தலைவியும். இன்று கப்பல் நாடு காண்பர்கள் - இன்று அவர்கள் கப்பல் நாடு போய்ச் சேர்வார்கள்.

(பி - ம்.) 1. வயமாலை. (319)

## வினவிய செவிலிக்கு விளம்பல்

[மேலும் அன்னோர் செவிலிக்குக் கூறியது]

துன்னெனும் வெஞ்சுரம் போய்மட வாய்சுடர் வேலவனும்
பண்ணெனு மென்மொழிப் பாவையும் சேர்வர் பரிமளப்பூம்
தண்ணந் துளவணிந் தோன்றிரு மேனியன் றாளுங்கையும்
கண்ணுங் கமலமன் னன்கரு மாணிக்கன் கப்பலிலே.

துன் எனும் வெம் சுரம் - அச்சத்தைத் தரும் கொடிய சுரம். வேலவன் - தலைவன். பாவை - தலைவி. துளவணிந்தோன் திரு மேனியும் - துளவமாலை அணிந்த திருமால் போன்ற (கரிய) திரு மேனியையுடையவனும். தாளும் கையும் கண்ணும் கமலம் அன்னான் - பாதங்கள், கைகள், கண்கள் இவை தாமரை மலர்கள் போன்றவன். மடவாய், சுரம் போய், வேலவனும் பாவையும் கப்ப லிலே சேர்வர் என இயைக்க.

(பி - ம்.) 1. வடிவாய்ச்சுடா : போய்ச் சுடர்வடி. (320)

## 19. மீட்சி

(தலைவியுடன் தலைவன் மீளுதல்)

செவிலி, நற்றாய்க் குரைத்தல்

காணாத தெய்வமுங் கேளாத பேருங் கருதவில்லை
நீணாக வல்கு னிரைவளை யாய்நினை விற்குமெட்டாச்
சேணார் நெறிசென்று சேயுமென் பூவையுஞ் சேர்வர் [செம்பொன்
தூணார் புயத்தொண்டை மான்றுவ ராபதித் தொன்னகர்க்கே.

காணாத தெய்வமும் - தலைவியின் நிலை அறிய வேண்டிக் கண்டு வழிபடாத தெய்வங்களும். கேளாத பேரும்-கேட்டு உசாவாத மனிதர்களும். கருத இல்லை - எண்ண இடமில்லை. நீள் நாக அல்குல் நிரை வளையாய், என்றது நற்றாயை நோக்கிச் செவிலி கூறியது. சேண் ஆர் நெறி - தொலை தூரம் உள்ள வழியெல்லாம். சேயும் மென் பூவையும் சென்று - தலைமகனும் தலைமகளும் கடந்து. துவராபதி தொல் நகர்க்கே சேர்வர் - பழமையான துவரைப்பதி என்னும் நகரிற் போய்ச் சேர்ந்திருப்பார். (321)

தலைவன் தன்னூர்ச் சார்ந்தமை சாற்றல்

இவைநா மிருந்த முதுமணற் குன்ற மிளமரக்கா
இவைநா மலர்கொய்த வோடையுஞ் சோலையு மேத்துசெஞ்
கவிநா வலர்புக ழுங்கரு மாணிக்கன் கப்பலன்னீர் [சொல்
அவைநா முடைய வசலமு மூரு மருவியுமே.

இவை - இதோ தெரியும் இவை. நாம் இருந்த - யாங்கள் தங்கியிருந்த. இள மர கா - இள மரங்கள் அடர்ந்த சோலை. ஏத்து செம் சொல் கவி நாவலர் - புகழ்பெற்ற சிறந்த சொற்களிற் றேர்ந்த கவி புனைய வல்ல நாவலர்; நாவலர் - சொல் வல்லவர். நாம் உடைய - எங்களுடைய. அசலம் - மலை. (322)

## தன்வரவுணர்த்திவிடுதல்

[தலைவி, செல்வோரிடம் தான் தலைவனுடன் அவன் ஊர் அடைந்தமைதப் பாங்கிக்குச் சொல்லுமாறு கூறியனுப்பியது]

ஒளிசெறி செங்கதிர் வேலுர வோனுடன் யானும்வந்து
முளிசுர மீள்வது தன்னையின் னேமுருகு கார்நறவுண்
களிசெறி வண்டறை தார்க்கரு மாணிக்கன் கப்பலிற்சென்
றளிசெறி பூங்குழ லாயநல் லாருக் கறிவியுமே.

ஒளி செறி - ஒளி மிகுந்த. வேல் உரவோன் உடன் - வேலேந்திய வலிமை வாய்ந்த தலைவனுடன். முளி சுரம் மீள்வது தன்னை - யான் வரண்ட பாலை நிலத்தைக் கடந்து தாண்டிச் செல்லும் செய்தியை. இன்னே - இப்பொழுதே. முருகு ஆர் நறவு உண் - மணம் மிக்க தேனை உண்ணும். களி செறி - களிப்பு மிகுந்த. வண்டு அறை தார் - வண்டுகள் ஒலிக்கும் மாலை அணிந்த. கப்பலில் சென்று - கப்பல் நகருக்கு நீவிர் சென்று. அளி செறி - வண்டுகள் மொய்க்கப் பெற்ற. ஆய நல்லார்க்கு - என் தோழியர்க்கு. அறிவியும் - தெரிவியுங்கள். (323)

## சென்றோருரைத்தல்

ஆளையுஞ் சீறுங் கடகளிற் றுனடை யார்கடொடித்
தோளையுஞ் செற்றவெற் றித்தொண்டை மான்பொற் றுவரை [யன்னீர்
காளையுங் காமனுந் தேவியும் போல்வந்து காதலித்து
நாளையிங் கேயுங்க ணல்விருந் தாம்வண்ண நண்ணுவரே.

ஆள் - வீரரிற் சிறந்தோன்; பாகனும் ஆம். அடையார் - பகைவர். பொன் துவரை - அழகிய துவராபதி. காளையும் - தலைவனும். காமனும் தேவியும் போல வந்து - மன்மதனும் அவன் தேவியாகிய இரதியும் போல. காதலித்து - உங்கள்பால் அன்பு பாராட்டி. இங்கே உங்கள் நல் விருந்து ஆம் வண்ணம் நாளை நண்ணுவர் - நாளை இங்கே உங்கள் நல் விருந்தினராய் வந்தடைவர்.

(பி - ம்.) 4. தாய் மண நண்ணுவரே. (324)

வேலனை நற்றாய் வினுதல்

பொதுவற வையம் புரந்தோ னிலங்கைப் புரத்துவெந்தீக்
கதுவ முனிந்தரு ளுங்கரு மாணிக்கன் கப்பலன்னாள்
வதுவை மணஞ்செய்ய வென்மனைப் பால்வள்ளல் வந்
[தெய்துமோ
உதுவடி வேல்முரு காகுறி நீயின்று வந்துசொல்லே.

பொது அற - பொது என்பது இன்றித் தனக்கே உரித்தாக. இலங்கைப் புரத்து கதுவ முனிந்தது: இராமபிரான், அநுமன் தீ மூலம் இலங்கையை எரித்த செய்தியைக் குறிப்பதாகக் கொள்ள லாம். அன்றி, இக் கருமாணிக்கன் இலங்கையை வென்றதாகக் கருதவும் இடமாகும். வள்ளல் - தலைவன். கப்பலன்னாள் - கப்பல் நகரத்தவளான. வதுவை - மணமகளாகிய என் மகளை. மணம் செய்ய - மணம் செய்து கொள்ள ; வள்ளல் - தலைவன். என் மனைப் பால் வந்து எய்துமோ - என் வீட்டினிடத்து வந்து அடைவனோ? வேலன் - முருகனைப் பூசை செய்பவன். குறி - நிமித்தம். உது: சுட்டுப் பொருளில் வந்த இடைச்சொல் ; இங்கு முருகனைச் சுட்டி வந்தது. முருகா! இன்று நீ வந்து குறிசொல் என முடிக்க. (325)

---

## 20. தன் மனை வரைதல்

(தலைவன், தலைவியைத் தன் மனையில் வரைந்து கொள்ளல்)

வரைந்தமையுரைத்தல்

[தலைவன், தலைவியை மணந்தமை வந்தோரிடங் கூறல்]

அன்று தடத்திலங் கைவா யரவி னணிமவுலி
கன்ற நடந்தரு நங்கரு மாணிக்கன் கப்பலன்ன
துன்று மலர்க்குழல் வல்லியு நானுஞ் சுரங்கடந்து
மன்றன் முடித்தன மெம்மூர் வரையின் மடமயிலே.

அன்று தடத்து இலங்கு ஐவாய் அரவின் - முன் யமுனை யாற்று மடுவில் இருந்த காளியன் என்னும் ஐந்து தலைநாகத்தின். அணி மவுலி கன்ற - அழகிய முடிகள் நோவ. நடம் தரு - கூத் தாடிய. கண்ணபிரானை. சுரம் கடந்து - பாலை நிலத்தைக் கடந்து.

எம் ஊர் வரையின் - எம் ஊரில் உள்ள மலையில்; வரை: இடமும் ஆம். துன்று மலர்க்குழல் வல்லி என்றது, தலைவியை. மன்றல் - முடித்தனம் - மணவினையைச் செய்து முடித்தோம். மடமயிலே! என்றது முன், வருவதாகச் சொன்ன பாங்கி வர அவளை நோக்கித் தலைவன் கூறியது என்னலாம்; 290. (326)

---

## 21. உடன்போக்கு இடையீடு

(தலைவனும் தலைவியும் சென்றவிடத்து உடன் போக்கில் நிகழும் தடை)

### தன்செல வுணர்த்திவிடுத்தல்

[தலைவி, சில அந்தணர் மூலம் தன் செலவை அறிவித்தல்]

காற்றுந் தளர்பரித் தேர்க்கரு மாணிக்கன் கப்பல்சென்று
சாற்றுந் தெருமருந் தாயர்க்கு நீர்செந் தழல்பிழையா
ஆற்றும் புனலிடை யந்தணீர் காளக லாமலெனைப்
போற்றும் புரவலன் பின்னழற் கானகமும் போகின்றதே.

காற்றும் தளர் பரி தேர் - காற்றும் தன் வேகத்தில் தளர்ந்து பின்னிடும் படியான குதிரைகள் பூட்டிய தேரையுடைய. செம் தழல் பிழையா ஆற்றும் புனல் இடை அந்தணீர்காள் - வைதிக அக்னியைத் தவறாமல் போற்றி வளர்த்துவரும் நீர்த்துறையில் உள்ள அந்தணர்களே! நீர் - நீவிர். தெருமரும் தாயர்க்கு - (என்பிரிவால்) வருந்தும் என் தாய்மார்களுக்கு. அகலாமல் எனைப் போற்றும் புரவலன் பின், யான் அழல் கானம் போகின்றதே கப்பல் சென்று சாற்றும் என இயைத்து முடிக்க. புரவலன் - தலைவன்.

(பி - ம்.) 1. தவிர்பரித் 2. சாற்றுந்தொறும். (327)

### கண்டோர் வந்துரைத்தல்

கடமாக் களிற்றுத யன்கரு மாணிக்கன் கப்பலுங்கள்
மடமானை யாங்கள் வருநெறி கண்டன மாற்றலர்க்கு
விடமான வெஞ்சுரம் வேலோ னொருவன்பின் வேரிநறும்
தடமா நிழற்றங்கி மென்மேலு மேகின்ற தன்மையரே.

கட மா களிற்று உதயன் - மதங்கொண்ட பெரிய யானைமேல் உதயணன் போன்றவன். உங்கள் மடமானை - உங்கள் இள மான் போன்ற பெண்ணை. மாற்றலர்க்கு - பகைவர்க்கு. விடம் அன - விடம்போன்ற. வெம் சுரம் - கொடிய பாலை நிலத்தில். வேலோன் ஒருவன் பின் - வேலேந்திய ஒரு தலைமகன் பின்னே. வேரி நறும் - தேனும் நறுமணமுமுடைய. தட மா நிழலில் தங்கி - பெரிய மாமர நிழலில் தங்கி யிளைப்பாறி. மென் மேலும் - மேலும் தொடர்ந்து. ஏகின்ற தன்மையர் - (அவர்கள்) செல்லும் தன்மையர். (328)

## தமர், பின் சேறலைத் தலைவிகாண்டல்

காற்றியன் மாவல வன்கரு மாணிக்கன் கார்க்கலியை
மாற்றிய செங்கை வரோதயன் கப்பல் வரையினின்றும்
ஆற்றிய காவல்வில் லாளியர் வாளிய ராளியொப்பத்
தோற்றிய மீளிய ரெம்மையர் போலுஞ் சுரத்திடையே,

காற்று இயல் மா வலவன் - காற்றுப் போன்று வேகமாய்ச் செல்லும் இயல்புடைய குதிரைகளை நடத்த வல்லவனை. கார் கலியை - கரிய வறுமையை. மாற்றிய - போக்கிய. வரோதயன் - தெய்வ வரத்தால் தோன்றியவன். வில் ஆளியர் வாளியர் - வில்லை யும் அம்புகளையும் உடையவர் ஆளி ஒப்ப தோற்றிய மீளியர் - சிங்கம் போன்று காட்சியளிக்கும் வீரர்கள். எம் ஐயர் போலும் - எங்கள் தமயன்மார்கள் போலும். சுரத்திடையே வில்லாளியராயும் வாளியராயும் ஆளி ஒப்பத் தோற்றிய மீளியர், கப்பல் வரையினின் றும் காவல் ஆற்றிய எம் ஐயர் போலும் என இயைத்துப் பொருள் கொள்க.

(பி - ம்.) 3. வில்லாட்சியர். (329)

## அவன் விடுத்தகறல்

[தலைவன், தலைவியை விடுத்தகறல்]

காத்தா னுலகனைத் துங்கரு மாணிக்கன் கப்பல்வெற்பன்
வேர்த்தான் மனத்தில் விழிசிவந் தானவன் வேடரென்று
கோத்தான் கணையங் கவரல்ல ராயபின் கொம்பின்முகம்
பார்த்தான் படைதவிர்த் தான்மறைந் தான்றெண் பனி
[வரைக்கே.

உலகு அனைத்தும் காத்தான் - உலகம் முழுவதும் காத்தவன். வெற்பன் - தலைவன். மனத்தில் வேர்த்தான் - கோபத்தால் மனம்

புழுங்கினன். விழி சிவந்தான் - விழி சிவப்படைந்தான் கணை கோத்தான் - அம்பை வில்லிற் பூட்டினன். அவர் அல்லர் ஆய பின் - அவர்கள் தம் பகைவர் அல்லர் என்பதை அறிந்தபின். கொம்பு - தலைவி. ஒள் பனி வரைக்கே மறைந்தான் - ஒளி தங்கிய குளிர்ந்த மலையிற்போய் மறைந்து கொண்டான். (330)

அவன்புறங்கண்டு கவன்றுரைத்தல்

[தலைவன் புறங்கண்டமை அறிந்து, தலைவி வருந்தியுரைத்தல்]

தோற்றுஞ் சுடர்வட மேருவன் றன்றொண்டை வேந்தன் [வையம்
போற்றுந் துவரைப் பொருந்தலர் போலப் பொருப்பனைய
கூற்றம் பொரினுங் கொடுத்தறி யாத புறங்கொடுத்தான்
ஆற்றுந் தகுதியி லென்னைய ராதலி னண்டகையே.

சுடர் வட மேரு - ஒளிமிக்க வடமேரு மலை. பொருந்தலர் - பகைவர். கூற்றம் பொரினும் - யமனே வந்து போரில் எதிர்த்தாலும். புறம் கொடுத்தறியாத - முதுகு காட்டியறியாத. ஆற்றும் தகுதியில் என் ஐயர் ஆதலின் - எதிர்த்து நிற்கும் தகுதியில்லாதவர் என் தமயன்மார் ஆதலின். ஆண்டகை - தலைவன். புறங் கொடுத்தான் என்க. தலைவி கவன்றது, தலைவன் தன் ஐயர் என்ற பரிவால் புறங்கொடுத்து மறைந்தமைக்கு. (331)

சுரத்திடைக் கண்டோர் கூற்று

கோடுஞ் சிலையவன் பின்வந்த மானைக் குறித்துவெய்ய
காடுஞ் சயிலமுங் கைக்கணை கொண்டு கனலுயிர்த்து
நாடுந் தமர்கொல் வருகின்ற காளையர் நாற்றிசையும்
சூடும் புகழ்த்தொண்டை மான்கப்பல் மேவலர் சூழ்சுரத்தே.

கோடும் சிலையவன் - வளைந்த வில்லையுடைய தலைவன். பின் வந்த மானை - பின் வந்த தலைவியை. கனல் உயிர்த்து நாடும் - நெருப்புப்போல் பெருமூச்சுவிட்டுக் கொண்டு தேடிவருகின்ற. காளையர் தமர் கொல் - காளை போன்றவர்கள் தலைவியின் சுற்றத்தார் போலும். மேவலர் சூழ் சுரத்து - பகைவர் சூழும் இச்சுரத்தினிடத்து. (332)

### கண்டோர் தமரைத் தெருட்டல்

[தெருட்டல் - நல்லறிவுறுத்துதல்]

கைக்கார் முகமத வேள்கரு மாணிக்கன் கப்பலன்னூர்
மிக்கார் தொழுவட மீனன்ன கற்பினள் வேட்கையினல்
இக்காளே கல்வி குலஞ்செல்வம் வாய்மை யெலாமுமக்குத்
தக்கா னொருவன் றகாதுசொல் லாரென்றுஞ் சான்றவரே.

கப்பலன்னூர் - தலைவி. கை கார் முக மதவேள் - கையில் ஏந்திய வில்லையுடைய மன்மதன் போன்ற. வேட்கையினல், தன் தலைவன்மீது காதலினல். மிக்கார் - மேலோர். வடமீன் - வடக்கே தோன்றும் அருந்ததி நட்சத்திரம். 'உமக்கு தக்கான் ஒருவன் - இத் தலைவன் உங்களுக்குத் தகுதியுடைய ஒருவனவன். சான்றவர் - மேலோர். இதுவும் கண்டோர் கூறியதே. (333)

---

## 22. வரைதல்

### தலைவன் வரைந்துழி மகிழ்ச்சி

அன்றுகண் டார்கண்ணு மன்புடன் மேவிய மைந்தநண்பும்
தொன்றுகண் டாலன்ன தொண்டையர் வேந்தன் றுவரை
[வெற்பில்
இன்றுகண் டாலொத் தினியமென் பாவையை யிந்தமன்றல்
நன்றுகண் டாருள ரோநெஞ்ச மேமற்று நம்மினுமே.

அன்று கண்டோர் இடத்தும் தொன்று கண்டதுபோல அன்புடன் மேவி அமைந்த நட்புக் கொள்பவனை தொண்டையர் வேந்தன் என்க. இன்று கண்டால் ஒத்து இனிய - இன்றே புதிதாய்க் கண்டதுபோல இனிமையை அளிக்கும். இனிய மென்பாவையை - இனிமையும் மென்மையும் பொருந்திய இந்தப் பாவைபோன்ற தலைவியை. இந்த மன்றல் - இந்தத் திருமணத்தை. நெஞ்சமே - மனமே. நம்மினும் நன்று கண்டார் உளரோ - நம்மைக் காட்டிலும் நன்று செய்து மகிழ்ந்தோர் உள்ளாரோ? இது, தலைவன் தலைவியை மணந்த சிறப்பைக் கண்டோர் தம் நெஞ்சொடு கூறியது.

உழையோர் வாழ்த்து

உமையாளு மீசனும் போலுட ளுயுயர் பூந்திருவும்
எமையாளு மாயனும் போலிருப் பீரிகல் வான்முகிலும்
கமையா ளுலகமும் போற்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
அமையார் வரிவளைத் தோளுருப் பாவையு மண்ணலுமே.

அமை ஆர் வரி வளை தோள் - மூங்கில் போன்றதும், வரிகளைக் கொண்ட வளை அணிந்த தோள்களையுடைய. உரு பாவையும் - வடிவிற் சிறந்த பாவையாகிய தலைவியும். அண்ணலும் - தலைவனும் ஆகிய நீவிர், உமையாளும் ஈசனும் போலும், திருவும் மாயனும் போலும், முகிலும் உலகமும் போலும் உடனாய் இருப்பீர். உடனாய் - பிரியாது ஒன்று சேர்ந்து. எமையாளும் மாயன் என்றமையால், நூலாசிரியர் திருமாலின் பாற்கொண்ட பக்தி விளங்கும். இகல் வான் முகிலும் - இன்றியமையாது ஒத்துள்ளவையான சிறந்த மேகமும்; இகலுதல் - ஒப்பாதல்; கம்ப. பால. நகரப் : 44; நன்னூல். மயிலை நாதர் உரை, சூ. 44. கமை ஆள் உலகமும் - பொறுமையைத் தன்னிடம் கொண்டு ஆளும் புவியும்.

(பி - ம்.) 4, பாவையு மன்பருமே. (335)

---

# 23. இல்வாழ்க்கை

## பாங்கி பழிச்சல்

வாடிய வஞ்சி மருங்குனல் லார்வடிக் கண்டொடுக்கும்
தோடியல் பூந்தொங்க லான்றெண்டை வேந்தன் றுவரை [யன்னார்
ஆடிய பூஞ்சுனை யுந்தேடு மானு மகமகிழ்ந்து
கூடிய வாவிங்ங னேகளி கூர்மணக் கோலங்கொண்டே.

வாடிய வஞ்சி மருங்குல் நல்லார் - வாடித் துவண்ட கொடி போலும் இடையையுடைய மகளிரது. வடி கண் தொடுக்கும் - கூரிய கண்களைக் கொண்டு தொடுக்கப்பெற்ற. தோடு இயல் பூம் தொங்கலான் - இதழ்களமைந்த மலர் மாலையையுடையவன்; கண் தொடுக்கும் தொங்கலான் என்றது, கண்களைக்கொண்டு தொடுத்தன போன்ற அவன் அணியும் குவளைமலர் மாலையைக் குறித்தது; இனி; அவனை வேட்கையால் நோக்கும் மகளிருடைய கண்கள் மாலை போல வரிசையாய்த் தொடுக்கப்பட்டதை அணிந்தவன்

என்றலும் ஒன்றும். துவரை அன்னூர் - தலைவி. ஆடிய பூம் சுனையும் - நீராடிய பூக்கள் நிறைந்த சுனையும். தேடு மானும் - (தலைவர்) மான் தேடி வந்ததும். இங்ஙனே களிகூர் மணக்கோலம் கொண்டு அகம் மகிழ்ந்து கூடியவா - இவ்விதம் மகிழ்ச்சி மிக்க மணக்கோலம் கொண்டு மனம் மகிழ்ந்து கூடியவாருக முடிந்தது!

(பி - ம்.) 2. தோடுயர். (336)

## தலைவன் பாங்கியைப் புகழ்தல்

மடனு மறிவுங் குறியா தெவர்க்கும் வழங்குவதே
கடனென் றிருக்குமெங் கோன்கரு மாணிக்கன் கப்பலன்னுள்
உடனிங் கியைந்த மனம்வறி தேவந் துறுவதென்னே
இடனும் பொழுது மறிந்திடை நீநின் றியம்பியதே.

மடனும் (வந்தடைந்தோர்) மடமைத் தன்மையையும். அறிவும்-அவர்களது அறிவின் பெருமையையும். குறியாது - கருதிப் பாராமல். 'மடனு...வழங்குவது' இது கொடை மடம் எனப்படும். கப்பல் அன்னுள் உடன் - தலைவியுடன் இங்கு இயைந்த மணம் - என்னுடன் பொருந்திய இம் மண நிகழ்ச்சி. வறிதே வந்து உறுவது என்னே - அறியாது நடந்தது என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? இது வியப்பைத் தருகின்றது. ஏனெனில் இடனும் பொழுதும் அறிந்து - இடத்தையும் காலத்தையும் அறிந்து. இடை நின்று - உதவியாக இருந்து. நீ இயம்பியதே - நீ எங்களுக்கு உதவியாகப் பேசியதால் ஆனதே அன்றோ?

(பி - ம்.) 4. நீயின் றியம்பியதே. (337)

## ஆராவன்பி னவனிலை கூறல்

[குறியிடையீட்டில் தலைவன் ஆற்றியிருந்தமையைப் பாங்கி எடுத்துரைத்தல்]

காற்றெதிர் பூளை யெனக்கரு தாரைக் களத்தடித்துத்
தூற்றிய வெங்களிற் றுன்றெண்டை மானவன் றுவரை
[யன்னன்
சாற்றிய வின்பக் குறியிடை யீடுகள் சார்ந்தவந்நாள்
ஆற்றிய வாறெங் ஙனேயமை யாவிந்த வன்பினையே.

காற்று எதிர் பூளை என - பெருங்காற்றில் எதிர்ப்பட்ட பூளைப் பஞ்சு போல; பூளை : பஞ்சுபோல் மென்மையான ஒருவகைக் காட்டுச்

செடியின் பூ. கருதர்ரை - பகைவரை. களத்து அடித்து - போர்க் களத்தில் தாக்கி அடித்து. துவரை அன்னான் - துவரை நகரில் உள்ள தலைவன். சாற்றிய - சொல்லிச்சென்ற. இன்ப குறியிடையீடுகள் - இன்பத்திற்கு மாறாக ஏற்பட்ட குறி இடையூறுகள். சார்ந்த அந்நாள் - நேர்ந்த அக்காலங்களில். அமையா இந்த அன்பினை - (இப்பொழுது) தெவிட்டாத இந்த அன்பை. ஆற்றிய ஆறு எங்ஙனே - நீவிர் ஆற்றியிருந்த விதம் எப்படி? (338)

மணமனைச்சென்ற செவிலிகூற்று

அழிபட ரின்றி யகமகிழ் கூர லரங்கவரே
வழிபடு நற்றெய்வ மற்றில்லை யான்மரு வாதவர்க்குக்
கழிபடர் நல்குமெங் கோன்கரு மாணிக்கன் கைதையங்கான்
சுழிபடு நீர்த்துவ ரைத்திரு நாடனென் றூமொழியே.

அழிபடர் இன்றி - வருந்தும் துன்பம் இல்லாமல். அகம் மகிழ் கூரலர் - ஒருவரும் மனமகிழ்ச்சி மிகுவா ரல்லர். அவரே வழிபடு நல் தெய்வம் - அவரே நீ ஆராதிக்கும் நல்ல தெய்வம் ஆவர். மற்று இல்லை - வேறு தெய்வம் உனக்கு இல்லை. ஆல்: அசை. மருவாதவர்க்கு - பகைவர்க்கு. கழி படர் நல்கும் - மிகத் துன்பத்தைத் தரும். கைதை அம் கான் - தாழைகள் அடர்ந்த சோலையையுடைய. சுழிபடு - சுழிகள் உண்டாகும். துவரை நாடன் - கரு மாணிக்கன். என் தூமொழி என்றது, தலைவியை. (339)

(பி - ம்.) கூரலாங்கவரை : கூரலவர்க்கனோர்.

தலைமகள் வாழ்க்கை நன்றென் றுரைதல்

[செவிலி, தலைவியின் இல்லற வாழ்க்கையின் சிறப்பை எடுத்துக் கூறுதல்]

உளத்துக் கிசைந்த படிவழு வாத வொழுக்கமுந்தன்
வளத்துக் கிசைந்த மனையற நோக்கமு மாற்றலரைக்
களத்துப் பலியிடு வேற்கரு மாணிக்கன் கைதவர்தம்
தளத்துக் கொருவன் றுவரையன் னாய்நின் றகுதிகளே,

உளத்துக்கு இசைந்தபடி - தன் கணவன் மனத்திற்கு ஒற்ற வாறு. ஒழுக்கம் - நடத்தை. தன் வளத்துக்கு இசைந்த மனை அற நோக்கம் - தன் செல்வ வளத்திற்கு ஏற்ற குடித்தனம் நடத்தும் நோக்கம். இது, 'மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான், வளத்தக்காள் வாழ்க்கைத்துணை' என்ற குறட்பாவை அடியொற் றியது. மாற்றலர் - பகைவர். கைதவர் தம் தளத்துக்கு ஒருவன் - பாண்டியர் சேனைத் தலைவருட் சிறந்தவன். துவரையன்னாய் என்றது தலைவியை நின் தகுதிகளே - உன் இல்லறச் சிறப்புக்கு ஏற்றவையே. இது, செவிலி தலைவியின் இல்லற நெறியைப் பாராட்டியது. (340)

## அடிசில் காலை மடவரற் புகழ்தல்

[தலைவன், தலைவியின் அடிசில் அமைப்பைப் புகழ்தல்]

கானார் கமழ்கண்ணி யான்கரு மாணிக்கன் கப்பலன்னீர்
தேனார் மலையிற் சிலம்பிலந் நாளுங்கள் சிற்றின்முற்றி
யானா தரித்த வடுமணற் சோறெனக் கில்லையென்றீர்
பானா றடிசிலு மின்பாகு மாகப் படைக்கவின்றே.

கான் ஆர் கமழ் கண்ணியான் - மணம் மிக வீசும் மாலையை உடையவன்; கண்ணி - தலைமாலை. கப்பல் அன்னீர், என்றது தலைவியையும் அவள் பாங்கியரையும். மலையில் சிலம்பில் - மலையடி வாரத்தில்; சிலம்பு - பக்கமலை அடிவாரம்; பெரும்பாண். 330, நச். உரை. அந்நாள் - அன்றொரு நாள். உங்கள் சிற்றில் - நீங்கள் கட்டிய சிற்றிலில். முற்றி - வந்து தங்கி. யான் ஆதரித்த - நான் விரும்பிய. பால் நாறு அடிசிலும் - பால் மணம் கமழும் சோறும். இன் பாகும் - இனிய தேன்பாகும்; பாகு - இளகக் காய்ச்சிய குழம்புமாம். இன்றே - படைக்க - இன்றைக்குப் படைக்கவே போலும்! இது, தலைவியை நோக்கித் தலைவன் மகிழ்ந்து கூறியது.

# 24. பரத்தையிற் பிரிவு

[பரத்தையை நாடித் தலைவன் தலைவியைப் பிரிதல்]

## புலவிக்கேதுக் கூறல்

[தலைவியின் ஊடலுக்குக் காரணம் கூறியது]

கடித்தா மரைமங்கை கோன்கரு மாணிக்கன் கப்பல்மன்னர்
முடித்தா மரையின்று முற்றும் பவனியில் மொய்குழலார்
தொடித்தா மரைகள் குவிந்தன மேகலை சோர்ந்தனகண்
வடித்தா மரைகண் மலர்ந்தன மாட மறுகெங்குமே.

கடி தாமரை மங்கை கோன் - மணம் பொருந்திய தாமரை மலரில் வாழும் திருமங்கையின் தலைவனான, கப்பல் - கப்பல் நகரில், மன்னர் - பல மன்னர்களுடைய, முடி தாமரை முற்றும் - முடிகளாகிற தாமரைகள் நிரம்பிய, மாட மறுகு எங்கும் - மாடங்கள் நிறைந்த வீதி எங்கும், இன்று பவனியில் - இன்று நடந்த நம் தலைவனது உலாவில், மொய் குழலார் - அடர்ந்த கூந்தலையுடைய மகளிர்களுடைய, தொடி தாமரைகள் குவிந்தன - வளையல்கள் அணிந்த கைகளாகிய தாமரை மலர்கள் கூம்பிநின்றன, மேகலை சோர்ந்தன - அன்னார் மேகலாபரணங்கள் தளர்ந்து நழுவின, வடி கண் தாமரைகள் - அவர்களின் கூரிய கண்களாகிய தாமரைகள்; வடி - மாவடுப் போன்ற எனலும் ஆம், மலர்ந்தன - மலர்ந்து நோக்கி நின்றன. குவிந்தமை, அன்பினால்; சோர்ந்தமை, விரகத்தால்; மலர்ந்தமை, வடிவழகில் ஈடுபட்டமையால். பவனி கண்டோர், இது 'தலைவியின் புலவிக்கு ஏதுவாகும்' என்று கூறியது. (342)

## தனித்துழி யிறைவி துனித்தழு திரங்கல்

[தலைவி, தலைவனைப் பிரிந்த நிலையில் வருந்திக் கூறுதல்]

தூவி மயிற்பெடை வேள்தொண்டை மான்வண்டு தோய்ந்த
காவி மலர்த்தடஞ் சூழ்கப்பல் நாட்டுக் கனங்குழையீர் [நறும்
பாவி யெனத்தவிர்ந்த தும்முள ரோவிப் பதியினிற்றம்
ஆவி யினைத்துறந் தும்மிருப் பாரெவ ராகங்கொண்டே.

தூவி பெடை மயில் வேள் - தூவியையுடைய பெண் மயில்கள் போன்ற மகளிர்க்கு மன்மதன் போன்றவன்; காவி மலர் தடம் சூழ் -

குவளை மலர்கள் மிகுந்த தடாகங்கள் சூழ்ந்த. கனங்குழையீர் என்றது, தோழியரை. இப்பதியினில் - இந்நகரில். பாவி என - பாவியான என்னைப்போல. தவிர்ந்து - தலைவனைப்பிரிந்து. உளரோ - இருப்பார்களோ? தம் ஆவியினை துறந்து - தம் உயிராகிய தலைவனைத் துறந்து. ஆகம் கொண்டே இருப்பார் எவர் - தம் உடலை மட்டும் கொண்டு இருப்பார் என்னிலும் வேறு யார்? இது, தலைவனை உயிராகவும் தனைஊ உடலாகவும் கொண்ட தலைவி தலைவன் தன்னைப் பிரிந்ததை அறிந்து வருந்திக் கூறியது.

(பி - ம்.) 4. பெறு மாகங்கொண்டே. (343)

## பாங்கி கழறல்

[பாங்கி, தலைவிக்குக் கூறுதல்]

போகைக் கிசைந்து வரவெதிர் கொண்டும் புரவலனே
நீகற்பி னுக்கு நெறியல்ல வேநெடுந் தாண்முளரித்
தோகைக்கு வாய்த்த பிரான்றுண்டை மான்வண் றுவரை [யன்ன
பாகிற் சிறந்தசொல் லாய்படர் கூர்வது பண்பின்மையே.

புரவலனே போகைக்கு இசைந்து : தலைவன் உன்னைப்பிரிந்து போவதற்கு நீயே மனமொப்பியும்; ஏ அசை. வரவு எதிர் கொண்டும் - நீ அவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தும். (இத்தகைய நிலையிலுள்ள நீ), நெடு தாள் முளரி தோகை - நீண்ட காளத்தோடு கூடிய தாமரையிலுள்ள பெண்ணான திருமகளுக்கு. வாய்த்தபிரான் - தலைவனாக அமைந்த பெருமானான திருமால் போன்றவன். துவரை அன்ன - துவரை நகரில் உள்ள. பாகில் சிறந்த சொல்லாய் - தேன் பாகு போன்ற இனிய சொற்களை யுடைய தலைவியே. படர் கூர்வது - மிகுதியும் துன்புறுவது. பண்பு இன்மையே - முறையில்லாததே ஆகும். நீ இசைந்து வரவு எதிர்கொண்டும், படர் கூர்வது பண்பின்மையே என்று பாங்கி கழறினள் என்க. பண்பு - (நின்) கற்பின் தன்மை. (344)

### செவ்வணியழுங்கல்

(செவ்வணி கண்டு உழையர் கூறுதல்)

[தலைவி, பூப்புற்றதை அறிவுறுத்தற்குச் செம்மலர் முதலியன அணிந்துகொள்ளச் செய்து ஒருத்தியைப் பரத்தை வீட்டிலிருக்கும் தலைவன்பால் விடுத்தபோது அதனைக் கண்ட அயலார் வருந்திக் கூறுதல்]

மறப்போ ரிகலும் வடிநெடு வேற்கண் மகளிர்கொங்கைச்
சிறப்போ விறைவர் திருவரு ளோமண்ணிற் றீமையெல்லாம்
துறப்போன் நலம்புரி தொண்டையர்கோன்கப்பற் றேகையரின்
பிறப்போ வுலகினி லியான்சென்று கூறுதல் பெய்வளையே.

மற போர் இகலும்-கொடிய போர்போல் எதிர்க்கும். போர் இகல் தல் கண்ணின் இயல்பு. மகளிர்-பரத்தையர். இறைவர் திரு அருளோ-அத்தலைவர் அவர்பால் கொண்ட அருளோ? மண்ணில் தீமை எல்லாம் துறப்போன் - பூமியில் உள்ள துன்பங்களையெல்லாம் போக்கு பவனும். நலம்புரி தொண்டையர் கோன் - அனைவர்க்கும் நன்மை புரிபவனுமான தொண்டையர் கோனுடைய. கப்பல் தோகையர் - தலைவி. இது, தலைவன் பரத்தையரை நாடியது அறிந்த தலைமகளின் உழையர், 'பரத்தையரின் வசீகர ஆற்றலையோ, அவர்கள்பால் தலைவன் கொண்ட காதலையோ, தலைவியின் இல்லற நெறியையோ, இவற்றுள் எதை எடுத்துக் கூறுவோம்' என்று வருந்திக் கூறியதாம். (345)

### பரத்தையைப் பழித்தல்

வலத்தார் மகிணன் மனைவியர் தெவ்வர் வழியறவே
தொலைத்தா னனுபமன் றொண்டையர் கோன்கப்பல்
[சூழ்கரும்புல்
தலத்தா வலர்கொண் டழைப்பினு மூரனை யாங்கவன்பால்
நலத்தா னிகரல்லர் நாணின்மை யாலொப்பர் நம்மையின்றே.

வலத்து ஆர் தெவ்வர் - வலிமையால் நிறைந்த பகைவர்களை. மகிணன் மனைவியர் வழி அறவே - அவர்களுடைய கணவன், மனைவியர் முதலாய் உள்ள சந்ததி அழிய. கரும் புல் தலத்து - கரிய அற்பமான இடத்து; அதாவது பரத்தையர் சேரியில். ஆங்கு ஊரனை - அங்கு நம் தலைவனை. ஆவலர் - விருப்பு

முற்ற பரத்தையர். கொண்டு அழைப்பினும் - அழைத்துக் கொண்டாலும். அவன்பால் நலத்தால் - தலைவன் நன்மையைக் கருதுமிடத்து ; நலம், உண்மைக் காதலும் ஆம். நம்மை நிகர் அல்லர் - நமக்கு ஒப்பாகார் ; தலைவன் நலத்தில் பரத்தையர்க்குக் கருத்தில்லையென்பதும், தனக்கே அது உள்ளதென்பதும் தலைவியின் கருத்து. நாண் இன்மையால் ஒப்பர் - நாணம் இன்மை என்பதால் அப்பரத்தையர் நம்மை ஒப்பர். தலைவிக்கு நாண் இன்மையாவது தலைவன் பரத்தையரை நாடினும் தான் வெட்கமின்றி அவனை நாடுவது. இப்பாடலின் முதலடி ஏட்டில் மிகவும் சிதைந்து காண்கின்றது ; ஒருவாறு ஆராய்ந்து இங்குப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இப்பாடலின் உரையும் ஆராயத்தக்கது.

(பி - ம்.) 1. வலத்தார் மதினைன், 3. தலத்தார்வலர்.
4. நன்மையின்றே. (346)

உழையர் தலைவன் வரவுரைத்தல்

துப்பார் கடற்கழித் தண்டுறை யார்த்தொண்டை மான்றுவரை
செப்பார் வனமுலைச் சேடிமுன் செல்லச் செழுந்தடத்து
மைப்பா னலங்கண்ணி வந்தது காணம் மனையிலென்றும்
தப்பார் நிலையுல கந்தடு மாறினுஞ் சான்றவரே.

துப்பு - பவழம். கடல் கழி தண் துறை ஆர் - கடலைச் சார்ந்த உப்பங்கழியை யுடைய குளிர்ந்த துறைகள் பொருந்திய. துவரை - துவரை நகரில். சேடி முன் செல்ல - பணிமகள் செவ்வணி அணிந்து முன்னே போக. வனம் - அழகு. செழும் தடத்து மை பானல் அம் கண்ணி - செழிய தடாகத்தில் உள்ள நீலோற்பலம் போன்ற அழகிய கண்களையுடையவளே! இது தலைவியை நோக்கிய விளி. நம் மனையில் (தலைவன்) வந்தது காண், என இயைக்க. உலகம் தடுமாறினும் சான்றவர் என்றும் தப்பார் எனக் கூட்டிப் பொருள் கொள்க. இது, வேற்றுப்பொருள் வைப்பணி. (347)

மகப்பொறை கூறல்

கலைக்கண் ணிறைதரு வேற்கரு மாணிக்கன் கப்பலன்னூர்க்
கிலைக்கண் குலமுத லெய்திய நாளிரு தோண்மெலிந்து
முலைக்கண் கருகிக் கனிவாய் விளர்த்து மொழிதளர்ந்து
மலர்க்கண் பசந்து வெளிப்பட்ட வாறென் மருங்குலுமே.

கலை கண் நிறை தரு - கலையறிவில் நிறையப்பெற்ற. கப்பலன்ஞர்க்கு - தலைவிக்கு. இலை கண் - ஆலிலை போன்ற வயிற்றில். குலமுதல் - மைந்தன். எய்திய நாள் - கருவில் உதித்தகாலத்து. தோள்மெலிதல், முலைக்கண் கருகுதல், கனிவாய் வெளுத்தல், மொழி தளர்தல், கண்பசத்தல், மருங்குல் வெளிப்படத் தெரிதல் முதலியன 'மகளிர் உடலிற்ருேன்றும் குறிகள். இது, தலைவி கருவுற்றமையைக் கண்டு உழையர் கூறியது.

(பி - ம்.) 3. கனிவாய் வெளுத்த. (348)

வெள்ளணி

[தலைவி, புதல்வன் பெற்றமையைப் பரத்தை வீட்டிலுள்ள தலைவனுக்கு அறிவிக்க, பாங்கி ஒரு சேடியை வெள்ளாடை, வெண்மலர் முதலியன அணிவித்து அனுப்புதல்]

ஏத்தார் மிசையி லெழுகின்ற தீவிழி வெங்குருதி
தோய்த்தா றியவடி வேற்ருெண்டை மான்கப்பற் ருேகை
சேய்த்தாய வன்ப ருளமணித் தாகத் திருவயிறு [யன்னீர்
வாய்த்தாள் மடந்தை வலம்புரி யீன்ற மணியென்னவே.

ஏத்தார் மிசையில் - பகைவர் மேல். வெங்குருதி - வெப்பமான குருதியில். வடிவேல் தோய்த்து - தன் கூரிய வேலைத் தோய்த்து. (அதனால்), விழி தீ ஆறிய தொண்டைமான் - தன் விழிகளில் எழுந்த கோபத்தீயைத் தணித்த தொண்டைமான். சேய்த்து ஆய - தலைவியைவிட்டுப் பரத்தையர் இல்லமாகிய தொலையில் இருந்த அன்பர் உளம் - தலைவர் மனம். அணித்து ஆக - அவள் அருகே அடைய. வலம்புரி ஈன்ற மணி என்ன மடந்தை திருவயிறு வாய்த்தாள்; வலம்புரி - வலம்புரிச் சங்கு. மணி - முத்து. திரு வயிறு வாய்த்தாள் - வயிற்றினின்று பெற்ருள்; வயிறு வாய்த்தல் - பெறுதல்; 'கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே' (பெருமாள் திருமொழி); 'வார்காத்த வனமுலையார் மணி வயிறு வாய்த்திலரால்'; கம்ப. பால. குலமுறை: 16. வலம்புரி தலைவியையும், மணி புதல்வனையும் குறித்தன. இது, தலைவி மகப்பேறு அடைந்தமையைச் சேடியர்க்குப் பாங்கி கூறி, வெள்ளணி அணிவித்துத் தலைவற்குத் தெரிவிக்க அனுப்பியது.

(பி - ம்.) 1. ஏத்தாரிசையி லெழுகினத். (349)

## தலைவி நெய்யாடல்

இந்தொன் றியமுகிலி யாணர்நல் லூரரெப் போதுவந்தீர்,
மைந்தன் பிறந்தனன் மங்கல மேவல்லி யும்மறையும்
கந்துஞ் சுளிகளிற் றூன்கரு மாணிக்கன் கப்பலன்னாள்
அந்தண் சுரிகுழ லாள்நெய் யாடிமெய் யாடினளே.

இந்து ஒன்றிய முகில் யாணர் நல்லூரர் - சந்திரன் தங்கிய மேகங்களால் அழகிய நல்ல ஊரையுடைய தலைவராகிய நீவிர்; புதிதாக வந்தவரை, 'என்று வந்தீர்' என்று கூறி அழைப்பது உலக வழக்கு; இது, தலைவன் பிரிந்து வந்த நிலைமையைச் சுட்டிக் கூறியதும் ஆம். சந்திரனும் முகிலும் படியும் மாடங்கள் ஓங்கும் ஊர் என்க. வல்லியும் மறையும் கந்தும் சுளி களிற்றூன் - வல்லிக் கயிற்றையும், தன்னை அடைத்து வைத்திருக்கும சாலையையும், கட்டுத்தறியையும் கோபிக்கும் களிறுகளை உடையவன். வல்லி - யானை வயிற்றில் கட்டும் ஒரு கச்சை. அம் தண் சுரி குழலாள் - அழகிய குளிர்ந்து சுருண்ட கூந்தலையுடைய தலைவி. நெய் ஆடி மெய் ஆடினள் - எண்ணெய் தேய்த்துக் கொண்டு மங்கள நீராடினள். இது, பாங்கி தலைவனுக்குக் கூறியது. 'எப்போது வந்தீர்' என்றது நகையிற் கூறியதும் ஆம்.

(பி - ம்.) 2, வல்லியும் பறையும். (350)

## யாணரூரன் காணவிரும்பல்

[தலைவன், தலைவியின் புது நலத்தைக்காண விரும்புதல்]

காலந் தருபுயல் போற்கரு மாணிக்கன் கப்பலன்னீர்
கோலந் தருபைங் குழவியுங் கையுங் குழலுநெய்யும்
பாலுந் தனமும் பசுநரம் பேறிய பல்லவமே
போலுந் திருநிற முங்கண்டு நாமென்று போற்றுவதே.

காலம் தரு புயல் - வேண்டுங்காலம் தவறாது அளிக்கும் மேகம். கோலம் தரு - அழகமைந்த. பைங்குழவி - இளங்குழந்தை. நெய்யும் குழலும் - எண்ணெயும் கூந்தலும். பாலும் தனமும் - பால் சுரக்கும் தனங்களும். பசு நரம்பு ஏறி பல்லவமே போலும் திரு நிறமும் - பசிய நரம்பு தோன்றி விளங்கும். இளந்தளிரே போலும் அழகிய மேனியும். இது, தலைவன் கூறியது.

(பி - ம்.) 4, என்று நாம் சென்று போற்றுவமே, (351)

## புதல்வனை விரும்பல்

[தலைவன் புதல்வனைக் கண்டு மகிழ்தல்]

விடுத்தாள் கனங்குழை வெள்ளணி வள்ளலு மேத்தவந்தே
எடுத்தான் மகவினை யின்முழ வார்ப்ப வியலிசையோர்
தொடுத்தார்கள் மங்கலந் தொண்டையர் கோன்கப்பற்
[றேன்றலென்னக்
கொடுத்தா னிதியெவர்க் கும்வட மேருவுங் கூசநின்றே.

கனங்குழை வெள்ளணி விடுத்தாள் - தலைவி சேடியை வெள்ளணிக்கோலம் புனைவித்துத் தலைவனிடம் செல்ல விடுத்தாள். வள்ளலும் - தலைவனும். மகவினை இன் முழவு ஆர்ப்ப எடுத்தான் - மகவை மங்கல முழவம் ஒலிக்க, எடுத்துக் கொண்டான். இயல் இசையோர் - இயல் இசையில் வல்ல கவிவாணர்கள். மங்கலம் தொடுத்தார்கள் - மங்கல வாழ்த்துப் பாடல்களைத் தொகுத்துப் பாடினர். வட மேருவும் கூச - பொன் மலையாகிய வடமேருவும் கண்டு கூச்சம் கொள்ளும்படி, மிகுதியாக. நிதியம் எவர்க்கும் கொடுத்தான் - தலைவன் யாவர்க்கும் பொருள் வழங்கினான். (352)

## கலந்துழி மகிழ்தல்

ஈண்டிய செல்வமுந் தெய்வமுந் தெவ்வ ரிழக்கும்வண்ணம்
தூண்டிய வெம்பரித் தொண்டையர் கோன்கப்பற் றேகையுநல்
ஆண்டகை யுந்தம் மகமகிழ் பாயலி லைம்புலனும்
வேண்டிய வாறு தரும்வெய்ய காதல் விளைந்ததுவே.

தெய்வமும் - தெய்வ அருளையும். ஆண்டகை - தலைவன். பாயலில் - பள்ளியில். ஐம்புலனும் வேண்டியவாறு தரும் - ஐம்புலன்களும் விரும்பியபடி இன்பத்தைத் தருகின்ற. வெய்ய - விருப்பம் மிக்க. தோகை - தலைவி.

(பி - ம்.) 2. றேகைநல்லாள்.
3. பாயலணைய கங்குல்.
4. தரும் வெய்ய பாயலகல் கங்குல்.

## தலைவி புலவிநுணுக்கம்

[தலைவி புலந்தழித் தலைவன் வருந்தியது]

ஆறாத வன்புற் றகங்களி கூர்ந்தம் புவியளந்த
காறாறு செங்கரத் தான்கரு மாணிக்கன் கப்பலன்னார்
மானார் விழியும் வடிவுங்கண் டேகண்கள் வாழ்ந்திருப்ப
யானாரை யொப்பனென் றாளென்செய் வேன்மற் றிதற்கினியே

ஆறாத - கெடாத. அம் புவி அளந்த - அழகிய பூமியை அளந்த திருமால் போன்ற. கால் நாறு செம் கரத்தான் - மணம் வீசும் சிவந்த கைகளையுடையவன்; புவி அளந்தவனும், கான் நாறும் செங்கரத் தானும் என்க. கப்பலன்னார் - தலைவியின். கண்கள் (தலைவன்) கண்கள். மேனி இவற்றின் அழகைக் கூர்ந்துநோக்க, அப்பொழுது, என்று கொள்க. யான் யாரை ஒப்பன் என்றாள் - யான் யார்போன் றுள்ளேன் என்று தலைவி கேட்டாள். யாரை யென்பது; தலைவன் அதுகாறும் நாடியிருந்த பரத்தையரைக் குறிப்பிட்டபடி; என் செய் வேன் இதற்கு இனி - இனி யான் இதற்கு என்ன செய்வேன். இவ் வாறு தலைவன் கூறி வருந்தினான் என்க. இது, புலவி நுணுக்க மாயிற்று; புலவி நுணுக்கம்: 'அது புலவியது நுணுக்கமென விரியும். அஃதாவது தலைமகனுந் தலைமகளும் ஓரமளிக்கட் கூடி யிருந்துழி, அவன் மாட்டுப் புலத்தற் காரணமில்லையாகவும், காதல் கைம் மிகுதலான் நுண்ணியதோர் காரணமுளதாக உட்கொண்டு அதனை யவன் மேலேற்றி அவள் புலத்தல்; (குறள். பரிமேலழக ருரை, காமத்துப். 17.)

(பி - ம்.) 4. என்றாலென் செய்வேன். (354)

## பதங்கம் பழிச்சல்

[தலைவன், விட்டிற் பறவையைப் புகழ்தல்]

சிறைபுக் கெரியவந் தீபம் புகுபைம்புட் செம்பொற்றுலாம்
நிறைபுக்க வன்பெற்ற நீடுல கெய்துதல் நீடுதமிழ்த்
துறைபுக்க தொண்டையர் கோன்சோலை சூழ்கப்பற் [றூர்கைநல்லாய்
கறைபுக்க வேலன்ன கண்சிவப் பாறுங் கடன்குறித்தே.

சிறை புக்கு எரிய - (நெருப்பு) சிறகில் பட்டு எரியும்படி. அம் தீபம் புகு பைம் புள்-அழகிய (கவர்ச்சியுள்ள) தீபத்துள் புகுந்த பசிய விட்டில், செம்பொன் துலாம் நிறை புக்கவன்- சிபி. பெற்ற பேர் உலகம் எய்துதல் - அடைந்த புகழுலகத்தை அடைதல் ; (அதாவது, இறத்தல்.) கண் சிவப்பு ஆறும் கடன் குறித்து -(கோபத்தினால் உண்டான) உன் கண் சிவப்பு ஆறும்படியாகச் செய்யும் கடமையை நினைத்ததாகும். புறாவைக் காத்துப் பருந்தின் கோபத்தை நீக்கத் துலாம் புக்குச் சிபி புகழ் எய்தினது போல, தான் எரிபுக்கு (விளக்கையும் அணைத்து)த் தன் உயிரைக் கொடுத்து, தலைவியின் ஊடலை நீக்கிய பதங்கம் புகழெய்தியது என அதனைத் தலைவன் பாராட்டினான் என்க. பதங்கம் - விட்டிற்பறவை.

இது, தலைவி புலவி நுணுக்கம் கொண்ட நிலையில் நிகழ்ந்த ஒரு சிறு நிகழ்ச்சியால், தலைவி அச்சங்கொண்டு ஊடல் நீங்கித் தலைவனை அணைத்துக்கொண்டாள் என்ற அரிய கற்பனை. ஒப்பு. பெருங்கதை. *3 : 14. 150 - 158.* *(355)*

(பி - ம்) 2. சீருலகம், 4. பாறுகடன்.

## புதுப்புனல் கண்டோர் விதுப்புரை செய்தல்

[வைகையில் புதுப்புனல் வரத் தலைவன் முகம் கண்டோர் வருந்திக் கூறுதல்]

தொகையார் சுரும்பறை தார்த்தொண்டை மான்கப்பற் [றென்னகரின்
வகையார் வளைமுரல் வையைப் புதுப்புனல் வந்ததன்றே
தகையார் மடந்தையர் தம்மமர் காதலின் மெய்ம்மகிழ
முகையா விருந்தது நம்புன லூரன் முகமொன்றுமே.

தொகை ஆர் சுரும்பு அறை - கூட்டமாக நிறைந்த வண்டுகள் ஒலிக்கின்ற. வகை ஆர் வளை முரல் - பலவகைப்பட்ட சங்குகள் ஒலிக்கின்ற. அன்று - அன்றைத்தினம் ; ஏ : அசை. தகையார் - தகுதி உடைய ஆடவர். தகையார் தம் அமர் மடந்தையர் காதலின் மெய் மகிழ, நம் புனல் ஊரன் முகம் ஒன்றுமே முகையாய் இருந்தது என இயைக்க. முகையாய் இருந்தது - (தலைவி ஊடி நின்று வாராமையால்) முகம் கூம்பி இருந்தது. (356)

### பரத்தை தற்புகழ்தல்

கட்டிய திண்கழ லான்கரு மாணிக்கன் கப்பலன்னார்
மட்டவிழ் தொங்கன் மவுணனைக் காயினு மாநிலமேல்
பட்டது பற்றுமென் பாற்றெனிற் பாவையன்னீர்
இட்டது சங்கல்ல நான்கொங்கைப் போலல்ல வீங்கிதுமே.

கப்பலன்னார் - தலைவி. மட்டு - வாசனை; தேனும் ஆம். தொங்கல் மவுணனை - மாலையணிந்த நாயகனை; மவுணன்; மகிணன் என்பதின் திரிபு. காய்தல் - கோபித்தல். மாநிலமேல் - உலகில். பற்று என்பாற்று பட்டது எனில் - என்னிடம் தலைவனுக்குப் பற்றும் அழியுமானால். பாவை அன்னீர் என்றது, கூட இருந்த மகளிரை நோக்கிப் பரத்தை கூறியது. நான் இட்டது சங்கு அல்ல - நான் கையில் அணிந்துள்ளவை வளையல்கள் அல்ல. சங்கு இதுவே; இது என்றது, தன் கொங்கையைச் சுட்டியது. கொங்கு அரும்பைப் போல் உள்ளவை என்று பாராட்டப் பெறு. கொங்கை - கோங்கு அரும்பை. இது தற்புகழ்ச்சி; சூளுரையும் ஆம். (357)

### தலைவன் தலைவியை யாற்றல்

மதுநீ ரலங்கன் மருவலர் சாய மறங்கடிந்து
கதுநீர்மை கொண்டசெவ் வேற்கரு மாணிக்கன் கப்பல்வை
புதுநீர் பிறருட ளுடின மாகப் புலத்தலென்னோ [யைப்
முதுநீ ரமுதமுண் டாருண்ப ரோநஞ்ச மொய்குழலே.

மது நீர் அலங்கல் - தேனாகிய நீரையுடைய மாலையணிந்த. மருவலர் - பகைவர். சாய - அழிய. மறம் கடிந்து - வலிமையை அழித்து. கது நீர்மை கொண்ட - வடுக்களைக் கொண்ட. கது - வடு; 'கதுவாய் எஃகின்' (பதிற்றுப். 45 : 5) பிறருடன் புது நீர் ஆடினம் ஆக புலத்தல் என்னோ; புலத்தல் - பிணக்கம் கொள்ளுதல். முது நீர் அமுதம் - கடலில் வந்த அமுதம்; அமுதம் உண்டார் நஞ்சம் உண்பரோ? அதுபோல் உன் நலம் பெற்ற யான், பிறமகளிர் நலத்தை நாடுவேனோ? என்று தலைவன் தலைவிக்குக் கூறி அவள் புலத்தலைத் தணித்தனன் என்க. (358)

(பி - ம்.) 1. காய, 4. உண்டா ருண்பரோ,

தலைவி, காமக்கிழத்தியைக் கண்டமை தலைவனிடம் கூறல்

வண்டா ரலரரும் பன்னபொன் வீதியின் மாற்றலர்கள்
தொண்டாய் வணங்கு கழற்றொண்டை வேந்தன் றுவரை
[யன்னாள்
கண்டா ளெடுத்தணைத் தாண்மென்கை போல முகத்துவியர்
கொண்டாள் விடநினை ந் தாள்கடிந் தாள்தன் குலமணியே.

மாற்றலர், வீதியில், தார் அரும்பு அன்ன மொய்த்து நின்றனர் என்க. மாற்றலர் - பகைவர். துவரையன்னாள் - தலைவனின் காமக்கிழத்தி. தன் குலமணியை - தன் குலத்திற்கு ஒரு மணி போன்ற மைந்தனை. வியர் - வியர்வை. காமக்கிழத்தி, குலமணியைக் கண்டு எடுத்து அணைத்து, முகமும் கையும் வியர்வு கொண்டு அவனை விட நினைந்து கடிந்தாள் என முடிவு செய்க. தலைவன் மைந்தன் என்ற பற்றால் எடுத்து அணைத்தது. தலைவி மைந்தன் என்ற வெறுப்பால் வியர்த்து விடுத்துக் கடிந்ததும் ஆம். இது, தலைவி தலைவனிடம் கூறியது. (359)

பரத்தை தலைவியைப் பழித்தல்

தெறிக்கும் படித்தர ளஞ்செங்கண் மேதிபைந் தீங்கரும்பைக்
கறிக்குந் துவரையர் கோன்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
நெறிக்குங் குழலனை யார்நிரம் பாற்றைக் குரம்புகொள்ளக்
குறிக்கு நிலைமையன் றேபுன லூரன் குறைசொல்வதே.

தாளம் தெறிக்கும்படி - முத்துக்கள் தெறித்துக் கீழே விழும்படி. செங்கண் மேதி - சிவந்த கண்களையுடைய எருமை. பைம் தீம் கரும்பைக் கறிக்கும் - பசிய இனிய கரும்பைக் கடித்துத் தின்னும்; "மேதிக் குலமேறி மென்கரும்பைக் கடித்துத்தான் முத்து மிழுங் கங்கைநீர் நாடன்" (நா. 1 : 24.) நெறிக்கும் குழல் அனையார் - சுருண்ட கூந்தலுடைய தலைவி. நிரம்பு ஆற்றை - நீர் நிரம்பிய ஆற்றை. குரம்பு - அணை. புனலூரன் குறை - தலைவன்பால் உள்ள குறை கூறுவது. தலைவன் நலத்தைத் தலைவி மட்டுமே அடைய நினைத்தது, நீர் நிரம்பிய ஆற்றை அணைகட்டித் தடுப்பதே போன்றது என்று பரத்தை கூறித் தலைவியைப் பழித்தது. (360)

### சேரிப் பரத்தையைக் காதற்பரத்தை பழித்ததைப் பாங்கி தலைவியிடங் கூறுதல்

என்போல வேநெகிழ்ந் தில்லற நோக்கு மியல்பினளாய்த்
தன்போற் பரத்தையைத் தான்பழிக் கின்றது தாரணிமான்
துன்போட்டு வேற்புயன் றொண்டையர் கோன்கப்பற் [றோகையன்னீர்
கொன்போல நின்றருள் வல்லியைக் காணிற் குறைவதன்றே.

என்போலவே நெகிழ்ந்து - என்போலவே உன்னிடம் இளகிய அன்புடைத்தாகி. இல்லறம் நோக்குதல் : கற்புடைமை. தன்போல் பரத்தை என்றது, பரத்தைத் தன்மை ஒற்றுமையால். கொன்போல் நின்றருள் வல்லி - அச்சத்துடன் நிற்கும் காமக்கிழத்தி. காணின் - அவளை நீ காண நேரின். குறைவது அன்று - அவளிடம் குறை காண்பது தகாது. உன்போல் காதற் பரத்தையின் இல்லற இயல்பு சேரிப் பரத்தையால் நெகிழ்ந்த தாதலின் நீ அவள்பால் குறை கூறுவது தகாது என்றது. தாரணிமான் துன்பு - பூமியின் துயரங்கள். (361)

### தலைவி, சுடரொடு புலம்பல்

[சுடர் — சூரியன்]

சேணார் பருமணித் தெய்வத்திண் டேரின் செழுமையென்று
காணாத யாவர்க்குங் காட்டிய நீயின்று காட்டெனக்குத்
தூணார் மணிப்புயத் தான்றொண்டை வேந்தன் றுவரையிலென்
பூணார் முலைநெகப் புல்லிய காதலர் போமிடமே.

சேண் ஆர் - ஆகாயத்தில் விளங்கும். பரு மணி - பருத்த இரத்தினமயமான. தெய்வ திண் தேரின் செழுமை - கடவுட் டன்மை பொருந்திய வலிய தேரின்மேல் உள்ள சிறப்பையுடைய. என்று - சூரியனே! யாவருக்கும் காணாத காட்டிய நீ - யாரும் காண முடியாதவற்றைக் காட்டும் நீ. காதலன் போமிடம் இன்று எனக்குக் காட்டு என்றாள் என்க. சூரியன் காணாத காட்டுபவன், அவன் சர்வ சாட்சி எனப்படுதல் நோக்கிக் கூறியது. நெக புல்லிய - குழையத் தழுவிய. (362)

### பாணன் வாயின் மறை

[தலைவி, தலைவனால் அனுப்பப்பட்ட பாணனைக்கண்டு அவனை மறுத்துக் கூறியது]

சோருங் குருதிவை வேற்றொண்டை வேந்தன் றுவரையர்
பேரும் பெருந்தர மும்பெற்ற பாணவிப் பேரழகன் [கோன்
வேருந் திருமுக மும்பொடி யாடிய மெய்யுங்கையும்
தேருந் தளர்நடை யும்போலு மாமவர் சிற்றின்பமே.

சோரும் - சோரவிடுகின்ற. வை வேல் - கூரிய வேல். பேர் - புகழ். பெருந்தரம் - பெருமைக்குரிய நிலை அல்லது உத்தியோகச் சிறப்பு; ஸ்ரீராஜராஜதேவர், பெருந்தரத்துச் சேனாபதி மும்மடிச்சோழப் ப்ரம்மாதிராயன், (S. *1. 1*, தொகுதி *2*. பக். *161-3*.). பேரழகன் என்றது தலைவி தன் மைந்தனைக் குறிப்பிட்டது. வேரும் திருமுகம் - வியர்வைவிடும் அழகிய முகம். பொடி ஆடிய மெய் - தூசிபடிந்த உடல். பொடியாடல்; சிலப். ஊர்சூழ்வரி. *48*. தேர் - மைந்தன் விளையாட்டுப் பொருளாகிய சிறுதேர். தலைவன் சிற்றின்பம், பேரழகன் வேர் முதல் தளர்நடை வரை, உள்ளனபோல நிலைபெருது அடிக்கடித் தோன்றுவன எனத் தலைவி கூறிப் பாணனின் வாயின் மறுத்தது. (*363*)

### விறலி, வாயின் மறை

[தலைவி, தலையனால் அனுப்பப்பட்ட விறலியைக் கண்டு, அவளை மறுத்துக் கூறியது]

தொலையன் றுனக்கிது வல்லிநல் லாய்தொண்டை மான்றுவரை
விலையொன் றியவெங் கலைமான் படுக்க வெறுக்கைநல்லாய்
வலையின்று நின்கொழு னன்வழி பாடுங்கள் மாடகயாழ்க்
கலையின்று பார்வை தருங்கண்ணி யூரன் கருங்கண்ணியே.

வல்லி நல்லாய், வெறுக்கை நல்லாய், கருங்கண்ணியே; இவை, விறலியைக் குறிக்கும் விளிகள். இது - (நீ என்னை வயப்படுத்த மேற்கொண்ட) இச் செயல். விலை ஒன்றிய வெம் கலைமான் படுக்க வலை இன்று - விலைபொருந்திய விரும்பத் தக்க கலைமான் அகப்பட விரிக்கும் வலை இல்லை. நின் கொழுனன் வழிபாடு உங்கள் மாடக யாழ் கலை - உன் கொழுநன் வழிபடுவதான மாடகம் பொருந்திய யாழ் வித்தை. இன்று ஊரன் பார்வை தரும் கண்ணி - இன்று (என்) தலைவன் (உன்னை) பார்வை மிருகமாய்த் தந்து அனுப்பிய சுருக்கு வலையே ஆகும். தொண்டைமான் துவரை - தொண்டைமான்

துவரை நகர். உனக்கு தொலை அன்று - உனக்கு நெடுந்தூரம் அன்று; 'ஆதலின் நீ திரும்பிச் செல்' என்று குறிப்பிட்டபடி. இனி, வல்லி நல்லாய் - விலங்குபோல் பிணிக்க வல்லவளே! வெறுக்கை நல்லாய் - பொருளாசை கொண்டு வந்தவளே! (வல்லி - விலங்கு, வெறுக்கை - பொருள்.) கருங்கண்ணியே - கண்டோரை மயக்கி வயப்படுத்தவல்ல கரிய கண்களை யுடையவளே! எனச் சிலேடைப் பொருளிற் கூறியதுமாம். ஊரன் கருங்கண்ணியே - தலைவனால் அனுப்பப்பட்ட கருங்கண்ணியே என இயைத்தலும் ஒன்றும். மாடகம் - யாழ் உறுப்பு. இச்செய்யுளுக்கு வேறு பொருள் காணக்கூடினும் அமையும்.

(பி-ம்) 3. 4. மாடக மாக்கலை. (364)

## அடிசில் சமைக்க மடவர லிரங்கல்

[மடவரல் - தலைவி]

மருந்துந் தனியருந் தாமான ராகவன் மண்புரந்து
கருந்தும்பை சூடிய வேற்கரு மாணிக்கன் கப்பல்மன்னர்
அருந்துஞ் சிறுபசி யாற்றின ளுயினு மாற்றரிய
விருந்தின் பசிக்கென்செய் வேன்வினை யேனின்று
[மெல்லியலே.

மருந்தும் தனி அருந்தா மான ராகவன் - தேவர் அமுதம் கிடைத்தாலும் அதனைப் பிறர்க்குங் கொடுத்துப் பின் உண்பதல்லால், தானே தனியே இருந்து உண்ணாத பெருமையுடைய இராமபிரான் போன்றவன். ஒப்பு: 'மருந்தேயாயினும் விருந் தோடுண்' என்ற நீதி மொழியையும், 'இந்திரர்அமிழ்த மியைவதாயி னும் இனிதெனத் தமியருண்டலுமிலரே' (புற.நா. 182) என்பதையும், 'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா, மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று' (குறள். 82) என்பதையும் காண்க. கரும் தும்பை சூடிய - பெரிய தும்பை மாலை யணிந்த; தும்பை: போரிற் செல் வோர் அணியும் மாலை. மன்னர் - தலைவர். அருந்தும் சிறுபசி ஆற்றினள் ஆயினும் - உணவருந்த வேண்டிய தலைவனின் அற்பப் பசியைத் தீர்க்காமல் நான் பொறுத்துக் கொண்டிருந்தாலும். மாற்றரிய விருந்து - தவிர்க்கமுடியாத விருந்து; மெல்லியல் என்றது பாங்கியை. இது, தலைவி கூற்று. (365)

## விருந்து கண்டு பெருந்துனி யொழிதல்

[விருந்து கண்ட தலைவியின் நிலையைக் கண்டார் கூறியது]

கலந்தா ருயிரனை யான்கரு மாணிக்கன் கப்பலன்னாள்
நலந்தான் மிகவுநன் றேபுன லூர னகரஞ்செல்லப்
புலந்தா ளயலது நல்விருந் தென்னப் புதியமுகம்
மலர்ந்தா ளறக்கொடி தேகுல மாதர் மனையறமே.

கலந்தார் - நண்பர். அன்னாள் - தலைவி. புனலூரன் - தலைவன். நகரம் செல்ல புலந்தாள் - தலைவன் தன் நகரம் செல்ல வருந்தினாள். அயலது நல்விருந்து என்ன - பக்கத்தில் விருந்தினர் வந்துள்ளார் என்று கூற. புதிய முகம் மலர்ந்தாள் - புலத்தலை விடுத்துப் புதிதாக முகமலர்ச்சி கொண்டாள். குல மாதர் மனையறம் - குலமகளிர் இல்லறச் சிறப்பு. அறகொடிது - மிகவும் கொடிது. தலைவன் பிரிவு என்னும் துன்பம் விருந்தெதிர் கோடல் என்ற இல்லறமுறையால் தலைவிக்குத் தவிர்ந்தது என்க. (366)

## விருந்தொடு வந்தோன் மகிழ்தல்

[வந்தோன் - தலைவன்]

அருந்தும் விடம்பொதி கண்சிவப் பூர்துனி யாற்றுதற்கு
மருந்தும் விருந்தன்றி மற்றுமுண் டோவலை யாழிமங்கை
தருந்திரு வின்கொழு னன்கரு மாணிக்கன் கப்பலன்னார்
முருந்து மருந்து முகிணகை கூர்செம் முகம்பெறவே.

அருந்தும் - உட்கொண்டதான. விடம் பொதி கண் - விடம் நிறைந்தது போல் கருமைகொண்ட கண். சிவப்பு ஊர் - செம்மை படர்ந்ததாகிய. துனி ஆற்றுதற்கு - தலைவியின் ஊடல் துன்பம் தணிப்பதற்கு. விருந்தன்றி மருந்தும் மற்றும் உண்டோ - விருந்தினரன்றி வேறு மருந்தும் இல்லை. வலை ஆழி மங்கை தரும் - சங்குகள் நிறைந்த பாற்கடல் ஆகிய மாது அளித்த. முருந்து - பறவை இறகின் அடி. மருந்து முகிழ் நகை கூர் - அமுதம் போன்று அரும்பும் நகை தோன்றும் புன்முறுவல் மிக்க. செம்முகம் பெற - சிறந்த முகம் காணப்பெற. தலைவியின் துனிக்கு விருந்து வந்தோன் தான் மருந்து போன்று ஆனமை கண்டு தலைவன் மகிழ்ந்தது. கப்பலன்னார் என்றது தலைவியை.

(பி - ம்.) செம்முகம்பிறயே. (367)

### சேக்கையிற் புலத்தல்

[தலைவி, சேக்கையில் தலைவனுடன் புலந்தது. சேக்கை - படுக்கை]

தேர்த்தானை மன்னன் றிருமுகத் தாமரைச் செவ்விநவ்வி
பார்த்தா ளிதுநல்ல பாயலென் ஞள்பண்டு தெண்டிரைநீர்
தூர்த்தானை வண்டுவ ரைத்தொண்டை மானைத் தொழா [ரினங்கம்
வேர்த்தா ணெடிதுயிர்த் தாளணிந் தாண்மணி மேகலையே.

தேர் தானை மன்னர் - தேர்ப்படையுடைய தலைவன். செவ்வி - அழகு. நவ்வி - மான் போன்ற தலைவி. பாயல் - படுக்கை. பண்டு தெள் திரை நீர் தூர்த்தானை - முன் இராமனுய்க் கடல் நீரை அணை கட்டித் தூர்த்த கருமாணிக்கனை. தொழாரின்-தொழாத பகைவரைப் போல. (சுழற்றிய) மேகலையை அணிந்தது அவள் புலவியைக் குறித் தது. (368)

### எங்கையர் காணி னின்னலென்றல்

[எங்கையர் - தலைவனது பரத்தையர்]

கொங்கையின் மேலவர் வெய்யபைந் தோளிற் கொடியெழுதும்
அங்கையி லேயெனைத் தீண்டப் பெருயிவ் வவனியுமக்
கங்கையு நாறுங் கழற்கரு மாணிக்கன் கப்பனன்னுட்
டெங்கையர் காணினன் ரேபுன லூர விதுவுனக்கே.

அவர் கொங்கையின் மேல், வெய்ய பைம் தோளில் - பரத்தையர் கொங்கையிலும் விரும்பத்தக்க அவர் பசிய தோள்களிலும். கொடி எழுதும் - கொடி முதலிய தொய்யில்களை எழுதும். அம் கையிலே - உனது அழகிய கையினுல். எனைத் தீண்டப்பெருய் - என்னை நீ தீண் டாதே. அவனியும் - பூமியும். நாறும் - விளங்கும். அவனி ; திரிவிக் கிரமனுய்ப் பூமி அளந்தபோதும், கங்கை, அக்காலை, பிரமன் கால் கழுவியபோதும் விளங்கியவை. கழல் - பாதத்தையுடைய திருமால் போன்ற. புனலூர! எங்கையர் காணில் இது உனக்கே நன்ரே? என்க. எங்கையர் - காமக் கிழத்தியர். புனலூர, என்றது தலைவனை. இது, 'நீ என்னைத் தீண்டுவது எங்கையர் காணில் அவர்க்குத் துயர் தரும்; ஆதலால், என்னைத் தீண்டாதே' என்று தலைவி அவனிடம் துனி கொண்டு மறுத்தனள் என்க. (369)

### தோழி கொடுமை கூறல்

சுரும்பார் துளவணி தார்த்தொண்டைக் காவலன் சொன்ன
[வெல்லாம்
தரும்பாரி கப்பற் றடவய லூர்வேந்தன் றையல்நல்ல
கரும்பாம் விரும்பிய காலத்து வேம்புங் கரும்புமுள்ளம்
விரும்பாத காலத்து வேம்பாகு நின்னை வெறுப்பதன்றே.

தட வயல் கப்பல் ஊர் என இயைக்க. தட வயல் ஊர் வேந்தன்-பரந்த வயல்கள் நிறைந்த ஊரையுடைய தலைவன். பாரி - பாரி என்னும் வள்ளல் போன்றவன். விரும்பிய காலத்து வேம்பும் நல்ல கரும்பாம்; உள்ளம் விரும்பாத காலத்துக் கரும்பும் வேம்பாகும். தையல் : விளி. 'இது உன்மீது கொண்ட வெறுப்பன்று; கால வேற்றுமை' என்று தோழி தலைவியை நோக்கிக் கூறியதாம். (370)

### மன்னவன் விரும்புந் தன்னல முரைத்தல்

[தலைவன், தலைவி தன்னை விரும்பும் தன்மையைப் பாங்கிக் குரைத்தல்]

மருக்குங் குமமுலை யாய்மற வேனென்றும் வன்கலியைச்
சுருக்கும் பெரும்புகழ்த் தொண்டையர் வேந்தன் றுவரை
[யன்னாள்
அருக்கும் புலவி யிடையிடை யேவந் தரும்புமுள்ளம்
செருக்குங் கலவி நலந்திளை யாநின்ற செவ்வியையே.

'மரு குங்கும முலையாய்' என்றது, தோழியை. வன் கலியை சுருக்கும் - கொடிய வறுமையைப் போக்கும். துவரையன்னாள் - தலைவியின். அருக்கும் புலவி இடை யிடையே வந்து அரும்பும் - வருத்தும் புலவியினிடை யிடையே வந்து தோன்றுவதான. உள்ளம் செருக்கும் - மனத்தைக் களிக்கச் செய்யும். கலவி நலம் . புணர்ச்சி நலத்தில். திளையாநின்ற - திளைத்து நின்ற. செவ்வியை - சிறப்பை. என்றும் மறவேன் - நான் என்றும் மறக்கமாட்டேன். இது, தலைவி, கொண்ட புலவியை உள்ளடக்கி அவள்பால் இடை. யிடையே தோன்றும் கலவி நலக்குறிப்பாகிய செவ்வியை நான் என்றும் மறவேன் என்று தலைவன் பாங்கிக்குக் கூறியது. (371)

தலைவி, புதல்வன், வாயின்மறை

எண்ணும னீயிவ் வகைபல மாதர்முன் னிப்பொழுது
புண்ணுன நெஞ்சம் புகையப் பெருய்நகை முத்தரும்பும்
பண்ணுர் மொழிமென் பவழச்செவ் வாய்மிளிர் பைங்குவளைக்
கண்ணுன மாணிக்க மேகரு மாணிக்கன் காணிக்கையே.

முத்து அரும்பும் நகை - முத்துக்கள் போலத்தோன்றும் பற்களையும். பவழச் செவ்வாய் - பவழம் போன்ற சிவந்த வாயையும். மிளிர் பைம் குவளை கண் - ஒளி வீசும் புதிய குவளைமலர் போலும் கண்களையும்; இவை பொருந்திய என்க. மாணிக்கமே - மாணிக்க மணி போன்ற புதல்வனே! கருமாணிக்கன் காணிக்கையே - கரு மாணிக்கனுக்குரிய காணிக்கைப் பொருளே! இது, ஆடவரெல்லாம் அரசர்க்குரியர் என்ற மரபால் கூறியது. நீ எண்ணுமல் - நீ ஆலோசனையின்றி. இப்பொழுது இவ்வகை - இப்போது இவ்விதமாக; பல மாதர் முன் - பல மாதர்கள் முன்னே. புண்ணுன நெஞ்சம் புகைய - முன்னமே புண்பட்ட அவர்கள் மனம் மேலும் புகைந்து வருந்துமாறு. பெருய் - வரப்பெருது இருப்பாயாக. இது, தலைவி தன் மைந்தனைத் தலைவன் காமக்கிழத்தியரான பல மாதர் காணச் செல்லப் பெருது இருப்பாய் என்று கூறி அவனைத் தடுத்தது. புண்ணுன நெஞ்சம் என்பதைத் தலைவிக்கும் கூட்டிப் பொருள் கொள்ளலாம். (372)

(பி - ம்.) 2. புகழுத் தரும்பும்.

மறுத்தல்

[இதுவும் அது]

இருஞ்செல்வ மெங்கைய ரெய்தப் பகையெமக் கென்றிருந்த
பெருஞ்செல்வன் வந்து பிறந்ததற் பின்பெரு நீர்த்துவரைக்
கருஞ்செல்லு நேர்களிற் றுன்கரு மாணிக்கன் கைபுகழ்ந்தோர்க்
கருஞ்செல்வ ரில்லமன் றேவினை யேனின்ப மன்பருக்கே.

எங்கையர் - தலைவன் காதன் மகளிர். இரும் செல்வம் எய்த - பெரும் செல்வம் அடைய. எமக்குப் பகை என்றிருந்த - எனக்குப் பகையாக இருந்த. பெரும் செல்வன் - பெருமைக்குரிய மைந்தன். கரும் செல்லு நேர் களிற்றுன் - கரிய மேகம் போன்ற யானையை யுடையவன்; செல் - மேகம். வினையேன் இன்பம் - தீவினையுடைய

என் இன்பம். அன்பருக்கு - தலைவர்க்கு. அரும் செல்வர் இல்லம் அன்றோ - அரிய செல்வத்தினை யுடையோர் இல்லம்போல் வேண்டப் படுவதின்று அல்லவா? அதாவது, கருமாணிக்கனைப் புகழ்ந்தோர் பிறரான அருஞ் செல்வரை நாடார்; அதுபோல, 'வினையேன் அன்பருக்கு வேண்டப்படாதவள் ஆனேன்' என்று தலைவி கூறியது. எமக்குப் பகையென்று இருந்த பெருஞ்செல்வன், என்று தலைவி தன் மைந்தனைக் கூறியது, அம்மைந்தன் பிறந்த பின் தலைவன் தன்னைப் பிரிந்து காமக்கிழத்தியர் வயப்பட்டு, பெருஞ்செல்வம் முதலிய நலன்களை அவர்க்களித்துத் தன்னை மறந்த துயரத்தால் என்க. மகனைத் தாய் தனக்குப் பகை என்றது; ஒப்பு: 'அரும்பாக்கிய கொங்கை பாலாக் கியுமுங்க ளப்பன்நெஞ்சை, இரும்பாக்கி யென்னெஞ்சைப் பித்தனை யாக்கியவ் வேந்திழையைக், கரும்பாக்கி யென்னையும் வேம்பாக்கி யிவ்வண்ணம் கண்டனையே, பெரும்பாக் கியமல்ல வோபக னேயுனைப் பெற்றதுவே.' (பலபட்டைச் சொக்கநாதர் - தனிப் பாடல்) இது, மகனைப் பழித்தல் என்னும் துறையது. (373)

பாணன் வாயின் மறை

குவிகொண்ட லன்ன குழன்மட வாய்கொடி யேற்கடையார்
புவிகொண்டு வென்றி புனைகப்பல் வேந்தன் புலவன்பின் [போய்க்
கவிகொண்ட தொண்டையர் கோன்கரு மாணிக்கன் கற்ற [வெல்லாம்
செவிகொண்டு கேட்கவுங் கண்கொண்டு காணவுந் [தேவையின்றே!

குவி கொண்டல் அன்ன - குவிந்த நீருண்ட மேகம் போன்ற. குழல் மடவாய், என்றது, தலைவி பாங்கியை நோக்கிக் கூறியது. அடையார் - பகைவர். புலவன் பின் போய் - தெய்வப் புலவராகிய திருமழிசையாழ்வார் பின் சென்று. கவி கொண்ட தொண்டையர் கோன் கருமாணிக்கன் - அவர் கூறிய செந்தமிழ்ப் பாசுரங்களை ஏற்றுக் கொண்ட திருமாலைப் போன்ற தொண்டையர்கோன். கருமாணிக்கன் நாட்டில், என்ற சொல் வருவிக்கப் பட்டது; கற்ற வெல்லாம் - இவன் கற்ற இசைக் கலையெல்லாம். கொடியேற்கு - கொடிய துன்பநிலையில் உள்ள எனக்கு. செவிகொண்டு கேட்கவும் கண்கொண்டு காணவும் தேவை இன்று எனத் தலைவி கூறிப் பாணனை மறுத்தது. (374)

## தலைவி புலத்தல்

கானார் மயிலனை யாய்கரு மாணிக்கன் கப்பனன்னாட்
டாறாத வன்புகொண் டிங்கென்செய் வோமொற்றை யாழியந்
வானார் கதிரவ னும்புல ராவிருள் வான்மதியம் [தேர்
போனாலு நீணில வாங்கல வாமற் புரவலனே.

*கான் ஆர் மயில் அனையாய் - காட்டில் வாழும் மயில் போன்ற பெண்ணே! புரவலனே கலவாமல் - தலைவனே வந்து சேராதிருக்கும் நிலையில், இருள் - இருளில், வான்மதியம் - வானில் உள்ள சந்திரனும். போனாலும் - போய்விட்டாலும் ஒற்றை ஆழி அம் தேர் - ஒற்றைச் சக்கரத்து அழகிய தேரையுடைய, வான் ஆர் கதிரவனும் - வானில் விளங்கும் சூரியனும், புலரா - பின் உதித்து, நீள் நிலவு ஆம் - நீண்ட நிலவைப்போலத் துன்பம் தருவதே ஆகும். ஆதலின் கப்பல் நல் நாட்டு இங்கு - கப்பல் நல் நாடாகிய இவ்விடத்தில், ஆறாத அன்பு கொண்டு - தலைவன்பால் கெடாத அன்புகொண்டு. என் செய்வோம் - நாம் இருந்து என்ன செய்வது? இது, இரவு பகல் இருபோதும் தலைவி தலைவனைப் பிரிந்த துயரால் வருந்துவதைப் பாங்கியிடங்கூறியது என்க. புலரா இருள், என்று கொண்டு, இருள் நீண்டிருந்ததைக் குறித்ததாகவும் கொள்ளலாம்.*

## மகப்பழித்தல்

கையணி வெண்சங்க மால்கரு மாணிக்கன் கப்பலன்னார்
மைய லழுந்தி வழிபார்த் திரங்க மணிக்கடகச்
செய்ய குறுங்கையில் நின்சிறு தேர்கொண்டு சென்றுநின்றுன்
ஐயனை யென்னைய னேயழைத் தாயிங்ங னார்சொல்லியே.

*வெண் சங்கு கை அணி மால் - வெண் சங்கைக் கையில் ஏந்திய திருமால்போன்ற, கப்பலன்னார் - கப்பல் நகரில் உள்ள தலைவனது காதன் மகளிர். மையல் அழுந்தி வழிபார்த்து இரங்க - தலைவன் மாட்டுக் கொண்ட காதலில் அழுந்தி, அவன் வரும் வழிநோக்கி இரங்கி நிற்க, மணி கடக செய்ய குறும் கையில் - இரத்தின வளைகள் அணிந்த சிவந்த சிறு கையில், உன் ஐயனை - உன் தந்தையை (தலைவனை). என் ஐயனே - என் குழந்தாய்; மைந்தனை ஐயனே என்றது அன்பின் மிகுதியால்; ஆர் சொல்லி இங்ஙன் அழைத்தாய் - யார் சொல்ல இங்குக் கூப்பிட்டாய்? இது தலைவி கூறியது.*

(பி - ம்.) 2. வழிபார்த் திரங்கி, (376)

### வாயினேர்தல்

காமேவு செங்கவி கைக்கரு மாணிக்கன் கப்பற்செங்கண்
மாமேதி கன்னலுஞ் செந்நெலும் வாய்க்கொள்ளும் வண் [பழனப்
பூமேவு தண்புன லூரனை யேமுன்பு போகவிட்ட
தாமே யழைத்துவந் தாரென்செய் வேனினித் தாழ்குழலே.

*செம் கவி கை-சிவந்த கவிந்த கைகளையுடைய; கவித்தல்-அபய மளித்தல். காமேவு - கற்பகக்கா போன்ற. செம் கண் மா மேதி - சிவந்த கண்களையுடைய பெரிய எருமைகள். கன்னல் - கரும்பு, வண்பழன - வளம் பொருந்திய வயல்கள் சூழ்ந்த. பூமேவு தண் புனல் - தாமரை மலர்கள் பொருந்திய குளிர்ந்த நீர்வளம் மிக்க. ஊரன் - ஊரையுடைய தலைவன். போகவிட்ட தாம், என்றது பாணர் முதலியோரை. தாழ்குழலே என்றது தோழியை. இவ்வாறு தலைவி கூறி வாயில் நேர்ந்தது.*

(பி - ம்.) 2. *வாய்க்கொண்டு.* (377)

### புணர்ப்புவயின் வாரா வூடல்

[*தலைவன் தெளிவிக்கத் தலைவியின் ஊடல் தணிந்தமை*]

கவரா மொழித்திரு மால்கரு மாணிக்கன் காவிநன்னீர்த்
துவரா பதிவந்த தொண்டையர் கோன்கப்பற் சூழ்திருநாட்
டிவரார் கொலென்னு நெஞ்சே யொருசாய லிவரையும்நம்
அவரா மெனச்சொல்ல லாமில்லை யான தருளொன்றுமே.

*கவரா - பிளவுபடாத; மாறுத. காவி நன்னீர் - நில மலர்கள் நிறைந்த நீர் வளம்மிக்க. இவர் ஆர் கொல் என்னும் நெஞ்சே - இவர் யாரோ என்று ஐயுறும் மனமே. சாயல் - மேனி வடிவு நோக்கில். நம்மவர் ஆம் என் சொல்லலாம் - நம் தலைவரே எனச் சொல்லலாம். ஆனால் அருள் ஒன்றுமே இல்லை ஆனது - அவர் எம்பால் முன் கொண்ட அருள் ஒன்றும் இப்பொழுது காணப்பெறவில்லை. இது, தலைவன் வர, தலைவி அவன் கேட்கத் தானே கூறிக் கொண்டது.* (378)

### பாங்கி புலவி தணித்தல்

பொலந்தா மரையுந்தி யிற்பதி னாலு புவனமுமுன்
மலர்ந்தான் மலர்ந்த வதனம் புயன்மண்ணில் யாவரையும்
கலந்தால் விடநினை யான்கரு மாணிக்கன் கப்பலன்னீர்
புலந்தால் முடியப் புலப்பதன் றேகடன் பூவையர்க்கே.

பொலன் தாமரை உந்தியில் - உந்திப் பொற்றாமரையிலிருந்து. பதினாலு புவனமும் முன் மலர்ந்தான்; புவனம் - உலகு. மலர்தல் - தோன்றச் செய்தல். மலர்ந்த வதன அம்புயன் - மலர்ந்த முகமாகிய தாமரையையுடையவன். கலந்தால் யாவரையும் விட நினையான் - நட்புக் கொண்டால் பின் அவர் யாரையும் விட நினையாதவன். பூவையர்க்கு - மகளிர்க்கு. புலந்தால் - ஒரு போது புலவி கொண்டால். முடியப் புலப்பது கடன் அன்று - முழுதும் புலர்ந்திருப்பது முறை அன்று. ஏ : அசை. ஆதலால், நீ கொண்ட இப் புலவி தணிந்து தலைவனைச் சாருதல் முறை என்று, தோழி தலைவிக்குக் கூறியது.

### ஆற்றுமை வாயில் நிற்றல்

[தலைவன், தன் ஆற்றுமை காரணமாகத் தலைவியை நாடிநிற்றல்
ஆற்றுமை — பெருமை]

உலகம் புகழ்பதி னாரு யிரவ ருளங்கவர்ந்த
கலகன் குலதில கன்கரு மாணிக்கன் கப்பலன்னீர்
திலகங் கிடந்த திருமுகத் தாமரைச் செவ்வியுமிவ்
இலகுந் திருநகை யும்மென தாவியை யீர்கின்றதே.

பதினாரும் ஆயிரவர் - பதினாறு ஆயிரம் கோவியர்; 'பதினாரு மாயிரவர் தேவிமார் பார்த்திருப்ப'; நாச். திருமொழி 7 : 9. உளம் கவர்ந்த - மனத்தை அபகரித்துக்கொண்ட, கலகன் - கலகத்தை உண்டாக்கும் குறும்புச் செயலுடையவன். குலதிலகன் - ஆயர் குலத்திற்கு ஒரு திலகம் போன்றவன். கப்பலன்னீர் என்றது தலைவியை. செவ்வியும் - அழகும். இ, இலகும் திருநகையும் - இந்த விளங்கும் அழகிய சிரிப்பும். ஈர்கின்றது - பிளந்து வருத்துகின்றது. இது தலைவியை நோக்கித் தலைவன் கூறியது. (380)

புணர்ச்சி விரும்பல்

தோளா னனுபமன் றெண்டையர் வேந்தன் றுவரையன்ன
வாளார் தடங்கண் மயிலனை யாயின்றுன் வார்த்தையென்றும்
கேளாம லிங்கென் வழிக்கிளர் நாணமுங் கெட்டுவிட்டேன்
ஆளாகி நெஞ்சவன் பாலறை போய தறிந்திலமே.

தோளான் - அழகிய தோள்களையுடையவன். மயிலனையாய் என்றது தோழியை. என்வழி கிளர் - என்னிடம் விளங்கும். கெட்டு விட்டேன் - போக்கிக் கொண்டவளானேன். அறை போதல் - கீழறுப்புண்டு செல்லல்; குறள் : 764. அறிந்திலம் - யான் அறிந்தேனில்லை. அவர்பால் என் நெஞ்சம் உள்ளூரச் சென்றது அறியாமல், நாணம் இன்றி நான் தகாது சொல்லி விட்டேன் என்று தலைவி கூறியது. என்றும் உன் வார்த்தை கேளாமல் இன்று இங்கு நாணமும் கெட்டு விட்டேன் என இயைக்க. தலைவி தன் மனம் தலைவன்பால் ஈடுபட்டதை உணர்ந்து கூறியது. (381)

---

## 25. ஓதற்பிரிவு

[தலைவன் கல்வி காரணமாகப் பிரிதல்]

### தலைவன் பிரிவுணர்த்தல்

[பாங்கி, தலைவிக்குத் தலைவன் ஓதற் பிரிவை உணர்த்தல்]

போதஞ் செறிந்த புரிநூ லிறைவர் புலந்தொறுஞ்சொல்
பேதந் தெரியப் பிரிகுவ ராற்பெருந் தோட்டலங்கல்
சூதஞ் செறிதுவரைத் தொண்டைமான் கப்பற் றூயமலர்ப்
பாதஞ் சிவந்த பருமணி நூபுரப் பைந்தொடியே.

போதம் - ஞானம் அல்லது அறிவு. செறிந்த - நிறைந்து விளங்கிய. புரி நூல் இறைவர் - முப்புரிப் பூணூல் அணியும் அந்தணராகிய பெரியோர். புலம் தொறும் - இருக்கும் இடங்களில் எல்லாம் சென்று. சொல் பேதம் தெரிய - சொற்களின் பாகுபாடு முதலிய இலக்கணங்களைத் தெரிந்துகொள்ள. பிரிகுவர் - தலைவர் உன்னைப் பிரிந்து செல்வார். பெரும் தோட்டு அலங்கல் - இதழ்கள் நிறைந்த

பெரிய மாலை அணிந்த. சூதம் செறி துவரை - மாமரங்கள் அடர்ந்த துவரை நகரத்து. பருமணி - பருத்த இரத்தினங்கள் இழைத்த; அல்லது இரத்தினங்களைப் பருக்கைக் கற்களாகப் போடப் பெற்ற. நூபுரம் - பாத கிண்கிணி அல்லது சதங்கை அணிந்த. தூய் மலர் பாதம் சிவந்த - தூய்மையுடைய தாமரை மலர் போன்ற பாதங்கள் சிவப்பாக உள்ள. பைம் தொடியே பசிய பொன் வளையல்கள் அணிந்தவளே! பைந்தொடி என்றது தலைவியை. பைந்தொடியே (தலைவர்) புலந்தொறும் சொற்பொருள் பேதம் தெரியப்பிரிகுவர் என இயைக்க. இது பாங்கியின் கூற்று.

(பி - ம்) 1. போதஞ் சிறந்த. (382)

## தலைவி கார்ப்பருவங் கண்டழுங்கல்

ஆய்ந்த கலைக்கட லின்கரை காண வகன்றவர்மின்
தோய்ந்த படைக்கரத் தான்றொண்டை மான்கப்பற் சூழ்புவியில்
பூந்தள வைப்பொரு வுந்நகை யார்கை புதைத்தகண்போல்
காந்தண் மறைக்குங் கருவிள நாண்மலர் கண்டிலரே.

கலைகடலின் கரை காண அகன்றவர் - கல்விக் கடலின் கரை காண என்னை நீத்துச் சென்ற தலைவர். மின் தோய்ந்த - மின்னல் படிந்தது போன்ற ஒளியுடைய, பூம் தளவை - அழகிய முல்லை அரும்பை. பொருவும் - ஒக்கும். நகையார் - பற்களையுடைய மகளிர். கை புதைத்த கண்போல் - கைகளால் மூடப்பெற்ற கண்களைபோல. காந்தள் மறைக்கும் கருவிள நாள் மலர் - காந்தற் பூக்கள் மறைக்கக் காக்கட்டான் மலர்கள் மலர்ந்துள்ளதை; கருவிளம் - காக்கட்டான். கண்டிலரே - தலைவர் இன்னும் கண்டனர் இல்லையோ? காந்தளும் கருவிளமும் மாரிக்கால மலர்கள்; அவை மலர்ந்தமையால் மாரிக் காலம் வந்துவிட்டது; நாம் இனித் தலைவியைச் சார வேண்டும் என்று, தலைவர் வாராததினால், அவர் அவை மலர்ந்தமை அறியாது இன்னும் கல்வியில் ஈடுபட்டுள்ளார் போலும் எனத் தலைவி வருந்திக் கூறியது. காந்தள் மறைக்கும் கருவிள நாள் மலர் - (தலைவன் பிரிவினால்) காந்தள் மலர்போன்ற கைகளால் கருவிளமலராகிய தன் கண்களைத் தலைவி பொத்திக்கொண்டு வருந்துவதைத் தலைவர் கண்டிலரே என்றதைக் குறித்ததும் ஆம். (383)

## 26. காவற் பிரிவு

(நாடு காத்தற்காகத் தலைவன் பிரிதல்)

### பிரிவதைப் பாங்கி மறுத்துக் கூறல்

இரப்பாரை யும்மவர்க் கீவாரை யுங்கண் டினியமுகம்
கரப்பாரை யுந்தவிர்க் குங்கரு மாணிக்கன் கட்செவியின்
சிரப்பார மாற்றிய திண்புயத் தான்கப்பற் றெண்டிரைமண்
புரப்பாய் புரக்கும் பிரிவுநன் றோவெங்கள் பூவையுமே.

*இரப்பார் - யாசகர். ஈவார் - கொடையாளிகள். இனிய முகம் கரப்பார் - இரப்போர்க்குத் தாம் இனிய முகம்காட்டிப் பேசாது ஒளிந்து கொள்பவர். தவிர்க்கும் - நீக்கும். தவிர்த்தல் : தான் விருப் பொடு யார்க்கும் கரவாது ஈவதால், அன்னோர் வேறு இடம் சென்று இரத்தலை நீக்குதல். கட்செவி - ஆதிசேடனாகிய பாம்பு. சிர பாரம் மாற்றிய - அதன் சிரத்தில் தாங்கும் பூமி பாரத்தைத் தான் தாங்கி அதற்குள்ள பொறைத் துயர் நீக்கிய. தெள் திரை மண் புரப்பாய் - தெள்ளிய அலைகளோடு கூடிய கடல் சூழ்ந்த பூமியைக் காற்பாற்றுபவனே ; புரக்கும் - உன்னால் காப்பாற்றப்படும். பூவையும் - தலைவியும். பிரிவு நன்றோ - உன்னைவிட்டுப் பிரிந்திருத் தல் நல்லதாகுமோ ?*

### தலைவி கூதிர்ப்பருவங் கண்டழிதல்

கொடுங்குறை வாடைக்கு நொந்து பகன்றைக் கொடிக்கட்
[படாம்
ஒடுங்கின்ற மானு மறியுமுன் காண்கில ரொண்ணுதலாய்
கடுங்கலி செற்றகை யான்கரு மாணிக்கன் கப்பல்சுற்றும்
நெடுங்கட லாடை நிலம்புரப் பானெம்மை நீத்தவரே.

*கொடும் குறை வாடைக்கு - கொடிய துன்பத்தைச் செய்யும் வாடைக் காற்றுக்கு. நொந்து - வருந்தி. பகன்றை கொடி கண் படாம் - பகன்றைக் கொடியிடமாகிய போர்வையில். ஒடுங்கின்ற - ஒடுங்கித் தங்கியிருக்கின்ற. மானும் மறியும் - ஆண்மானையும் பெண் மானையும். முன் காண்கிலர் - தலைவர் அங்குத் தம் முன் காண வில்லை போலும். ஒண்ணுதலாய் என்றது பாங்கியை. கடும் கலி - கொடிய வறுமையை. செற்ற கையான் - அழித்த கையையுடையவன்.*

அழித்தல்: கொடையால். கப்பல் சுற்றும் - கப்பல் நகரைச் சூழ்ந்துள்ள. நெடும் கடல் ஆடை நிலம் - நெடிய கடலாகிய ஆடையையுடைய பூமி. நிலம் புரப்பான் எம்மை நீத்தவர் ஒடுங்கின்ற மாலும் மறியும் முன் காண்கிலர் என இயைக்க. இது, தலைவி பாங்கியிடங் கூறி வருந்தியது. (385)

---

## 27. பகைதணி வினைப்பிரிவு

[இருவேந்தரைப் பகைதணிவித்து நட்பாக்குதற்குத் தலைவன் தூதாகச் செல்லுதல்.]

### பிரிவு உணர்த்தல்

தாக்கும் படையிரு வேந்தர்சந் தாகத் தருங்கருவி
கோக்கும் வினையுளங் கொண்டனர் காண்குறு கார்மகுடம்
தூக்குங் கடகளிற் றூன்றெண்டை மான்கப்பல் சூழ்துறையில்
பூக்குங் குவளைப் புரிகுழ லாய்நம் புரவலரே.

இரு வேந்தர் - போரிடும் இரு மன்னர்களும். சந்து ஆக தரும் கருவி கோக்கும் - சமாதானம் உண்டாக்க ஏற்ற உபாயங்களைக் கையாளும். வினை-செயல்களை. உளம் கொண்டனர் - மனத்திற் கருதினர். காண் ; முன்னிலை அசை. குறுகார் மகுடம் தூக்கும் கடகளிற்றூன்-பகைவர்களுடைய கிரீடங்களை அவர்கள் தலைகளினின்று தூக்கி எடுக்கும் மதயானையையுடைய. குவளை புரி குழலாய் என்றது, தலைவியை. புரிகுழலாய், நம் புரவலர், கருவி கோக்கும் வினையுளங் கொண்டனர் காண் என முடிக்க. இது, தலைவியை நோக்கிப் பாங்கி கூறியது. (386)

### முன்பனிப்பருவங் கண்டழுங்கல்

பொழிந்துகண் பாற்றிய வெண்புன லாடைமெய் போர்த்து [வெய்யோன்
எழுந்து மிரும்பனி யிற்கிடங் காண்கில ரென்றுமொன்னார்
தொழுந்தனி யாண்மைவல் லான்றெண்டை மான்கப்பற் [றேகையன்னீர்
எழுந்திகல் வேந்த ரிருவர்நம் பாங்கற் கிசைந்தவரே.

கண் பொழிந்து பாற்றிய - கண் பொழிந்து அதனை நீக்கிய. புனல் வெள் ஆடை - நீரோடு கூடிய வெண்மையான ஆடையை ; கண் புனல் பாற்றியது தலைவியை நினைந்து. மெய் போர்த்து - உடலில் போர்த்துக்கொண்டு. வெய்யோன் எழுந்தும் - சூரியன் உதித்தும் ; ' பொழிந்து...போர்த்து ; என்பதை வெய்யோனுக்கே ஆக்கிப் பொருள் கொள்ளலும் ஒன்றும். இரும் பனியிற்கு - அதிக மாய் உள்ள பனிக்கு. இடம் காண்கிலர் - தலைவர் இவ்விடம் வரக் காணாதவராய் இருக்கிறார். ஒன்னார் - பகைவர். தோகையன்னீர் என்றது, தலைவி பாங்கியரை நோக்கிக் கூறியது எழுந்து இகல் வேந்தன் இருவர் - எழுந்து போர் புரிந்த பகை அரசரான இருவரும். நம் பாங்கற்கு - நம் கணவரான தலைவர்க்கு. இசைந்தவர் - ஒத்த நண்பரானவர். ஆயினும் நம் தலைவர் பனிக்கு இடம் காண்கிலர் என்று தலைவி பாங்கியரிடம் கூறி வருந்தியது, பாங்கன் - கணவன்; ' பொருள்வயின், பாங்கனார் சென்ற நெறி ' (நாலடி. 400). (387)

---

## 28. உற்றுழிப் பிரிவு

(தலைவன், தன் அரசனுக்குப் போரில் உதவி கருதிப் பிரிதல்)

பிரிவு உணர்த்தல்

வரியுங் கனைகழல் மன்னர்க் கமரினில் வான்றுணையாய்ப்
பிரியும் பிரிவு பிறப்பித்த னர்பெற லாவமுதம்
சொரியும் புயலனை யான்றெண்டை மான்பண்டு சொற்
[புலவோர்
தெரியுந் தமிழ்தெரி யுங்கப்ப னுடர் திருந்திழையே.

வரியும் கனை கழல் மன்னர்க்கு - கட்டப்பட்ட ஒலிக்கும் வீரக்கழல் அணிந்த நம் மன்னரான தலைவர்க்கு. அமரினில் - போரில். வான் துணையாய் - சிறந்த துணையாய். பிரியும் - உன்னைப் பிரிந்து செல்வதான. பிரிவு பிறப்பித்தனர் - ஒரு பிரிவை உண்டாக் கினர். பெறலா அமுதம் - பெறற்கரிய அமுதத்தை. திருந்திழை என்றது, தலைவியை. கப்பனுடர் மன்னர்க்கு அமரினில் வான துணையாய்ப் பிரியும் பிரிவு பிறப்பித்தனர் என இயைக்க. இது, பாங்கி தலைவிக்குக் கூறியது. (388)

பின்பனிப்பருவங் கண்டிரங்கல்

கவரி நரந்தந் துருக்கமென் மானினங் காய்ந்தவெண்ணெற்
றவரை யருந்து மரும்பனி நாளலே நீர்தழுவும்
துவரையில் வந்தரு ளுந்தொண்டை மானைத் தொழாதவர்
[போல்
இவரு நெடுங்கொடித் தேருகைத் தாரவ ரெண்ணிலரே.

கவரி, நரந்தம், துருக்கம் இவை மானின் பேதங்கள். காய்ந்த அவரை வெண் ணெற்று - வற்றிப்போன வெண்மையான அவரை நெற்றுக்களை. அரும் பனிநாள் - கொடிய பனிக்காலத்தில். இவரும் - உயர்ந்த. உகைத்தார் - செலுத்திச் சென்றார். அவர் - தலைவர். எண்ணிலரே - என்னை எண்ணாதவர் ஆயினரே. தேருகைத்தார் அவர் தொண்டைமான் பகைவர்போல் என்னையும் கருதி எண்ணிலரே எனக் கொள்க ; தொழாதவர் -பகைவர். தொழாதவர் என் பதைத் தலைவனுக்குங் கூட்டிப் பொருள் கொள்ளலும் ஆம். இது, தலைவி இரங்கிக் கூறியது.

(பி - ம்.) 4, தாரவர் வேண்டலரே. (389)

தலைவன் உருவெளிகண்டு பாகனொடு கூறல்

முலைவா ரணமருங் குற்கொடித் தேர்மொய் புருவமென்னும்
கொலைவார் சிலைவிழி கூர்வேற் படைசெய்ய கோலங்கொண்டு
கலைவாணர் கற்பகம் போற்கரு மாணிக்கன் கப்பலொன்னார்
தொலைவாய் வெங்களத் தேவல வாவந்து சூழ்ந்தனவே.

முலை வாரணம் - முலையாகிய யானை ; முலைக்கு யானை உவமை ; 'யானை முன் வருமன்பினர் முலை யானை முன் வரு மன்பிலார்' (திருவரங்கக்கலம்பகம் ; 27.) மருங்குல் கொடி தேர் - இடையாகிய கொடியணிந்த அல்குலாகிய தேர் ; அல்குலுக்குத்தேர். கொலை வார் சிலை - கொலைசெய்யும் நீண்ட வில். விழி கூர் வேல் - விழிகளாகிய கூரிய வேல்கள். படை - ஆகிய படைகள். செய்ய கோலம் கொண்டு - சிறந்த போர்க்கோலம் கொண்டு. இவை, தலைவியின் உரு வெளித்தோற்றம். கப்பலொன்னார் தொலைவாய் வெங்களத்தே - கப்பல் நகருக்குத் தொலை தூரத்தில் தங்கியுள்ள 'பகைவருடைய கொடிய போர்க்களத்தே. வலவா - தேர்ப்பாகனே. வந்து சூழ்ந்தன -

வந்து சூழ்ந்து கொண்டன. இது, தலைவியின் உருவெளி கண்ட தலைமகன் தன் தேர்ப்பாகனிடம் கூறியது.

(பி - ம்.) 3. கப்ப லெண்ணர். (390)

வரவு மொழிதல்

[தலைவன் திரும்பி வருதலைக் கூறுதல்]

கோவல மர்முனி கொண்டுவந் தேத்துமுத் தூர்த்துவரைக்
காவல னெண்ணெண் கலைக்கரு மாணிக்கன் கப்பலன்னீர்
மேவலர் தம்வினை மேற்பிரிந் தோரின்று மீண்டனர்நம்
மாவலர் சோலை மறுகெங்கு மார்க்கும் வலம்புரியே.

கோவல் அமர் முனி கொண்டுவந்து ஏத்தும் - திருக்கோவலூரில் அமர்ந்திருந்த ஒரு முனிவரை அழைத்துக்கொண்டு வந்து போற்றும். இம்முனிவரைப்பற்றி, 'திருக்கோவலூர் எம்பெருமானர் ஜீயர் மடம்' என்பதொன்று முற்காலத்தே பிரபலமாயிருந்ததென்று சாஸனத்தால் (M. E. R. 516 of 1912) அறியப்படுகின்றது. இங்குக் கூறும் 'கோவலமர்முனி' என்ற தொடர் இந்த ஜீயரைக் குறிப்பது போலும்' என்று, ஸ்ரீ ராவ்ஸாஹிப். மு. இராகவையங்கார் ஸ்வாமிகள் குறிப்பது நோக்கத்தக்கது (ஆராய்ச்சித் தொகுதி - பக் 458). முத்தூர்த்துவரை - முத்தூற்றுக் கூற்றம் என்ற நாட்டின் துவரை என்னும் நகர். 'முத்தூற்றுக்கூற்றம் என்பது முத்தூர்க் கூற்றம் எனவும் வழங்கும். இது, கானடும் புதுக்கோட்டைச் சீமைப்பகுதியும் கொண்ட பிரதேசமாகும்' (ஷை ஆராய்ச்சித்தொகுதி. பக். 458) துவரை - துவரங் குறிச்சி என்று இப்பொழுது வழங்கும் ஊர். எண் எண் கலை - அறுபத்து நான்கு கலைகள். மேவலர் தம் வினை மேல் - பகைவர்களிடத்துத் தூது அல்லது போர் காரணமாக. பிரிந்தோர் - நம்மைப் பிரிந்த தலைவர். மா அலர் சோலை - மாமரங்கள் பரந்த சோலை; அலர்தல் - படர்ந்து விளங்குதல்; 'அலர் தலை மாநிலம்' என்பதுபோல. சோலை மறுகு - சோலை சூழ்ந்த வீதி. வலம்புரி ஆர்க்கும் - வலம்புரிச் சங்கம் ஒலிக்கும்; வலம்புரி ஆர்த்தல், வெற்றியுடன் திரும்பியதைக் குறிப்பது. (391)

(பி - ம்.) 1. வந்தேத்துமுன் றூற்றுவரை.

### வளைவாழ்த்து

[தலைவி, தலைவனது வலம்புரியை வாழ்த்தியது]

பிறந்தது மாயன் றிருப்பாற் கடலிற் பிறந்துபின்பு
சிறந்தது வந்தவன் செந்தா மரைக்கையிற் றீவினையேன்
துறந்த வுயிர்க்குத வச்சொல்ல வேண்டுங்கொல் தொண்டை
[யர்கோன்
மறந்திக ழுங்களிற் றுன்கப்பல் நாடர் வலம்புரியே.

வலம்புரி பிறந்தது திருமால் பள்ளிகொண்டுள்ள திருப்பாற் கடலில். அதுசிறந்து விளங்கியது அத்திருமாலின் செந்தாமரைபோன்ற கையில். தீவினையேன் என்றது, தலைவி தான் தலைவனைப் பிரிந்து வாழும் துயர் கருதிக் கூறியது. துறந்த உயிர்க்கு உதவ - போய் விட்டதென்றிருந்த தன் உயிர்க்கு அவ்வுயிர் அழியாமல் உதவி யளித்துக் காக்க; யான் சொல்லவேண்டுமோ என்க. இது, தலைவி தலைவன் வலம்புரி முழக்கம் கேட்டு அதனைப் பாராட்டிப் புகழ்ந்தது. வலம்புரியின் பிறப்பு முதலிய வரலாறுகளை, நாச்சியார் திருமொழி 7: 3 'கடலிற் பிறந்து' என்று தொடரும் பாசுரங்களால் அறியலாம். மறம் திகழும் - வலிமை விளங்கும்; மறம் - கொடுமையும் ஆம். (292)

---

## 29. பொருள் வயிற் பிரிவு

(தலைவன், பொருள் தேடும்பொருட்டுச் செல்வதைப் பாங்கி தலைவிக்கு உரைத்தல்)

அனைத்துந் தருவ தரும்பொரு ளென்றங் ககன்றவன்பால்
நினைத்தொன் றறிகிலன் நீள்வினை யேனிரை வண்டரற்றும்
சுனைத்தங்கு காவியந் தார்த்தொண்டை மான்கப்பல் சூழ்
[சிலம்பில்
புனத்தொன்று கிள்ளையும் பூவையும் போன்மொழிப் பொற்
[றொடியே:

அனைத்தும் தருவது அரும் பொருள் என்று - விரும்புவதனைத் தையும் தருவது அரிய பொருளே என்று; 'வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவண தெய்த விருதலையு மெய்தும்'

(நாலடி. 114.) அகன்ற வன்பால் - பொருள் தேடுதற்குச் சென்ற கொடுமையால்; வன்பு - கொடுமை. அகன்றவன்பால் - அகன்ற தலைவனிடத்து எனலும் ஆம்; நீள் வினையேன் என்றது, பாங்கி தன்னைப் பற்றிக் கூறிக் கொண்டது. நிரை வண்டு அரற்றும் - வரிசையாய் வண்டுகள் வெந்தொலிக்கும். காவி - குவளை மலர் புனத்து ஒன்றும் - நம் புனத்தினிடத்துப் பொருந்திவாழும். 'புனத்தொன்று ‹கிள்ளையும்......பொற்றொடியே' என்றது, பாங்கி தலைவியை நோக்கிக் கூறிய விளி. (393)

(பி - ம்.) 1. னென்றங்க ணன்ப ரின்றே.
2. வண்டிரைக்கும்.

## இல்லத் தழுங்கல்

[தலைவியின் நிலையை நினைத்துத் தலைவன் வருந்தியது]

அடியில் வணங்கு முடியினன் மாலை யணிந்துதொய்யில்
கொடியணி குன்றங் குலையத் தழுவவெங் கூற்றமன்ன
துடியடி வெங்களிற் றுன்றொண்டை மான்கப்பற் றோகை [யன்னாள்
இடியெதிர் கொம்பினின் றுள்பிரி வோமென்னி லென் [செய்யுமே.

வெம் கூற்றம் அன்ன - கொடிய யமன் போன்ற. துடி அடி வெம் களிற்றன் - உடுக்கை போன்ற பாதங்களையுடைய கொடிய யானையையுடையவன்; தொண்டைமான். தோகையன்னாள் - மயில் போன்ற தலைவி. அடியில் வணங்கு முடியினன் - அவள் அடியில் வணங்கும் முடியையுடையவனாகி. மாலை அணிந்து தொய்யில் கொடி அணி - மாலையை அணிந்து தொய்யில் ஆகிய கொடிகள் எழுதப்பெற்று விளங்கும். குன்றம் குலைய தழுவ - மலைபோன்ற அவள் தனங்கள் தளரும்படி யான் தழுவ. இடி எதிர் கொம்பின் - இடியினால் தாக்கப்பட்ட பூம்கொம்பைப்போல. நின்றாள் - செயலற்று ஏங்கி நின்றாள். பிரிவோம் என்னில் - யான் பிரிந்து செல்வேன் என்ற சொல்லையும் சொல்வேனானால். என் செய்யுமே - அவள் என்ன செய்வாளோ? அடி வணங்கியது - தலைவியின் அன்பைப் பெறும்பொருட்டு. இது தலைவன் தனக்குள்ளே கூறிக்கொண்டது.

செலவழுங்கல்

உய்க்கும் பரிவல வாவொழி நீயின்றிவ் வொண்பொருட்கே
கைக்குந் தொடைமன்னர் கண்கரு மாணிக்கன் கப்பலன்னாள்
மைக்கண் சொரியு மழையும்வண் டார்குழல் வல்லிருளும்
திக்கெங்கும் வந்து செறிந்ததய் யோவெங்ஙன் செல்கின்றதே.

மை கண் சொரியும் மழையும் - மை எழுதப்பெற்ற கண்களி னின்று சொரியும் கண்ணீராகிய மழையும், குழல் வல் இருளும் கூந்தலாகிய வலிய இருளும். திக்கு எங்கும் வந்து செறிந்த; எல்லாத் திக்குக்களினும் சூழ்ந்து அடர்ந்துள்ளன. இவை, தலைவன் கண்ட தலைவியின் உருவெளித் தோற்றம் என்க. எங்ஙன் செல்கின்றது - எவ்வாறு போவது? ஐயோ: இரக்கச்சொல், பரி உய்க்கும் வலவா - குதிரை செலுத்தும் தேர்ப்பாகனே. நீ ஒள் பொருட்கு ஏகைக்கும் - நீ ஒள்ளியபொருள் தேடச் செல்வதற்கும். ஒழி - ஒழிப்பாயாக! இது, தலைவன் பாகனிடம் கூறிப் போதலைத் தவிர்ந்தது.

(பி - ம்.) 2. யென்று மொன்பொருட் கால. (395)

இடைச்சுரத் தழுங்கல்

கன்னடர் மண்கவ ருங்கரு மாணிக்கன் கப்பனகர்
அன்னாரை யங்ங னருந்தனி யாக்கி யகற்றியென்னை
இன்னா நெறிகொண்டு போந்திடை யேநின் றிரங்குநெஞ்சே
நின்னால் வருவதன் றேயிது நான்செய்த நீள்வினையே.

கன்னடர் - கன்னட நாட்டவர். அன்னார் - தலைவி. இன்னா நெறி - துன்பந்தரும் கொடிய வழி. நின்னால் வருவது அன்று - உன்னால் ஏற்படுவது அன்று. ஏ, அசை. நான் செய்த நீள் வினையே - நான் செய்த பெருந் தீவினையே ஆகும். இது, தலைவி யைப் பிரிந்த தலைவன், இடைச் சுரத்திருந்து வருந்தித் தன் நெஞ்சொடு கூறியது. (396)

### உருவெளி

மயிலுங் கழையு மழையும் பழைய வனப்பழிந்து
பயிலுஞ் சுரத்தினும் பாவஞ்செய் தேன்றிருப் பாற்கடலில்
துயிலுந் திருநெடு மால்தொண்டை மான்கப்பற் றோகை
[யன்னாள்
எயிலொன்று வேட ரியங்குவெங் கானத் தெதிர்வந்ததே.

கழை - மூங்கில். மழை - மேகம். பழைய வனப்பு அழிந்து பயிலும் சுரம் - மயில் முதலியன தம் பழைய அழகு அழிந்து திரியும் சுரம். தோகையன்னாள் என்றது உருவெளியிற்கண்ட தலைவியின் தோற்றத்தை. எயில் ஒன்று வேடர் - மதிட் புறத்து மறைந்து வாழும் வேடர்கள். இயங்கும் - சஞ்சரிக்கும். தோகையன்னாள் எயிலொன்று......கானத்து, மயிலும்......பயிலுஞ் சுரத்தினும். தோகையன்னாள் எதிர் வந்ததே என் பாவம் செய்தேன், என இயைக்க. இது, தலைவன் சுரத்தினிடையே தலைவியின் உருவெளி கண்டு வருந்திக் கூறியது. (397)

### இரவு நீட்டிப்பும் புலர்வும்

[நீடித்த இரவு புலர்ந்ததவம், பொருள் தேடச்சென்ற
தலைவன் வரவும், தலைவியின் மகிழ்ச்சியும்]

ஓராழி வையமொன் றூர்ந்துவெய் யோனவ் வோங்கலெட்டும்
பேராழி யேழும் பெருந்திசை நான்கும் பெருந்துவரைக்
காராழி வண்ணன்கண் ணன்கரு மாணிக்கன் கப்பல்மன்னன்
போராழி சூழப் பொருப்புங் கடந்தேயல் புலர்ந்ததுவே.

ஓர் ஆழி வையம் ஒன்று ஊர்ந்து - ஒற்றைச் சக்கரத்தையுடைய தேர் ஒன்றைச் செலுத்தி. வெய்யோன் - சூரியன். ஓங்கல் எட்டும் - அஷ்டகுல பருவதங்களையும். பேர் ஆழி ஏழும் - பெரிய கடல்கள் ஏழையும். பெரும் திசை நான்கும் - பெரிய திசைகள் நான்கையும். பெரும் துவரை - பெரிய துவரை நாட்டையுடைய.

கார் ஆழி வண்ணன் கண்ணன் - கரிய கடல் வண்ணனான கண்ண பிரான் போன்ற. கருமாணிக்கன் கப்பல் மன்னன் - கருமாணிக்கன் என்னும் கப்பல் நகரில் வாழும் மன்னனது. போர் ஆழி சூழ் - போர்ச் சக்கரம் சூழ்ந்த. அ பொருப்பும் கடந்தே - அந்த மலய மலையையும் கடந்து (வந்தபோதே). அல் புலர்ந்தது - இரவு விடிந்தது ; துன்பமும் நீங்கிற்று. இரவு விடியவே, தலைவன் வந்தான் என்பதும், தலைவியும் பிரிவுத்துயர் நீங்கி மகிழ்வெய்தினாள் என்பதும் வருவித்துக் கொள்ளப்பாலன.

(பி - ம்.) 1. வெய்யோனையே. (398)

## 30. துறவறம்

அறம்பொரு ளின்ப மகல்வய லூரனு மாயிழையும்
திறம்பட வாழ்ந்ததுஞ் செல்வச் சிறுவர்கை தேடியவெண்
இறந்த பெருஞ்செல்வ நீத்தது மேழுல கும்பரந்து
கறங்கும் புனற்கப்ப லான்கரு மாணிக்கன் காக்கவென்றே.

அகல் வயல் ஊரனும் - அகன்ற வயல்கள் சூழ்ந்த நாட்டையுடைய தலைவனும். ஆயிழையும் - தலைவியும். அறம் பொருள் இன்பம் திறம்பட வாழ்ந்ததும் என இயைக்க. செல்வச் சிறுவர் - சிறந்த செல்வமாகிய மக்களையும், கை தேடிய செல்வம் - முயற்சியால் தேடிய செல்வங்களையும். நீத்ததும் - துறந்ததும் ; வாழ்ந்ததும் நீத்ததும் என்க. கறங்கும் - ஒலிக்கும். ஏழுலகும் - ஏழு தீவுகளையும்; அதாவது புவிமுழுதும். கருமாணிக்கன் ஏழுலகும் காக்கவென்று, ஊரனும் ஆயிழையும், திறம்பட வாழ்ந்ததும், செல்வச் சிறுவர், எண்ணிறந்த செல்வம் இவற்றை நீத்ததும் ஆம், என முடிவு செய்க. இதனால், நூற்பயனாகிய அறம், பொருள் இன்பம் வீடு என்ற நான்கினையும் இந்நூல் விளக்குவதாயிற்று. (399)

கப்பற் கோவை முற்றும்.

# செய்யுண் முதற்குறிப்பகராதி.

(எண் - செய்யுள் எண்)


| | |
|---|---|
| அகிலொன்று பூங்குழ | 144 |
| அடியில் வணங்கு | 394 |
| அடியே தொடங்கி | 7 |
| அடியே தொடங்கி | 53 |
| அதுநாமறிந்தில | 137 |
| அம்புயமுஞ்சங்கு | 117 |
| அயிலயில்வாளெயிற் | 310 |
| அரவுக்குமெல்லியல் | 146 |
| அருந்துணைவாகின் | 43 |
| அருந்தும் விடம்பொதி | 367 |
| அரும்பாக்கமலத்தி | 159 |
| அரும்புங்குவளை | 202 |
| அரும்புந்துணை | 283 |
| அருவிக்கிரி | 53 |
| அல்லார்வருங்குறி | 177 |
| அழிபடரின்றி | 339 |
| அளிக்கும்புனக்கிளி | 68 |
| அறம்பொருளின்ப | 399 |
| அறையார்கழன் | 26 |
| அன்றுகண்டார் | 334 |
| அன்றுதடத்திலங் | 326 |
| அன்றேகொடிய | 183 |
| அன்றோசிறுகுழ | 50 |
| அன்றேய்மதங்கய | 249 |
| அனைத்துந்தருவ | 393 |
| ஆங்கேயனைய | 9 |
| ஆடுங்கழங்கு | 97 |
| ஆய்ந்தகலைக்கட | 383 |
| ஆர்க்குங்கனைகழல் | 105 |
| ஆளாயுஞ்சீறுங் | 324 |
| ஆறுதவன்புற்ற | 354 |
| ஆனும்பணிலமு | 113 |
| இடம்பெறுஞாலத்தி | 72 |
| இங்தொன்றியமுகிலி | 350 |
| இமையாதவேழமோ | 131 |
| இரப்பாரையும்மவர்க் | 384 |
| இருஞ்செல்வமெங்கைய | 373 |
| இருவரிருந்த | 372 |
| இலையுளடங்கு | 312 |
| இவைநாமிருந்த | 322 |
| இழைக்குங்கலனும் | 3 |
| இளையாரிருவர் | 295 |
| இறைவார்குருகினங் | 106 |
| இன்றேவருதல் | 217 |
| இனம்போனமானென்ன | 162 |
| ஈண்டியசெல்வமுந் | 353 |
| உமக்குமுடிக்குங் | 218 |
| உமையாளுமீசனும் | 335 |
| உய்க்கும்பரிவல | 295 |
| உலகம்புகழ்பதி | 380 |
| உவருங்கருங்கடல் | 190 |
| உள்ளங்கருதுவ | 63 |
| உளத்துக் கிசைந்த | 340 |
| உறுகட்புலனிடத் | 32 |
| உனக்குத்தகுமென் | 112 |
| ஊருங்குலனு | 5 |
| ஊருந்துடியு | 180 |
| எக்காலமுஞ்செல்வ | 8 |
| எடுத்தான்வரைமர | 275 |
| எண்ணுமணியிவ் | 372 |
| எய்தலிங்கெம்மை | 93 |
| எரிகட்செவிமுடி | 301 |
| என்போலவே நெகிழ்ந் | 361 |
| என்னுட்டணியியல் | 148 |

| | |
|---|---|
| என்னிருகைகுவித் | 273 |
| என்னேகுழையுற் | 86 |
| என்னையன்பாலினி | 213 |
| ஏத்தார்மிசையி | 349 |
| ஏந்துங்கழியி | 90 |
| ஏயுங்கடுஞ்சுரம் | 51 |
| ஏலக்குழலுக் | 158 |
| ஏற்றியவங்க | 267 |
| ஏற்றோரிரக்கு | 17 |
| ஐம்மருங்கு | 250 |
| ஒத்தாரையுமுன் | 69 |
| ஒருநாளிடை | 222 |
| ஒருவாதவன்புட | 318 |
| ஒழுகுங்கடமு | 122 |
| ஒளிக்கத்தகுஞ்செல்வர் | 71 |
| ஒளிகாலயிற்படை | 133 |
| ஒளிசெறிசெங்கதிர் | 323 |
| ஒன்றிற்றுயில் | 74 |
| ஓராழி வையமொரன் | 398 |
| ஓருயிர் நீயென் | 238 |
| ஓருயிருய்யு | 76 |
| கங்கைக்குவாய்த்த | 277 |
| கட்டியதிண்கழ | 357 |
| கடம்புற்றதார் | 40 |
| கடமாக்களிற்று | 328 |
| கடவாரணந்தரு | 236 |
| கடனாகமண்புரக் | 82 |
| கடித்தாமரைமங்கை | 342 |
| கடியாரவருங்கலி | 57 |
| கடைக்கொம்பணிதரு | 196 |
| கண்ணன்கமலக்கண் | 36 |
| கண்ணாகிமண்புரக் | 282 |
| கதுவாயரம்பொரு | 80 |
| கந்தார் கடகளிற் | 16 |
| கந்தார் கடகளிற் | 67 |
| கப்பார்முடி | 29 |
| கம்பமதகளிற் | 244 |
| கயலொன்று கண்ணியர் | 169 |
| கரவேல்வயமுருக | 316 |
| கருங்கழல் | 23 |
| கருங்கற்பகவெறி | 191 |
| கருங்குன்றமொன்றிரு | 56 |
| கருந்தினையார்புனத் | 272 |
| கருப்பாடலஞ்சிலை | 232 |
| கரும்புங்கனியுங் | 171 |
| கருவயிரக்களிற் | 103 |
| கருவிப்புயலனைய | 139 |
| கல்வியுஞ்செல்வ | 203 |
| கலந்தாருயிரனை | 366 |
| கலைக்கண்ணிறை | 348 |
| கலைக்காங்கயன் | 233 |
| கலையாகரன்றொடை | 279 |
| கலையார்தமிழ்க்கவி | 302 |
| கலையோர்நிலை | 48 |
| கலைவாணர் கற்பகம் | 70 |
| கவ்வைக் கலிகடிந் | 262 |
| கவரா மொழித்திரு | 378 |
| கவரிநரந்தம் | 389 |
| கழங்குங்குறமகள் | 271 |
| கழற்கால்வயமுரு | 241 |
| கழிபெருநல்க | 92 |
| கழைக்குன்றமேந்து | 303 |
| கழைக்குன்றெறிந்த | 306 |
| களங்கனியன்னவன் | 193 |
| கற்றாயரில்வளர்ந் | 314 |
| கறங்காழிமண் | 212 |
| கறியார்சிலம்பிற் | 184 |
| கறியார்சிலம்பிற்கழற் | 178 |
| கறுத்தார் பரவுங் | 154 |
| கன்றோடிலாம் | 110 |
| கன்னலழித்தசொல் | 188 |
| கன்னவிலும்புயத் | 237 |

| | |
|---|---|
| கன்னாடர்மண் | 396 |
| கன்னாடர்மண்வெற்பி | 192 |
| கன்னெஞ்சமுங்குழைய | 59 |
| கனத்துக்கிசைந்தகை | 259 |
| கனந்தங்குவண்கவி | 204 |
| கனமேயனைய | 125 |
| கனவெனவொன்றாகல் | 187 |
| கனிநீர்மைகொண்ட | 34 |
| கனியார் பொழிற் | 31 |
| கனைகழல்வாளபிமன் | 41 |
| கனையாழிமண் | 54 |
| காக்குஞ்சிறுகுடி | 143 |
| காகம்படிவடி | 140 |
| காணாத தெய்வமுங் | 821 |
| காத்தான் விரும்புங் | 288 |
| காத்தானுலகனைத் | 330 |
| காதார் விழியனங் | 115 |
| காந்துஞ்சுடர் | 88 |
| காமாயுதமுங் | 66 |
| காமானிதியன்ன | 197 |
| காமேவுசெங்கவிகை | 377 |
| காயுமதகளிற் | 206 |
| கார்க்குஞ்சரம் | 205 |
| கார்க்குன்றமால் | 132 |
| கார்க்குன்ற மேந்துகை | 248 |
| கார்க்குன்ற மேந்துசெங் | 24 |
| கார்க்குன்று கொண்டு | 268 |
| கார்க்குன்றெதிர்களிற் | 195 |
| காரார் கொடைத்தடக் | 91 |
| காரார் பொழிற்கப்ப | 127 |
| காருந்தருவுமன | 228 |
| காருந்து மெனகுழ | 276 |
| கால் கொண்டொழிய | 216 |
| காலந்தருபுயல் | 351 |
| காலப்புயலனை | 229 |
| காலிப்பின்வந்த | 315 |
| காலோங்கு திண்களிற் | 39 |
| காவியம்போதணி | 78 |
| காவியம்போதனி | 130 |
| கரபங்கயன் | 160 |
| காவும்பணிலமும் | 165 |
| காவைப் பொருவுசெங் | 134 |
| காற்றியன்மாவல | 329 |
| காற்றுந்தளர்பரித் | 327 |
| காற்றெதிர்பூளை | 338 |
| கான்போற்குழலியர் | 47 |
| கான்றோய் மழ்கண்ணி | 81 |
| கான்றோயலங்கலெங் | 231 |
| கானந்தருந்தொங்க | 161 |
| கானார்கமழ்கண்ணி | 341 |
| கானார்மயிலனை | 375 |
| கானேகமழ்தெரி | 18 |
| கானேகமழ்தெரி | 135 |
| கிளியும்பிணையுங் | 19 |
| குடையுங்கரசமுங் | 313 |
| குவிகொண்டலன்ன | 374 |
| குழலன்னமென்மொழிக் | 181 |
| குழலுக்கும்ல்லிகை | 157 |
| கூடவிரும்பிய | 223 |
| கூடியதொன்றும் | 224 |
| கூந்தன்மழைதழு | 22 |
| கூர்காலவேடைக் | 243 |
| கூராழிமாதவன் | 186 |
| கூற்றும்பயிலுங் | 305 |
| கைக்கார்முகமத | 333 |
| கைதவன்செந்தமிழ் | 284 |
| கைப்போதகம்வழங் | 226 |
| கையணிவெண்சங்க | 376 |
| கொங்கையின்மேலவர் | 369 |
| கொடுங்குறை வரடைக்கு | 385 |
| கொழித்தமணற்குன்று | 174 |
| கோடுஞ்சிலையவன் | 332 |
| கோனுங்கனுகனு | 286 |
| கோவலமர்முனி | 391 |

சங்கெறியுந்திரை 75
சதுமறைத்தந்தையை 10
சாலாப்பெருஞ்செல்வர் 185
சிற்றிலிழைத்துச் 311
சிறக்குமலர்ச்செங் 98
சிறைபுக்கெரியவங் 355
சீர்தங்கு 1
சீராடுபாவையைத் 153
சீலமுப்பண்பு 189
சீற்றஞ்சிறந்த 37
சுந்தர மேருவன்னான் 156
சுருப்பாரவார 251
சுரும்பார்துளவணி 370
சுரும்புண்கருங்குழல் 118
சுருள்போதணிகுழற் 199
சுருளுங்குழன்மட 176
சுனையார்பொழிற் 198
சூட்டுங்கழற்கமலத் 65
சூதவனம்புடை 263
சூதாம்பணைமுலை 207
சூழிமதக்களிற் 230
செந்தாமரையுங் 209
செருக்கும்புடை 126
செருந்தார்மலர்க்குழல் 102
செருவது நண்ணிச் 246
செறுத்துப்புடைகொண் 101
சென்றார்முகமு 239
சென்னெலுங்காவியுஞ் 260
சேணார்பருமணித் 362
சேயோவெனுந்திற 11
சொரிகின்ற கொண்டலன் 119
சொரியும்புயலனை 96
சொல்லாயவல்லவன் 109
சொல்லியசொல் 245
சொல்லேரலங்க 258
சொன்னாவலர்புகழ் 281
சோருங்குருதிவை 363
தகைக்கேதகை 30
தண்ணந்துறைவர் 169
தழையுஞ்செவிக்கடத் 25
தனையார்நண்புடை 257
தனித்தொண்டுபட்டுத் 89
தனியாயிரந்தலை 173
தாக்கும்படையிரு 386
திருவேதிரைவந்த 150
துடியேரிடைமங்கை 309
துண்ணெனும்வெஞ்சுரம் 320
துப்பார்கடற்கழி 347
துப்போதுசெவ்விதழ்த் 129
தும்பை வெம்போர்வென்ற 62
துருவவயப்பரித் 280
துளவம்புனைபுயன் 152
துறக்கத்தையெண்ணலர் 240
துறுங்கான்மலர்க்குழ 292
துன்றுஞ் சுரும்பறை 219
தூணம் பொருகளிற் 293
தூணம் பொருமணித் 27
தூருந்தரளஞ் 291
தூவடி வேல்முரு 317
தூவிக்களிமயில் 35
தூவிமயிற்பெடை 343
தெறிக்கும்படித்தர 360
தேங்குஞ்சிறைபொரு 87
தேடிய செல்வமெல் 167
தேமலிபைந்துள 94
தேர்த்தானைமன்னன் 368
தொகையார் சுரும்பறை 356
தொட்டுண்டவெண்ணெய்க் 60
தொடைவந்ததண் 142
தொண்டையன்கற்றவர் 114
தொலையாதவண்புகழ் 15
தொலைனக்யன்று 364

| | | | |
|---|---|---|---|
| தோட்டார்மலர் | 300 | புடைக்குந்தரங்க | 164 |
| தோட்டியையுஞ்சுளி | 261 | புரந்தோனடற்புவ | 298 |
| தோயுஞ்சுடர்வடி | 151 | புல்லவெம்புல்லிப் | 214 |
| தோளானனுபமன் | 381 | புறந்தந்தமன்னர் | 128 |
| தோளுந்தொழிலு | 12 | புனமுங் கிளியினமு | 136 |
| தோற்றுஞ்சுடர்வட | 331 | பூத்த செழும்புவன | 221 |
| நடுங்கப்பல்கோடி | 252 | பைகொண்ட நாகம் | 225 |
| நடைபெற்றசெந்தமிழ் | 21 | பொதுவுறவையம் | 325 |
| நல்லான்றமிழுக்கு | 46 | பொய்யின்றிவந்த | 175 |
| நறுமுத்தணிபுன்னை | 58 | பொருப்போகருங் | 2 |
| நன்றுயசெந்தமிழ் | 307 | பொலந்தாமரை | 379 |
| நன்னுடுமூருநலனுங் | 211 | பொழிந்துகண் | 387 |
| நாடுந்தமிழ் | 85 | போகைக்கிசைந்து | 344 |
| நாம்வந்தவேற்கை | 172 | போதஞ்செறிந்த | 382 |
| நாளார்மலர் | 13 | போயறியா | 179 |
| நானைக்குரவு | 285 | போற்றும் புலவர் | 44 |
| நிமலனையண்டரை | 4 | மடனுமறிவுங் | 337 |
| நிரைநின்றுமேய | 254 | மதுநீரலங்கன் | 358 |
| நினக்குற்றதுன்பமு | 107 | மயிலாயதன்குல | 227 |
| நீடுந்தடங்கண் | 194 | மயிலுங்கழையு | 397 |
| நீரிங்குரைக்கின்ற | 149 | மருக்குங்குமமுலை | 371 |
| நீலமுண்ணுவுவர் | 278 | மருக்கொண்டபூ | 270 |
| படந்தாழரவல்குற் | 297 | மருந்துந்தனியருந்தா | 365 |
| படுக்கும்பணியணை | 215 | மலைக்குங்களிற்று | 38 |
| பதமலர்வந்து | 64 | மழலைப்பசுங்கிளி | 120 |
| பருங்குன்றனைய | 20 | மறக்கும்படியென் | 242 |
| பருதிமதைத்த | 168 | மறப்போரிகலும் | 345 |
| பறையார்கடகளிற் | 99 | மாதங்கமுய்ய | 147 |
| பன்னலஞ்செந்தமிழ் | 299 | மாமேனகுலன் | 266 |
| பாட்டும்பனுவலும் | 52 | மாலுந்திருவுமுரு | 294 |
| பாதஞ்சிவப்ப | 121 | மாலையுமாலின் | 83 |
| பார்க்கினுமொன்று | 14 | மாவேம்பனைவளர் | 308 |
| பாராற்றியதிண் | 28 | மாவையன்னூர்தம் | 269 |
| பிறந்ததுமாயன் | 392 | மாறும்புனத்தினில் | 138 |

| | |
|---|---|
| மாறும்புலியு | 123 |
| மிகைக்கும் புயவலி | 163 |
| மின்போலுணங்கு | 73 |
| மின்னீர்மை கொண்ட | 104 |
| முகைக்கும்களப | 84 |
| முடிக்குங்குவளை | 108 |
| முடித்தாமமேவு | 208 |
| முடிவது சேன்று | 220 |
| முரியுஞ்சிலை | 100 |
| முருந்தார்முறுவல் | 124 |
| முலைவாரணமருங்குற் | 390 |
| முழவந்தழங்கிய | 265 |
| முன்னங்குவளை | 79 |
| யாமன்புகொண்டிருந் | 247 |
| யாயுங்கடியு | 182 |
| வங்கருங்கொங்கரும் | 42 |
| வஞ்சக்களிறு | 253 |
| வடக்குங்குமமுலை | 290 |
| வண்டாரலரும் | 359 |
| வணங்கப்பகை | 255 |
| வம்பார் மலர்த்தழை | 111 |
| வரமாதரிக்கும் | 210 |
| வரியுங் கரியுமலை | 145 |
| வரியுங் கழன்மன் | 234 |
| வரியுங் கனைகழல் | 388 |
| வலத்தார் மகிணன் | 346 |
| வழியாக்கியமறை | 289 |
| வள்ளத்தமுத | 49 |
| வளையாக் கொழுங்கதி | 141 |
| வனையுற்றபூங்கழல் | 116 |
| வாட்டியவெங்கலி | 256 |
| வாடியவஞ்சி | 336 |
| வாருந்தாள | 61 |
| வாளையுந்தும்பை | 319 |
| வான்வேண்டவுமணி | 264 |
| வானியைந்தார் | 235 |
| விடுத்த சுரும்பும் | 301 |
| விடுத்தாள் கனங்குழை | 352 |
| விரும்புங் கதலியும் | 95 |
| விரும்புந் திருவனை | 6 |
| வெடிக்குங்குரவ | 200 |
| வெந்தேறு தீயன்ன | 201 |
| வெயில்கொண்டவேல் | 155 |
| வெயிலுற்ற மாணிக்க | 274 |
| வென்றே வரவிட்ட | 45 |
| வேந்தர் மதிக்கும் | 77 |
| வேய்கொண்ட தோளி | 166 |
| வேலையில்வந்தெழு | 296 |
| வையந் தொழநின்ற | 55 |

# அரும்பதம் முதலியவற்றின் அகராதி

எண் — பாட்டு எண்


அகத்தியர் கையில் கடலடங்கியது 312
அசலம் - மலை 322
அசோதைக்குலக்கன்று - கண்ணபிரான் 183
அடம்பு - ஒருமரம்: கொடியுமாம், 40, 229
அடிசில் - சோறு 341
அடுத்தல் - நெருங்குதல் 182, 271
அடையார் - பகைவர் 37, 238, 239, 374
அணங்குதல் - வருந்துதல் 258
அணை - படுக்கை 310
அதண் - பரண் 138
அதரம் - கீழ் உதடு 39
அதள் - தோல் 296
அந்தகாரம் - இருள் 221
அபிமன் - அபிமன்யு 41
அம்புயம் - தாமரை 55
அம்போருகம் - தாமரை (பதுமநிதி) 78, 113
அமரர் - தேவர் 4
அமரர் பெருங்கான் - கற்பகச்சோலை 113
அமை - மூங்கில் 335
அயில் - கூர்மை 169, 274
அரம்பை - வாழை 19
அரவிந்தம் - தாமரை 22
அரற்றுதல் - ஒலித்தல், புலம்புதல் 393
அரி - சிங்கம் 96, 154, 234
அருங்கலம் பூட்டுதல் - தாலிகட்டுதல் 81
அரும்பரக் கமலம் 159
அல் - இரவு 46, 177, 191
அலங்கல் - மாலை 231, 258, 358, 382
அலர் - பழிச்சொல் 213, 237
அலை கடல்; சினையாகுபெயர் 312
அழகுக்கு அருச்சுனன் 9
அழுங்குதல் - வருந்துதல் 35, 176, 181
அழலுயிர்த்தல் 181
அளகம் - கூந்தல் 306
அளி - வண்டு 19, 67, 133, 199
அறல் - கரு நுண்மணல் 292
அறுகால் - வண்டு 292
அறைத்தல் - தீட்டுதல் 58
அறைபோதல் - கெட்டழிதல் 381
அன்றில் - கிரௌஞ்சம் என்னும் பறவை 226
அனுபமன் - உவமையற்றவன் 13, 27, 99, 346, 381

ஆகம் - உடல், மார்பு 26, 343
ஆகரன் - இருப்பிடமானவன் 279
ஆண்மைக்கு வீடுமன் 9
ஆம்பல் - அல்லி 207
ஆய் - தினைப்புனத்தில் மகளிர் கிளியை உரப்பும் ஒலி 68; தாய், 179, 180
ஆயம் - தோழியர் கூட்டம் 20, 34, 71, 127, 306
ஆயோ எனல் - மகளிர் புனத்தில் கிளியோட்டும் ஒலிக்குறிப்பு 11
ஆர்த்தல் - ஒலித்தல் 14
ஆர்வம் - ஆசை 253
ஆரம் - சந்தனம் 149
ஆலை - கூடம், சாலை 296
ஆழி - சக்கரம் 186
ஆழி இழைத்தல், கூடலிழைத்தல் 230
ஆழிமங்கை - திருமாது 367
ஆள் - வீரன் 324
ஆளி - சிங்கம் 329
ஆன் - இடபம், பசு 39, 113

ஆன்மேலோன்-சிவபெருமான் 39
ஆனனம் - முகம் 42, 62
ஆறாத - கொடாத 354

இகல்தல் - பகைத்தல்; ஒத்தல்; 17, 325
இசை - கீர்த்தி, பாட்டு 211
இடியெதிர்கொம்பு 394
இடைக்குத் துடி 12
இடைக்கு மின்னல், 104; வாடிய கொடி 336
இபம் - யானை 56
இமையாத வேழம் - அஷ்ட திக்கஜங்கள் 131
இரவு - யாசித்தல் 17
இராமபிரான் அகலிகை கல்லுருவை மாற்றியது, 34, 104; இலங்கையை எரித்தது, 325; கடலின் அணைக்கட்டியது, 268, 368; கடலைச் சினந்து எரித்தது, 164; பொய்மானைத் தொடர்ந்தது, 297; மரம் ஏழு துளைத்தது. 275;
இருவி - தினையரிதாள் 139, 193
இலையுளடங்கு மிறைவன் 312
இவுளி - குதிரை 88
இழும் - ஓசைக்குறிப்பு 265
இறவு - இறால்மீன் 106
இறைஞ்சார் - பகைவர் 101
இன்னல் - துன்பம் 299

ஈடு - வலி 277
ஈர்தல் - பிளத்தல் 380

உகைத்தல் - செலுத்துதல் 389
உணங்க - வாட 255
உததி - கடல் 252
உதயணன் யானை செலுத்துவதில் வல்லவன் 266, 328
உதயன் - உதயணன் 266, 328
உம்பர்ச்சோலை-கற்பகச்சோலை 83
உய்த்தல் - செலுத்துதல் 395
உரவு - வலிமை 146
உழை - இடம் 25; மான், 61, 103, 296
உலவாத - கெடாத, அழியாத, காயாத 49

ஊடலில் தலைவன் தலைவியின் பாதம் பணிதல் 214
ஊனம் - அழிவு 161

எண்ணார் - பகைவர் 282
எயில் - மதில் 397
எயிற்றி, குன்றிமணி மாலையுடையவள் 315
எயிற்றி, புலிப்பல் தாலியுடையவள் 315
எரியுங்கனலில் நெய்சொரிதல் (பழமொழி) 100
எல் - ஒளி 258
எவ்வம் - துன்பம் 262

ஏ - அம்பு 308
ஏடு - இலை 97
ஏத்தார் - பகைவர் 288
ஏதம் - குற்றம், கேடு 222
ஏந்தல் - அரசன் 77
ஏலம் - மயிர்ச்சாந்து 158, 189
ஏழை - பெண் 7
ஏறுதழுவுதல் 196

ஐய - நுட்பமான 250
ஐயர் - தமயன்மார் 329, 331
ஐவாயரவு-ஐந்தலைநாகம் 310, 326

ஒருகைவெற்பு - யானை 273
ஒருப்படுதல் - உடன்படுதல் 257
ஒருவுதல் - நீங்குதல் 318
ஒற்றையாழியந்தேர் - சூரியன் தேர் 375
ஒன்றார் - பகைவர் 398

ஓங்கல் - மலை 398
ஓராழித்தேர் - சூரியன்தேர் 397
ஓலம் - ஒலி; 229, அபய ஒலி 249

ஒலுதல் - ஒலிசெய்தல் 72
ஒவியம் - சித்திரம் 130

•

கங்குல் - இரவு 187, 220
கஞ்சன் கண்ணபிரான் மீது, களிறும், மருதும், சகடும் வர விடுத்தது 253
கஞ்சன் - கம்சன் 63, 100, 183, 253
கட்செவி - பாம்பு 301, 384
கடடு - குறி 271
கடம் - மதம் 16, 25, 67, 72, 84, 99, 122, 236
கடவாரணம் - மதயானை 236
கடலின் திசைகெட்டுச் சென்ற கப்பல் 252
கடி - காவல், 182; மணம் 342
கண்டல் - தாழை, ஒரு முட்செடி 40, 114
கண்ணபிரான், அசுரர்களை வென்றது, 124; அசோதையாற் கட்டுண்டவன், 60; ஆயர் குலத்தில் வளர்ந்தவன், 314; ஆனிரை மேய்த்தது, 254; உறியில் நெய்யுண்டது, 190; கஞ்சன் அறியாமல் வளர்ந்தது, 183; கஞ்சன் மருகன், 253; கஞ்சன் வஞ்சங் கடந்தது, 63, 239; கஞ்சன் விடுத்த யானையின் மருப்பு ஒசித்தது, 100; கன்றுகொண்டு கனி எறிந்தது, 45, 74; கன்னெஞ்சுங் குழையக் குழலூதியவன், 59; காலிப்பின்சென்றது, 315; குழலில் இசை பாடியது, 168; குழலூதிக் கன்றுகளோடு சென்றது, 50; குழலூதிப் பசுக்களை அழைத்தது, 295; குன்றம் ஏந்தியது, 24, 248, 275, 303; கோவியர் துகில் கவர்ந்தது, 309; கோவியர் துகிலையும் மனத்தையும் கவர்ந்தது, 144; சூரியனைத் தன் திகிரியால் மறைத்தது 10, 68; வெண்ணெய் திருடி அடியுண்டது, 146, 149; பகலை இரவாக்கியது, 258; பசுக்களையும் கன்றுகளையும் மேய்த்துக் காத்தது, 110; பஞ்சவர்க்காய்த் தூது சென்றது, 121;
கண்ணுக்கு அம்பும், விஷமும் 278
கணி - வேங்கைமரம் 141; 155; 168
கதம் - கடுங்கோபம் 64
கதுவல் - பற்றுதல் 80; 325
கந்து - கட்டுத்தறி 16; 67; 201
கப்பார் - பகைவர் 29
கபாடம் - கதவு 164
கம் - தலை 209
கம்பு - சங்கு 111
கம்புள் - ஒருவகை நீர்ப்பறவை 125
கமலமங்கை - திருமகள் 182
கமலமெனுங் கொடையான் - பதுமநிதிபோல் கொடுப்பவன் 4, 5
கயில் - கொக்கிவாய்ப் பூட்டு 155
கரகம் - குடம் 313
கரடம் - யானையின் கன்னத்திலுள்ள மதம் ஒழுகும் துவாரம் 143
கராம் - முதலை 147
கரு - கருப்பம் 246
கருங்கழல் - பெரிய வீரக்கழல் 23
கருங்கற் பகவெறிந்தோன் - முருகன் 191
கருதலர் - பகைவர் 27
கருந்தாமரை - குவளைமலர் 67; 102
கருப்பக்குறிகள் 348
கரும்பங்கயம் - குவளைமலர் 118
கருமாணிக்கனுக்குக் கற்பகத்தரு, 228; கொண்டல், 166; மன்மதன், 232; மேகம், 96, 158, 180, 228, 278, 318;

மதவேள், 333; கற்பகம்போன்றவன், 70, 83, 165; ஆயர் குலத்தவன், 11; கங்கைவரை வென்றது, 252, 277; கடல் கன்னிக்கோன்; கன்னிநாடன்; 90; கலைகள் தேர்ந்தவன், 312, 348, 391; கவி நாவலரால் புகழப்படுபவன், 322; கழுநீர் மாலையன், 13; களங்கனிவண்ணன், 193; கற்றவர்க் குதவுபவன், 307; கற்றவர் சுற்றம், 114; கற்றோர்க்கினியவன், 273; கன்னுடர்மண் கவர்ந்தது, 190, 192, 396; கார்போன்றகொடையான், 69, 76; காலிங்கர் கோனுக்குத் துணைவன், 43; குவளைமலர்த் தாரினன், 41, 75, 78, 107, 118, 130, 393; கைக்குக் கற்பகம், 134; கைக்கு மேகம், 14, 136, 175, 259, 270, 304; சங்கநிதி போன்றவன், 136, 165; கைக்கு பதுமநிதி, 136; சுருமீன் கொடி யுடையவன், 106; தமிழ்ச் சொல் வல்லவன், 311; தமிழ் நூற்றுறை புக்கவன், 355; தமிழ் வெற்பன், 202; தமிழுக்கு நல்லவன், 46; துழாய்மாலையன், 13, 43, 142, 152, 171, 301, 320, 370; தெவ்வர்நின்று தாங்குங் கடைத்தலையான், 87; நாவலர்களால் புகழப் பெறுபவன், 137; நாவிரண்டு பேசாதவன், 46; நாள்தோறும் தமிழ் நூல் ஆராய்பவன், 138: பகைவர் கானகம் புகுதல், 51, 97, 291; பகைவர் தேயத்தில் கருவேல் விதைத்தது, 150; புலவர் கவி மாலை கொண்டவன், 44; புலவர் களிக்கப் பொருள் தருபவன், 71; புறந்தந்தவரோடு பேசரிடாதவன், 128; பொதிய மலையை யுடையவன், 41; மல்லிகை மாலையான், 159; முத்தமிழ் தேர்ந்தவன், 58; முருகன்போன்ற மேனி யுடையவன், 166; மேகம்போற் கொடையான், 83, 125, 162; யார்க்கும் வழங்குவதேகடனாகக் கொண்டவன், 337; யானைப் பரிசில் அளிப்பவன், 205; வங்கம் கொங்கம் வடநாட்டுக் கங்கை முதலியவற்றை வென்று கொண்டவன், 42; வடமன்னரை வென்றவன், 49; விஜயமங்கை கணவன், 77; வையைநாடன், 90, 202; இராமபிரான், 325, 368; உதயணன், 328; கண்ணபிரான், 45, 239, 248, 253, 254, 258, 295, 314, 315; கற்பகம், 180; திருமால், 274, 376, 397; முருகன், 40, 66, 85, 138, 186, 191, 241, 243, 271, 306, 316 317; மேரு, 156, 331; வீடுமன், 233; வேற்பாரி, 370; அபிமன் என்பது, 41, 77; கருமாணிக்கனை அனுபமன் என்பது, 99; இராமபிரானாகக் கூறியது, 104, 164, 186, 266, 292; உபய குலோத்தமன் என்பது, 69; கண்ணபிரான் என்பது, 10, 37, 50. 59, 60, 63, 79, 98, 110, 121, 144, 146, 149, 168, 183, 190, 194, 303, 309; திருமாலாகக் கூறியது, 54, 96, 147, 186, 207, 209, 215, 310, 312, 313, 369; நகுலன் என்றது, 266; பரிவீரநாரணன் என்பது, 127; வரோதயன் என்பது, 36, 329; வீரப்பரி வீரநாராணன் என்பது, 186.

கருவிளம் - குவளைமலர் 383

கரைதல் - காக்கை கத்துதல் 309

கல்லாரம் - குவளை 177
கலந்தரீ - நண்பர் 366
கலவியின் மகிழ்ந்தார் கண் சிவத்தலும், நுதல் வியர்த்தலும் இதழ்வெளுத்தலும் 52
கலாபம் — தோகை; இங்கு கூந்தல் 24
கலி - வறுமை 57 ; 262 ; 329 : 371 ; 385
கலுழ்தல் - கலங்குதல் 266
கலை - ஆண்மான் 61
கலைபிரிந்தமான் 47
கவ்வை - துன்பம் 262
கவராமொழி - மாறுதமொழி 378
கவரி - கவரிமான் 389
கவிகை - குடை 12 ; 204 ; 285 ; 377
கவின் - அழகு 243
கழுது - பேய் 170 ; 191
கழை - கரும்பு. 25 ; மூங்கில் 3, 85 ; 138 ; 143 ; 303 ; 3:6
களங்கம் - குற்றம் அல்லது கறை 15
களபம் - சந்தனப் பூச்சு 81 ; 135
களவன் - நண்டு 152
களவொழுக்கம் அறனன்று என்பது 81
கறங்குதல் - ஒலித்தல் 212 ; 399
கறுத்தல் - கோபித்தல் 101
கறுத்தார் - பகைவர் 154
கறி - மிளகு 178 ; 184
கறித்தல் - துண்டித்தல் ; கடித்தல் 360
கன்றுதல்-வருந்துதல் 307 ; 326
கன்றினர் - பகைவர் 181
கன்னல் - கரும்பு 173 ; 188 ; 260 ; 291 : 377
கன்னுட்டிய புகழ் 148
கனகப் பொருப்பு - மேருமலை 251
கனகம் - பொன் 304
கனகன் - இரணியன் 286
கனம் - மேகம் 112 ; 125 ; 162 ; 204 ; 259
கனைத்தல் - ஒலித்தல் 54 ; 85
கொடைக்கு மேகம் 28

கா - சோலை, 67, கற்பகச்சோலை 94 ; 134 ; 165 ; 197 , 288 ; 308 ; 377
காங்கேயன் - வீடுமன், அல்லது, முருகன் 9, 233
காசினி - பூமி 202
காடவர் - பல்லவர் 223
காதுதல் - கொல்லுதல் 147
காந்தள் - ஒரு மலர் 19
காந்துதல் - எரித்தல் 23
காமர் - அழகு 36 : 41
காமரம் - ஒருபண் 133
காமாயுதம் - மலர்கள் 66
கார்தங்கு செங்கரத்தான் 1
கார்முகம் - வில் 66 ; 333
கால் - மணம 354
காலாற்றிய கொடை - பிறர்பரல் நடந்து அலைந்த காலின் துயர் நீங்கும்படி கொடுத்தல் 185
காலப்புயல்_பருவகால மேகம் 229
காலி - பசுக்கூட்டம் 314
காலுதல் - சிந்துதல், உமிழ்தல் 133 ; 294
காவணம் - பந்தல் 241
காவி - குவளைமலர், 17, 35, 78, 256, 343, 378
காளம் - எக்காளம் என்னும் வாத்தியம் 12 ; 285
காற்றெதிர்பூளை 358
கான் - மணம் 18, 81, 135, 231, 292, 341
கானம் - மணம் 161
கானல் - கடற்கடையடுத்தசோலை 93 : 106 ; 114

கிரிஅணங்கு - வரையரமகள் 53
கிழி - துணி 90
கிள்ளை - கிளி 13
கிளை - சுற்றம் 295

குஞ்சரம் - யானை 205
குடம்பை - கூடு 93
குடவாரி - மேல் கடல் 236
குடிஞை - கோட்டான் 180
குந்தளம் - கூந்தல் 3
குமுதம் - அல்லி 6, 209
குயம் - கொங்கை 67
குரம் - குளம்பு 105
குரம்பு - கரை 85 ; 360
குரவம் - குராமலர் 200
குரவர் - பெரியோர், தாய் தந்தையர் 197
குரவு - குராமலர் 285
குரிசில் - தலைவன் 316
குருகு - நீர்வாழ் பறவை 174 ; கொக்கு, நாரை 228, 229, 243
குருதி - இரத்தம். 37 ; 61 ; 243 ; 363
குருளை - குட்டி 94
குலகிரி ஏழு 8 ; 131
குலமணி - மைந்தன் 359
குலமுதல் - மைந்தன் 348
குவலயம் - பூமி 221
குவால் - மிகுதி, நெருங்குதல் 37
குழலுக்குக்காரன் 47
குறுகார் - பகைவர். 68 ; 243 ; 305 ; 386
குறுத்தாட்கரி 154
குன்றவாணர், கெடுப்பது காட்டுந்தொழிலர் 65
குன்றவேள், குமாரக்கடவுள்; 271
குன்றெறிந்த செவ்வேள் - கிரௌஞ்சகிரியைப் பிளந்த முருகன் 306

கூந்தலுக்கு மழை 3, 22, 276, 306, 374
கூற்றம் - யமன், 37; பெண்ணுருவாய் வந்தது என்பது 57

கேகயம் - மயில் 19
கேவலம் - இணையற்றது 295
கேள் - சுற்றம் 13
கேள்வர் - கணவர் 191
கேளிர் - சுற்றத்தார் 203, 260

கைக் காளமேகம் - யானை 8
கைதவம் - துன்பம் 208
கைதவன் - பாண்டியன் 93, 127, 284, 340
கைதை - தாழை 114, 172, 339
கைப்போதகம் - யானை 226
கைம்மா - யானை 165
கைம்முகம் - யானை 126

கொங்கைக்கு இளநீர் 142
கொங்கு - தேன், மணம் 75
கொடி - காகம் 120 ; 309
கொடைக்கு மேகம் 91
கொண்டல் . நீருண்ட மேகம், 1, 69, 119, 166, 236
கொத்து - பரம்பரை 69
கொந்தளம் - கூந்தல் 285

கோட்டஞ்சனக்கிரி - யானை 65
கோத்தல் - தொகுத்தல் 386
கோதண்டராமன் 186
கோபம் - இந்திர கோபம் (முதற்குறை) 53
கோபானலம் - கோவத்தீ 234
கோமளம் - அழகு 181
கோவலமர்முனி 391
கோளகை - யானைக்கிம்புரி 196

சங்கவண்ணன் - பலதேவன் 37, 88
சங்கு - வளையல் 357
சதுமறைத் தந்தை - பிரமதேவன் 10
சந்திரன் சிவபிரான் முடியில் தங்கியிருப்பது 55
சந்து தூது ; சமாதானம், 386, சந்தனமரம், 201, அழகு, 67
சலராசி - கடல் 16

சாந்தம் - சந்தனம் 77, 88

சான்றவர் - மேலோர் 333
சான்றோர் உலகநதடுமாறினும் தாம் தடுமாறார் 347
சான்றோரை முன்னிட்டு வரைதல் 81

சிலம்பு - மலை 18
சிலம்பு எதிர் கூவுதல் குறிஞ்சி மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று 66
சிற்றிலிழைத்தல் 68, 272, 311
சிறுசோறு அடுதல் 272
சினை - முட்டை 93

சூடிகை - உச்சிக்கொண்டை 274
சுணங்கு - தேமல் 255
சுரம் - பாலைநிலம் 210
சுரி சங்கு - முறுக்கிய சங்கு 228
சுரும்பு - வண்டு 2. 251
சுழித்தல் - சுருங்குதல் 259
சுளித்தல் - ஒடித்தல் 25, 261; கோபித்தல் 290

சூதம் - மா 264, 352, 392
சூது - சூதாடுங்கருவி 207
சூர் - சூரபதுமன் 186
சூரணங்கு - வனதேவதை 169
சூரியன்தேர் ஒற்றைச் சக்கரமுடையது 398
சூல் - கருப்பம் 216
சூழி - முகபடாம் 230
சூளிகை - மேன்மாடம், நிலாமுற்றம் 298

செரு - போர் 246
செருந்து - செருந்திமலர் 102
செல்லு - மேகம் 373
செவ்வி - உடல் 5, 18; அழகு, 62, 262, 371.
செற்றம் - பகை 107
செருத்தல் - அடைத்தல், பகைத்தல் 101
சென்னெல் - (செந்நெல்) 260

சேண் - தூரம் 321, 362
சேய் - முருகன 11, 166
சேரலர் - பகைவர் 255

சொல் - புகழ் 148
சொல்லேரலங்கல் - சொல்மாலை 258
சொன்னவலர் - சொல்லில் வல்ல புலவர் 281
சொன்னிருபர், கற்றபுலவர் 273

சோமன் - சந்திரன் 247
சோரன் - திருடன் 149
சோரி - இரத்தம் 238

ஞெமலி - நாய் 180, 182

தகை - பகை 30
தகைதல் - தடுத்தல் 316
தண்டலை - சோலை, பொழில் 18
தணத்தல் - நீங்குதல் 125, 231
தந்தாசலம் - யானை 209
தமரம் - ஒலி 4
தமாலம் - பச்சிலைமரம் 156
தமிழ் முருகன் 85, 138
தமிழ் வெற்பு - பொதியில் மலை 202, 209
தரங்கம் - அலை 164
தாளம் - முத்து, 61, 89, 216, 291, 360
தரு - கற்பகமரம் 27, 160
தலைவன் பாங்கனுக்கு உயிர் போன்றவன் 35, 40
தழங்கல் - ஒலித்தல் 265, 271
தளவு - முல்லை 383
தளை - கட்டு 257
தறி - கம்பம் 25
தனத்திற்கு மருப்பு 2

தாது - மகரந்தம் 115, 119
தானம் - மதம் 161
தானவர் - அசுரர் 124

திகிரி - சக்கரம் 147
திசாமுகம் - திசை 267
திருமால் ஆலிலையில் பள்ளி கொண்டது ; 312
உந்தியிலிருந்து உலகங்களை யீன்றது 379 ; உலகுண்டது 190 ; கடல்கடைந்தது 32, 313 ; கஜேந்திரன் துயர் தீர்த்தது 96, 147, 249 ; சிவபிரான் கையிலிருந்த பிரமன் தலையை நீக்கியது 209 ; தன் உந்திக் கமலத்தில் பிரம தேவனைத் தந்தவன் 10; தூணைப் பிளந்து கொண்டு நரசிங்கமாக உதித்தது 286 ; பாற்கடலில் துயிலுதல் 215, 397 ; புலவன் பின்போய்க் கவிகொண்டது 374 ; மண்ணளந்தது 54, 207
திருமாலுக்குக் கடல் உவமை 158
திருமேனி வலம்புரிபோல் தூயோன் பலதேவன் 11

துகிர் - பவழம் 61
துங்கம் - உயர்வு 21
துடக்கு - தளை 290
துடி - உடுக்கை, பம்பை 180, 182, 192, 309
துண் - நடுக்கக் குறிப்பு 320
துணை - இரண்டு 71, 283.
துங்கம் - துயர்வு 277
துப்பு -பவழம் 29, 129, 226, 347
தும்பை - போர்மாலை 62
துருக்கம்-மானின் ஒருவகை 389
துருவம் - விரைவு 280
துளவணி மார்பன் - திருமால் 39
துறக்கம் - சுவர்க்கம் 98, 240
துறுகல் - கற்பாறை 32
துறுதல் - அடர்ந்திருத்தல் 292
துனபு - துன்பம் 73, 361
துன்னலர்-பகைவர் 56, 249, 292
துனி-துன்பம் 31, 34, 173, 367

தூங்குதல் - தொங்குதல் 296
தூணம் - தூண் 27, 293
தூர் - வேர் 291
தூவி - பறவை இறகு 35, 343

தெவ் - பகை 163
தெவ்வர் - பகைவர் 87, 98, 150, 167, 246, 318, 346, 353,
தெரியல் - மாலை 18, 137

தேமா - இனிய கனிதரும் ஒரு வகை மாமரம் 66

தேரங்கல் - மாலை 222, 336, 357
தொடி - வளை 7, 33, 291, 294
தொடித்தாமரை - கை 342
தொடை - செய்யுள் 21
தொண்டை - ஆதொண்டை (முதற்குறை) 89
தொய்யில் 250, 256, 393
தொயில் - தொய்யில் என்பதின் இடக்குறை 12

தோகை - மயில் 15, 163
தோட்டி - அங்குசம் 261
தோடு - இதழ் 300, 336, 382
தோம் - குற்றம் 172, 266

நகை - பல் 29
நகுலன் - பாண்டவருள் ஒருவன் குதிரை செலுத்துவதில் வல்லவன் 266
நண்ணலர் - பகைவர் 85
நரந்தம் - மானின் ஒருவகை 389
நரபாலர் - அரசர் 252
நவனீதம் - வெண்ணெய் 149
நறவு - தேன் 323
நறை - தேன் 26
நனை - அரும்பு 116

நாகவிடவேகம் தலையுறுதல் 82
நாகம் - மலை 82 ; சுரபுன்னை, 951 156, 158
பாம்பு 12

நாட்டம் - கண் 52
நாம் - அச்சம் 172
நாலிரு மூர்த்தி - அட்டமூர்த்தி யாகிய சிவபெருமான் 92

நிரை - வரிசை 393
நிலத்துக்குக் கடல் ஆடை 385
நிணையார் - பகைவர் 224, 242
நிர்மை - தன்மை 34, 38, 45, 104, 279

நீட்டியது - நெடுங்காலமாய் உள்ளது 224
நீவுதல் - அழித்தல், போக்குதல் 34

நுணங்குதல் - அசைதல் 73
நுதலுக்குச் சிலை 15, 48, 52

நூபுரம் - பாதச்சிலம்பு 317, 382
நூல் - பூணூல் 39

நெய்யாடுதல் - எண்ணெயிட்டு நீராடுதல், 350
நெறிகுழல் - அருண்ட கூந்தல், 116
நென்னல் - நேற்று 299

நோது மலர் - நெகிழ்ந்து உதிரும் மலர், அயலார் 10

பகன்றை - சிவதை 385
பசத்தல் - பசுமை நிறமாதல் 39
பசலை - மகளிர்க்கு காமத்தால் உண்டாகும் பொன்னிறத் தேமல் 242
பஞ்சவர் - பாண்டவர் ஐவர் 121 218
பஞ்சும் பொருவடி 282
படர் - துன்பம் 339
படர் கூர்தல் - மிகுதியுந் துயரடைதல் 344
படி - விதம், பூமி 33
படைக்கண், வாள், வேல் போன்ற கண் 164
பண்டையுகம் - கிருதயுகம் 52
பணியார் - பகைவர் 64, 84
பணிலம் - சங்கு (சங்கநிதி) 113, 165
பதாகை - கொடி 88
பரத்தை - பொதுமகள் 361
பராநிலை - வணங்கித் துதிக்கும் நிலை 263
பரித்தல் - சுமத்தல் 225
பரிபுரம் - பாதச் சிலம்பு 12
பரிமளம் - மிகுந்த மணம் 320
பரிவு - துன்பம் 278
பருதி - சூரியன் 168
பருவரல் - துன்பம் 287
பல்லவம் - தளிர் 214, 282, 351
பவ்வம் - கடல் 262
பழனம் - வயல் 297, 377
பழுத்தது கொம்பில், நிற்காது 174
பன்னகம் - பாம்பு 2
பனுவல் நூல், செய்யுள், 52

பாகு - பாகன், 287; வெல்லப் பாகு 344
பாங்கி தலைவியின் உயிர் போன்றவள் 78, 82
பாஞ்ச சன்யம் என்னும் வலம்புரிச் சங்கம் பாற் கடலில் பிறந்தது 392
பாடலம் - பாதிரி 285
பார்ப்பு - தாயின் பாதுகாவலில் உள்ள பறவைக் குஞ்சு 93
பார்வை . மிருகங்களை வலைப் படச் செய்ய விட்டிருக்கும் விலங்கு 364
பால் - ஊழ், விதி 261
பாவடி - பரந்த அடி 317
பாற்றுதல் - நீக்குதல் 387
பான்மறி - வெள்ளாடு 273
பானல் - குவளை மலர் 114; 347

பிணை - பெண் மான் 19
பியல் - தோள் 79
பீலி - மயிலிறகு 315

புகர் - புள்ளி 117
புணரி - கடல் 164 ; 166
புதுநீர் ஆடல் 358
புரவலர் - அரசர் ; அல்லது தலைவர் 327, 386
புருவத்திற்குச் சிலை 390
புல்லர் - அற்பர் 307
புலவி - ஊடல் 371
புழை - துவாரம் 197
புழைத்தடக்கைமா - யானை 197
புறங்கொடுத்தல் - போரில் முதுகு காட்டியோடுதல் 331
புனை - அலங்காரம் 54

பூகம் - பாக்குமரம் 95
பூரணம் - நிறைவு 204
பூவை - காயாம் பூ 284 ; நாகணவாய்ப் பறவை 269, 393

பெண் பிறப்பு எடுக்கலாகாது என்பது 240
பெருந்தரம், பெரும் உத்யோகம் 363

பேடை - பெண் பறவை 233
பேயுந்துயிலும் இருள் 151

பை - படம் 225
பைதல் - இளமை 93

பொதியில் - பொதிய மலை 32
பொங்தல் - மகளிர் விளையாட்டு 284
பொருந்தலர் - பகைவர் 298, 331
பொருப்பு - மலை 2
பொருவது - போரிடுவது 246
பொருவுதல் - ஒப்பாதல் 134
பொருள் - அனைத்தும் தருவது 393

பொற்கான் - கற்பகக்காடு 264

போதகம் - யானை 62
போதம் - ஞானம் 382

மகளிர் இடைக்கு மின்னம் 73
கண்ணுக்கு, அம்பு 308; கயல் மீன், 169, 171; குயிலொடு தருக்குதல், 115 ; சிறுசோறடுதல், 310 ; மணற்சோறு அடுதல், 59, 60, 341 ; தோளுக்கு மூங்கில், 166 ; நீல மலரைக் குழையாகச் செவியில் அணிதல், 120 ; மயிலொடு ஆடுதல், 115 ; மலர்க்கறி சமைத்தல், 60
மகிதலம் - பூமி 36
மட்டு - தேன் 60, 357
மதன் - மன்மதன் 269
மம்மர் - துன்பம் 100
மருங்குல் - இடை, 23, 250, 301, 336, 348
மருண்மாலை - ஒளி குறைந்த அந்திப்போது 125
மருவலர் - பகைவர் 358
மருவாதவர் - பகைவர் 339
மருவார் - பகைவர் 38, 157
மறை - ஆடு 123
மலைவாணர் - குறிஞ்சி நிலத்தவர் 70
மவுணன் - கணவன் 357
மவுலி - கிரீடம் 64, 326
மழவிடை, இளம் எருது 227
மறுகு - வீதி, தெரு 195, 342, 391
மறுகுதல் - குழம்புதல் 32, 292
மறைநெறி - களவொழுக்கம் 222
மறையார் மருத்துவர்க்குநோய் 99
மன்மதன் கரும்புச் சிலையுடையவன் 232, 299
மன்றல் - மணம் 237, 334

மா - இலக்குமி 269 ; குதிரை 391

மாடகம்-யாழின் முறுக்காணி 364
மாதங்கம் - யானை 147
மாதவன் - திருமால் 168, 274
மாதவி - குருக்கத்திக் கொடி 206
மாநிதி - சங்க பதுமநிதிகள் 197
மால் - மயக்கம் 176
மாலதி - ஒரு பூங்கொடி 156
மாலின்மகன் - மன்மதன் 83
மாற்றலர் - பகைவர் 340, 359
மான் அவரைநெற்றருந்துதல் 389
மான் - குதிரை 223
மானதன் - அரசன் 52
மானும் புலியும் உறவாதல் 123

மீளி - வீரன் 329
மீன் - நட்சத்திரம் 104

முக்கோல் - திரிதண்டம் 313
முக்கோற் பகவர் குடை, கரகம், மான் தோல், முந்நூல் முக்கோல் செங்காவியுடை முதலியன உடையவர் 313
முகிழ் - அரும்பு 119
முத்தமிழ் 56
முதுநீர் - கடல் 358
முந்நூல் - பூணூல் 313
முரலுதல் - ஒலித்தல் 67, 356
முரிகரை - இடிந்த கரை 292
முருகன் கடம்பு மாலையுடையவன் 40
முருகன் குன்ற மெறிந்தது 306
முருகு - தேன், 119 ; மணம் 329
முருந்து - பறவையிறகின் அடி 124
முல்லைவாணர் - ஆயர் 70
முலைக்கு யானை 390
முழுதுலகின்ற முனி - பிரமதேவர் 92
முளரி - தாமரை 111, 314
முளரித் தோகை - திருமகள் 344
முளிசுரம் - காயும் சுரம் 323
முறுகுதல் - காய்தல் 292
முறுவல் - சிரிப்பு 31 ; பல் 124
முன்செய்த தவத்தின் படியே எதுவும் நடைபெறும் 86
முன்னீர் - கடல் 32, 104, 254
முன்னைக்காலம் - கிருத துவாபர திரேதாயுகங்கள் 189

மூங்கிலில் முத்து பிறப்பது 206

மேதி - எருமை 360, 377
மேவலர் - பகைவர் 332, 391
மேவார் - பகைவர் 155

மை - மேகம், இருள், 175 ; கருமை 347
மைப்போது குவளைப்பூ 129

மொழிக்குத் தெள்ளமுது 48

மௌவல் - முல்லை 244

யாணர் - அழகு 350
யாய் - தாய் 182
யானை, சுரத்தில் தன் பிடிக்கு நிழற் பந்தல் செய்வது 242
யானை பாதத்திற்குத் துடி 394
யானைமுன் பறை அறைந்து செல்லுதல் 99

யோனி - பிறப்பு 72

வங்கம் - கப்பல் 267
வஞ்சினம் - சூளுரை 267
வடநாகம் - மேருமலை 82
வடமீன் - அருந்ததி என்னும் நட்சத்திரம் 279
வடி - மாவடு 220 ; கூர்மை 336, 342, 345
வடித்த - திருத்தமான 301
வண்டல் - மகளிர் விளையாட்டு 34, 40, 71, 137, 276, 284, 306
வண்டலம் பாவை 114

வது - மணப்பெண் 325
வமபமழை - காலமல்லாக் காலத்து மழை 244
வம்பு - முலைக்கச்சு, 100 ; வாசனை 111, 117
வயமா - புலி, 161 ; போர்க் குதிரை 319
வயிறு வாய்த்தல் - மகப்பெறுதல் 349
வரி - புலி; கொடுவரி என்பதன் முதற்குறை 145
வரைதல் - மணஞ் செய்தல்; 162, 257, 260, 300
வரோதயன் - தெய்வ வரத்தால் உதித்தவன் 36, 329;
வல்லபம் - திறமை 54
வல்லி - கொடி 56, 80
வல்லே - விரைவில் 43, 116, 256
வலம்புரி ஈன்றமணி - உயர்ந்த முத்து 349
வலம்புரி - வலம்புரிச் சங்கு 391, 392
வந்தியா வட்டப்பூ 11
வலவன் - சாரதி 395
வலைவாணர் - நெய்தல் நிலத்தவர் 70
வழி - பரம்பரை 346
வள்ளம் - கிண்ணம் 49, 303
வளை - வளையல், 187, சங்கு, 198 257, 263, 356
வன்கண்மை - கொடுமை 91
வனசம் - தாமரை 210

வாசி - குதிரை 318
வாரணம் - யானை 184, 191, 236, 266
வாவி - தடாகம் 11, 35
வாளா - எளிதில் 13
வாளு - அம்பு 64
வான்றோய்குடி-உயர்குடி 81, 203
வானவர் தம்கா - கற்பகச்சோலை 269

வானியைந்தார் - தேவர் 235
விடம்பெறு வேல்விழி - விடமூட்டிய வேல் போன்ற விழி 72
விடை - இடபம் 196, 313
விடையோன் - இடபத்தை யுடைய சிவபிரான் 227
விருந்தாற்றல் - விருந்து நடத்துதல் 203
விருந்து துனியாற்றும் மருந்தானது 367
விரும்பார் - பகைவர் 51
விரை - மணம் 2
விழிக்குவேல் 390
விழிகொண்டுரைத்தல் 37
விழியால் மொழிதல் 79
விளித்தல் - கூப்பிடுதல் 68

வீடுமன் - கலைகளிற்றேர்ந்தவன் 233
வீராகரன் - வீரத்திற்கு இருப்பிடமானவன் 153

வெண்கோடு - வெண்சங்கு 85
வெய்யோன - சூரியன் 6, 387
வெயில் - ஒளி 274
வெள்ளணி - தலைமகன் பிறந்த செய்தியைத் தலைவனுக்கு அறிவிக்கத் தோழி வெண்ணிற ஆடை அணிந்து செல்வது 352
வெள்ளம் - மிகுதி 6

வேதா - பிரமன் 39
வேய் - மூங்கில் 166, 206
வேர் - வியர்வை 363
வேரல் - மூங்கில் 25
வேலன் - பூசாரி 194, 271
வேலன் - வெறியாடுதல் 194

வை - கூர்மை 61
வையம் - தேர் 398

# நூல்நிலைய வெளியீடுகள்

| | | | ரூ. | ந.பை. |
|---|---|---|---|---|
| 1. | கம்பராமாயணம் - சுந்தர காண்டம் (காலிகோ) | ... | 12 | 00 |
| 2. | திருவாசக வியாக்யானம் முழுப் புத்தகம் (காலிகோ) | ... | 13 | 00 |
| | முதற்பகுதி (காலிகோ) | ... | 6 | 50 |
| | இரண்டாம் பகுதி (காலிகோ) | ... | 7 | 50 |
| 3. | சூளாமணி | ... | 12 | 00 |
| 4. | மகாபரத சூடாமணி நாட்டியப் பகுதி (காலிகோ) | ... | 10 | 00 |
| | இசைப் பகுதி (ராப்பர்) | ... | 5 | 50 |
| 5. | திருக்குற்றாலநாதருலா (காலிகோ) | ... | 2 | 50 |
| | ,, (ராப்பர்) | ... | 2 | 25 |
| 6. | அபிநயதர்ப்பணம் (காலிகோ) | ... | 5 | 50 |
| | ,, (ராப்பர்) | ... | 5 | 00 |
| 7. | பரதசேனாபதீயம் | ... | 1 | 25 |
| 8. | கப்பற்கோவை | ... | 3 | 00 |
| 9. | நூல் நிலையச்சுவடிகளின் நாமாவளி | ... | 0 | 37 |
| 10. | டாக்டர் ஐயரவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் | ... | 0 | 06 |
| 11. | டாக்டர் ஐயரவர்களின் உருவப் படம் 16″ × 12″ | ... | 0 | 50 |

மகாமகோபாத்யாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்,

அடையாறு, சென்னை-20.